## முன்னுரை

இப்போது தமிழ் நாட்டிலே என்ன காண்கிறோம்? வேகம் காண்கிறோம்; ஆர்வம் காண்கிறோம். துடிதுடிப்புக் காண்கிறோம்.

வேகம் எதற்கு? ஆர்வம் எதற்கு? துடிதுடிப்பு எதற்கு? எல்லாம் ஒன்றனுக்கே. அந்த ஒன்று எது? அதுவே தமிழ்; தமிழ்.

தமிழ் மொழி வளர்ப்பிலே வேகம். தமிழ் மொழி வளர்ப்பிலே ஆர்வம். தமிழ் மொழி வளர்ப்பிலே துடிதுடிப்பு!

வேகமும், ஆர்வமும், துடிதுடிப்பும் என் செய்கின்றன? உந்துகின்றன; முந்துகின்றன. எதற்கு? செயல்புரிவதற்கு.

புதிய புதிய எழுத்தாளர்கள் தோன்றுகிறார்கள்; தோன்றிக் கொண்டே யிருக்கிறார்கள்.

புத்தகங்கள் வெளிவருகின்றன; வேகமாக வெளிவருகின்றன; புதிய முறையிலே வருகின்றன; கண்ணைக் கவரும் வகையில் வருகின்றன.

“அழகு பெற அடுக்கி விற்பதற்கு ஏற்றவை ஆங்கிலப் புத்தகங்களே” என்று கருதிய விற்பனை நிலையங்கள் எல்லாம் என்ன செய்கின்றன? தமிழ்ப் புத்தகங்களுக்கே முதல் இடம் கொடுக்கின்றன.

தமிழ்ப் புத்தகம் என்று சொன்னால் வாங்குவோர் தொகை அரிதாயிருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் இன்றோ? நிலைமை வேறு.

தமிழ்ப் புத்தகங்கள் ஆயிரக் கணக்கில் செலவாகின்றன; பல ஆயிரம் புத்தகங்கள் விற்பனையாகின்றன. வாங்குவோர் தொகை பெருகிவிட்டது.

சமீபத்திலே புதியதொரு வேகம் தோன்றியுள்ளது. என்ன வேகம்? மலிவுப் பதிப்பு வேகம்; மக்கள் பதிப்பு வேகம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் ‘மலிவுப் பதிப்பாக’ வருகின்றன; ஏராளமாக வருகின்றன; போட்டி போட்டுக் கொண்டு வெளிவருகின்றன.

குறைந்த விலை; நிறைந்த பக்கங்கள்; அழகான அச்சு; கண் கவரும் தோற்றம். எல்லாவற்றையும் பார்க்கிறார்கள் மக்கள். ஆர்வம் உண்டாகிறது. ஆசை பிறக்கிறது.

என்ன ஆர்வம்? என்ன ஆசை? பழந்தமிழ் இலங்கியங்களைப் படித்து அறிதல் வேண்டும் என்ற ஆர்வம்; வாங்க வேண்டும் என்ற ஆசை. விலையோ மலிவு; வாங்காமல் என்ன செய்வார்கள்? வாங்குகிறார்கள்.

ஆனால், வாங்கிய பிறகோ நிலைமை என்ன? பாவம் விழிக்கிறார்கள், அவர்களது ஆர்வம் முறிந்து போகிறது; ஆசை தகர்ந்து போகிறது.

காரணம் என்ன? காரணம் சொல்லவா வேண்டும்? 'மக்கள் பதிப்பு' என்பன எல்லாம் மக்கள் பதிப்பு அல்ல! இதுவே காரணம்.

'மக்கள் பதிப்பு' என்று சொல்வோர் என்ன செய்கின்றனர்? மறந்து விடுகின்றனர். எவரை? மக்களை. தாங்கள் வெளியிடும் மக்கள் பதிப்பு எவர் பொருட்டு வெளியிடப்படுகிறது என்பதை மறந்து விடுகின்றனர். மக்கள் பதிப்பு யாருக்காக? இதுபற்றிச் சிந்திப்பதில்லை.

பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் எப்போது தோன்றின? ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பு தோன்றின.

பின்னே பல நூற்றாண்டுகள் சென்றன. இலக்கியங்களுக்கு உரை எழுந்தன; உரையாசிரியர்கள் தோன்றினார்கள்.

உரைகள் ஏன் எழுந்தன? உரையாசிரியர்கள் ஏன் தோன்றினார்கள்? பழந்தமிழ் இலக்கியங்கள் பலர்க்கும் விளங்காமற் போயின. ஏன் விளங்காமற் போயின? சொற்கள் ஆட்சியில் இல்லை. வழக்கில் இல்லை. எனவே விளங்காமற் போயின. உரைகள் தோன்றின. உரையாசிரியர்கள் தோன்றினார்கள். வழக்கில் உள்ள சொல்லிலே உரை தந்தார்கள்.

அந்த உரைகளும் இப்போது யாருக்கு விளங்கும்? தமிழ் அறிந்த பண்டிதர்களுக்கே விளங்கும். மற்றையோர்க்கு விளங்கா. காரணம் என்ன? அந்தச் சொற்கள் இப்போது ஆட்சியில் இல்லை; வழக்கில் இல்லை.



மக்கள் பதிப்பு வெளியிட முன் வருவோருள் பலர் என்ன செய்கின்றனர்? பழந்தமிழ் இலக்கியங்களை அப்படியே வெளியிடுகின்றனர்.

பாடல்களோ பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பு பாடப்பட்டவை. அக்காலத்திலே வழங்கிய சொற்களைப் பெய்து பாடியவை. அச்சொற்கள் எல்லாம் வழக்கிறந்தன. இன்று எவர்க்கும் விளங்கா.

அந்த உரைகளோ பல நூற்றாண்டுகள் முன்பு தோன்றியவை. அக்காலத்திலே ஆட்சியில் உள்ள சொற்கள் இக்காலத்தில் ஆட்சி பெறவில்லை. எனவே அவையும் இன்று விளங்க மாட்டா.

எனவே, 'மக்கள் பதிப்புக்'களில் பல, மக்கள் பதிப்பாக இல்லை; பண்டிதர் பதிப்பாகவே இருக்கின்றன. பண்டிதர் பதிப்பு மக்களுக்கு விளங்குமா? விளங்காது; விளங்காது. பண்டிதர்களுக்கே விளங்கும்.

விளக்கமாக உரை எழுத முன் வருகின்றனர் சிலர். அவரும் என்ன செய்கின்றனர்? சம்பிரதாயமான முறைகளையே பின் பற்றுகின்றனர்? சம்பிரதாயமான முறையிலேயே கருத்துரை வழங்குகின்றனர். இவ்வுரை எதற்கு? எவருக்கு? மக்களுக்கா? மாணவருக்கா?

மக்களுக்கு என்றால் மக்களை அவர்கள் அறியவில்லை என்பேன் நான். மக்கள் எதை விரும்புகிறார்கள்?

பதவுரை, பொழிப்புரை, கருத்துரையா வேண்டுகின்றனர்? இல்லை; இல்லை. பின் என்ன?

பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றிப் புகழ்ந்து புகழ்ந்து கூறுகிறார்களே! அவை என்ன சொல்கின்றன என்று அறிய விரும்புகின்றனர்.

அறியும் வகையிலா இருக்கின்றது மக்கள் பதிப்பு? இல்லை; இல்லை.

மக்கள் பதிப்பு எப்படி இருத்தல் வேண்டும்?

மக்களுக்கு விளங்கும் வகையிலே இருத்தல் வேண்டும். விளங்கினால் மட்டும் போதுமா? போதாது.

சொல்லும் போது சுவைதரச் சொல்லவேண்டும். கேட்க இன்பமாயிருக்க வேண்டும். படிக்கப் படிக்க அலுப்பு ஏற்படாதிருக்க வேண்டும்.

விஷயம் என்னவோ நல்லதுதான்; இனியதுதான். எனினும் சொல்பவன் தனது திறமைக் குறைவினாலே நல்ல விஷயத்தையும் பாழாக்கிவிடலாம் அல்லவா? தித்திக்கும் சுவைதரு செய்தி களையும் வேம்பாக்கி விடலாமல்லவா?

பெரும்பாலான மக்களுக்கு எப்படிச் சொன்னால் விளங்கும்? எப்படிச் சொன்னால் ஆர்வமுடன் படிப்பார்கள்? அப்படிச் சொல்ல வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்களிலே உள்ள கவிதை நயம் - அணி அழகு - உவமை அழகு - சொல் அழகு - இவை எல்லாம் எவருக்கு? இலக்கிய ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருப்பவருக்கு. பெரும்பாலான மக்கள் எதிலே ஈடுபடுவார்கள்? கவிதை நயத்திலே ஈடுபடுவார்களா? சொல் அழகிலே ஈடுபடுவார்களா? அணியிலே ஈடுபடுவார்களா? மாட்டார்கள்.

பின் எதிலே ஈடுபடுவார்கள்? மனித உள்ளத்திலேதான் ஈடுபடுவார்கள். மனித உள்ளத்தின் உணர்ச்சிகளே மற்றோர் மனித உள்ளத்தை அள்ளும்; ஈர்க்கும்; பிடிக்கும்; வசீகரிக்கும்.

சங்க இலக்கியங்களிலே மனித உணர்ச்சிக்குப் பஞ்சமே இல்லை. ஏராளமாக இருக்கிறது. அதை எடுத்துக்காட்ட வேண்டும். மனித வாழ்க்கைக்குத் திரைபோடக்கூடாது. அப்போதுதான் மக்கள் இரசிப்பார்கள்; விரும்புவார்கள்; ஆர்வமுடன் படிப்பார்கள்.

இலக்கியம் என்பது சிலருக்கா? அல்ல, பண்டிதர் உடைமையா? அல்ல. பின் எவருக்கு? மக்களுக்கு; பெரும்பாலான மக்களுக்கு.

இந்த எண்ணம் நமது கருத்திலே வேரூன்றுதல் வேண்டும்.

இந்த எண்ணத்தை எனது உள்ளத்திலே வேரூன்றச் செய்தவர் யார்? தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

அப்பெரியார் அறிவுக் கடலிலே ஊறியவர்; திளைத்தவர். அத்தகைய ஒருவரிடமிருந்து என்ன பிறக்கும்? அறிவு; அறிவு.

ஆரஞ்சுப் பழத்தைச் சாறு பிழிந்து, அதிலே சிறிது தேனுங் கலந்து கொடுத்தால் எப்படி இருக்கும்? அப்படிச் சொல்வார் அவர். எதை? பழந்தமிழ் இலக்கியக் கருத்துகளை.



அப்பெரியார் எனக்குக் காட்டிய வழியையே நான் பின் பற்றி யிருக்கிறேன். அவ்வழியிலேயே குறுந்தொகைப் பாடல் களுக்கு விளக்கம் எழுதியிருக்கிறேன்.

நான் எழுதும்போது என்முன்னே இலக்கணம் தோன்றுவ தில்லை; அணி தோன்றுவதில்லை; சொல் நயம் தோன்றுவதில்லை; கற்பனை தோன்றுவதில்லை. பின் என்ன? மனித குமாரன் தோன்று கிறான்; பழந்தமிழன் தோன்றுகிறான்; இன்றைய தமிழன் தோன்றுகிறான்.

அன்றைய‌த் தமிழனை இன்றையத் தமிழனுக்கு அறிமுகம் செய்விக்க முயல்கிறேன்; மனித உள்ளத்தை எடுத்துக்காட்ட முயல்கிறேன். எனது முயற்சியில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளேனோ அறியேன்.

நான் எல்லாம் அறிந்தவன் அல்லன்; குறைகள் உடையவனே. எனது குறைகளை யான் அறிவேன்.

ஆயினும் புதுமை காண விரும்புகிறேன். புரட்சிக் கருத்து களைத் தூவ விரும்புகிறேன். நடந்து நடந்து தேய்ந்து போன வழியை விட்டுப் புதிய வழியிலே செல்ல விரும்புகிறேன்.

இக்கருத்துடனேயே, "கலித்தொகைக்கு" விளக்கம் எழுதினேன். தமிழ் மக்கள் என்னைப் பாராட்டினார்கள்; ஆதரவு தந்தார்கள்; உற்சாக மூட்டினார்கள்.

அந்த ஆதரவும், ஊக்கமும், உற்சாகமும் என்னைத் தூண்டின. குறுந்தொகைக்கும் விளக்கம் எழுதச் செய்தன; எழுதியிருக்கிறேன்.

குற்றங் குறைகளை மன்னிக்க வேண்டுகிறேன்.

இந்நூலை நன்முறையில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார் எனது உழுவலன்பர் திரு. **முல்லை முத்தையா.** அவர் என்மீது கொண்டுள்ள அன்பு எல்லையற்றது; ஆழமானது. அவர்தம் அன்புக்கு என்ன கைம்மாறு செய்யவல்லேன். நன்றி; நன்றி. வாழ்க முத்தையா! வெல்க முத்தையா! வெற்றிவேல்.

— **சக்திதாசன் சுப்பிரமணியன்**

## குறுந்தொகை என்பது என்ன?

சங்க இலக்கியங்களிலே ஒன்று குறுந்தொகை. தொகை என்றால் தொகுப்பு என்று பொருள். எதன் தொகுப்பு? பாடல்களின் தொகுப்பு. எத்தகைய பாடல்கள்? குறைந்த வரிகள் கொண்ட பாடல்கள். எனவே, குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை. நான்கு அடிகள் கொண்ட பாடல்கள் முதல் எட்டு அடிகள் கொண்ட பாடல்கள் வரை இத்தொகையிலே இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களிலே நற்றிணையும் அடங்கும்; அகநானூறு அடங்கும். நற்றிணையோ ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை உள்ள பாடல்களைக் கொண்டது. அகநானூறு பதின்மூன்று அடி முதல் முப்பத்தொரு அடிகள் வரை உள்ள பாடல்கள் கொண்டது.

எனவே, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய இம் மூன்று நூல்களையும் நோக்குமிடத்து என்ன தெரிகிறது? இம்மூன்று நூல்களையும் தொகுத்தவர் தம் கருத்துத் தெரிகிறது? கருத்து என்ன?

பாடல்களை எல்லாம் அளவு பற்றித் தொகுத்தனர் என்பதே.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய இம் மூன்று நூல்களிலும் உள்ள பாடல்களை நோக்குவோம். என்ன தெரிகிறது?

அகநானூற்றுப் பாடல்கள் எல்லாம் அதிகமான - நீளமான - வரிகள் கொண்டவை. எனவே, நெடுந்தொகை எனும் பெயர் அதற்கு ஏற்பட்டது.

நற்றிணையில் உள்ள பாடல்களோ நடுத்தர அளவு உள்ளவை.

இம்மூன்று நூல்களையும் ஒப்பு நோக்கினால் என்ன தெரியும்? குறுந்தொகையில் இடம் பெற்றுள்ள பாடல்கள் எவை என்பது தெரியும். எவை? மூன்றினுள்ளும் மிகக் குறைவான அடிகள் உள்ளவை. இவையே குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. நீண்ட அடிகள் உள்ள பாடல்கள் நெடுந்தொகையில் இடம் பெற்றுள்ளன.



குறுந்தொகை, நெடுந்தொகை எனும் பெயர் சூட்டியவர் எவர்? பாடல்களைத் தொகுத்தவரே. தொகுத்தவர் எவர்? பூரிக்கோ என்பார்.

குறுந்தொகையிலே **401** பாடல்கள் உள்ளன. இவற்றைப் பாடிய புலவர் **இருநூற்று அறுவர்.**

குறுந்தொகைப் பாடல்கள் என்ன கூறுகின்றன? அக ஒழுக்கம் பற்றிக் கூறுகின்றன. அக ஒழுக்கமாவது எது? உள்ளத்திலே எழுகின்ற உணர்ச்சி? காதல் உணர்ச்சி. காதல் உள்ளத்தைக் காண்கிறோம் குறுந்தொகையிலே. எப்படிக் காண்கிறோம்? உயிருடன் காண்கிறோம். உள்ளத்தை அள்ளும் வகையில் காண்கிறோம். படித்துப் படித்து இன்புறும் வகையில் காண்கிறோம். காதலன், காதலி, தோழி, செவிலி, பாங்கன், பாணன், பரத்தை ஆகிய ஏழு விதமான பாத்திரங்களைக் காண்கிறோம். இந்த ஏழு வகையினரும் ஏழு சுரங்களாக நிற்கின்றனர்; இன்னிசை எழுப்பு கின்றனர். அதிலே உள்ளம் பறிகொடுக்கின்றோம்; மெய் மறந்து விடுகின்றோம். 'ஆகா!' என்கிறோம்.

"கன்றும் உண்ணாது; கலத்தினும் படாது. . . . எனக்குமாம் ஆகாது; என்னைக்கு முதவாது" என்ற வரிகள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன; கட்டிப் பிடிக்கின்றன. வருந்தும் காதலி நம் எதிரே காட்சி தருகின்றாள்; ஏங்கு கின்றாள்; பெருமூச்சு விடுகின்றாள். காண்கிறோம். இரண்டே வரிகள்! ஓர் உருவத்தையே நம் முன் நிறுத்திவிடுகிறார் கவி. உருவம் மாத்திரமா? அல்ல; உயிர்; உணர்ச்சி; உள்ளம்; எல்லாம். எத்தகைய பாட்டு! எத்தகைய பாட்டு!

"காலே பரி தப்பினவே; கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே" என்ற வரிகளைப் படிக்கும்போது நமது உள்ளம் எங்குச் செல்கின்றது, செவிலித்தாயின் பால் செல்கின்றது. செவிலித் தாய் நம் கண்முன் நிற்கின்றாள்; சோகமே உருவாக நிற்கின்றாள்; மகளை இழந்த வருத்தம். கண்ணீர் வடிக்கின்றாள்.

காலை முதல் ஓடி ஓடித் தேடி அலுத்த உருவம். இத்தகைய உருவத்தைத் திறந்து காட்டுகிறார். காண்கிறோம். ‘ஆகா’ என்கிறோம். ‘காலே பரிதப்பினவே’ எனும்போது அவளுடன் சேர்ந்து நாமும் வருந்துகிறோம். நடந்து நடந்து, ஓடி ஓடி இளைத்தது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இரண்டே வரிகள்! எப்பேர்ப்பட்ட உணர்ச்சி!

இத்தகைய மனித உள்ளத்தைக் காண்கிறோம் குறுந்தொகையில்.

• • •



# குறிஞ்சித் தொகை

## குறிஞ்சிக் கண்ணாடி

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வம் | : | முருகன் |
| 2. | உயர்ந்தோர் | : | பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி |
| 3. | தாழ்ந்தோர் | : | குறவர், கானவர், குறத்தியர் |
| 4. | பறவை | : | கிளி, மயில் |
| 5. | விலங்கு | : | புலி, கரடி, யானை, சிங்கம் |
| 6. | ஊர் | : | சிறுகுடி |
| 7. | நீர் நிலை | : | அருவி, சுனை |
| 8. | மலர் | : | வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தள் பூ |
| 9. | மரம் | : | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் |
| 10. | உணவு | : | மலைநெல், மூங்கில் அரிசி, தினை |
| 11. | பறை | : | தொண்டகப் பறை |
| 12. | யாழ் | : | குறிஞ்சி யாழ் |
| 13. | பண் | : | குறிஞ்சிப் பண் |
| 14. | தொழில் | : | மலை நெல் விதைத்தல், தினை காத்தல், தேன் அழித்து எடுத்தல், கிழங்கு தோண்டி எடுத்தல் |
| 15. | விளையாட்டும் பொழுது போக்கும் | : | அருவி நீராடல், சுனைநீராடல் வெறியாடல். |

## கடவுள் வாழ்த்து

*முருகக் கடவுளை வாழ்த்துகிறார் கவி. முருகன் எவ் விதம் இருக்கிறான்? செம்மேனியனாய் விளங்கு கிறான்; தாமரை போன்ற திருவடியுடையவனா யிருக்கிறான்; சிவந்த குண்டு மணி போன்ற செந்நிற ஆடை அணிந்திருக்கிறான்; சேவலும் வேலும் தாங்கி நிற்கிறான்; உலகினைக் காக்கிறான். உலகம் இன்ப மாயிருக்கிறது.*

தாமரை புரையுங் காமர் சேவடி,
பவழத்து அன்ன மேனி, திகழ் ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சு பக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

*பெருந்தேவனார் பாடிய பாட்டு இது. இவர் கடைச் சங்க காலத்தினர்; தொண்டை நாட்டினர். பாரதக் கதையைத் தமிழ் மொழியிலே முதன் முதல் செய்தவர் இவர். எனவே, பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று பெயர் பெற்றார்.*

● ● ●



## குறிஞ்சி என்பது என்ன?

*நமது பழந்தமிழர்கள் என்ன செய்தார்கள்? நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார்கள். எப்படி? குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்து.*

*மலையும் மலை சூழ்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். இங்கே வாழ்ந்த மக்களுக்கு என்ன பெயர்? உயர் குடிப் பிறந்த ஆண் களுக்குப் பொருப்பன், வெற்பன், சிலம்பன் என்று பெயர். பெண்களுக்குக் குறத்தி, கொடிச்சி என்று பெயர். மற்றையோருள் ஆண்களுக்குக் குறவர்., கானவர் என்றும், பெண்களுக்குக் குறத்தியர் என்று பெயர்.*

*குறிஞ்சியின் தெய்வம் முருகன். மலை நாட்டு மக்கள் முருகனை வழிபாடு செய்வர்.*

*குறிஞ்சி நாட்டிலே உள்ள ஊர்களுக்குச் சிறுகுடி என்று பெயர். அதாவது அவர்கள் சிறு சிறு குடியிருப்புகளிலே வாழ்ந்து வந்தார்கள்.*

*கிளி, மயில் இரண்டும் குறிஞ்சி நாட்டுப் பறவைகள். புலி, கரடி, யானை, சிங்கம் – இவை விலங்குகள்.*

*அருவி, சுனை இவையே நீர் நிலைகள்.*

*சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்; இவை மலை நாட்டு மரங்கள்.*

*வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தள் பூ - இவை மலர்கள்.*

*மலை நெல், மூங்கில் அரிசி, தினை இவையே அவர்தம் உணவு. அவர்கள் முழங்கிய இசைக் கருவிகள் இரண்டு. ஒன்று யாழ்; மற்றொன்று பறை. யாழுக்குக் குறிஞ்சி யாழ் என்று பெயர். பறைக்குத் தொண்டகப் பறை என்று பெயர். அவர்கள் பாடியது* **குறிஞ்சிப் பண்** *என்பது.*

மலை நெல் விதைத்தல், தினை காத்தல், தேன் அழித்து எடுத்தல், கிழங்கு தோண்டி எடுத்தல் – இவை அவர்தம் தொழில்.

அருவி நீராடல், சுனை நீராடல், வெறியாடல் - இவை அவர்தம் பொழுதுபோக்கு விளையாட்டுகள்.

● ● ●



# குறுந்தொகைக் காட்சிகள்

## 1. மங்கையும் மலரும்

“ஆகா! உனது கூந்தலின் அழகை என்ன என்று சொல்வேன்! அதன் மணத்தைத் தான் என்ன என்பேன்! ஏ! வண்டே! நீயே சொல். உண்மையைச் சொல். எனக்காகச் சொல்லாதே. மலர்கள் தோறும் சென்று சென்று ஆராயும் தன்மை உனக்கு உண்டே! அதனால், கேட்கிறேன். சொல்; எனது காதலி இருக்கிறாளே! மயில் போன்ற சாயலாள்! முல்லை முறுவல் அழகி! இவளது கூந்தல் போல நறுமணங்கமழும் மலர் ஏதேனும் உண்டோ? சொல்லு.”

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின். மயில் இயல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ? நீ அறியும் பூவே.

*- இறையனார்*

## 2. காதலும் காந்தளும்

“என்ன இது?”

“தெரியவில்லையா?”

“தெரிகிறது; செங்காந்தள் பூ.”

“இது எதற்கு?”

“இளைஞன் ஒருவன் மலர் கொண்டுவந்து ஒரு மங்கையிடம் கொடுத்தால் அதன் பொருள் என்னவாம்!”

“ஓகோ! அப்படிச் சொல்லு. நீ எங்கள் தலைவியின் மீது காதல் கொண்டு விட்டாய். எனவே, அவளிடம் இம் மலரைக் கொடுக்கச் சொல்கிறாயா?”

*"ஆம்!"*

*"இதோ பார்! எங்களுடைய தெய்வம் யார் தெரியுமா? முருகன். அவனுடைய மலை இது. அவன் எப்பேர்ப் பட்டவன் தெரியுமா? சூரபத்மன் முதலிய அரக்கர்களைக் கொன்று குவித்தவன்; போர்க்களமானது செந்நிறமாகச் செய்தவன். அந்த இரத்தம் தோய்ந்த அம்பையுடையவன்; யானைமீது ஊர்ந்து வருபவன். வீர வாளையுடையவன். அவனுடைய குன்று இது. இங்கே செங்காந்தள் பூக்கள் நிறைய உள்ளன.*

*பஞ்சமேயில்லை. நீ கொண்டு வந்துள்ள மலர் வேண்டாம். போய் வருக வெற்பனே!"*

செங்களம் படக் கொன்று, அவுணர் தேய்த்த,
செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை,
கழல் தொடிச் சேய் குன்றம்
குருதிப் பூவின் குலை காந்தட்டே — *திப்புத் தோளார்*

## 3. சித்தும் பித்தும்

*" என்னப்பா ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"*

*"எப்படி யிருக்கிறேன்?"*

*" ஏதோ பித்துப் பிடித்தவன்போல் இருக்கிறாயே!"*

*"ஆமாம்."*

*" என்ன பித்து அப்பா அது?"*

*" காமப் பித்து."*

*"காமப் பித்தா?" அடப் பாவி! யார் மீது காமம் கொண்டாய்?"*

*" மலைவாணர் பெண் ஒருத்திமீது."*

*" குறிஞ்சித் தலைவ, கூறுவது கேள். உன்னுடைய மலை உச்சியிலே உற்பத்தியாகிறது அருவி. ஆனால். அது எங்கே போய் விழுகிறது? கீழே. காமமும் அத்தகையது தான். உனது தகுதிக்கும் உயர்வுக்கும் ஒவ்வாத இடத்திலும் கூட உன்னைக் கொண்டு போய்விடும். எச்சரிக்கை!"*



பெரு வரை மிசையது நெடு வெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி,
சிலம்பின் இழிதரும் இலங்கு மலை வெற்ப! -
நோதக்கன்றே - காமம் யாவதும்
நன்று என உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே.

*- நக்கீரனார்*

## 4. காதல்! இன்றேல் நோதல்!

*"அப்படியானால் என்ன சொல்கிறாய்?"*

*" என்ன சொல்ல வேண்டும்?"*

*" எனது எண்ணத்தைச் சொல்ல வேண்டும்."*

*" சொல்லி?"*

*"அவளை அதற்கு இணங்கச் செய்ய வேண்டும்."*

*"அது தான் முடியாது."*

*"முடியாதா?"*

*"ஊஹூம். அவளுக்கு உன்மேல் காதல் பிறக்க வில்லையே!"*

*"பிறக்கவில்லையா?"*

*"நான் அவளுக்காகப் படும்பாடு கண்டுமா காதல் பிறக்க வில்லை?"*

*"இல்லை"*

*"அமுதம் போன்ற இன்மொழியாள். புன் முறுவலாள். என்னைப் புறக்கணித்து விட்டாள். ஆனால் நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?"*

*"என்ன செய்யப் போகிறாய்?"*

*"மடல் ஏறப் போகிறேன்."*

"ஊரெல்லாம் உன்னைப் பற்றிப் பேசும்"

"நான் தான் வெட்கத்தை விட்டுத்தானே மடல் ஏறப் போகிறேன்."

அமிழ்து பொதி செந்நா அஞ்ச வந்த
ஆர்ந்து இலங்கு வை எயிற்றுச் சின்மொழி
அரிவையை,
பெறுகதில் அம்ம! யானே! பெற்றாங்கு
அறிகதில் அம்ம! இவ்வூரே! மறுகில்
நல்லோள் கணவன் இவன் எனப்
பல்லோர் கூற, யாம் நாணுகம் சிறிதே.

*- தொல் கபிலர்*

## 5. சொல்லும் செயலும்

"எங்கே அவர்? வரக்காணோமே!"

"யார்? உன் காதலன் தானே!"

" ஆம்"

" வரவேண்டாம் என்று சொல்லி விட்டேன்."

"போடி நீ! இப்படித்தானா? ஏன் வர வேண்டாம் என்றாய்? முன்பு பகலில் வந்து கொண்டிருந்தார். 'பகலில் வராதே, இரவில் வா என்றாய்' இப்போது 'இரவிலும் வராதே' என்று சொல்லி விட்டாய். நான் என்ன செய்வேன்?"

"இதோ! பார்! வருந்தாதே! என்மீது கோபியாதே நான் சொல்வதைச் சிறிது கேள்."

"சொல்லு"

"தினைப்புனத்திலே உன்னைக் கண்டான். 'இன்புற வேண்டும்' என்றான். 'சரி' என்றோம். இடம் கொடுத்தோம். மறு நாளும் வந்தான். மறுநாளும் வந்தான். இப்படியாகத் தொடர்ந்து வந்தான் பகலிலே. அதற்கும் உடன் பட்டோம். பிறகு 'இரவு வருகிறேன்' என்றான். 'வா' என்றோம். இப்படிப் போய்க் கொண்டே யிருந்தால் லேசாகப் போய் விடாதா? உனது அருமை தெரியுமா" கலியாணத்துக்கு



ஏற்பாடு செய்யாமல் அவன் வந்து போய்க் கொண்டேயிருப்பான். இப்படி ஒரு தடை விதிக்கவேண்டும். சூழ்ச்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அவன் கலியாணத்தில் கருத்தைச் செலுத்துவான். வருந்தாதே."

மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ;
அழியல் வாழி - தோழி! - நன்னன்
நறு மா கொன்று ஞாட்பில் போக்கிய,
ஒன்று மொழிக் கோசர் போல,
வன் கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே.

*- பரணர்*

## 6. மங்கையும் மந்தியும்

மலை நாட்டிலே எங்கும் குரங்குகளைக் காணலாம். குரங்குகள் என்ன செய்யும்? கூட்டம் கூட்டமாகச் செல்லும்; ஆணும் பெண்ணுமாகச் செல்லும்; மரத்துக்கு மரம்தாவும்; கிளைக்குக் கிளை தாவும்; பாறைக்குப் பாறைதாவும். இப்படித் தாவித் திரியும்போது என்ன நிகழ்கிறது?

தவறி விழுந்து விடுகிறது ஆண் குரங்கு; இறந்து விடுகிறது. உடனே அதன் காதலியாகிய பெண்குரங்கு கண்ணீர் வடிக்கிறது; கதறுகிறது; காதலனைப் பிரிந்த துன்பம் தாங்க முடியாது துடிக்கிறது. தனது குட்டியை அந்தக் குரங்குக் கூட்டத்திடம் ஒப்படைக்கிறது. ஒப்படைத்துவிட்டு ஓடுகிறது. செங்குத்தான பாறைமீது ஏறி நின்று கீழே விழுகிறது; சாகிறது.

"இதை நீ பார்த்ததுண்டா மலைநாடனே?" என்று கேட்டாள் தோழி.

"பார்த்திருக்கிறேன்"

"அதைத்தான் உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்"

"ஏன்?"

"இரவு நேரத்தில் நீ வருகிறாய், உனது காதலியிடம் இன்பமாக இருக்க."

"ஆமாம். அதற்கென்ன?"

"அப்படி வரும் வழியோ ஆபத்தானது."

"சரி"

"உன் உயிருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விட்டால் . . . "

"நேருமோ?"

" நேர்ந்தால் உன் காதலி என்ன செய்வாள் தெரியுமா?"

"என்ன செய்வாள்?"

"உன் மலை நாட்டுப் பெண்குரங்கு செய்ததையே செய்வாள்.?"

"உயிர் விடுவாளோ?"

"ஆமாம்!"

"எனவே?"

"இரவில் வராதே உன் உயிருக்கு ஒரு தீங்கும் வராதிருப்பதாக. நீ நெடுநாள் வாழ்வாயாக!"

கருங் கட் தாக் கலை பெரும் பிறிது உற்றென,
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன் பறழ் கிளை முதல் சேர்த்தி,
ஓங்கு வரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்
சாரல் நாட! நடு நாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!

*- கடுந்தோட் கரவீரன்*

## 7. சேம்பும் செவியும்

மலை நாட்டிலே சேம்பு வளர்ந்திருக்கிறது. மலைச் சேம்பு. அந்தச் சேப்பம் இலை காற்றிலே அசைகிறது. பாறையின் பக்கத்திலே இருப்பதால் எத்தகைய தோற்ற மளிக்கிறது? யானை தன் செவியை ஆட்டுவது போல் இருக்கிறது.

இத்தகைய மலை நாட்டு இளைஞன் அவன். பொருள் தேடுவதற்காக வெளியூர் செல்கிறான். அந்தச் சேதியை அவனது காதலியிடம் சொல்கிறாள் தோழி.



"ஆமாம்! இதை என்னிடம் சொல்ல வந்தாயோ! உனக்கு முந்தியே எனக்குத் தெரியும்"

"என்னடி தெரியும்?"

"கல் நெஞ்சரான அவர் பிரிந்து போவார். வாடைக் காலத்திலே நான் வாடித் துன்புறுவேன் என்று."

"தெரியுமா?"

"எல்லாந் தெரியும். அவரைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. என்னிடம் சேதி சொல்கிறாள்."

காந்தள் வேலி ஓங்கு மலை நல் நாட்டுச்
செல்ப என்பவோ, கல் வரை மார்பர் -
சிலம்பில் சேம்பின் அலங்கல் வள் இலை
பெருங் களிற்றுச் செவியின் மானத் தைஇ,
தண் வரல் வாடை தூக்கும்
கடும் பனி அற்சிரம் நடுங்கு அஞர் உறவே.

*- கிள்ளிமங்கலங்கிழார்*

## 8. வண்டிக் குதிரையும் வளைந்த மூங்கிலும்

மலை நாட்டிலே மூங்கில் அதிகம். இளம் மூங்கிலை வளைத்துத் தின்கிறது யானை. அப்படித் தின்கிறபோது பிடி நழுவுகிறது. அப்போது வளைந்த மூங்கில் என்ன செய்கிறது? 'விர்' என்று மேலோங்கிச் செல்கிறது. இது எப்படியிருக்கிறது? வண்டியிலே பூட்டிய குதிரையை அவிழ்த்துவிட்ட உடனே அதுஎப்படி வேகமாகத் துள்ளிக் குதிக்குமோ அந்தமாதிரி இருக்கிறது. இத்தகைய மலைநாட்டு இளைஞன் ஒருவன், கட்டழகி ஒருத்தியைக் கண்டான்; காதல் கொண்டான்.அவளும் அவன்மீது காதல் கொண்டாள்.இந்த இரண்டு பேர்வழிகளும் திருடனுக்குத் தேள் கொட்டியது மாதிரி இருக்கிறார்கள். ஒருவர் காதலை மற்றொருவரிடம் சொல்லவில்லை.

ஆனால், அவள் தனது காதலைத் தோழியிடம் சொல்லி வருந்தினாள்.

"அவசரப்படாதே! இரு பார்க்கலாம்" என்றாள் தோழி.

*ஒரு நாள்அவன் வந்தான். தோழியிடம் தனது வருத்தத்தைத் தெரிவித்தான். "ஆகட்டும், பார்க்கலாம்" என்று சொல்லி வைத்தாள்அவள்.*

*"அடியே! பழம் நழுவிப் பாலிலே விழுந்துவிட்டது. வெயில் காலத்திலே காளை மாடு 'புஸ் புஸ்' என்று அவதிப்படுமேஅந்த மாதிரி வந்தான்அவன்."*

*"வந்து என்ன சொன்னாள்?"*

*"காதலால் தவிக்கிறேன் என்றான்."*

*"நாமும் அதே மாதிரி தவிப்பது அவனுக்குத் தெரியாது போலிருக்கிறது."*

*"அவன் வளைந்து வந்திருக்கிறான் மூங்கில்போல. 'பிகு' செய்யாதே நிமிர்ந்து விடுவான்."*

விட்ட குதிரை விசைப்பின் அன்ன,
விசும்புதோய் பசுங் கழைக் குன்ற நாடன்
யாம் தற்படர்ந்தமைஅறியான், தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன்என்ப - நம் மாண் நலம் நயந்தே.

***- விட்ட குதிரையார்***

## 9. மங்கையும் மோகமும்

*"என்னப்பாஒரு மாதிரியாக இருக்கிறாய்?"*

*"ஒன்றுமில்லை. அந்தப்புறம் போய்வந்தேன்."*

*"அந்தப்புறமா. . .? எந்தப்புறம்?"*

*"மலைப்புறம்."*

*"மலைப்புறத்திலே என்ன கண்டாய்?"*

*"அம்புபாயக் கண்டேன்."*

*"யார் மீது?"*

*"என்மீதுதான்."*



*"அம்பா?"*

*"ஆம். பார்வைக்கு மலர்போல் சுழல்கிறது. ஆனால் அம்பு போல் தைக்கிறது; வதைக்கிறது."*

*"என்ன, புதிர்போடுகிறாய்?"*

*"உண்மைதான்."*

*"ஆமாம், எது உண்மை?"*

*"அந்தப் பெண் என் மீது கண் வீசினாள்."*

*"எந்தப் பெண்?"*

*"குருவியோட்டிய பெண்!"*

*"எங்கே குருவியோட்டினாள்?"*

*"பருத்தியும், தினையும் கலந்து விளைந்திருக்கும் தினைப் புனத்திலே!"*

*"அப்படிச் சொல்லு! அந்தப் பெண்மீது மோகம் கொண்டு தவிக்கிறாய்!"*

*"ஆம்!"*

பூஒத்து அலமரும் தகைய; ஏ ஒத்து
எல்லோரும் அறிய நோய் செய்தனவே
தேமொழித் திரண்ட மென் தோள்,மா மலைப்
பாஅஇ வித்திய ஏனல்
குரீஇ ஒப்புவாள், பெரு மழைக் கண்ணே!

***- மள்ளனார்***

## 10. இன்பமும் அதன் பின்பும்

*செங்கரும்பு போன்ற சிங்காரி ஒருத்தி. அவளைக் கண்டான் ஒரு காளை. காதல் கொண்டான். அவளும் அவன் மீது காதல் கொண்டாள். இருவரும் உள்ளம் ஒன்றாயினர். உடலும் ஒன்றாயினர்.*

*"நேரமாகிவிட்டது" என்றாள் அவள்.*

*"சீக்கிரம்போகவேண்டுமோ?" என்றான்.*

"ஆம்" என்றாள்.

"ஏன்?" என்றான்.

"எவராவது வந்தால். . ." என்றாள்.

"போய் வா" என்றான்.

கலைந்த கூந்தலைச் சரி செய்துகொண்டாள். உடுத்தியதுணி ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள்; போனாள். அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்அவன்; நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"ஆகா! என்ன அழகு! என்ன அழகு! இன்பமடா இன்பம்! இன்பச் சுரங்கம்!" என்று கூறிக் குதித்தான்.

கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டான். பற்களை இறுகக் கடித்துக் கொண்டான். உதட்டை மூடிக் கடித்தான். கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டான்.

"ஆகா! அந்த மேனி! பஞ்சணை போன்ற மேனி! மெல்லிய மேனி! அணைத்தேன்! ஆனந்தம்! ஆனந்தம்!" என்று புலம்பினான்.

"போ! போ! என்னால்சொல்ல முடியாது. அப்பேர்ப் பட்டவள்" என்றான்.

ஒடுங்கு ஈர் ஓதி ஒள் நுதற் குறுமகள்
நறுந் தண் நீரள்; ஆர் அணங்கினளே;
இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்;
சில மெல்லியவே கிளவி;
அனை மெல்லியல் யான் முயங்குங்காலே.

*- ஓரம்போகியார்.*

## 11. வலியும் வயித்தியரும்

முன் பனிக்காலம் வந்துவிட்டது. வயலிலே விதைத்த உழுந்து காய்த்து முற்றிவிட்டது. முற்றிய காய் எதுபோல் இருக்கிறது?பறவையின் கால் போல் இருக்கிறது. உழுந்துப் பயிரை மான்கூட்டங்கள் வந்து மேய்கின்றன.



இந்நிலையில் காதலனைப் பிரிந்த அவள் என்ன செய்தாள்? வருந்தினாள். "ஐயோ! அவர் இன்னும் வரவில்லையே!" என்று ஏங்கினாள்; துடித்தாள்; புழுப்போல் துடித்தாள்.

கண்டாள்தோழி. அவளால் பொறுக்க முடியவில்லை.

"ஏனடி துடிக்கிறாய்?"

"என்ன செய்வேன்? தாங்க முடியவில்லையே!"

"என்ன செய்கிறது?"

"மண்டையை இடிக்கிறது. வயிற்றைப் புரட்டுகிறது. மனத்தை வாட்டுகிறது. என்ன என்னவோ செய்யுதே!"

"வயித்தியரைஅழைத்து வரட்டுமா?"

"வயித்தியரா? எனக்கு அவர்தான் வயித்தியர்! என்னை மணந்த அவர் மார்பு இருக்கிறதே, அதுதான் இதற்கு மருந்து. வேறு எதுவுமில்லை!" என்றாள் அவள்.

பூழ்க் கால் அன்ன செங் கால் உழுந்தின்
ஊழ்ப்படு முது காய் உழையினம் கவரும்
அரும் பனி அற்சிரம் தீர்க்கும்
மருந்து பிறிது இல்லை; அவர் மணந்த மார்பே.

*- அள்ளூர் நன்முல்லையார்.*

## 12. ஆசையும் ஆர்வமும்

கட்டழகி ஒருத்தி. அவள்மீது காதல் கொண்டான் அவன். அவளும் அவனைக் காதலித்தாள். இருவரும் இன்பமாகப் பொழுது போக்கினர். பிறகு, அவன் சென்றான்.

மறுநாள் மீண்டும் அவளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை. முதல்நாள் அவளைச் சந்தித்த இடத்துக்கு வருகிறான்.

முதல்நாள் அவளைத் தழுவி இன்புற்றதை எண்ணி ஆனந்த மடைகிறான்.

"ஆகா! எப்பேர்ப்பட்ட அழகி! காந்தள் பூ, முல்லைப் பூ, குவளைப் பூ, முதலியவற்றை யெல்லாம் கலந்து தொடுத்தது

போன்ற அழகி! அவளது மேனியின்அழகைத் தான் என்ன என்று சொல்வேன்! அவள் மீண்டும் இங்கே வந்தால் இறுகத் தழுவி இன்புறுவேனே.!"

கோடல், எதிர் முகைப் பசு வீ முல்லை,
நாறுஇதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ
ஐது தொடை மாண்ட கோதைபோல,
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது; முயங்கற்கும் இனிதே.

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 13. தேனும் முடவனும்

"கொம்புத் தேன். மலையிலே இருக்கிறது. அதைப் பார்க்கிறான். ஒரு முடவன். ஆசை யுண்டாகிறது. நாக்கிலே நீர் ஊறுகிறது. இரண்டு காலும் முடம். அவன் மரத்தின் மீது ஏறுவது எப்படி? தேனைப் பருகுவது எப்படி? இன்புறுவது எப்படி?"

சிரமம் இல்லாமலே இன்பம் அனுபவிக்கிறான் அவன். எப்படி? இரண்டு கையையும் குழித்துக் கொண்டு நக்குகிறான். தேன் அடையைப் பார்த்துப் பார்த்து உள்ளங்கையை நக்கி நக்கி இன்புறுகிறான். கொம்புத் தேனைக் குடித்துவிட்டது போலவே எண்ணம்!" என்றாள் அவள்.

"அந்த மாதிரி என்ன?" என்று கேட்டாள் தோழி.

"அந்த மாதிரி இன்பமடைந்தேன் நான்."

"முடவன் கொம்புத் தேனைக் குடித்து இன்புற்றது மாதிரி நீயும் இன்புற்றா யாக்கும்!"

"ஆம்"

"அந்த முடவன் செய்தது மாதிரி."

"ஆமாண்டி!"

"அவனைப் பார்த்து?"

"துன்பமாயிருக்கு."



குறுந்தாட் கூதளி ஆடிய நெடு வரைப்
பெருந்தேன் கண்ட இருங் கால் முடவன்,
உட்கைச் சிறு குடை கோலி, கீழ் இருந்து,
சுட்டுபு நக்கியாங்கு, காதலர்
நல்கார் நயவார் ஆயினும்,
பல் கால் காண்டலும், உள்ளத்துக்கு இனிதே.

*-பரணர்*

## 14. ஊமையும் உவமையும்

"என்ன சங்கதி? ஏன் இப்படி வர வர இளைத்துத் துரும்பா கிறாய்?"

"என்ன செய்வது? ஊமையன் காவல் காத்தது மாதிரி இருக்கிறேன்."

"அதென்ன? ஊமையன் காவல்?"

"அவனோ ஊமை. வாய் திறந்து பேச முடியாது. கையும் கிடையாது. பாறையிலே வெண்ணெய் இருக்கிறது. அதற்குக் காவல் இருக்கிறான்அவன். வெயில் ஏறஏற என்ன ஆகிறது? பாறை மீது உள்ள வெண்ணெய் உருகுகிறது. அதை எடுத்து அப்பால் வைக்கலாம் என்றாலோ கை இல்லை. வாய் திறந்து யாரையாவதுஅழைக்கலாம் என்றாலோ வாய் ஊமை. அந்தக் கதையாகத்தான் இருக்கிறது எனது நிலை."

"ஆமாம், நீதான் நன்றாயிருக்கிறாயே. நன்றாகப் பேசுகிறாய். ஊமையில்லை. கையும் நன்றாக இருக்கிறது. அப்புறம் என்ன?"

"கையிருந்தும் முடவன்தான். வாயிருந்தும் ஊமை தான் இந்த விஷயத்தில்."

"எந்த விஷயத்தில்?"

"காதல்"

"ஊஹும்! அப்படிச் சொல்லு."

இடிக்கும் கேளிர் நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்று மன் தில்ல;
ஞாயிறு காயும் வெவ் அறை மருங்கில்
கை இல் ஊமன்கண்ணின்காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று, இந் நோய்; நோன்று கொளற்கு அரிதே!

*- வெள்ளி வீதியார்*

## 15. தூண்டிலும் மூங்கிலும்

*மலை நாட்டிலே மூங்கில் வளர்ந்திருக்கிறது. அதிலே இளம் குருத்தான மூங்கிலைப் பிடித்து வளைத்துக் கொண்டிருக்கிறது காட்டு யானை.*

*அந்த நேரத்திலே தினைப்புனங் காவலர் கூச்சல்போட்டுக் கவண்கல் விடுகின்றனர்.*

*அது கண்டு மருண்டது யானை. வளைத்த மூங்கிலை விட்டு விட்டது. மூங்கில் குருத்து 'விர்' என்று மேலே போயிற்று. எது போல? தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறான் ஒருவன். தூண்டில் முள்ளிலே மீன் அகப் பட்டது. உடனே வேகமாக இழுக்கிறான் தூண்டிலை. அந்த மாதிரி!*

*மூங்கிலும் நிமிர்ந்தது. இந்த நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது அவளுக்கு.*

*அவள் அவனைக் காதலித்தாள். அவனும் அவளைக் காதலித்தான். இருவரும் இன்பமாக இருந்தனர். பின்பு அவன்சென்றான்.*

*“விரைவில் வருவேன். உன்னை மணந்து செல்வேன்” என்றான். வரவில்லை.*

*“அவன் வரவில்லையே!” என்று ஏங்கினாள் அவள்; வருத்த முற்றாள். ஏக்கமும் வருத்தமும் என்ன செய்தன? அவள் நலனை அழித்தன. அழகு குன்றினாள் அவள்.*

*“ஐயோ! இப்படி உன் அழகு குன்றிப் போகிறதே” என்று கூறினாள் தோழி.*



*“அதற்கு என்ன செய்வது? என்றைய தினம் அவன் என்னைத் தொட்டானோ அன்றே என்அழகைத் தூண்டில் போட்டுக் கவர்ந்துவிட்டான். தூண்டிலில் பட்ட மீன் போல் நான் துடிக்கிறேன். என் உடல் இங்கே; உயிர் அவனது தூண்டில் முள்ளிலே. அவன் மீண்டும் வந்தால் அன்றி என் அழகும் வராது, உயிரும் இராது” என்றாள்.*

யானே ஈண்டையேனே; என் நலனே,
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்
கான யானை கை விடு பசுங் கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு, ஆண்டு, ஒழிந்தன்றே.

*- மீனெறி தூண்டிலார்.*

## 16. களவும் காதலும்

*“அப்பா 'சரி' என்றார்.”*

*“அப்படியா?”*

*“அம்மாவும்'சரி' என்றாள்.”*

*“உம்”*

*“அவனும் வந்து கலியாண ஏற்பாடுகளைச் செய்கிறான்.”*

*“ஏண்டி, நம்ம சங்கதி, அப்பா அம்மாவுக்குத் தெரியுமோ?”*

*“தெரியும்.”*

*“எப்படித் தெரியும்?”*

*“நான் சொன்னேன்.”*

*“என்ன சொன்னாய்?”*

*“நீ, காதல் கொண்டாய் என்று.”*

*“சீ! போடி, ஏன் சொன்னாய்?”*

*“சொல்லாமல் என்ன செய்வது? நீதான் அவதிப்படுகிறாயே! அதனால்தான். நான் என் தாயிடம் சொன்னேன். என் தாய் உன்*

தாயிடம் சொன்னாள். உன் தாய் தந்தையிடம் சொன்னாள். உன் தந்தையோ உன் காதலனின் ஊருக்குச் சேதிசொல்லியனுப்பினார். அவனும் வந்தான். கலியாண ஏற்பாடுகளைச் செய்கிறான். உனக்கு மகிழ்ச்சிதானே" என்றாள்.

அவள் சிரித்தாள் மெதுவாக!

ஆர் களிறு மிதித்த நீர் திகழ் சிலம்பில்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே,
நரந்தம் நாறும் குவை இருங் கூந்தல்,
நிரந்து இலங்கு வெண் பல்,மடந்தை!
பரிந்தனன்அல்லெனோ, இறைஇறை யானே

- பனம் பாரனார்

## 17. காதலும் காரிகையும்

"இதோ பாரடி தோழி! சும்மா இப்படிப் பேசாதே!" என்று சீறினாள் அவள்.

"எப்படிப் பேசுகிறேன்!"

"அவரைப் பற்றி இழிவாகப் பேசாதே."

"அப்போ நான் என்ன இழிவாகப் பேசிவிட்டேன்? இவ்வளவு நாள் ஆயிற்றே! இன்னும் திருட்டுத்தனமாகவே காதல் செய்கிறானே! உன்னை வரைந்து போகவில்லையே என்று சொன்னேன். அவ்வளவு தானே!"

"நான் ஒன்றும் மட்டமாகக் காதல் செய்துவிடவில்லை. அதை நினைவில் வைத்துக்கொள்."

"சரி. உயர்வாகவே இருக்கட்டும்"

"ஆம், உயர்ந்ததுதான். வானினும் உயர்ந்தது; நிலத்தினும் பெரியது. கடலைவிட ஆழமானது எனது காதல் - மலை நாடனுடன் நான் கொண்ட காதல் அப்பேர்ப்பட்டது. சுலப மானது என்று எண்ணிவிடாதே. அவன் வருவான். வரைந்து செல்வான்" என்றாள் அவள்.



நிலத்தினும் பெரிதே!வானினும் உயர்ந்தன்று!
நீரினும்ஆரளவின்றே! சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன்இழைக்கும் நாடனொடு நட்பே.

- தேவகுலத்தார்

## 18. மழையும் மண்பானையும்

"இனிமேல் இரவு நேரத்தில் வராதே" என்றாள் தோழி.

"ஏன்?" என்றான் அவன்.

"ரொம்பக் கஷ்டம்."

"என்ன கஷ்டம்?"

"யாராவது கண்டுகொண்டால் . . . . . ."

என்ன செய்வான்! பாவம்! மனம் வருந்தினான். வருந்தியவன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவனது பார்வை பக்கத்திலே சென்றது. என்ன கண்டான்? சுடப்படாத பச்சை மண்பானைகள் கண்டான். அவை எப்படியிருந்தன? மழை பெய்ததாலே கரைந்து இருந்தன.

அதைக் கண்டதும் அவனுக்கு என்ன தோன்றியது? தன் நிலையும் அந்த மண்பானை போன்றதே என்று தோன்றியது.

"இரவு வராதே என்ற சொல் கேட்ட உடனே அவனது உள்ளம் இடிந்தது. எதுபோல?"

மழையிலே உடைந்து போன பச்சைமண் பானைபோல.

அதையே நினைத்து நினைத்து உருகியவன் என்ன கண்டான்? குரங்குகள் குட்டிகளை அன்புடன் இறுகக் கட்டிக் கொண்டு மரத்துக்கு மரம் தாவுதல் கண்டான்.

"அன்புடன் குட்டியை ஏற்றிச் செல்லும் இந்த மந்திகளைப் போல என் சொல்லை ஏற்றுச் செல்ல எவருளர்?" என்று புலம்பினான்.

"ஏ! நெஞ்சே! எட்டாத கோட்டை! நிறைவேற முடியாதஆசை. இந்த ஆசை வெள்ளத்திலே நீந்துகிறாயே! குட்டிகளைத் தூக்கிக் கொண்டுபோய் விடும் குரங்குபோல் உனக்கு யார்உளர்?

உன்னைத் தூக்கிச் சென்று இன்பக் கரையில் சேர்க்க? அப்படி எவராவது கிடைத்தால் நீவெற்றி பெறுவது உறுதி'' என்கிறான்.

நல்லுரை இகந்து புல்லுரை தாய்
பெயல் நீர்க்கு ஏற்ற, பசுங்கலம் போல,
உள்ளந் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதுஅவா உற்றனை!நெஞ்சே! நன்றும்
பெரிதால்அம்ம! நின்பூசல்! உயர் கோட்டு
மகவுடை மந்திபோல
அகனுறத் தழீஇக் கேட்குனர் பெறினே!

*- ஔவையார்*

## 19. காதலும் வேதலும்

''இனிமேல் சாகவேண்டியதுதான்'' என்றான்அவன்.

''அப்படி என்ன வந்து விட்டது? ஏன் சாகிறாய்?'' என்றாள்அவள்.

''பின் என்னதான் செய்வது?''

''உயிர்வாழ்கிறதுதானே!''

''வாழவும் முடியவில்லையே!''

''ஏன்?''

''அவள் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? அவள் இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்?''

''போ! போ! பயித்தியமே! ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள். தெரிந்ததா! இதுக்காக உயிரை விடுகிறேன் என்கிறாயே! இவள் இல்லா விட்டால் வேறு ஒருத்தி!''

''அதுதானே இல்லை. காலை, பகல், மாலை, நடு நிசி விடியல் என்று இப்படிப் பொழுது மாறி மாறி வருகிறதே, அந்தமாதிரி தோன்றும் காமம் அல்ல. காதலாக்கும்! காதல்! ஆகவே, நான் கொண்ட காதல் உறுதியானது. சிறந்தது. அழியாதது. தெரிந்ததா?''

''அப்படியானால் மடல் ஏறலாமே!''



''ஏறலாம். பனங் கருக்கினாலே குதிரை செய்து அதன் மீது ஏறி முச்சந்தியில் நிற்பேன். கையில் அவள் படத்தையும் வைத்துக் கொண்டு புலம்புவேன். இவற்றால் வரும் பழி யாரைச் சேரும்? அவளையல்லவா சேரும்!''

''அதுபற்றி உனக்கு என்ன கவலை?''

''ஆமாம்! கவலைதான். நாலு பேர் என்னசொல்வர்? 'ஐயோ பாவம்!' என்று என்மீது இரக்கம் கொள்வார்கள். ஆனால் அவளை ஏசுவார்கள். எனவே அது வேண்டாம் என்று நினைக்கிறேன்.''

''வேறு வழி!''

''வழி ஒன்றே!''

''என்ன?''

''உயிர் விடல்! உயிர் விடல்!''

காலையும், பகலும்; கையறு மாலையும்,
ஊர் துஞ்சு யாமமும், விடியலும் என்று
இப்பொழுது இடைதெரியின், பொய்யே காமம்
மா என மடலொடு மறுகில் தோன்றி,
தெற்றெனத் தூற்றலும் பழியே!
வாழ்தலும் பழியே! பிரிவுதலை வரினே.

*- அள்ளூர் நன்முல்லையார்.*

## 20. பாறையிலே படர்ந்த கொடி

''பிரியேன் என்றான். உண்மை என்று எண்ணினேன். ஆனால், அவன் பிரிந்து சென்று விட்டான். அதனை நானே பொறுத்து ஆற்றியிருக்கிறேன். அப்படியிருக்க நீ ஏன் வருந்துகிறாய்? வருந்தாதே'' என்றாள் அவள்.

வருந்த வேண்டியவள் அவள். ஆனால், வருந்துகிறவளோ தோழி. தோழிக்குச் சமாதானம் சொல்கிறாள் அவள்.

இவ்விதம் அவளைப் பிரிந்து சென்றவன் எவன்? மலை நாடன். சுரசுரப்பான பாறைகள் மிக்க மலைநாடன். சுரசுரப்பான

அந்தப் பாறைகள் எக் காட்சி வழங்கும்? யானை படுத்து உறங்குவது போன்ற காட்சி வழங்கும்.

அந்தப் பாறையிலே கொடி படர்வது, யானைமீது கொடி படர்வது போலிருக்கும். அத்தகைய மலைநாடனே அவளது காதலன்.

துறுகல் அயலது மாணை மாக்கொடி,
துஞ்சு களிறு இவருங் குன்ற நாடன்
நெஞ்சு களனாக 'நீயலென் யான்' என
நல்தோள் மணந்த ஞான்றை மற்று அவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ?தோழி! நின்வயினானே.

- பரணர்

## 21. மயிலின் முட்டையும் மந்தியின் குட்டியும்

"விரைவில் வருவேன்" என்று கூறிப்போனான். குறித்த காலமும் வந்தது. ஆனால், அவன் வரவில்லை. "இன்று வருவான்; நாளை வருவான்" என்று எண்ணி ஆற்றியிருந்தாள் அவள். நாட்கள் சென்றன. அவன் வரவில்லை.

சிந்தனையில் ஆழ்ந்தாள். அந்த நேரத்திலே அவளது சிந்தையைக் கவர்ந்தது ஒன்று. அது என்ன? கருங் குரங்கின் குட்டி. அந்தக் குரங்குக் குட்டி விளையாடியது. எதை வைத்துக் கொண்டு விளையாடியது? பாறையிலே மயில் ஈன்ற முட்டை. அதை உருட்டி விளையாடிக் கொண்டிருந்தது குரங்குக் குட்டி. அதைக் கண்டதும் அவளுக்குத் தன் காதலனின்மீது ஏக்கம் அதிகரித்தது. கண்கள் நீர் சொரிந்தன.

"ஏன் வருந்துகிறாய்? உனக்குப் பரிசப் பணம் சம்பாதிக்கத் தானே அவன் வெளியூர் போயிருக்கிறான்?" என்றாள் தோழி.

ஆமாம். எல்லாம் சரி. என்னால் பொறுக்க முடியவில்லையே! கஷ்ட மாயிருக்கிறதே!"என்றாள் அவள்.

"பொறுத்திரு. வருந்தாதே!" என்று கூறினாள் தோழி.



கான மஞ்ஞை அறை ஈன்முட்டை
வெயில் ஆடும் முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன்! வாழி! தோழி! உண் கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே.

- கபிலர்

## 22. உள்ளமும் உறுதியும்

"கண்ணா!" என்றாள்.

"ஏன் கண்ணே" என்றான்.

"என்னைக் கைவிடுவாயோ?" என்றாள்.

"மாட்டேன்" என்றான்.

அது கேட்டு அவள் மனம் அமைதி பெறவில்லை. ஏன்? கண்டாள். காதல் கொண்டாள். கருத்து ஒன்றாயினர். உடலும் ஒன்றாயின. இனிப் பிரிந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம்.

அவளது குறிப்பறிந்தான். கூந்தலைக் கோதினான்.

"செங்கரும்பே! நீ சிறிதும் கவலைப்படதே. என் தாய் யார்? உன் தாய் யார்? இவ்விருவருக்கும் முன்பின் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது" என்றாள்.

"ஏதாவது உறவு உண்டா?"

"இல்லை."

"என் தந்தை யார்? உன் தந்தை யார்? இவ்விருவருக்கும் முன்பின் ஏதாவது உறவு உண்டா? தெரியுமா?"

"தெரியாது."

"நீயார்? நான் யார்? நம் இருவருக்கும்ஏதாவது பழக்கமுண்டா?"

"ஒன்றுமில்லை"

"அவ்விதமிருக்க நம் இருவர் உள்ளமும் ஒன்றாயின பார்த்தாயா? அது ஏன்? இதுமுன் பிறப்பின் பந்தம் அல்லவா?"

"ஆம்."

"நம்மிடையே காதல் தோன்றியது பார்த்தாயா?"

"ஆம்."

"செம்மண் நிலத்திலே நீர் வார்த்தால் எப்படியாகும்?"

"நீரும் செம்மண்ணும் ஒன்றாகும்; பிரிக்க முடியாததாகும்."

"அப்படித்தான். நமது காதல்? எனவே பிரிதல் என்பது இல்லை. அஞ்சாதே. கவலைப்படாதே கண்ணே!" என்றான்.

"இல்லை" என்றாள்.

யாயும் ஞாயும் யாராகியரோ!
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே.

- *செம்புலப் பெயல்நீரார்*

## 23. அன்பும் அருவியும்

"உன் தயவு இருந்தால் போதும்" என்றான் அவன்.

"தயவா? எதற்கு?" என்றாள் அவள்.

"சங்கிலி அறுந்து போகாமல் இருப்பதற்கு."

"அதற்கு என்ன செய்யவேண்டும்?"

"ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்."

"என்ன ஏற்பாடு?"

"அப்படி. . . கொஞ்சம் இரவு நேரத்தில் அவளுடன் பேசி விட்டுப் போக."

"மலைநாடனே! கேள்! உன் மலையிலே மழை பெய்கிறது. பிறகு நின்றுவிடுகிறது. நின்ற பிறகும்கூட அந்த நீர் அருவியாக



வருகிறது; ஒலிக்கிறது அல்லவா! அந்த மாதிரிதான். இரவு நேரத்திலே அவளுடன் பேசினால்தான் தொடர்பு என்று எண்ணாதே. பேசாவிட்டாலும் நம் தொடர்பு இருக்கும்."

காமம் ஒழிவது ஆயினும் - யாமத்துக்
கருவி மா மழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட! - எம்
தொடர்பும் தேயுமோ, நின்வயினானே?

- *கபிலர்*

## 24. வேங்கையும் மங்கையும்

அவள்மீது காதல் கொண்டான். அவன் யாருக்கும் தெரியாமல் இரவு நேரத்திலே வந்து போகிறான். இன்பம் துய்க்கிறான். இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்ற எண்ணம் தோழிக்கு.

"இனிமேல் இந்த மாதிரி இரவில் வராதே" என்று கூற எண்ணினாள்.

இதை எப்படி அவனிடம் நேராகச் சொல்வது? ஏதாவது ஒன்றைச் சாக்கிட்டுச் சொல்லவேண்டும். நல்ல வேளையாக நிலவு வந்தது.

"நிலவே! நீ நன்மை செய்யவில்லை. இரவு வருகிறான் அவன். அவனை எல்லோருக்கும் காட்டிக் கொடுக்கிறாய். வராமல் இருக்கச் செய்கிறாய். காட்டிலே வேங்கை மரமானது சிவந்து மலர்ந் திருக்கும். கரியபாறைகளின்மீது அம் மலர் நிறைய உதிர்ந்திருக்கும். பார்ப்பதற்குப் புலி போல் தோன்றும். அது கண்டு அவன் அஞ்சுவான். இதற்கும் காரணம் நீயே!" என்று சொல்கிறாள்.

இதன் கருத்தென்ன? "இனி இம்மாதிரி இரவு நேரங்களில் வராதே" என்பதுதான்!

கருங் கால் வேங்கை வீ உகு துறுகல்
இரும் புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை - நெடு வெண்ணிலவே!

- *நெடு வெண்ணிலவினார்*

## 25. அணைத்தான்; அழைத்தாள்!

“என்னவோ அப்பா, நீ ஆசைப்பட்டாய். ‘அவளையே நினைத்து நினைத்து உருகுகிறேன்’ என்றாய்; கண்ணீர் விட்டாய்; ‘காதல் கொண்டு விட்டேன்’ என்றாய்; ‘கணமும் பொறுக்க மாட்டேன்’ என்றாய்; ‘உயிர் தரியேன்’ என்றாய். கேட்டேன் நான். எனக்கும் மனசு எப்படியோ ஆகிவிட்டது. இரக்கம் வந்தது. ஐயோ பாவம்! என்று எண்ணினேன். இவளிடம் சொன்னேன். அதற்கு இவள் இணங்கவில்லை. மெதுவாக அவள் மனதை மாற்றினேன். இதயத்தைக் கரைத்தேன். நல்ல வார்த்தை சொன்னேன். நயமாகச் சொன்னேன். இளகும்படி சொன்னேன். உன்மீது காதல் உண்டு பண்ணினேன். அவளை நினைத்து நீ உருகுவதை உரைத்தேன். கேட்டாள்; ‘சரி’ என்றாள்; அழைத்து வந்தேன். நீயும் அவளை அணைத்தாய். இன்புற்றாய். இந்த ஞாழல் மரத்து நிழலிலே அவளது கற்பைச் சூறையாடி விட்டாய். ஆடவர் கை படாத பாவை அவள். இன்று உன் கை பட்டுவிட்டது. முகராத முல்லை அவள். நீ முகர்ந்து விட்டாய். இனி நான் என்ன சொல்ல இருக்கிறது. உனக்கு? இனிமேல் இவள் உன்னையே நினைத்து நினைத்து வருந்துவாள்; கடலைக் கண்டு வருந்துவாள்; நிலவைக் கண்டு வருந்துவாள். மாலை கண்டு வருந்துவாள். வருந்தவிடாதே. இதோ இந்தக் கடற்கரை யோரமாகவே வா. அதோ தெரிகிறதே! பனைமரத் தோப்பு. அதுதான் எங்களுடைய சிற்றூர். அங்கே வா. வரலாம். அடிக்கடி வா. வந்து உன் காதலிக்கு இன்பம் தா. மறந்துவிட மாட்டாயே! மறவாதே! போய் வா! நாங்களும் வருகிறோம்.”

இவளே, நின்சொல் கொண்ட என்சொல் தேறி,
பசு நனை ஞாழற் பல் சினை ஒரு சிறைப்
புது நலன் இழந்த புலம்புமார் உடையள்;
உதுக் காண் தெய்ய; உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத் திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல் தாழ் பெண்ணை எம் சிறு நல் ஊரே.

*- வடம வண்ணக்கன் பேரிசாத்தன்*



## 26. பரிசமும் பலாச் சுளையும்!

தித்திக்கும் தீஞ்சுவைப் பலா மரங்கள் மலிந்த மலைநாடு. அந்நாட்டு இளைஞன். ஒருத்திமீது காதல் கொண்டான். அவளை மணம் செய்வதற்கு முயற்சி செய்தான். அவளது செவிலித் தாயிடம் சென்றான். ‘பரிசம் போட வந்திருக்கிறேன்.’ என்றான். அவளும் அதை மற்றையோரிடம் சொன்னாள். எல்லாரும் ஏற்றுக் கொண்டனர்.

“சரி” என்றனர். இந்த அமுத வாக்கு இருக்கிறதே, இதைத் தோழி அறிந்தாள். அவளிடத்திலே சொல்கிறாள். எவளிடம்? தலைவியிடம். எப்படிச் சொல்கிறாள்? நேர்முகமாகச் சொல் கிறாளா? இல்லை. மறைமுகமாகச் சொல்கிறாள்.

“அவள் வாழ்க” என்றாள்.

“எவள்?” என்று கேட்டாள்.

“என் தாய்; உன் செவிலி.”

“ஏன்?”

“உயிர்போகாமல் தடுத்தாள்; புகழ் பெற்றாள்.”

“எவர் உயிர்போக இருந்தது? எதைத் தடுத்தாள்? புகழ் பெற்றாள்?”

“உன் உயிர்தான்.”

“எப்படித் தடுத்தாள்?”

“தேவாமிர்தத்தைக் கொடுத்துத் தடுத்தாள்.”

“தேவாமிர்தமா?”

“ஆம்.”

“அது எங்கிருந்து கிடைத்தது?”

“நாக்கிலே!”

“என்னடி புதிர் போடுகிறாய்?”

"புதிர் அல்ல. சொல்கிறேன் கேள். தேவாமிர்தம் போன்றதொரு சொல்."

"என்ன சொல்அது?"

"ஆகட்டும். சம்மதம் என்ற சொல்."

"எதற்குச் சம்மதம்?"

"கலியாணத்துக்கு."

"எவருக்கும் எவருக்கும்?"

"உனக்கும் உன் காதலனுக்கும்!" கேட்டாள்அவள்! துள்ளினாள்; தோழியை ஒரே கட்டாகக் கட்டிக் கொண்டாள்.

"பலாப் பழம் நிறைய இருக்கிறது அவனது மலை நாட்டிலே. இனி, நீயும் அவனும் வேண்டிய மட்டும் பலாச் சுளை தின்னலாம். இனியபலா. தித்திக்கும் பலா. இன்பப் பலா!" என்றாள் தோழி.

"போடி! கேலி செய்கிறாய்" என்று கூறித் தோழியின் கன்னத்தைத் தடவினாள் அவள்.

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ, அன்னை
தம் இல் தமது உண்டன்ன சினைதொறும்
தீம் பழம் தூங்கும்பலவின்
ஓங்கு மலை நாடனை, 'வரும்' என்றோளே!

*- வெண்பூதன்*

## 27. மறுகால் பயிரும் மன்மத பாணமும்

"போய் வருகிறேன்" என்றான் அவன். அவளால் பதில் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் பெருகிற்று.

"கண்ணே! வருந்தாதே" என்றான்; கட்டியணைத்தான்; கண்ணீரைத் துடைத்தான்; கூந்தலைக் கோதினான்.

"விரைவில் வருவேன்; விடை கொடு" என்றான்.



"போய் வா" என்றாள்; நா தழுதழுத்தது.

நாட்கள்பல சென்றன. 'வருவான் வருவான்' என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தாள். பார்த்துக் கண்கள் பூத்தன.

தொலைவிலே ஒரு தினைப்புனம். தினை முற்றியது. கதிரை அரிந்தான் குறவன். ஒருகால் பயன் பெற்றான். மறுகால் விட்டது தினை. மறு காலில் மொச்சை விதைத்திருந்தான். அந்த மறுகால் பயிரின் பலனைப் பெறுவதற்கு அரிவாளுடன் வந்திருக்கிறான் குறவன்.

கண்டாள் அவள். கண்ணீர் விட்டாள்.

"ஏன்வருந்துகிறாய்?" என்று கேட்டாள் தோழி.

"அதோ பார்" என்றாள்.

"என்னஅங்கே?"

"அந்தக் குறவனைப் பார். ஒரு கால் பயன்பெற்றான். இப்போது மறுகால் பலன் பெற வந்து விட்டான்."

"அதற்கு என்ன?"

அந்த அளவுக்குக்கூட எனக்கு இன்பமில்லையே! ஒரு கால் இன்பம் துய்த்துச் சென்ற என் காதலர் மறுகால் இன்பத்துக்கு இன்னும் வரவில்லையே!" என்றாள். 'கோ' என்று அழுதாள்.

"அழாதே" என்றாள் தோழி.

"அழுதேன். 'அழாதே' என்று சொன்னார் அவர். கண்ணீர் விட்டேன். கண்ணீரைத் துடைத்தார். கூந்தலைக் கோதினார். இப்போது அப்படிச் செய்ய யாரடி இருக்கிறார்" என்றாள்.

வார் உறு வணர் கதுப்பு உளரி, புறஞ் சோ்பு,
'அழாஅல்' என்றுநம் அழுத கண் துடைப்பர்;
யார் ஆகுவர் கொல்? - தோழி! சாரல்
பெரும் புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங் கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்கிரம் வாராதோரே.

*- கடுவன் மள்ளன்*

## 28. காளை மணியும் காதல் மனமும்

கூதிர் காலம். 'பிசு பிசு' என்று மழை தூறிக் கொண்டிருக்கிறது. வாடைக் காற்று வீசுகிறது. குளிர்! குளிர்! இரவு நேரம்! நடுநிசி யாகியும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டேயிருக்கிறாள். அடிக்கடி மணியோசை கேட்கிறது. மணி ஓசை எங்கிருந்து வருகிறது? காளை மாட்டின் கழுத்திலே கட்டப்பட்ட மணி. ஈ வந்து துன்புறுத்துவதால் அடிக்கடி தலையை ஆட்டி ஓட்டுகிறது காளை. அப்போது மணி சப்தம் கேட்கிறது.

காதலனைப் பிரிந்து வாடும் துன்பத்தினாலே கண்ணீர் வடிக்கிறாள். "எனது துன்பத்தைக் கேட்டு அறிய எவரும் இல்லையே" என்று புலம்புகிறாள்.

சிறை பனி உடைந்த சேயரி மழைக் கண்
பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கி,
பிறரும் கேட்குநர் உளர்கொல்? - உறைசிறந்து,
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து,
ஆன் நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நா நவில் கொடு மணி நல்கூர் குரலே.

*- வெண்கொற்றன்*

## 29. பிரிவும் பரிவும்

"அன்பே."

"ஆருயிரே."

"இன்பமே."

"பிரியேன்."

"பிரிந்தால் உயிர் தரியேன்."

"கடம்பத்து அமர் கடவுள்ஆணை."

இவ்விதம் ஆணையிட்டான். இன்பம் துய்த்தான். பின்னே என்ன ஆயிற்று? பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றான்.



பிரிவு தாங்க முடியாது துன்பமுற்றாள் அவள். நெற்றியில் பசலை படர்ந்தது. தோள் நெகிழ்ந்தது.

இந் நிலையில் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது அவளுக்கு. "பிரியேன் என்று சொன்னாரே! கடவுள்மீது ஆணையிட்டாரே! இப்போது பிரிந்து சென்றாரே! நாம் வருந்துகிறோமே! அதனால் கடவுள் அவரை வருத்துவாரோ" என்று எண்ணினாள்

"ஆண்டவனே! அவரை வருத்தாதே! என்பால் ஏற்பட்ட இந்த இளைப்புக்குக் காரணர் அவர் அல்லர். என் மனோநிலை தான்" என்று வேண்டிக் கொள்கிறாள்.

'மன்ற மரா அத்த பேஎம் முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம்' என்ப; யாவதும்
கொடியர் அல்லர் எம் குன்று கெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று, நுதலே;
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று, தட மென் தோளே.

*- கபிலர்*

## 30. இரவும் வரவும்

"இனிமேல் அவன் இரவு நேரத்தில் வருவான்" என்றாள் தோழி.

"ஐயோ! இரவிலா?" என்றாள் அவள்.

"ஆம்."

"நமக்குப் பழி வருமே!"

"வந்தால் வரட்டுமே!"

"ஐயோ! எனக்குப் பயமாயிருக்கே!"

"என்னடி பயம்? அவன் வரும் வழி எப்பேர்ப்பட்டது? சிங்கத்துடன் எதிர்த்துச் சண்டையிடும் யானை. பிறகு ஓய்வு கொள்ளும். அப்படிப்பட்ட வழியிலே வருகிறான். அப்படித் துணிந்து வரும்போது நாம் அவனை ஏற்காமல் இருக்கலாமா?"

"சரி. பிறகு உனது விருப்பம்."

ஒலி வெள்அருவி ஓங்கு மலை நாடன்,
சிறு கண்பெருங் களிறுவயப் புலி தாக்கித்
தொல் முரண் சொல்லும் துன் அருஞ் சாரல்,
நடுநாள் வருதலும் வரூஉம்;
வடு நாணலமே - தோழி! - நாமே.

*- மதுரைக் கதக்கண்ணன்*

## 31. சாரல் நாடன் சாய்த்தான்!

*மலை நாட்டிலே ஒருபுறம் மிளகு விளைகிறது. மற்றொருபுறம் பலா வளர்கிறது. அந்தப் பலா மரத்திலே கொம்புக்குக் கொம்பு பலாப்பழம் தொங்குகிறது. 'கம கம' என்றுவாசனை வீசுகிறது. அந்தமலையிலே இரவு நேரத்திலே இடித்து முழங்கிப் பெருமழை பெய்கிறது. அப்போது ஓர் ஆண் குரங்கு, பலாப் பழத்தைக் கீழே தள்ளுகிறது. கீழே தள்ளிய உடனே, மழைநீர் அருவியாகப் பெருக்கெடுத்து ஓடி அந்தப் பலாவை உருட்டிச் செல்கிறது. எங்கே? நீர் உண்ணும் துறைக்கு.*

*எனவே, மலையுச்சியிலே பழுத்த பலாப்பழம் அருவியால் உருட்டிச் செல்லப்பட்டு மக்கள் கையில் போய்ச் சேருகிறது.*

*இத்தகைய மலை நாடன் ஒருவன் ஒருத்தியைக் காதல் செய்தான். இன்னும் கலியாணம் செய்து கொள்ளவில்லை.*

*ஒரு நாள் அவன் வந்தான். வேலிப்புறத்தே நின்று கொண்டிருந்தான்.*

*"எத்தனை நாளைக்குக் கலியாணம் செய்யாமல் இப்படி இருப்பாய்?" என்று கேட்க நினைத்தாள் தோழி. அப்படிக் கேட்பது நாகரிகமில்லையல்லவா? எனவே, குறிப்பாகக் கூறுகிறாள்;*

*"சாரல் நாடன் காதலால் உன் மேனி மெலிந்தது. ஆனால், நீயோ அன்பில் குறையவில்லை" என்றாள்.*

*அதன் பொருள் என்ன?*

*"உன் காதலி வாடுகிறாள்; விரைவில் மணம் புரிவாய்" என்பதே.*



எற்றோ வாழி? - தோழி!- முற்றுபு
கறி வளர் அடுக்கத்து இரவில் முழங்கிய
மங்குல் மா மழை வீழ்ந்தென, பொங்கு மயிர்க்
கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக் கனி,
வரை இழிஅருவி உண்துறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென் தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்றே.

*- மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்*

## 32. அருவியருகே மருவினாள்!

*"ஏன் இப்படி, வாடியிருக்கிறாய்?"*

*"ஒன்றுமில்லை; அங்கே ஒரு மங்கையைக் கண்டேன்."*

*"எங்கே?"*

*"மலையிலே விழுந்து ஓடி வரும் அருவியானது பாறையின் வெடிப்புகளிலே தடைப்பட்டுச் 'சலசல' என்று ஒலித்து ஓடுகிறது. அந்த இடத்திலே ஒரு சிற்றூர். அந்த ஊரிலே ஒரு குறவன். அவனுடைய மகள்."*

*"ஆ! அப்படிச் சொல்லு."*

*"குறத்தி மீது காதல் கொண்டாய்."*

*"ஜிலு ஜிலு என்றிருந்தாளடா?"*

*"கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாளோ? அப்புறம்"*

*"அவளுடைய பெருத்த தோள். . . . ."*

*"என்ன செய்தது?"*

*"என்னை அணைத்தது"*

*"அப்புறம்!"*

*"என் வலியெல்லாம் குன்றியது."*

*"சபாஷ்டா! சிங்கம்!"*

*"வாடியிருக்கிறேன்."*

மால் வரை இழிதரும் தூ வெள் அருவி
கல் முகைத் ததும்பும் பல் மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன்அவித்தன்றே.

*- கபிலர்*

## 33. மழை பொழியுது! வேங்கை வளருது!

“ஆமாம்! அவன் இப்படியே வந்து போய்க் கொண்டிருந்தால்.. ?”

“இருந்தால் என்ன?”

“எப்போதுதான் கலியாணம்? அவன் வருகிறான். நீயும் போகிறாய். அவன் பேசாமல் இருந்துவிட்டால் என்ன செய்வாய்?”

“அடியேய்! என்ன சொன்னாய்? விளையாட்டாகச் சொன்னாயோ! அப்படித்தான் நான் நினைக்கிறேன்.”

“இல்லையானால். . .”

“உன்னை என்ன பாடுபடுத்துவேன் தெரியுமா?அவரை அறியாது நீ ஏதோ சொல்கிறாய். அவரது மலையிலே மழை பொழிகிறது. அருவி பெருக்கெடுத் தோடுகிறது. வேங்கை வளர்கிறது. தெரியுமா? அந்த மாதிரி என்மீது அன்பு பொழிவார். இன்பம் பெருக்கெடுத்து ஓடும். காதல் வளருமடி தெரியுமா?”

‘அருவி வேங்கைப் பெரு மலை நாடற்கு
யான் எவன் செய்கோ?’ என்றி; யான் அது
நகை என உணரேன் ஆயின்,
என் ஆகுவைகொல்? நன்னுதல் நீயே.’

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 34. ‘எல்லாம் அவன் செயல்!’

அவனும் காதலித்தான். அவளும் காதலித்தாள். இருவரும் இன்பம் துய்த்தனர். பின்னே அவன் பிரிந்தான். நாள்கள் பல ஆயின. ‘வருவான் வருவான்’ என்று எதிர் பார்த்தாள். அவன் வரவில்லை. ஏக்கமுற்றாள்; வருந்தினாள்; வாடினாள்.



அவன் யார்? குறிஞ்சி நாட்டுச் செல்வன். பசிய நிலங்களின் நடு நடுவே சுர சுரப்பான பாறைக் கற்கள் கிடக்கும் குறிஞ்சி நாடன். அவ்விதம் பாறை இருப்பது எப்படித் தோன்றும்? நன்கு கழுவி விடப்பட்ட யானை போல் தோன்றும். இத்தகைய மலை நாடன்தான் அவளுக்குக் காதல் நோய் தந்தவன்.

“ஏன் இப்படி யிருக்கிறாய்?” என்று கேட்டாள்தோழி.

“எப்படி இருக்கிறேன்?”

“உடம்பெல்லாம் பசலை படர்ந்து இருக்கிறது.”

“அப்படியா?”

“கண் ஒளியிழந்து விட்டது.”

“எல்லாம் ‘அவன்’ செயல்!”

மாசு அறக் கழீஇய யானை போல
பெரும் பெயல் உழந்தஇரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருகலை சேக்கும் நாடன்
நோய் தந்தனனே! தோழி!
பசலை ஆர்ந்தனம் குவளை அம் கண்ணே!

*- கபிலர்*

## 35. ‘எட்டாத பழத்துக்குக் கொட்டாவி!’

“என்னால் தாங்க முடியவில்லையே!” என்றான் அவன்.

“எது?” என்று கேட்டாள் தோழி.

“அதுதான்” என்றான்.

“அது என்றால் எது?”

“என் மனசுபடுத்தும் பாடு.”

“உன் மனசு என்ன சொல்லிப் படுத்துகிறது உன்னை?”

“அவற்றையெல்லாம் சொல்லித்தானோ தெரிந்துகொள்ள வேண்டும்?”

“சும்மா சொல்லேன், கேட்போம்.”

"அவளையே நினைத்து உருகுதே."

"உருகுதா? மருகுதா?"

"கொல்" என்று சிரித்தாள் அவள்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்றான் அவன்.

"உன்னைப் பார்த்தால் எனக்கு, சிரிப்புப் பொங்குதே!" என்றாள்.

"ஏன்?"

"எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுகிறாயே!"

"அப்படியா அது! எட்டாத பழமா?"

"ஆம்! எட்டாத பழமேதான்."

"காமம் தலைக்கேறி விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா?"

"தெரியுமே! பித்துப் பிடித்துப் பேசுவார்கள். பூ என்று எண்ணி எருக்கம் பூவைச் சூடி வருவார்கள்."

"அதை நான் செய்யப் போகிறேன்."

"குதிரை என்று சொல்லிப் பனங்கருக்கினால் செய்த குதிரைமீது ஏறி வருவார்கள்."

"அதை நான் செய்யப்போகிறேன்."

"ஊரிலே நாலு பேர் அறிய பெண்ணின் படத்தை வைத்து நிற்பார்கள்."

"அதை நான் செய்வேன்."

மா என, மடலும் ஊர்ப; பூ என
குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப;
மறுகின்ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப; காமம் காழ்க் கொளினே,

*- பேரெயின்முறுவலார்.*



## 36. ஏங்கும் காதலி! தூங்கும் பலா!

"பலாப்பழம் பார்த்திருக்கிறாயா?"

"ஓ! பார்த்திருக்கிறேனே!"

"எங்கே?"

"எனது மலை நாட்டிலே."

"அப்படியா! பலா எங்கே காய்க்கும்?"

"பூ! இது தெரியாதா? வேரிலே காய்க்கும்."

"ஆ! அப்படிச் சொல்லு. அதனால் தான் கேட்டேன். நீ வேர்ப்பலாவை தான் பார்த்திருக்கிறாய். கொம்புப் பலாவைப் பார்த்ததில்லை."

"உங்கள் மலை நாட்டிலே எப்படி?"

"கொம்பிலே பழுக்கிற பலாதான் அதிகம்."

"அப்படியா?"

"சிறிய கிளை. அதிலே பெரிய பலா. அப்படியே பழுத்துத் தொங்கும்."

"தொங்குமோ?"

"தொங்கும்; தொங்கும்."

"எவ்வளவு நாள்?"

"கொஞ்ச நாள்தான். பழம் பழுத்துக் கனம் ஏறிப்போனால் அற்றுக் கீழே விழுந்துவிடும்."

"அந்த மாதிரி?"

"அந்த மாதிரிதான் உனது காதலியும்!"

"எப்படி?"

"காதல் என்பது கனிந்து இருக்கிறது, கொம்புப்பலா மாதிரி. அவளது உயிரிலே தொங்குகிறது காதல் எனும் பலா."

"கனம் தாங்குமா?"

"தாங்காது. நீண்ட நாள் தாங்காது."

"எனவே?"

"விரைவில் வா, வரைந்து செல்."

வேரல் வேலி வேர்க் கோள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே! சாரல்
சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கு இவள்
உயிர், தவச் சிறிது; காமமோ பெரிதே.

– கபிலர்

## 37. நங்கையும் நாரையும்

"நான் என்னடி செய்வேன் தோழி?"

"ஏன்?"

"இன்னும் வரவில்லையே!"

"என்னவோ தெரியவில்லையே!"

"வராமலே இருந்து விட்டால் நான் என்னடி செய்வேன்!"

"இவன் என்னைத் தொட்டதற்கு ஏதடி சாட்சி!"

"எதுவுமில்லையோ!"

"அந்த ஓடைக் கரையிலே நின்று மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தது நாரை."

"நாரை எங்கேயாவது வாய் திறந்து சாட்சி சொல்லுமா?"

"வேறு எவருமில்லையே! நான் என்ன செய்வேன்."

"இவ்வாறு வருந்தினாள் அவள்.

யாரும் இல்லைத் தானே கள்வன்!
தான்அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ!
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு!தான் மணந்த ஞான்றே. – கபிலர்



## 38. குரங்கு சொல்லும் குறி!

வேங்கை மரம் மலை நாட்டிலே, நன்றாகப் பூத்திருக்கிறது. அந்த மரத்தின் கிளையிலே மயில்கள் அமர்ந்திருக்கின்றன.

அக்காட்சியைக் காண்கிறார் கவி. இயற்கையின் அழகிலே ஈடுபடுகிறார். என்ன தோன்றுகிறது?

பெண்கள் அந்தவேங்கை மரத்தின் மீது ஏறிநின்று மலர் கொய்வது போல் தோன்றுகிறது.

இத்தகைய மலை நாட்டுச் செல்வன் ஒருவன்; இளைஞன், ஒரு பெண்மீது காதல் கொள்கிறான். அவளும் அவனைக் காதலிக்கிறாள்.

இன்பமாக இருக்கிறார்கள். களவு இன்பம். இந்தக் களவு இன்பம் எவ்வளவு நாள்? நீண்ட நாள் நடைபெறுமா? இயலாது அல்லவா? எவ்வளவோ தடைகள்! இந்த இடையூறுகளினாலே பல நாள் இவ்விளம் காதலர் சந்திக்க இயலாமற்போயினர்.

அந்த இளம் பெண் மனம் புழுங்கினாள். உணவு செல்ல வில்லை. உறக்கம் கொள்ளவில்லை. அவளது நடையுடைகளில் மாறுதல் கண்டாள் தாய்.

"இவள் ஏன் இப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"எப்படி யிருக்கிறாள்?" என்றாள் செவிலி.

"என்னவோ பித்துப் பிடித்தவள்மாதிரி இருக்கிறாளே!"

"ஆமாம்! அதுதான் எனக்கும் விளங்கவில்லை."

"சாப்பிடுகிறாளா? இல்லையா?"

"இல்லையே!"

"என்ன சொல்கிறாள்?"

"வேண்டாம் என்கிறாள்."

"ஏன் வேண்டாமாம்?"

"பசியில்லை என்கிறாள்."

"பேசாமல் விட்டு விட்டாயோ?"

"விடுவேனா?"

"என்ன செய்தாய்?"

"வலுக்கட்டாயம் செய்தேன்."

"என்ன ஆயிற்று?"

"ஒரு பிடிகூட உள்ளே செல்லவில்லை."

"விளையாடுகிறாளா?"

"ஏது? அதுவுமில்லையே! முன்பு ஆடிப்பாடி ஆனந்தமாகச் சிரித்து விளையாடுவாள்."

"இப்போது?"

"ஒன்றுமில்லை. சிரிக்கவே மாட்டேன் என்கிறாள். உற்சாகமே இல்லை."

"காரணம் என்னவாயிருக்கலாம்?"

"ஏதாவது பேய், பிசாசு பிடித்திருக்குமோ? தெய்வக் குற்றமாக இருக்குமோ?"

"குறிகேட்டுப் பார்த்து விடலாமா?"

"அதுதான் நானும் நினைக்கிறேன்."

குறி சொல்பவள் ஒருத்தியை அழைத்துக்கொண்டு வந்தார்கள். பம்பை அடித்தார்கள். பாட்டுப் பாடினார்கள்.

"தெய்வக் குற்றம் அம்மா இது" என்றாள் குறி சொல்பவள்.

"சரி. தெய்வத்துக்குப் பூசை போடு" என்று கூறினார்கள். பூசைக்கு ஏற்பாடுகள் நடந்தன.

அப்போது தோழி சொல்கிறாள். எவருடைய தோழி? காதல் கொண்டாளே! அந்தக் காரிகையின் தோழி. எவரிடம் சொல்கிறாள்? தன் தாயிடம். என்ன சொல்கிறாள்?

"போம்மா! உனக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கு" என்றாள்.



"ஏன்?" என்று கேட்டாள் செவிலி.

"என்னவோ பிரமாதமான ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள். அந்தக் குறிகாரிக்கும் தெரியவில்லை. அவள் தெய்வத்துக்கும் தெரியவில்லை."

"என்ன தெரியவில்லை?"

"ஒன்றும் தெரியவில்லை."

"கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லேன்."

"உன் பெண்ணுக்கு வந்திருக்கிற நோய் இது என்று."

"எது? நீதான் சொல்லேன்!"

"அந்த ஆண் குரங்கைக் கேள்."

"எந்த ஆண் குரங்கு?"

"குட்டியுடன் விளையாடும் ஆண் குரங்கு?"

"அதுக்கு எப்படியடி தெரியும்?"

"அதுதான் பார்த்துக் கொண்டிருந்ததே!"

"எதை?"

"உன். . .பெண். . . ஒருவனுடன். . . காதல். . . செய்ததை."

"ஓகோ! அப்படியா சங்கதி!"

"ஆமாம்!"

அரும்பு அறமலர்ந்த கரும் கால் வேங்கை
மேக்கு எழு பெரும் சினை இருந்த தோகை,
பூக் கொய் மகளிரில் தோன்றும் நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்,
தன் கண் கண்டது பொய்க்குவது அன்றே;
தேன் கொக்கு அருந்தும் முள் எயிற்றுத் துவர்வாய்
வரையாடும் வன் பறழ் தந்தைக்
கடுவனும் அறியும் அக்கொடி யோனையே.

**- கொல்லன் அழிசி**

## 39. 'குறத்தியினும் குறத்தி'

அவனும் காதலித்தான்; அவளும் காதலித்தாள். இருவரும் இன்பமாக இருந்தனர். திருட்டு ஒழுக்கம்தான்; சில நாள் சென்றன. அதுவும் கூடாது போயிற்று. அவளுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று, வாடினாள்; ஊண் செல்ல வில்லை; உற்சாக மில்லை.

அவளது வேறுபாடு கண்டாள் தாய். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. குறி சொல்பவளைக் கூட்டிக் கொண்டுவரச் செய்தாள். முறத்திலே நெல்லைக்கொண்டு வரச் சொன்னாள். குறிகாரி குறிபார்க்கத் தொடங்கினாள்; பாடுகிறாள்; குறி சொல்பவள்.

அப்போது தோழி சொல்கிறாள்: -

"ஏ! குறத்தி! பாடு! பாடு! இன்னும் பாடு! நன்றாகப் பாடு! மேலும் பாடு! அவளுக்கு வேண்டியவருடைய மலையைப் பாடு. அவளது நோய் நீங்கும்" என்றாள்.

அகவல் மகளே! அகவல் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தல்
அகவல் மகளே! பாடுக! பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே! அவர்
நல் நெடுங் குன்றம் பாடிய பாட்டே.

- ஔவையார்

## 40. கொல்லிப் பாவையும் குறப் பாவையும்

வள்ளல்கள் எழுவர். அவருள் ஒருவன் ஓரி. வல்வில் ஓரி என்றும் இவனுக்குப் பெயர் உண்டு. வலி மிக்க வில்லை உடையவன் ஓரி. அதாவது பல பொருள்களை ஒரே கணையில் தாக்கும் திறம் மிக்கவன். கொல்லிமலை இவனுக்குச் சொந்தமானது.

கொல்லி மலையிலே யானைகள் அதிகம், பொல்லாத யானைகள், அந்த யானைகளைக் கொன்று அவற்றின் தந்தங்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். பஞ்சம் வந்த காலத்தில்



அந்த யானைத் தந்தங்களை விற்று தங்கள் பஞ்சத்தைப் போக்கிக் கொள்வார்கள்.

இத்தகைய கொல்லி மலையின் மேற்குப் பகுதியிலே ஒரு பாவை. கண்டவரை மயக்கிக் கொல்லும் பாவை. அத்தகைய பாவை போன்ற ஓர் இளம் பெண்ணைக் கண்டான்; காதல் கொண்டான்; சிந்தை பறி கொடுத்தான்; மலைநாட்டுச் செல்வன் ஒருவன்.

சிந்தை சிதைந்து கிடந்த அவனைக் கண்டான் தோழன்.

"என்ன கவலை உனக்கு?"

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாவிட்டால் ஏன் இப்படி இருக்கிறாய்?"

"எல்லாம் அந்தப் பெண்ணால் வந்த வினை."

"எந்தப் பெண்?"

"சிறுகுடிக் குறப் பெண்."

"ஓகோ!"

"நல்ல அழகி; பருத்த தோள்."

"அப்படியா? சரி. முடித்துவிட்டால் போகிறது."

"அதுதான் முடியாது போலிருக்கே."

"அடடே! இதுக்காகவா வருந்துகிறாய்? முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ? வா பார்க்கலாம்."

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பரு இலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென,
கடுங் கண் வேழத்துக் கோடு கொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனளே
மணத்தற்கு அரிய, பணைப் பெருந் தோளே.

- கபிலர்

## 41. சுவர்க்கபோகமும் தோற்குமே!

“என்ன தம்பீ! சுகமா?”

“ஆகா!”

“கல்யாணம் செய்த புதிசு.”

“ஆமாம்!”

“வாழ்க்கை இப்போதுதான் தொடங்குகிறது.”

“ஆமாம்.”

“குடும்ப சுகம் எப்படி?”

“ஆ! அதையேன் கேட்கிறீர்கள்!”

“என்னப்பா?”

“சொல்ல முடியாத சுகம் போங்கள்!”

“சொல்ல முடியாமல் என்ன?”

“கல்கண்டு! கல்கண்டு!”

“தித்திக்குதோ?”

“நீர் சூழ்ந்த நில உலகும், பெறுதற்கு அரிய சுவர்க்க போகமும் அதற்கு ஈடாகா!”

“எதற்கு?”

“மலர் போன்ற மைக் கண்ணும் பொன் போன்ற மேனியும் கொண்ட அவளைத் தழுவும் இன்பத்துக்கு!”

“அப்படியா! சபாஷ் பெண் இன்பத்தின் முன்னே வானமும் வையமும் என்ன செய்யும் என்று கேட்கிறாய், ஆ!”

“ஆமாம்! ஆமாம்!”



விரிதிரைப் பெருங் கடல் வளைஇய உலகமும்,
அரிது பெறு சிறப்பின் புத்தேள் நாடும்,
இரண்டும், தூக்கின், சீர்சாலாவே
பூப் போல்உண்கண், பொன் போல் மேனி,
மாண் வரி அல்குல், குறுமகள்
தோள் மாறுபடூஉம் வைகலொடு எமக்கே.

*- பரூஉ மோவாய்ப் பதுமன்*

## 42. மயிலின் வெறியும் மங்கையின் நெறியும்

மலைநாட்டிலே உள்ள குறவன் என்ன செய்கிறான்; தினை விதைக்கிறான். தினை பயிராகிறது. நன்றாகச் செழித்து வளர்கிறது. பலன் தருகிறது. அறுவடை செய்கிறான். இவ்வளவு நல்ல தினையை அளித்ததற்காக முதல் பிடியை முருகனுக்குக் காணிக்கையாக அளிக்கிறான்.

அந்தத் தினையுணவை மயில் உண்டு விடுகிறது. அதனால், மயில், வெறியாடுகிறது.

இதைக் கண்டாள் அவள். தனது நிலையை எண்ணிப் பார்க்கிறாள். மலை நாட்டு இளைஞன் ஒருவனைக் காதலித்தாள். அவனும் அவளைக் காதலித்தான். இன்பமாக இருந்தனர். பிறகு சென்றான். சென்றவன் வரவேயில்லை. நாட்கள் பல சென்றன. அவனை நினைத்து வருந்துகிறாள் அவள்.

“வெறியாடும் மயில் போல் ஆனேனே!” என்று புலம்புகிறாள்.

“அவனது நட்பு இன்பம் தரவில்லையே! கண்ணீர் வடியச் செய்யுதே” என்று கலங்குகிறாள்.

புனவன் துடவைப் பொன் போல் சிறு தினைக்
கடி உண் கடவுட்கு இட்ட செழுங் குரல்
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்
வெறி உறு வனப்பின் வெய்துற்று, நடுங்கும்
சூர் மலை நாடன் கேண்மை
நீர் மலி கண்ணொடு நினைப்பு ஆகின்றே.

*- நக்கீரர்*

## 43. வற்றாத ஊற்று! வரையாத இன்பம்!

மலை நாட்டிலே வானளாவி வளர்ந்திருக்கும் இற்றி மரங்கள். அவற்றினின்றும் வெண்மையான விழுதுகள் தொங்கும். தொலைவிலிருந்து பார்ப்பவருக்கு அருவிபோல் காட்சி தரும்.

இத்தகைய மலைநாடன் ஒருவன் ஒருத்தியைக் காதலித்தான். சில நாள் இன்பம். பிறகு வேறு பக்கம் திரும்பினான்.

"சரி, இவனுக்கு நம்மீது அன்பில்லை" என்று கோபித் திருந்தாள் அவள்.

"அப்படி ஒன்றுமில்லை. அவர் என்றும்போல் தான் இருக்கிறார். அன்பு குறையவே இல்லை" என்று கூறினர்; சிலர் தலைவன் பொருட்டுத் தூது வந்து,

"அப்படியானால் சரி. தீது இல்லாத நெஞ்சுடன் அப்படிக் கூறினால் நாமும் அதை ஏற்றுக் கொள்வோம். அவர் மணந்த நாளில் எத்தகைய அன்பு கொண்டிருந்தேனோ அப்படியே தான் இப்பொழுதும் இருக்கிறேன். வரச் சொல்" என்றாள் அவள்.

புல் வீழ் இற்றிக் கல் இவர்வெள் வேர்
வரை இழி அருவியின் தோன்றும் நாடன்
தீது இல் நெஞ்சத்துக் கிளவிநம் வயின்
வந்தன்று - வாழி, தோழி! - நாமும்
நெய் பெய் தீயின் எதிர்கொண்டு,
'தான் மணந்தனையம்' என விடுகம் தூதே.

*- கபிலர்*

## 44. தாயும் பேயும்

அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள். இருவரும் காதல் கொண்டனர். கருத்து ஒன்றாயினர். உடலும் ஒன்றாயினர். இன்பம் அனுபவித்தனர். பிறகு அவன் பிரிந்தான்.

"மறந்துவிடாதே" என்றாள்.

"மறவேன்" என்றான்.

"மெய்யாகவா?" என்றாள்.



"வருவேன்."

"எப்போது?"

"விரைவில்."

"வருவாய்; வரைவாய்."

"கண்ணே! கலங்காதே!"

இது நிகழ்ந்து நாட்கள் பல சென்றன. வருவான் வருவான் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை. ஏங்கினாள். தூக்கம் வரவில்லை. முகம் ஒளியிழந்தது. உணவுசெல்ல வில்லை. உள்ளத்திலே மகிழ்ச்சி யில்லை. துள்ளும் நடையில்லை. துடுக்கான பேச்சில்லை!

இந்த மாறுதல்களைக் கண்டாள் தாய்.

"இவள் ஏன் இப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"என்னவோ தெரியவில்லையே!" என்றாள். செவிலி.

"என்ன என்று விசாரித்தாயா?"

"விசாரித்தேன்."

"என்ன சொல்கிறாள்?"

" 'ஒன்றுமில்லை' என்கிறாள்."

"என்ன ஒன்றுமில்லை. பூசாரியை அழைத்துக் கேட்போமா?"

"கேட்கலாமே"

"சரி. ஆகட்டும்."

தாயும் செவிலியும் பேசியவற்றைக் கேட்டாள் தோழி.

"உம். பயித்தியங்கள்! பேயாம் பிசாசாம்! அவளுக்கு என்ன? அவளைப் பிடித்திருக்கிற பேய் காதல் பேய்தான். அது தெரியாமல் ஏதோ உளறுகிறார்கள்!" இவ்வாறு தன் மனதில் எண்ணி நகைத்தாள். அவளிடம் சென்று இதைத் தெரிவிக்க எண்ணினாள். தோட்டத்துக்குப் போனாள்.

தோட்டத்திலே என்ன கண்டாள்? அவளைக் கண்டாள். அவனையும் கண்டாள்.

தோட்டத்து வேலி. முள்வேலி. வேலிக்கு வெளியே நிற்கிறான் அவன். உள்ளே நிற்கிறாள் அவள். இருவரும் ஒருவரை ஒருவர் கண்களால் காணலாம்; களிப்பெய்தலாம். அவ்வளவு தான்! பேசவும் முடியாது. வேறு எதுவும் செய்ய முடியாது. அந்த மாதிரியான சூழ்நிலை.

"சீக்கிரமாக வா. பரிசம் போட வா. நிலைமையைச் சமாளிக்க முடியாது" என்று தெரிவிக்க வேண்டும். அவனிடத்திலே. அதை எப்படித் தெரிவிப்பது? நேரிடையாகச் சொல்ல முடியாது. ஏன்? எல்லாருக்கும் தெரிந்துவிடும். தெரியக்கூடாது. விஷயமோ அவனுக்கு மாத்திரம் தெரியவேண்டும். என்ன செய்வது?

மெதுவாக அவிழ்த்தாள். எதை? கதையை!

"விஷயம் தெரியுமா?" என்றாள்.

"என்ன?" என்று கேட்டாள் அவள்.

"உனது வாட்டத்தைத் தாய் அறிந்துகொண்டு விட்டாள்."

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"அப்படியா?"

"எல்லாம் தெரிந்து விட்டதா?"

"ஒன்றும் தெரியாது. வாட்டம் ஒன்றே தெரியும்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? பேயோ என்னவோ பிடித்து ஆட்டுகிறது உன்னை என்று எண்ணியிருக்கிறார்கள்."

"உம்."

"உன்னைப் பிடித்து ஆட்டும் பேய் எது என்று எனக்கல்லவா தெரியும்!"

"சரி. சொல்லு."

"சொல்வது என்ன?"

"பூசாரி வரப் போகிறான்."



"வரப் போகிறானோ?"

"ஆமாம்! அவன் மாத்திரம் என்ன சொல்லப் போகிறான்? 'பேய் பிடித்திருக்கிறது; முனியனுக்குப் பூசை போட வேண்டும்' என்று சொல்லப் போகிறான்!"

"என்னடி வேடிக்கையாயிருக்கு!"

"ஆமாம், வேடிக்கைதான்! இந்த வேடிக்கையைப் பார்க்கப் பரிசம் போட்டு அவரும் விரைவில் வந்தால் நல்லது."

"எதற்கு?"

"பேய் ஓடிப் போகும் அல்லவா."

மென்தோள் நெகிழ்த்த செல்லல். வேலன்,
'வென்றி நெடு வேள்' என்னும்; அன்னையும்,
அதுஎன உணரும் ஆயின், ஆயிடைக்
கூழை இரும் பிடிக்கை கரந்தன்ன
கேழ்இருந் துறுகல் கெழு மலை நாடன்
வல்லே வருக - தோழி! நம்
இல்லோர் பெரு நகைகாணிய சிறிதே!

*- தீன்மதி நாகன்*

## 45. ஒடிந்த கிளையும் அழிந்த நலனும்!

"நான் என்னடி பண்ணுவேன்!"

"ஏன்?"

"என்னால் தாங்க முடியவில்லையே!"

"பொறுமையாக இரு."

"நானும் பொறுத்துத்தான் பார்க்கிறேன், ஊரார் வம்பு அளக்கிறார்களே என்று, அப்போ, காதலுக்கு இடமில்லை. காதலை அடக்க முடியுமோ? முடியாது. வெட்கத்தை வெற்றி கொள்கிறது காதல்."

"காதல் இல்லாது போனால் அப்புறம் நான் ஏன் இந்த உலகில் உலவ வேண்டும்? கற்பும் பெண்மையும் அழிந்து விடுமே."

"ஊரார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே! அதற்காக நீ ஏன் கவலைப்படுகிறாய்?"

"அதோ பார்! அந்த மரக்கிளையை. யானை தழை தின்ற கிளை. முறிந்து தொங்குகிறது. இருந்தாலும் அதிலே மறுபடியும் இலைகள் தளிர்க்கின்றன."

"தளிர்க்கின்றன. ஆனால் முதலில் இருந்ததுபோல் தளிர்க்க வில்லையே!"

"அதே போல்தான் நானும்! அன்று ஆற்றின் கரையிலே அவன் என்ன செய்தான்? யானை தழை தின்றது போல் தின்று விட்டான். எனது பெண்மையைக் களித்து விட்டான். இன்னும் கொஞ்சம்தான் மிஞ்சியிருக்கிறது. ஒடிந்த கிளைபோல் உள்ளேன் நான் என்ன செய்வேன்?"

கௌவை அஞ்சின், காமம் எய்க்கும்;
எள்அற விடினே, உள்ளது நாணே;
பெருங் களிறு வாங்க முரிந்து நிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசின், தோழி! அவர் உண்ட என் நலனே.

- *ஆலத்தூர் கிழார்*

## 46. மலையிலே நடந்த மண விழா!

ஆணுக்குப் பெண். பெண்ணுக்கு ஆண். ஒருவருக்கு மற்று ஒருவர் துணை. இத்துணையின்றேல் வாழ்வில் இன்பமில்லை. எனவே, ஒருவனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன். இதுவே வாழ்வு. இந்த வாழ்க்கை ஒப்பந்தமே திருமணம்.

திருமணம் என்று சொன்னால் - அடடா! என்ன பாடு! என்னபாடு! எவ்வளவு ஆர்ப்பாட்டம்! ஊரடைத்துப் பந்தல்! ஒரே வெளிச்சம்! மேள தாளம்! ஆரவாரம்! ஜனக்கூட்டம்! வருவோர் போவோர்! ஆயிரம் ஆயிரமாக ரூபாய் செலவு! இவையெல்லாம் இன்றைய நாகரிகக் காட்சிகள்! அன்பு? அதுதான் தேடிப் பார்க்க வேண்டிய ஒன்று!



ஆயிரக் கணக்கான ஆண்டுகள் முன்பு நடந்ததொரு வாழ்க்கை ஒப்பந்தம். மேளதாளம் இல்லை. மின்சார வெளிச்சமில்லை. ஊரடைத்துப் பந்தல் இல்லை. பணச் செலவும் இல்லை.

அவளும் காதலித்தாள். அவனும் காதலித்தான். இருவரும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்ய முன் வந்தனர்.

அந்த ஒப்பந்தத்துக்குச் சான்று நின்று முடித்து வைத்தாள் மற்றொரு பெண். வாழ்க்கை ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்தை எடுத்துச் சொல்கிறாள். நீண்ட சொன்மாரி பொழியவில்லை. சுருக்கமான பேச்சு. ஆழ்ந்த கருத்து!

"இந்த உலகத்திலே யாராவது பெரிய உதவிசெய்தால் அதைப் போற்றுவது இயற்கை. ஆனால் அதிலே என்ன சிறப்பு இருக்கிறது? ஒன்றுமில்லை. சிறு உதவி செய்தாலும் போற்ற வேண்டும். அதுவே சிறப்பு!"

"இப்போது ஏற்றுக் கொள்கிறாயே! உன் காதலி. அவள் உனக்கு இன்பம் தருகிறாள். நீயும் அன்பு கொள்வாய். ஆதரிப்பாய். அழகு இருக்கிறது! இளமை இருக்கிறது! எனவே நீயும் அதிலே மனம் ஈடுபடுவாய். அது சிறப்புத் தருவதாகாது. அழகும், இளமையும், இன்பமும் எவ்வளவு நாள்? கொஞ்ச காலமே. இளமை நில்லாது போய்விடும். முதுமை விரைவில் வரும். இளமையுடன் அழகும் போம். அந்தக்காலத்திலே நீ இவளைப் புறக்கணித்தல் ஆகாது. 'இளமையில் நமக்கு இன்பம் தந்தாளே' என்று எண்ணி இருப்பாயாக. அதுவே சிறப்புத் தரும்.

"அதோ பார்! ஓங்கி வளர்ந்த மூங்கில். அந்த நிழலிலே படுத்துறங்கும் விலங்குகள். முற்றிய மூங்கில் இலையை அவை உண்பதில்லை! இளம் மூங்கில் குருத்துகளை உண்ணும். முற்றிய மூங்கில் இலை அவற்றிற்குப் பயன்தரா. எனவே வேறு இலை களைத் தேடிச் சென்று உண்ணும். ஆனால், நிழல் தரும் மூங்கில். அதை மறவாது வந்து படுத்துறங்கும்.

"அதேமாதிரி முதுமையிலே இவள் உனக்குப் பயன்பட மாட்டாள். எனினும் இவளது அன்பை மறவாதே! ஆதரவை மறவாதே! நிழலை மறவாதே! நீங்காது இவளுடன் வாழ்வாயாக!"

எப்பேர்ப்பட்ட வாழ்த்து! பொருள் செறிந்த வாழ்த்து திருமண வாழ்த்து!

பெரு நன்று ஆற்றின், பேணாரும் உளரே?
ஒரு நன்று உடையள்ஆயினும், புரி மாண்டு,
புலவி தீர அளிமதி இலை கவர்பு,
ஆடுஅமை ஒழுகிய தண் நறுஞ் சாரல்,
மென்நடை மரையா துஞ்சும்
நன்மலை நாட! - நின் அலது இலளே.

*- கபிலர்*

## 47 காவிரியும் காதலியும்

*காவிரி ஆற்றின் கரையிலே ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள் தனியாக. தனது கூந்தலை விரித்து ஆற்றிக் கொண்டிருந்தாள்.*

*அவளைக் கண்டான் ஒருவன். காதல் கொண்டான் அடுக்கு அடுக்காகத் தோன்றிய கருங்கூந்தல் அவனைக் கவர்ந்தது.*

*அதே சமயத்தில் காவிரி ஆற்றையும் நோக்கினான். கொஞ்ச காலம் முன்புதான் காவிரி பெருக்கெடுத்து ஓடினாள். கொஞ்சம் கொஞ்சமாக நீர் வற்றியது. கருமணல் அடுக்கு அடுக்காகப் படிந்தது ஆற்றிலே.*

*காவிரி ஆற்று மணலையும் அந்தக் காரிகையின் கூந்தலையும் மாறி மாறிப் பார்த்தான் அவன்.*

*"ஆகா! என்ன அழகு! என்ன அழகு!" என்று சொல்லிக் கொண்டே அருகில் நெருங்கினான்.*

*'கம்'மென்று மணம் வீசியது. தலையிலே வாசனாத் திரவியங்கள் தேய்த்து நீராடியதாலே வந்த மணம் அது! அதை நுகர்ந்தான். உள்ளத்திலே கிளர்ச்சியுண்டாயிற்று!*

*"மானே!" என்றான்.*

*"மடக்கொடியே!" என்றான்.*

*"தேனே!" என்றான்.*

*"திரவியமே!" என்றான்.*



*அவள் சிரித்தாள். அவன் அணைத்தான். இன்பம்! இன்பம்!*

*எழுந்தாள்; விரைந்தாள்; சென்றாள். அவன் தனியே நின்றான்.*

*"ஆகா! என்ன இன்பம்! என்ன இன்பம்!" என்று வியந்தான்.*

யான் நயந்து உறைவோள் தேம் பாய் கூந்தல்,
வளம் கெழு சோழர் உறந்தைப்பெருந் துறை
நுண் மணல் அறல் வார்ந்தன்ன,
நல் நெறியவ்வே; நறுந் தண்ணியவே.

*- இளங்கீரன்*

## 48. குமரியும் குட்டிப் பாம்பும்

*"என்னப்பா! என்ன சங்கதி?"*

*"ஏன்?"*

*"என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறாயே!"*

*"ஒன்றுமில்லை. சிறுபாம்பு. . ."*

*"பாம்பா? என்ன?"*

*"ஆம்! பாம்புதான்."*

*"என்ன பாம்பு? தண்ணீர்ப் பாம்பா?"*

*"இல்லை இல்லை; நாகப்பாம்பு!"*

*"நாகப் பாம்பா? ரொம்பப் பெரிதோ?"*

*"இல்லை; இல்லை; குட்டி!"*

*"குட்டிப் பாம்பு என்ன செய்தது?"*

*"தீண்டியது!"*

*"தீண்டியதா? யாரை?"*

*"கட்டுக்கடங்காமல் திரிந்த காட்டு யானையை!"*

*"அப்பாடா! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது."*

*"பொறு! பதறாதே! சொல்வதைக் கேள்."*

"குட்டிப் பாம்பு தீண்டியதா! காட்டு யானை மிக வருந்தியது."

"உம். அதுக்கும் உனக்கும் என்னப்பா சம்பந்தம்?"

"இருக்கு! சொல்வதைக்கேள்."

"கட்டுக்கடங்காத காட்டு யானை நான்!"

"சரி, குட்டிப் பாம்பு எது?"

"அப்படிக் கேள்! குட்டிப் பாம்பு எது என்று சொல்லட்டுமா?"

"சொல்லு."

"அந்தக் குட்டிப் பாம்பு மினுமினு என்று அழகாயிருந்தது. தடவிக் கொடுத்தேன்!"

"ஏனப்பா! குட்டிப் பாம்பு என்று தெரிந்தும் அதைப் போய்த் தடவலாமா?"

"தடவினேனா! உடனே அது பல்லைத் திறந்து. . . . . . ."

"ஆ!. . . . . . திறந்து. . . . . . .?"

"பட்டென்று மூடியது. . ."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? அவதி!"

"என்னப்பா புதிர் போடுகிறாய்! குட்டிப் பாம்பு என்கிறாய். என்னவோ சொல்கிறாய்."

"பாம்பை நீக்கிப் பாரேன்."

"அட! டே! இப்போ புரியுது குட்டி! அதாவது இளமங்கை ஒருத்தியைக் கண்டு. . .ஆ!"

"ஆமாம்; ஆமாம்!"

சிறு வெள்அரவின் அவ் வரிக் குருளை
கானயானை அணங்கியா அங்கு
இளையள், முளை வாள் எயிற்றள்,
வளையுடைக் கையள் எம்அணங்கியோளே.

- சத்திநாதனார்



## 49. 'எட்டி எட்டிப் பார்ப்பவர்க்கு எட்ட எட்ட நிற்குமது!'

அவன் இருப்பது ஓர் ஊர். அவள் இருப்பது மற்றோர் ஊர். இருப்பினும் இரவு நேரத்திலே வருவான் அவன், தனது காதலியைக் காண்பதற்காக. கண்டு இன்பமாகப் பொழுதுபோக்குவதற்காக. இந்த விஷயம் வேறு எவருக்கும் தெரியாது, இரகசியம்!

ஒருநாள் என்ன ஆயிற்று? காவல்காரர்கள் ஊரைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். அந்தநேரத்திலே அவனும் வந்தான். காவல் காரர்களைக் கண்டுவிட்டான். நல்ல வேளை! அவர்கள் அவனைப் பார்க்கவில்லை. பார்த்துவிட்டால் வம்பு. "யார்? என்ன? எங்கே போகிறாய்?" என்று கேட்பார்கள். எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டும். மறுநாள் ஊர்ப் பொதுவில் நிறுத்தி விசாரிப் பார்கள். மானம் போய் விடும். இரகசியம் அம்பலமாகிவிடும்! எனவே, என்ன செய்தான்? மெல்ல நழுவிவிட்டான். காதலியைப் பார்க்கலாம் என்ற ஆசையோடு வந்தான்! பாவம்!

இன்னொரு நாள் வந்தான். இரவு நேரம். ஊர் அடங்கி விட்டது. நாய்கள் திரிந்தன தெருவிலே. தூரத்திலே ஆள் வரும் அரவம் கேட்ட உடனே அவை குரைத்தன.

"என்னடா இது? நாய் குரைக்கிறதே!" என்று எண்ணி அவன் திரும்பிவிட்டான். திரும்பாவிட்டால் என்ன? நாய்கள்விடாமல் குரைக்கும்! ஊரார் விழித்துக் கொள்வார்கள். இரகசியம் வெளியாகும் அல்லவா? எனவே திரும்பிவிட்டான். அன்றைய தினமும் அவளைப் பார்க்க முடியவில்லை.

இன்னொருநாள் வந்தான். காவல்காரர்கள் கண்ணில் படாமல் தப்பி விட்டான். நாய்களும் குரைக்கவில்லை. அவளது வீட்டுக்கு அருகே வந்துவிட்டான். நிலவு வெளிப்பட்டு விட்டது. நிலவு வெளிப்பட்டால் அவள் வெளிவரமாட்டாள். வெளிச்சமாக இருக்கும் அல்லவா! எனவே, திரும்பிப் போனான்.

"சரி, இன்று எப்படியாவது அவளைச் சந்தித்தே தீர்வது" என்று எண்ணிக் கொண்டு வருகிறான்.

அவளுடைய வீட்டிலே எல்லாரும் அயர்ந்து தூங்குகிறார்கள். ஆனால் அவள் மாத்திரம் தூங்கவில்லை. வீட்டுக்குள்ளே இருக்கும் அவள் வெளியே வரவேண்டுமே! அவன் வந்திருக்கிறான் என்று தெரிந்தால் வெளியே வருவாள். அதைத் தெரிவிப்பது எப்படி? மரக்கிளையைப் பிடித்து உலுக்கி சப்தம் செய்கிறான்.

"இரவு நேரத்திலே நீ வந்தால் இந்தமாதிரி மரக்கிளையை உலுக்கு. நான் எழுந்து வருகிறேன்" என்று சொல்லி வைத்திருந்தாள் அவள். அதன்படி செய்தான் அவன்.

ஆனால் அவள் வரவில்லை. எழுந்து வரவில்லை. காரணம் என்ன? சிறிது நேரம்முன்பு அந்தமாதிரி ஒரு சப்தம் கேட்டது. அவள் எழுந்து வந்தாள். ஆசையோடு வந்தாள். ஆனால் அவன் இல்லை. பின் சப்தம் எப்படி ஏற்பட்டது? பறவை ஒன்றை மற்றொன்று விரட்டியதால் இலைக்குள்ளே புகுந்து ஓடியது. சப்தம் கேட்டது. அவ்வளவுதான். அவள் ஏமாந்தாள். மறுபடியும் அந்த மாதிரி சப்தம் கேட்கவே அவள் என்ன நினைத்தாள், "சரிதான். பறவைகள்தான் மீண்டும் இந்த மாதிரி செய்கின்றன" என்று நினைத்தாள், எழுந்து வரவில்லை.

அவனோ காத்திருந்து பார்த்தான். நீண்ட நேரமாயிற்று. அவள் வரவில்லை. மனம் உடைந்தான்.

"சரிதான். இனிமேல் அவள் எங்கே வரப் போகிறாள்? நல்லவள்தான். நான் வந்தபோதெல்லாம் இன்பமாகப் பேசினாள். ஆனால் காண்பதற்கே அருமையாயிருக்கிறதே! கிட்டாத இடத்தில் நாட்டம் வைக்கலாமா? வறியவனுக்கு ஏது காதல்!" என்று புலம்புகிறான்.

இல்லோன் இன்பம் காமுற்றா அங்கு
அரிது வேட்டனையால் - நெஞ்சே! - காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.

- பரணர்



## 50. குரங்கு முறித்த கொம்பு

கொல்லைப்புறத்திலே 'சலசல' என்று சப்தம் கேட்டது. மரக்கிளைகளை உலுக்கிய சப்தம்.

"சரி. நமது காதலன் வந்துவிட்டான்" என்று எண்ணினாள் அவள். எழுந்து வந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். எங்கும் காணோம். எவரையும் காணோம். ஒரே இருட்டு. மரக் கிளையிலே இரண்டு பறவைகள் மாத்திரம் சப்தம் செய்துகொண்டிருந்தன; கண்டாள்; திரும்பிவிட்டாள்.

சிறிது நேரம் சென்றது. மறுபடியும் அதே மாதிரி சப்தம் கேட்டது. "சரிதான். பறவைதான் சப்தம் செய்கிறது" என்று எண்ணினாள் அவள். எழுந்து போகவில்லை.

"ஏனடி, போகவில்லையா? காதலர் வந்துவிட்டாரே!" என்றாள் தோழி.

அவளுக்குக் கோபம்! ஏமாற்றத்தால் ஏற்பட்டது. காதலன் சரியான முறையில் அறிவிக்கவில்லையே என்று.

"போடி! பொய் சொல்லாதே!" என்றாள்.

"இல்லை. மெய்தான்" என்றாள் தோழி.

"குரங்கு என்ன செய்தது? மரக்கிளை ஒன்றின்மீது தாவியது. குட்டியுடன் தாவியது. இளங்கிளை. மெல்லிய கிளை. குரங்கு சரியாகக் குறிவைத்துத் தாண்டவில்லை. எனவே முறிந்து போயிற்று" என்றாள்.

"அந்த மாதிரி?"

"என் மனம் முறிந்தது."

மெய்யே, வாழி? தோழி சாரல்
மைப் பட்டன்ன மா முக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டொடு போகியாங்கு, நாடன்
தான் குறி வாயாத் தப்பற்குத்
தாம் பசந்தன, என் தட மென் தோளே.

- கபிலர்

## 51. அணங்கும் அஷ்டமி நிலவும்

*மலைநாட்டு இளைஞன் ஒருவன்; செல்வன். ஒருத்தியைக் கண்டான். காதல் கொண்டான். இன்பமாக இருந்தான். பிரிந்து சென்றான். அதுமுதல் அதே நினைவு. அவளையே எண்ணி எண்ணி இருந்தான். கண்டான் தோழன்.*

*"ஏன், உனக்கு என்ன வந்துவிட்டது?"*

*"ஒன்றுமில்லையே!"*

*"ஒன்றுமில்லையா? எதையோ எண்ணி எண்ணி ஏங்குகிறாயே! என்ன?"*

*"நண்பா! அன்பா! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் நான் சொல்லப்போகிறேன்?"*

*"காட்டு யானையைச் சிறைப்படுத்தியதுபோல் என்னைச் சிறை செய்து கொண்டு போய்விட்டாளடா."*

*"யாரடா? யார் அவள்?"*

*"நீலக் கடலிலே தோன்றிய அஷ்டமி சந்திரன் போன்ற பெண் ஒருத்தி."*

*"அப்படியா?"*

*"ஆமாம், ஆமாம்!! கன்னங் கரியகூந்தல். நிலவு போன்ற நெற்றி! ஆகா! என்ன அழகு! என்ன அழகு!"*

எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ! கேளாய் அத்தை:
மாக்கடல் நடுவண் எண் நாள் பக்கத்துப்
பசு வெண் திங்கள் தோன்றியாங்குக்
கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்
புதுக் கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே.

*- கோப்பெருஞ்சோழன்.*



## 52. கன்றும் கன்னியும்

*"உனது அறிவு என்ன? படிப்பு என்ன? பெருமை என்ன? இப்படிப்பட்ட நீ, ஒரு பெண்ணை நினைத்து மனம் அலையலாமா?" என்று கேட்டான் நண்பன்.*

*"தோழனே! நீ சொல்வது சரி. அறிவும், படிப்பும், பெருமையும் உடையவர்கள், மனதைக் கண்டபடி அலைய விடக்கூடாது தான். அதிலும் பெண்கள் விஷயத்தில். ஆனால் ஒன்று. பெண் என்றால் பெண் அவள்தானடா! என்ன அழகு! என்ன அழகு! கண்டவர் காமுறும் காரிகையடா! அவளது கண்களிலேதான் எத்தகைய 'குறு குறுப்பு'! என்ன துடி துடிப்பு! அவளது கூந்தலின் அழகை என்ன என்பேன்! மார்பின் எடுப்பை என்ன என்று சொல்வேன்!"*

*"அடேய்! கொஞ்சம் நிறுத்து! பயித்தியம் பிடித்து விடப் போகிறது."*

*"நன்றாக மேய்ந்துவிட்டு மடியும் காம்பும் சுரந்து வருகிறது பசு. அதைக் கண்ட உடனே அதன் கன்று ஆவலோடு எப்படித் துள்ளிச் சென்று முட்டி நிற்குமோ! அந்த மாதிரி நின்றாளடா!"*

*"அப்போ! நீ பசு! அவள் கன்று! இதானேநீசொல்வதன்பொருள்."*

*"ஆம்!"*

கவவுக் கடுங்குரையள்; காமர் வனப்பினள்;
குவவு மென் முலையள்; கொடிக் கூந்தலளே
யாங்கு மறந்து அமைகோ, யானை? ஞாங்கர்க்
கடுஞ் சுரை நல் ஆன்நடுங்கு தலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன,
சாஅய் நோக்கினள் மாஅயோளே.

*- சிறைக்குடிஆந்தையார்*

## 53. பைங்கிளியும் பெண் கிளியும்

*"என்னடி இது! இன்னும் வரவில்லையே!"*

*"விரைவில் வருவேன் என்றுதானே சொன்னார். என்னவோ வரக் காணோமே!"*

"எனது அழகும், வலிவும் அழிந்து போயின. இன்னும் உயிரோடி ருக்கிறேனே!"

"வீணில் வருந்தாதே!"

"எனது வனப்பு, பெண்மை எல்லாம் புத்தம் புதியனவாயிருந்த போது அவர் அனுபவித்தார். இன்னும் கலியாணம் செய்து கொள்ள வரவில்லை. என்ன செய்வேன்?"

"இன்னும் சில நாள் பொறுத்திருந்து பார்ப்போமே!"

"என்னடி பொறுமை வேண்டியிருக்கிறது. தினைப் புனத்திலே தினை விதைத்திருக்கிறான் குறவன். பொன்போல் கதிர் வாங்குகிறது. கிளி வந்து அக்கதிரை உண்டு செல்கிறது. கூழையாகி நிற்கிறது தினை. அப்போது ஒரு மழை பெய்கிறது. உடனே சிறிது தளிர்க்கிறது. அந்தமாதிரி அல்லவா இருக்கிறேன்" என்று புலம்பினாள் அவள்.

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட கூழை இருவி
பெரும் பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு என்
உரம் செத்தும் உளெனே தோழி! என்
நலம் புதிது உண்ட புலம்பினாளே.

*- உறையூர் முதுகண்ணன் சாத்தனார்*

## 54. வேங்கையும் மங்கையும்

மலைச் சாரலில் விழுந்து ஓடுகிறது அருவி. அது எப்படியிருக்கிறது? பாம்பு நெளிந்துநெளிந்து ஓடிப் பாறைக்குள் புகுவது போல் இருக்கிறது.

அந்த அருவியின் அருகே வேங்கை மரங்கள் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அவற்றின் கிளைகளைத் தாக்கிப் பூவை யெல்லாம் உதிர்த்து வருகிறது அருவி; கற்களை உருட்டி வருகிறது; ஒலித்து ஓடுகிறது.

அதையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள். கண்களிலிருந்து நீர் சொரிகிறாள்.

"ஏன்?" என்று கேட்டாள் தோழி.



"ஒன்றுமில்லை; இந்த மலையையும் அருவியையும் பார்த்தேன்."

"பார்த்ததும் உன் காதலன் நினைவு வந்துவிட்டது. அதுதானே!"

"ஆம்!"

"உன்னைக் கலியாணம் செய்து கொள்வதற்காகத் தானேஅவர் வெளியூர் போயிருக்கிறார். அதனால் உனக்கு நல்லதுதானே!"

"நல்லதுதான். இருப்பினும் அவரது பிரிவு துன்பம் தருகிறதே. பிரிவு இல்லாதிருந்தால் நன்றாயிருக்கும்" என்றாள் அவள்.

அம்ம வாழி தோழி! நம்மொடு
பிரிவு இன்று ஆயின் நன்றுமன் தில்ல
குறும் பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்கு சினை புலம்பத் தாக்கிக்
கல் பொருது இரங்கும் கதழ் வீழ் அருவி,
நிலம் கொள் பாம்பின், இழிதரும்
விலங்கு மலை நாடனொடு கலந்த நட்பே.

*- கோவேங்கைப் பெருங்கதவன்.*

## 55. மதமும் மன்மதமும்

"நீ என்ன இப்படிக் காமப் பித்துப் பிடித்து அலைகிறாய்?" என்றான் நண்பன்.

"ஏய்! என்னவோ, காமம் காமம் என்று உலகத்தார் சொல் கிறார்கள். காமம் என்பது என்னவாம்?"

"அது ஒரு நோய்."

"அல்ல, அல்ல. நோயுமல்ல."

"அது ஒரு புது வியாதி."

"அதுவுமல்ல."

"பித்தம் தலைக்கு ஏறுகிறதே! அந்த மாதிரி ஏறி இறங்கும் ஒன்று."

"சீச்சீ! அவையெல்லாமில்லை."

"பின் என்னவாம்?"

"உடம்பிலேயே ஊறியிருக்கிற ஒன்று காமம். அதற்கு உரியவர்களைக் கண்ட உடனே அது வெளியாகும். தழையுண்ட யானைக்கு மதம் வெளிப்படுவது போல. வேறு ஒன்று மில்லை" என்றான் அவன்.

'காமம் காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானை
குளகு மென்று ஆள் மதம் போலப்
பாணியும் உடைத்து, அது காணுநர்ப் பெறினே.

*- மிளைப்பெருங் கந்தன்*

## 56. நிசியும் நொச்சியும்

"இராத்திரி முழுவதும் கண் கொட்டவில்லை" என்றாள் அவள்.

"ஏன்?"

"தூக்கமே வரவில்லை."

"ஊரடங்கித் தூங்கிற்றே!"

"ஆமாம். நமது வீட்டுக்கு அருகே உள்ள நொச்சி மரத்திலிருந்து மலர்கள் 'பொத்துப் பொத்' தென விழுந்து கொண்டேயிருந்தன."

"சரிதான். இப்பொழுது புரிந்தது. வந்தானோ, வந்தானோ என்று எழுந்து எழுந்து பார்த்துக் கொண்டிருந்தாயோ!"

"வரவே இல்லையே!"

அவளது காதலன் வேலிக்கு அருகே நின்று கொண்டிருந்தான். அவன் கேட்க வேண்டும் என்பதற்காக மேற்கண்டவாறு கூறினாள் அவள்.



கொன் ஊர் துஞ்சினும், யாம் துஞ்சலமே -
எம் இல் அயலது ஏழில் உம்பர்,
மயில அடி இலைய மாக் குரல் நொச்சி
அணி மிகு மென் கொம்பு ஊழ்த்த
மணி மருள் பூவின் பாடு நனி கேட்டே.

*- கொல்லன் அழிசி.*

## 57. கள்ளியின் உள்ளம்

"ஏனடி தோழி! நீதான் சொன்னால் என்ன?"

"எவரிடம்?"

"அவரிடம்."

"உன் காதலரிடமா?"

"ஆமாம்!"

"என்ன சொல்ல வேண்டுமென்கிறாய்?"

"யானையும், புலியும், செந்நாயும் திரிகின்ற இந்த மலைச் சாரலிலே தனியாக ஏன் இந்த இரவு நேரத்திலே வருகிறார்?"

"வரவேண்டாம் என்று சொல்லவா?"

"ஆமாம்!"

"பிறகு எங்கே வர? என்று கேட்டால். . ."

"அம்மாதான் தினைப்புனத்தில் காவல் இருக்கச் சொல்லி விட்டாளே!"

"அப்போ! அங்கே வரச் சொல்லவா?"

"ஆமாம்."

"வளை வாய்ச் சிறு கிளி விளை தினைக் கடீஇயர்
செல்க" என்றோளே, அன்னை என, நீ
சொல்லின் எவனோ? தோழி! 'கொல்லை
நெடுங் கை வன் மான் கடும் பகை உழந்த

குறுங் கை இரும் புலிக் கொலை வல் ஏற்றை
பைங் கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆர் இருள் நடு நாள் வருதி;
சாரல் நாட, வாரலோ' எனவே.

*- மதுரைப் பெருங்கொல்லன்*

## 58. சுழலுதே! மனம்!

*கண்டான். காதல் கொண்டான். அவளும் இணங்கினாள். இருவரும் இன்பம் துய்த்தனர்.*

*"நேரமாயிற்று; வருகிறேன்" என்றாள். போய் விட்டாள். அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சென்றான்.*

*இருந்தாலும் அவளது உருவம் அவனது மனக்கணை விட்டு அகலவில்லை. சுனையிலே மலர்ந்த மலர்களைத் தொடுத்துத் தலையிலே அணிந்துகொண்டு தினைப்புனத்திலே குருவிகளை ஓட்டிக் கொண்டிருந்த தோற்றம் அவன் முன் நின்றது.*

*"நள்ளிரவிலே யானை தூங்கும்போது 'புஸ் புஸ்' என்று மூச்சுவிடும். அந்த மாதிரியல்லவா மூச்சு வருகிறது. எனது நெஞ்சு அவளிடத்திலேயே சுற்றிச் சுற்றி வருகுதே! இது அவளுக்குத் தெரியுமோ, தெரியாதோ!" என்று புலம்பினான்.*

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ,
புனக் கிளி கடியும் பூங் கட் பேதை
தான் அறிந்தன்றோ இலளே பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம், பின்னும், தன் உழையதுவே!

*- கபிலர்*

## 59. பெண்ணும் கண்ணீரும்

*"அழாதே! அம்மா! அழாதே!" என்றாள் தோழி.*

*"என்மீது அவருக்கு அன்பு இல்லை போலிருக்கே" என்றாள் அவள்.*

*"அப்படி எதுவும் நினையாதே. அன்புடையவர்தான்."*



*"வராமலே இருக்காரே! வரையாமலே இருந்து விடுவாரோ!"*

*"சீச்சீ! அப்புறம் ஊரார் பழி கூற மாட்டார்களா! அது கண்டு பயப்படுவார்; சீக்கிரம் வருவார்; உனது வருத்தமும் நீங்கும். பசலை போகும். மனம் தேறு. எழு. கண்ணீரைத் துடை" என்றாள் தோழி.*

அழியல் - ஆயிழை! - அன்பு பெரிது உடையன்;
பழியும் அஞ்சும், பய மலை நாடன்;
நில்லாமையே நிலையிற்று ஆகலின்,
நல் இசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட்டாள னுடைப் பொருள் போலத்
தங்குதற்கு உரியது அன்று, நின்
அம் கலுழ் கேனிப் பாஅய பசப்பே.

*- மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்*

## 60. மனமா? மணமா?

*"யாரடி அவர்கள்?"*

*"எவர்?"*

*"கையிலே தடியும், தலையிலே முண்டாசும், நரைத் தலையுமாக வருகிறார்களே! அவர்கள்!"*

*"ஓ அவர்களா? உனக்குத் தெரியாதா?"*

*"தெரியாதே!"*

*"பெண் பேச வந்திருக்கிறார்கள். என் காதலன் ஊர்ப் பெரியவர்கள்!"*

*"அப்படியா! ஐயோ, எனக்குப் பயமாயிருக்கே!"*

*"என்னடி பயம்? அவர்கள் புலியா? கரடியா?"*

*"இல்லை, நமது பெற்றோர் 'சரி' என்று சொல்ல வேண்டுமே!"*

*"ஓ! அதற்கா பயப்படுகிறாய்? பயப்படாதே! அவர்கள் சரி என்று சொல்வார்கள்."*

*"எப்படித் தெரியும்?"*

"வாருங்கள்! வாருங்கள்! உங்கள் வருகையால் பெருமை பெற்றோம்" என்று கூறி மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்களே! அதிலிருந்தே தெரியவில்லையா?

"அப்பாடா! நீ வாழ்க! தோழி."

அம்ம வாழி, தோழி! நம் ஊர்ப்
புரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர், வெண்தலைச் சிதவலர்,
'நன்றுநன்று' என்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும், ஆங்கணது அவையே.

*- வெள்ளிவீதியார்*

## 61. மார்பும் மையலும்

"இனி இரவு நேரத்திலே நீ வரலாம். வேண்டிய ஏற்பாடு செய்து வைக்கிறேன்" என்று சொன்னாள் தோழி,

"சரி அப்படியே ஆகட்டும்" என்றான். அவன்.

அதை வந்து அவளிடத்திலே கூறினாள். கேட்டாள் அவள். மிகுந்த மகிழ்ச்சி கொண்டாள். அதைத்தன் தோழிக்கு அறிவிக்கிறாள். எப்படி? "ரொம்ப சரி, வரட்டுமே!" என்றாளா? இல்லை. பின் என்ன சொல்கிறாள். குறிப்பாக உணர்த்துகிறாள்.

"அவரது மார்பு இருக்கிறதே, அதன் பெருமையை என்ன என்று சொல்வேன் நான். அதை நினைக்க நினைக்கக் காம நோய் வளர்கிறது. கட்டி அணைத்தாலோ போய்விடுகிறது" என்கிறாள்.

சேணோன் மாட்டிய நறும் புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்கு மலைநாடன் சாந்து புலர் அகலம்
உள்ளின், உள் நோய் மல்கும்;
புல்லின், மாய்வது எவன்கொல்? - அன்னாய்!

*- மாடலூர் கிழார்*



## 62. கோழி முட்டையும் காதலும்

"என்ன இருந்தாலும் சரி. இந்த மாதிரி நினைத்து நினைத்து உருகுதல் கூடாது" என்றாள் தோழி.

"அடடே! இவளுக்குக் காதல் என்றால் என்ன என்றே தெரியாது போலிருக்கு. நினைத்து நினைத்து உருக வேண்டும். உருக உருகத்தான் காதல் வளரும்."

"அப்படியா? உருகு; உருகு."

"கோழியிருக்கிறது. முட்டையிடுகிறது. முட்டையை அப்படியே விட்டுவிட்டால்... அது குஞ்சாகி விடுமா? கரு வளருமா? வளராது."

"கோழி அடை காக்கிற மாதிரி எப்போதும் என் காதலன் அடைகாக்க வேண்டும் என்கிறாயா?"

"இல்லாவிட்டால் காதல் எப்படி வளரும்; பலன் தரும்?"

"இது தெரியாமல் பேசுகிறார்கள்!"

யாவதும் அறிகிலர், கழறுவோரே
தாய் இல் முட்டை போல, உட்கிடந்து
சாயின் அல்லது, பிறிது எவன் உடைத்தே?
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம், காதலர் கையற விடினே.

*- கிள்ளிமங்கலங் கிழார்.*

## 63. ஆந்தை அலறும்; அணங்கு அஞ்சும்

"இனிமேல் இந்த இரவு நேரத்திலே வரவேண்டாம் என்று சொல்லிவிடு."

"யாரிடம் சொல்ல?"

"அவரிடம்தான்."

"எவரிடம்? உன் காதலரிடமா?"

"ஆம்."

"ஏன் அப்படி?"

*"எனக்கு ரொம்ப பயமாயிருக்கு."*

*"ஏன்?"*

*"ஆந்தை அலறினால் அஞ்சுகிறேன்."*

*"உம்."*

*"ஆண்குரங்கு தாவினால் அச்சம்."*

*"உம்."*

*"இரவு நேரத்திலே பயங்கரமான அந்த மலைச்சாரல் வழியே வந்து போகிறார். போகும்போது அவர் பின்னே செல்கிறது என் நெஞ்சு. வழியிலே எந்தவிதமான துன்பமுமின்றிப் போக வேண்டுமே என்று துன்புறுகிறது."*

குன்றக் கூகை குழறினும்., முன்றிற்
பலவின் இருஞ் சினைக் கலை பாய்ந்து உகளினும்,
அஞ்சும்மன்; அளித்து என்நெஞ்சம்! இனியே
ஆர் இருட் கங்குல் அவர்வயின்
சாரல் நீள் இடைச் செலவு ஆனாதே.

*- கபிலர்*

## 64. இடியும் புடையலும்

*"நீ ஓர் ஆண்பிள்ளையில்லையா? ஒரு பெண்ணிடம் மனம் பறிகொடுத்துவிட்டு இந்த மாதிரி தவிப்பது கேவலமல்லவா? மனதை அடக்க வேண்டாமா?" என்றான் அவன்.*

*அவனும் ஓர் இளைஞன் தான். பார்ப்பன வகுப்பில் பிறந்தவன். பலாச மரத்தின் பட்டையை உரித்து எறிந்து விட்டு வைத்திருக்கிறான். ஒரு கம்பு. நீர்க் கமண்டலம் ஒன்று. மூன்று வீடுகளுக்குச் சென்று, மூன்று கவளம் சோறு வாங்கி உண்டு வாழ்கிறான். பிரம்மச்சாரி. வேத நூல்களைக் கற்றுக் கொண்டிருக் கிறான். இவன் இவ்வாறு தன்னை இடித்துச் சொன்னது கேட்டான் அவன். "பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே" என்று அழைக்கிறான். யாரை? தனது தோழனை.*



*"ஏன்?" என்றான் அவன்.*

*"வேதம் படிக்கிறாய் அல்லவா?"*

*"ஆமாம்!"*

*"அதிலே காதலுக்கு ஏதாவது மாற்று சொல்லப் பட்டிருக்கிறதா?"*

*"இல்லை."*

*"அப்படியிருக்க நீ எப்படி எனக்குப் புத்தி சொன்னாய்?"*

பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம் பூ முருக்கின் நல் நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? மயலோ இதுவே.

***- பாண்டியன் ஏனாதி நெடுஞ்செழியன்***

## 65. மாரியும் நாரியும்

*இரவு நேரம். காதலனை எதிர்நோக்கி இருக்கிறாள் அவள். பக்கத்திலே உள்ள மலைச்சாரல் வழியே வருவான் அவன். அந்த வழிமேல் விழி வைத்திருக்கிறாள்.*

*இடி இடிக்கிறது. மின்னல் மின்னுகிறது. காற்று வீசுகிறது. மழை பொழிகிறது. எங்கே? அந்த மலைச்சாரலிலே.*

*"ஐயோ! பெருமழை பெய்கிறதே. நமது காதலன் வராமல் தங்கிவிடுவானோ?" என்று ஏங்குகிறாள்; அஞ்சுகிறாள்.*

*மழைத் தெய்வத்தை வேண்டுகிறாள். "மழையே! தெய்வமே! சர்வ வல்லமை பொருந்திய மாரியே! இமயமலையைக் கூட நீ பிளந்து விடுவாய். அவ்வளவு வல்லமையுண்டு உனக்கு. நானோ எளிய பெண். துணையில்லாமல் துடிக்கும் பெண். காதலன் பொருட்டு ஏங்கி நிற்கிறேன். உனது இரக்கம் எங்கு உகுத்தாய்? மாரியே மனமிரங்கு!"*

நெடு வரை மருங்கின் பாம்பு பட இடிக்கும்
கடு விசை உருமின் கழறு குரல் அளை இக்
காலொடு வந்த கமஞ் சூல் மா மழை!
ஆர் அளி இலையோ நீயே? பேர் இசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணை இலர், அளியர், பெண்டிர்; இஃது எவனே?

*- ஔவையார்.*

## 66. காவலும் காதலும்

பருவம் வந்த பெண். காதலனுடன் இன்பம் துய்த்ததால் அவளது உடலிலே மாறுதல் ஏற்பட்டது. மேனியிலே ஒரு புதிய வனப்பு உண்டாயிற்று. புது மெருகிட்டது. வளைவுகளும், குழைவுகளும் தோன்றின. மார்பு எடுப்பாகக் காட்சி தந்தது. இடை சிறிது இளைத்தது.

"பெண்ணுக்கு வயது வந்துவிட்டது. இனி வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது" என்று கட்டுப்படுத்தி விட்டார்கள்.

இனிமேல் வெளியே போவது எப்படி? காதலனைக் கண்டு களிப்பது எப்படி? இயலாது.

இந்த விஷயத்தை அவளது காதலனுக்குத் தெரிவிக்க விரும்பினாள் தோழி. அவனும் அந்தப் பக்கத்திலே ஏதோ வேலையாக நின்று கொண்டிருந்தான். நின்றுகொண்டிருந்தானே தவிர கவனம் முழுவதும் இங்கேதான். யாராவது ஏதாவது சொல்கிறார்களோ என்ற கருத்துடன் காது கொடுத்து நின்றான்.

"என்ன, கொஞ்சம்கூடக் கவலை அறியாத மக்கள்" என்றாள் அவள் சலிப்புடனே.

"ஏதடா, பருவம் வந்த பெண் ஆயிற்றே. அவளை வீட்டுக் குள்ளே அடைத்து வைக்கிறோமே! அவள் எப்படி வருந்து வாளோ? என்ற யோசனையே இல்லை."

"ஏனடி. பெண்ணே, உன் மனதில் உள்ளதைச் சொல்லேன் என்று எவராவது கேட்க வேணுமே! ஊஹூம் இல்லை!"



அவள் கூறியதன் கருத்து என்ன? " இனி நீ அவளைச் சந்திக்க முடியாது. அவளது உள்ளத்துக் காதலைக் கேட்டு அறிவாரு மில்லை. எனவே, விரைவில் வந்து மணந்து செல்" என்பதே.

தழை அணி அல்குல் தாங்கல் செல்லா
நுழை சிறு நுசுப்பிற்கு எவ்வம் ஆக,
அம் மெல் ஆகம் நிறைய வீங்கிக்
கொம்மை வரி முலை செப்புடன் எதிரின;
யாங்கு ஆகுவள் கொல் பூங்குழை? என்னும்
அவல நெஞ்சமொடு உசாவாக்
கவலை மாக்கட்டு - இப் பேதை ஊரே.

*- வடம வண்ணக்கன் பேரிசாத்தன்*

## 67. அன்றிலின் இன்பமும் அணங்கின் துன்பமும்

இரவு நேரம். தூக்கம் வரவில்லை அவளுக்கு. படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள். குளிர் நடுங்குகிறது. வாடைக் காற்று வீசுகிறது. காதலன் பிடியிலே - கதகதப்பிலே - இன்ப மாயிருக்க வேண்டிய சமயம். ஆனால் அவனோ வரவில்லை. அருகிலே உள்ள மரம் ஒன்றிலே அன்றில் பறவைகள் இரண்டு அமர்ந்திருக்கின்றன. ஜோடியாக இருக்கின்றன. ஆண் அன்றில் பெண் அன்றிலுடன் கொஞ்சுகிறது; குலவுகிறது.

அதைக் கேட்கக் கேட்க இவளுக்குத் துன்பமுண்டாகிறது; மனம் அமைதியின்றி இருக்கிறது; தவிக்கிறாள்.

"விரைவிலே அவர் வருவார். கொஞ்சம் பொறுத்திரு" என்றாள் தோழி.

"காதலர் இன்புற்றிருக்க இதுதானே சமயம். இரவு நேரம் குளிர்காலம். வாடை வீசுகிறது. இப்பொழுது வராதவர் இனி எப்பொழுது வரப் போகிறார்?"

"அப்படி மனம் உடையலாமா?"

"அதோ அந்த அன்றில் - ஆணும் பெண்ணுமாக எப்படிக் கொஞ்சி மகிழ்கிறது! அந்தப் பாக்கியம்கூட எனக் கில்லையே!"

நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடு வாய்ப் பெடையொடு,
தடவின் ஓங்கு சினைக் கட்சியில், பிரிந்தோர்
கையற நரலும் நள்ளென் யாமத்துப்
பெருந் தண் வாடையும் வாரார்;
இஃதோ - தோழி! நம் காதலர் வரவே?

*- மதுரை மருதன் இளநாகன்*

## 68. அம்பி அழுததும் அத்தான் வந்ததும்

“இன்று இரவு வருகிறேன்.” என்றான்.

“வா” என்றாள்.

“ஏமாற்றி விடாதே!” என்றான்.

“இல்லை” என்றாள்.

அன்று இரவு அவனைச் சந்திப்பதற்கு வேண்டிய தயாரிப்புகளுடன் காத்திருந்தாள். ஆனால் அது எவருக்கும் தெரியக் கூடாது. எனவே வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தாள்.

இரவு எல்லோரும் படுத்தனர். தாயும் படுத்தாள். அருகிலே தனது சிறுவனைப் படுக்கச் செய்தாள். அவனை அணைத்துக் கொண்டே தூங்கினாள். சிறிது தள்ளிப் படுத்திருந்தாள் அவள். ஆனால் தூங்கவில்லை. எந்த நேரத்தில் அவன் வருவான்? எழுந்து போகலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘கம்’ மென்று வாசனை வீசியது சந்தனம். மலையிலே விளைந்த சந்தனத்தை மார்பிலே பூசி வந்து விட்டான் அவன். காதலியைக் கண்டுகளிக்க.

சந்தன வாசனையை அறிந்தாள். சந்தோஷமடைந்தாள். எழுந்தாள். மெல்ல அடிமேல் அடிவைத்து நடந்தாள். கொல்லைக் கதவைத் திறக்க முயன்றாள்.

“ஆ” என்று அழுதான் தம்பி.

“அட சனியனே!” என்று சபித்தாள். மெல்ல மறுபடியும் திரும்பினாள்.



‘வீல்’ என்று கத்தினான் மீண்டும்.

பூனைபோல் ஓடி வந்து படுக்கையில் படுத்தாள். கண்களை மூடிக் கொண்டாள்.

சிறுவனின் அழுகை தொடர்ந்தது. தூக்கம் கலைந்தாள் தாய். எனினும் கண்களைத் திறக்கவில்லை.

‘ச் ச் ச்’ என்று சமாதானம் செய்தாள் சிறுவனை.

அவன் ஓய்கிறதாக இல்லை.

“அடி பெண்ணே!” என்று அழைத்தாள். “ஏன்?” என்று கேட்கவில்லை அவள். காரணம் என்ன? உடனே பதில் கொடுத்தால், “இவள் தூங்காத காரணம் என்ன?” என்று தாய் யோசிக்கக் கூடும் அல்லவா!

இரண்டு மூன்று முறை அழைத்தாள் தாய்.

“ஏன் அம்மா!” என்று கேட்டுக்கொண்டே எழுந்தாள்.

“அந்த விசிறியை எடு” என்றாள். பிறகு நெடுநேரம் தாய் தூங்கவில்லை.

காதலனைக் காண்பது எப்படி? கண்ணீர் விட்டுக் கலங்கிய வண்ணம் படுக்கையில் படுத்தாள் அவள்.

அவனோ, மார்பிலே சந்தனமும் கழுத்திலே மலர் மாலையும் வாசனை வீசக் காத்திருந்தான். “வருவாள் வருவாள்” என்று. வருவது எங்கே?

நீண்ட நேரமாயிற்று.

“ஏமாற்றிவிட்டாள் திருடி” என்று சபித்துக்கொண்டே சென்றான்.

மறுநாள் தோழியைக் கண்டாள் அவள். அந்த நேரத்திலே அவனும் வந்துகொண்டிருந்தான். “நேற்று இரவு ஏன் வர வில்லை?” என்று கேட்பவன் போல.

அதற்கு சமாதானம் சொல்ல வேண்டுமே!

"நேற்று நடந்தது இப்படி" என்று தோழியிடம் கூறினாள். அது அவன் காதிலும் விழுமல்லவா! "சரிதான். அவள்மீது வஞ்சனையில்லை" என்று மனம் தேறுவான். அல்லவா? அதற்காக.

பொழுதும் எல்லின்று; பெயலும் ஓவாது.
கழுது கண் பனிப்ப வீசும்; அதன் தலைப்
புலிப்பல் தாலிப் புதல்வன் புல்லி,
'அன்னா!' என்னும், அன்னையும்; அன்னோ!
என் மலைந்தனன்கொல் தானே தன் மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்து நின்றனனே?

- *நக்கீரர்*

## 69. உப்பும் உவமையும்

குடியன் ஒருவன். ஒரு மொந்தை போடுகிறான். வெறியேறுகிறது. தலை சுற்றுகிறது. "போதும்" என்று போகிறானா? இல்லை.

"போடு இன்னொரு மொந்தை" என்கிறான். வாங்கிக் குடிக்கிறான்.

"நெஞ்சே! அந்த மாதிரியல்லவா நீ அறிவு மயங்கி விட்டாய். வெட்கம் கெட்டுப் போனாய்!" என்று கூறினான் அவன்.

வெட்கங் கெட்டு எங்கே சென்றது நெஞ்சு! பெண் ஒருத்தியிடம் சென்றான். "மோகனாங்கி! உனது மையலால் வாடுகிறேன்" என்றான். அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். முகவாய்க் கட்டையில் தோளால் இடித்துக் கொண்டாள். கெஞ்சினான்; கூத்தாடினான். ஒன்றும் பயனில்லை.

இவளை எப்படி அடையலாம்? என்று எண்ணினான். அவளது தோழியிடம் சென்றான்; கேட்டான்; சீறினாள் அவள்.

"சரி சரி; வழியைப் பார்த்துப் போய்ச் சேரு" என்றாள் அவள்.

உப்பு வண்டி யொன்று அங்கே நின்றுகொண்டிருந்தது. திடீரென்று மழை பெய்தது. பெரு மழை, நீண்ட நேரம் பெய்தது.



மூட்டைகள் என்ன ஆயின? சொல்லவா வேண்டும்? வண்டியும் சாக்குமே இருந்தன? உப்பு கரைந்தது.

அந்த மாதிரி அவன் நெஞ்சு இடிந்து போனான்.

மகிழ்ந்ததன் தலையும் நற உண்டாங்கு,
விழைந்ததன் தலையும் நீ வெய்துற்றனை
இருங் கரை நின்ற உப்பு ஒய் சகடம்
பெரும் பெயல் தலைய வீஇந்தாங்கு, இவள்
இரும் பல் கூந்தல் இயல் அணி கண்டே.

- *பரணர்*

## 70. நிலைத்தலும் குலைத்தலும்

"என்னடி இது, யாரோ, என்றைக்கோ அருவிக் கரையில் பார்த்தானாம். 'உன்னைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்றானாம். அதையே நம்பிக் கொண்டு இருக்கிறாள்" என்றாள் செவிலி.

"இதெல்லாம் என்ன நிச்சயம்?" என்றாள் இன்னொருத்தி.

"நீங்கள் எல்லாரும் எது வேண்டுமாயினும் சொல்லிக் கொண்டிருங்கள். எனது மனதை மாற்ற முடியாது. உங்களுக்கு என்ன தெரியும்?" என்றாள் அவள்.

"அருவியிலே நீர் குடிக்கப் போன யானை அங்கே மிதந்து வந்த கொறுக்காந்தட்டையை உண்டது போல எங்கேயோ வந்தான். எங்கிருந்தோ வந்தான். என்னைக் காதலித்தான். அவன் எப்படிப்பட்டவன் என்பது எனக்கல்லவா தெரியும்?"

பலரும் கூறுக, அஃது அறியாதோரே
அருவி தந்த நாட் குரல் எருவை
கயம் நாடு யானை கவளம் மாந்தும்
மலை கெழு நாடன் கேண்மை
தலை போகாமை நற்கு அறிந்தனென், யானே.

- *கருவூர் கிழார்*

## 71. மீன் வலையில் ஆமை!

"போய் வருகிறேன்" என்றான்.

"போய் வா" என்றாள்.

"காலங் கடத்தாதே" என்றாள்.

"மாட்டேன்."

"காத்திருப்பேன்"

"காத்திரு."

இவ்விதம் கூறிப் போனான் அவன். பொருள் தேடி வருவதற்காக.

பெண்ணுக்குத் தகுந்த கணவனைத் தேட எண்ணினர் பெற்றோர். பெண் கேட்டு வந்தனர் சிலர்.

"என்னடி இது, யார் யாரோ வந்து பெண் கேட்டுப் போகிறார்களே!" என்றாள் தோழி.

"ஒன்றும் கவலைப்படாதே, இந்த முயற்சிகள் எல்லாம் வீண். குளத்திலே வலை வீசுகிறான் வலையன். எதற்கு? மீன் பிடிக்க, மீன் வலையிலே ஆமை அகப்பட்டால் என்ன பயன்? மீன் அல்லவா அகப்பட வேண்டும்?" என்றாள்.

காண் இனி வாழி தோழி யாணர்க்
கடும்புனல் அடைகரை நெடுங் கயத்து இட்ட
மீன் மலை மாப் பட்டா அங்கு,
இது மற்று - எவனோ, நொதுமலர் தலையே?

*- பூங்கணுத்திரையார்*

## 72. மடலும் மனமும்

அவள்மீது காதல் கொண்டான் அவன். ஆனால் அவள் அதற்கு இணங்கவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை. தோழியிடம் சென்றான்.

"நீயாவது ஏதாவது உபகாரம் செய்யக் கூடாதா?" என்றான்.



"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் அவள்.

"அவளிடம் சொல்லக் கூடாதா?"

"சொல்லலாம். அவள் இணங்கினால்தானே!"

"சரி, அப்படியானால் ஒன்றும் இயலாதா?"

"இயலாது."

"நிச்சயமாகவா?"

"நிச்சயம்."

"சரி, அப்படியானால் நான் நினைத்தபடி செய்து விடுகிறேன்."

"என்னசெய்யப் போகிறாய்?"

"மடலேறப் போகிறேன்."

பொன் நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல் நூல் மாலைப் பனை படு கலி மாப்
பூண் மணி கறங்க ஏறி, நாண் அட்டு,
பழி படர் உள் நோய் வழி வழி சிறப்ப,
'இன்னள் செய்தது இது' என முன் நின்று,
அவள் பழி நுவலும், இவ் ஊர்;
ஆங்கு உணர்ந்தமையின், ஈங்கு ஏகுமார் உளேனே.

*- மதுரைக் காஞ்சிப் புலவன்*

## 73. கனிந்த காதலும் கலங்கிய நெஞ்சும்

"ஐயோ பாவம்! வந்து வந்து போனான். ஒரு நாளா? இரண்டு நாளா? எத்தனையோ நாள்! என்ன பணிவு! என்ன பணிவு! எவ்வளவு நயமான பேச்சு!. . . . . ."

"இப்போ என்ன ஆச்சு?"

"ஆவது என்ன? நாம் காதில் போட்டுக் கொள்ள வில்லை. போய்விட்டான். மலைத்தேன் கேட்பாரற்றுக் கீழே வழிவது போல."

"பாவம்! இப்போது எங்கேயிருக்கிறானோ?"

"ஏன்?"

"என் நெஞ்சு கலங்குகிறது."

"காரணம்?"

"இவ்வளவு அன்பாக வந்தவனை ஆதரியாமல் புறக் கணித்தோமே. அவன் என்ன ஆயினானோ தெரியவில்லையே என்று."

ஒரு நாள் வாரலன்; இரு நாள் வாரலன்;
பல் நாள் வந்து, பணிமொழி பயிற்றி, என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை,
வரை முதிர் தேனின் போகியோனே
ஆசு ஆகு எந்தை - யாண்டு உளன்கொல்லோ?
வேறு புலன் புலன் நல் நாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலிழும், என் நெஞ்சே.

*- வருமுலையாரித்தி*

## 74. அடலும் மடலும்

"எவ்வளவு சொன்னாலும் கேட்க மறுக்கிறாளே! நெஞ்சு இரங்கவில்லையே! இதற்கு என்ன செய்வேன். அவள்தான் அப்படி என்றால் அவளது தோழியும் அதற்குமேல் இருக்கிறாள். அவளிடம் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? இணங்கும்படி செய்யக் கூடாதா?"

"இதற்கு வேறு வழிதான் என்ன? வழி ஒன்றே ஒன்றுதான்; மடல் ஏறுவதுதான். பனங் கருக்கினாலே குதிரை செய்து மாலை அணிந்து, மணி பூட்டி, அதன்மீது ஏறி வெட்கத்தை விட்டு எல்லாரும் எள்ளி நகைக்க வருவதுதான்."

விழுத் தலைப் பெண்ணை விளையல் மா மடல்
மணி அணி பெருந்தார் மரபிற் பூட்டி,
வெள் என்பு அணிந்து, பிறர் எள்ளத் தோன்றி,
ஒரு நாள் மருங்கில் பெரு நாண் நீங்கி,
தெருவின் இயலவும் தருவது கொல்லோ
கலிழ் கவின் அசைநடைப் பேதை
மெலிந்திலள்; நாம் விடற்கு அமைந்த தூதே?

*- மடல் பாடிய மாதங்கீரன்*



## 75. நேரமும் ஆயிற்று, நாய்களும் இளைத்தன

செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண் ஒருத்தி. பருவம் வரப் பெற்றவள். கண்டவர் காமுறும் காரிகை. அருவிக் கரையிலே ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறாள் தன் தோழியுடன்.

அங்கே வந்தான் ஓர் இளைஞன்; மலைநாட்டுச் செல்வன், அவளைக் கண்டான். காதல் கொணடான். அவளும் அவன் மீது காதல் கொண்டாள். இருவரும் இன்பப் பொழுது போக்கினர். இன்பம்! இன்பம்! இன்பம்! அந்த இன்பத்திலே பொழுது போனதுகூடத் தெரியவில்லை. பொழுது மங்கியது.

புறப்பட்டான் அவன். அவனைப் பிரிய மனம் வரவில்லை அவளுக்கு.

"பொழுது போய்விட்ட நேரம்" என்றாள்.

"ஆமாம். நாள் முழுதும் வேட்டையாடி அலுத்திருக்கிறாய். உனது நாய்களும் இளைத்தன. இப்போது ஏன் போக வேண்டும்? போக வேண்டாம். அதோ தெரிகிறதே. அந்த மலைக்கு அருகிலே மூங்கில் தெரிகிறதே. அதுதான் எங்கள் ஊர். அங்கே வா. போகலாம். இரவு தங்கிப் பகலில் போகலாம்." என்றாள்.

கரும்பு தின்னக் கூலியா?

கல்லென் கானத்துக் கடமா ஆட்டி,
எல்லும் எல்லின்று; ஞமலியும் இளைத்தன;
செல்லல் - ஐஇய! - உது எம் ஊரே;
ஓங்குவரை அடுக்கத்துத் தீம் தேன் கிழித்த
குவையுடைப் பசுங் கழை தின்ற கய வாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடையதுவே. *- குட்டுவன் கண்ணன்*

## 76. அறியாத அவலம்

"பொருள் தேடி வருவேன்" என்று சொல்லிப் போனான் அவன். 'வருவான் வருவான்' என்று எதிர் பார்த்துக் கொண்டேயிருந்தாள் அவள். நீண்டகாலம் சென்றது. அவளால் தாங்குவதற்கு இயலவில்லை; வருந்தினாள். அது கண்டாள் தோழி. சாமர்த்தியம்

இருந்தால்தானே! கெட்டிக் காரனாக இருந்தால் விரைவில் பொருள் தேடி வந்திருப்பானே!" என்றாள்.

கேட்டாள் அவள். கொஞ்சம் 'ரோஷம்' வந்தது அவளுக்கு.

"அப்படி ஒன்றுமில்லை. அவர் கெட்டிக்காரர்தான். சாமர்த்தியசாலி. கலங்காத நெஞ்சு கொண்டவர். அதை அறியாமல் வருந்திய குறை எனதுதான்" என்றாள் அவள்.

செவ் வரைச் சேக்கை வருடைமான் மறி
சுரை பொழி தீம் பால் ஆர மாந்தி,
பெரு வரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன் - தோழி!
வலியன் என்னாது மெலியும், என் நெஞ்சே.

*- கபிலர்*

## 77. வருந்தும் மருந்தும்

"உன் காதலன்தான் இரவு வந்து போகிறானே! பிறகு என்ன? ஏன் இப்படி மெலிந்து போகிறாய்? நெற்றி பசலை பாய்ந்து விட்டது. தோள்கள் நெகிழ்ந்து விட்டன. என்ன காரணம்?" என்றாள் தோழி.

"அதை ஏன் என்னிடம் கேட்கிறாய்? அவரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன?" என்றாள் அவள்.

இரவு நேரத்திலே அவன் வருகிறான். ஆனந்தமாயிருக்கிறாள். திரும்பிச் செல்கிறான். போகிற வழி ஆபத்தானது. அதை நினைத்து வருந்துகிறாள்.

'நுதல் பசப்பு இவர்ந்து, திதலை வாடி,
நெடு மென் பணைத் தோள் சாஅய், தொடிநெகிழ்ந்து
இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும்' எனச்
சொல்லின், எவன் ஆம் - தோழி! பல் வரிப்
பாம்பு பை அவிந்தது போலக் கூம்பி,
கொண்டலின் தொலைந்த ஒண் செங் காந்தள்
கல்மிசைக் கவியும் நாடற்கு, என்
நல் மா மேனி அழி படர் நிலையே?

*- மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.*



## 78. 'போகிறேன்' என்றாள்; புலம்பினான்

தினைப்புனத்திலே காவல் புரிகிறாள் அவள். வந்து போகிறான் அவன். இன்பமான பொழுது போக்கு.

தினை அறுவடை ஆயிற்று. "இனி அங்கே என்ன வேலை? வீட்டுக்கு வரச் சொல்" என்று உத்தரவிட்டாள் தாய்.

"காவல் முடிந்தது. நாளைக்கு வீடு செல்கிறோம்" என்றாள் தோழி. கேட்டான் அவன். இடிந்து போனான்.

"போகிறீர்களா?" என்றான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. மனசு எப்படியோ ஆயிற்று. துக்கம் வந்தது. பெரிய நிதி இழந்தவன் போல விம்மினான்; வெய்துயிர்த்தான்.

"ஏன்? என்ன?" என்றாள் அவள்.

"ஒன்றுமில்லை" என்று பெருமூச்சு விட்டான்.

"இனிமேல் இவளை எங்கே சந்திக்க இயலும்? இந்த ஜென்மத்தில் இல்லை. இல்லாவிட்டாலும் போகிறது. அடுத்த ஜென்மத்திலாவது இவளையே காதலியாகப் பெறுவேன். உறுதி! அஞ்சாதே நெஞ்சே!" என்றான்.

பெறுவது இயையாது ஆயினும், உறுவது ஒன்று
உண்டுமன் வாழிய - நெஞ்சே! - திண் தேர்க்
கை வள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மை ஈர் ஓதி மாஅயோள்வயின்,
இன்றை அன்ன நட்பின் இந் நோய்
இறு முறை என ஒன்று இன்றி,
மறுமை உலகத்து மன்னுதல் பெறினே. *- பரணர்*

## 79. வருவாய் அங்கே!

"நாளை முதல் நாங்கள் தினைப்புனங்காக்கப் போகின்றோம்" என்றாள் தோழி.

"அப்படியா!" என்று கேட்டு நின்றான் அவன். இதுவரை வீட்டுக்கு வந்து அவளுடன் இன்பமாக இருந்தான். இனி அதற்கு வழியில்லை; ஏங்கினான்.

தோழிக்கு மறுபடியும் சந்தேகம். வீட்டுக்கு வரப் போகிறானே என்று.

"இனி இங்கு வரவேண்டாம்" என்றாள்.

"ஏன்?" என்றான்.

"எங்கள் தாய் இங்கே வருவாள். ஆதலின் வராதே."

"அப்படியானால் எங்கே?" என்று கேட்டு இழுத்தான்.

"அங்கே" என்றாள். அதாவது தினைப்புனத்துக்கு வரலாம் என்று பொருள்.

யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்
கரும்பு மருள் முதல பைந் தாட் செந் தினை
மடப் பிடித் தடக்கை அன்ன பால் வார்பு,
கரிக் குறட்டு இறைஞ்சிய செறிக் கோட் பைங்குரல்
படுகிளி கடிகம் சேறும்; அடுப்போர்
எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை,
வாரற்கதில்ல; வருகுவள் யாயே.

- கபிலர்

## 80. அமுதமும் அயல் வீட்டுப் பெண்ணும்

"மலை நாட்டிலே மா மரங்கள் பழம் தந்து நிற்கின்றன. அந்த இனிய மாம்பழங்களை உண்டு களிக்கின்றன வௌவால்கள்.

பக்கத்திலே நெல்லி மரங்கள் காய்த்து நிற்கின்றன. புளிப்பான அந்த நெல்லிக் காய்களையும் விடவில்லை அந்த வௌவால்கள்; தின்கின்றன. பிறகு முள்ளின்றி வளர்ந்து ஓங்கிய மூங்கில் தோப்பிலே தலைகீழாகத் தொங்குகின்றன.

இத்தகைய மலைநாட்டு இளைஞன். ஒருத்தியைக் காதலித்தான். "விரைவில் வந்து மணந்து செல்வேன்" என்றான்; போனான். பொருள் சம்பாதிக்க.

அவளோ பருவம் வந்த பெண். அவனையே நினைத்து நினைத்து ஏங்கினாள்.



"வீட்டைவிட்டு வெளியே வராதே" என்று கட்டுப்பாடு செய்துவிட்டார்கள். என்ன செய்வாள் பாவம்! உள்ளேயே கிடந்து புழுங்கினாள்; துடித்தாள்.

அயல் வீட்டிலே ஒரு பெண். கண்டாள். பருவத்தின் நிலை காரணமாக அவள் படும் அவதி கண்டு மனம் இரங்கினாள்; இதமான மொழி பேசினாள். 'வருந்தாதே' என்றாள். அன்பான வார்த்தைகள் கூறினாள்.

வெளியூர் சென்ற அவன் வந்தான்; வரிசை கொண்டு. மணம் பேச. கண்டாள் அயல் வீட்டுப் பெண்.

"அடியே! வந்து விட்டானடி உன் காதலன். அதோ பார்! வந்து விட்டான். மணம் பேச வந்துவிட்டான்" என்றாள்.

வீட்டுக்குள்ளே கிடந்து புழுங்கிய அவள் கேட்டாள். மகிழ்ச்சியால் துள்ளினாள்.

"அயல் வீட்டுப் பெண்ணே! நீ வாழ்க! அமுதம் உண்டு வாழ்க! என்றும் வாழ்க!" என்று வாழ்த்தினாள்.

அமிழ்தம் உண்க - நம் அயல் இலாட்டி,
பால் கலப்பன்ன தேக் கொக்கு அருந்துபு,
நீல மென் சிறை வள் உகிர்ப் பறவை
நெல்லிஅம் புளி மாந்தி, அயலது
முள் இல் அம் பணை மூங்கிலில் தூங்கும்
கழை நிவந்து ஓங்கிய சோலை
மலை கெழு நாடனை வரும் என்றோளே!

- கபிலர்

## 81. முரட்டுக் காதலும் கிழட்டுப் பசுவும்

"என்னப்பா இது? ஏன் இப்படி யிருக்கிறாய்?" என்று கேட்டான் நண்பன்.

"ஒன்றுமில்லை. மனசை என்னவோ செய்கிறது" என்றான் அவன்.

"என்ன செய்கிறது?"

"என்னவோ, மனம் குழையுது. அழவேண்டும் போல் இருக்கு."

"ஏன் அப்படி?"

"உன்னிடம் சொல்வதற்கென்ன? எல்லாம் அந்தப் பெண்மீது கொண்ட காதல்தான்."

"காதலா! அட போடா பயித்தியக்காரா! வீணாக மனதை அலைய விடாதே!."

"என்ன அப்படி ஒரே போடு போடுகிறாய்?"

"காதல் என்பது என்ன? சொல் பார்க்கலாம்."

"அது நோய்."

"அப்படி ஒன்றுமில்லை."

"வருத்தும் நோய்."

"அல்ல."

"பின் என்னவாம்?"

"அப்படிக் கேளு, அது ஒரு விருந்து அப்பா விருந்து!"

"அதென்ன விருந்து?"

"அதோ பார்! அந்த மேட்டு நிலத்திலே பசுமையான புல் வளர்ந்திருக்கிறது. அங்கே ஒரு பசு மேய்கிறது பார்! அந்தக் கிழட்டுப் பசுவுக்குப் பல்லிலே வலு உண்டா? புல்லைக் கடிக்க முடியுமா? முடியாது. பின் என்ன செய்கிறது? நாவினால் நக்கி நக்கி இன்பமடைகிறது. புல் தின்ற இன்பம். விருந்துண்ட இன்பம். இந்த மாதிரி இன்பம் தருவதுதான் காதல்!"

"அப்படியானால் நீ என்ன சொல்கிறாய்? நினைக்க நினைக்க இன்பம் தரவேண்டும். தொட்டுப் பார்த்தால் இன்பம்! அதுதான் காதல்! என்கிறாயா?"

"ஆமாம்! ஆமாம்!"

"அப்படியானால் துன்பந் தருவது?"

"காதல் அல்ல!"



'காமம் காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
முதைச் சுவற் கலித்த முற்றா இளம் புல்
மூதா தை வந்தாங்கு
விருந்தே காமம் - பெருந்தோளோயே!

*- மிளைப் பெருங் கந்தன்*

### 82. பெண்ணைப் பார்க்காதே! கண்ணைக் காட்டாதே!

செல்வர் வீட்டு இளைஞன். கட்டழகி ஒருத்தி மீது காதல் கொண்டான்; கருத்து அழிந்தான்; உளம் பறி கொடுத்தான்; அவளையே எண்ணி எண்ணி ஏங்கினான்.

கண்டான் அவனுடைய தோழன். கண்டித்தான். கேட்டான் அவன். என்ன சொன்னான்?

"ஆமாம் ஆமாம்! தெரியாத்தனமாக இதிலே சிக்கி விட்டேன். அவளது இனிய மொழியும் இன்பப் பார்வையும் என்னை வாட்டு கின்றன. வருத்துகின்றன. நீ மிகுந்த புத்தி சாலி பார்! இந்த மாதிரி பெண் எவளாவது வந்தால் அந்தப் பக்கம் கூடப் பார்க்காதே. ஓடிப் போய்விடு. தெரிந்ததா?" என்றான்.

அமிழ்தத் தன்ன அம் தீம் கிளவி.
அன்ன இனியோள் குணனும், இன்ன
இன்னா அரும் படர் செய்யும்ஆயின்,
உடன் உறைவு அரிதே காமம்;
குறுகல் ஓம்புமின், அறிவுடையீரே!

*- ஐயூர் முடவன்*

### 83. வேழமும் வேங்கையும்

"மலை நாட்டிலே உள்ள யானைகள் என்ன செய்கின்றன? தமக்குள் சண்டையிடுகின்றன. அவ்விதம் சண்டை நிகழும் போது வேங்கை மரத்தின்மீது மோதுகின்றன. வேழம் மோதிய வேங்கை என்னாகிறது? சிறிது சாய்கிறது. அடியோடு பெயர்ந்து விழ வில்லை.

சாய்ந்த வேங்கை மரத்தின் மலர்களைப் பெண்கள் பறித்துத் தலையில் சூடிக் கொள்கிறார்கள். மரத்தின்மீது ஏறாது, மண்ணில் நின்றவாறே மலர் கொய்கிறார்கள்.

இத்தகைய மலைநாட்டு இளைஞன் ஒருவன் வெளியூர் சென்றிருக்கிறான். வர நாள் பிடிக்கிறது. வருந்துகிறாள் அவனது காதலி.

"இன்னும் வரவில்லை பார்" என்று கோபிக்கிறாள்.

"எதற்காகக் கோபிக்கிறாய்? உன் பொருட்டுத்தானே அவன் வெளியூர் போயிருக்கிறான். அதையறிந்து மனம் வருந்தாமல் இருக்க வேண்டாமா?" என்றாள் தோழி.

"நீ சொல்வது சரி. அவனிடம் எனக்கு அன்புதான்; ஆசைதான்."

"அப்புறம் என்ன?"

"ஒன்றே ஒன்று."

"என்ன?"

"யார் யாரோ வந்து பெண் கேட்கிறார்களே! அதற்கு இடம் கொடுத்து விட்டாரே! இன்னும் வராதிருக்கிறாரே! அதை நினைக்கும்போதுதான். அவர்மீது கோபம் வருகிறது."

"ஒன்றும் பயப்படாதே! யானையும் யானையும் சண்டையிட்டு மோதும்போது வேங்கை சரிகிறது. சிரமமின்றி மங்கையர் மலர் கொய்யவில்லையா?"

"கொய்கிறார்கள். அதற்கென்ன?"

"அந்த மாதிரி, உற்றாரும், பெற்றாரும், மற்றையோரும் உன் பொருட்டு மண்டையை உடைத்துக் கொள்ளட்டுமே! உன் காதலன் உன்பால் வணங்கி அன்புடன் வருவான். ஆசையுடன் வருவான். சிரமமின்றி ஒரு காரியம் செய்துவிடேன்."

"என்ன அது?"

அவனோடு போய்விடு.



"அதைத்தான் நானும் உனக்குக் குறிப்பாகச் சொன்னேன். ஒன்றுவேன் ஒன்றுவேன் என்றேனே! அதன் பொருள் என்ன? நானும் அவனும் ஒருமனப்பட்டுச் சதி செய்து ஓடிவிடுவோம்."

ஒன்றேன் அல்லேன்; ஒன்றுவென்; குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்,
நின்று கொய மலரும் நாடனொடு
ஒன்றேன் - தோழி! ஒன்றி னானே — *கபிலர்*

## 84. கையுறை கொடுத்த காதலன்

பருவம் வந்த பெண் ஒருத்தி. காதல் நோயால் வாடுகிறாள். அவளது வாட்டம் கண்டாள் தாய். 'என்னவோ தெரியவில்லையே! என்று கவலை கொண்டாள்.'

"பூசாரியை வரச் சொல்லு பூசை போட்டுக் கேட்போம்" என்றாள்.

"சரி" என்றார்கள். அரளிப் பூவைக் கொண்டு வந்தார்கள், மாலை தொடுக்க.

"ஆமாம், அரளி மலர் பறித்து வந்தீர்களே! அங்கே அசோகு தழையின்றி நிற்கிறதே! அதைப் பார்த்தீர்களா?" என்றாள் தோழி.

"பார்த்தோம். அதற்கென்ன?"

"என்னவா? தழை எங்கே?"

"எங்கே? என்றாள் தாய்."

"அதைப் பறித்து உன் மகள் இடுப்பிலே கட்டி விட்டான் ஓர் இளைஞன். இது தெரியாமல் ஏன் பூசை போடுகிறீர்கள்?" என்றாள்.

மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ்
அம் சில் ஓதி, அசை இயல், கொடிச்சி
திருந்து இழை அல்குற்குப் பெருந் தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய, அயலது
அரலை மாலை சூட்டி,
ஏமுற்றன்று - இவ் அழுங்கல் ஊரே. — *கூடலூர் கிழார்*

## 85. ஓடவா? வாடவா?

தினைப்புனத்திலே காவல் புரிந்தாள் அவள். அப்போது வந்தான் அவன். பகல் நேரம் முழுதும் இன்பமாகப் பொழுது போக்கினான்; போனான்.

காவல் முடிந்தது. வீட்டுக்கு வந்தாள் அவள். அவனும் இரவு நேரத்திலே வரத் தலைப்பட்டான். இப்படிக் கொஞ்ச காலம் நடந்தது.

இப்படி அவன் இரவு நேரத்திலே வருவது அவளுக்கு மிக அச்சம் அளித்தது. காரணம் என்ன? அவன் வரும் வழி அப்படிப் பட்டது; பயங்கரமானது.

"இனிமேல் இரவு வராதே" என்றாள் தோழி.

"பகலிலும் பார்க்க முடியவில்லை. இரவும் வராதே என்கிறாய். நான் என்னதான் செய்வேன்?" என்றான்.

"வேறு வழி?"

"வழி இருக்கிறது."

"என்ன வழி?"

"ஒரே வழிதான்" என்றான், பெருமூச்சு விட்டான். அவள் அறிந்தாள்.

"சரி. அப்படியே செய்யலாம். அதுவே அறிவுடைமை. ஆனால் ஊரார் பழி சொல்வார்கள்."

"பழிக்கு அஞ்சி, அறிவுடைய செயலைக் கைவிடலாமா?"

"சரி. அவளிடம் சொல்கிறேன். சம்மதித்தால் இருவரும் இன்று இரவே ஓடிப் போங்கள். நான் வேண்டாம் என்றா சொல்வேன்" என்றாள்.

அவனது காதலியிடம் சென்றாள்; விஷயத்தைச் சொன்னாள்.

அப்புறம் என்ன? அவள் 'முடியாது' என்றா சொல்வாள்?



'தினை கிளி கடிதலின், பகலும் ஒல்லும்;
இரவு நீ வருதலின், ஊறும் அஞ்சுவல்;
யாங்குச் செய்வாம், எம் இடும்பை நோய்க்கு?' என
ஆங்கு யான் கூறிய அனைத்திற்குப் பிறிது செத்து,
ஓங்கு மலைநாடன் உயிர்த்தோன் மன்ற;
ஐதேய் கம்ம யானே;
கழி முதுக்குறைமையும் பழியும் என்றிசினே.

*- தங்கால் முடக்கொல்லனார்*

## 86. நீராடிய பெண்ணும் போராடிய கண்ணும்

அருவியிலே நீந்தி விளையாடுகிறார்கள் இரண்டு பெண்கள். அப்படி ஒன்றும் வயதானவர்கள் அல்லர். இளம் பெண்களே. அப்போதுதான் பருவம் வரப் பெற்றவர்கள். நீரிலே குதிக்கிறார்கள்; நீந்துகிறார்கள். ஒருவர் மேல் மற்றொருவர் நீரை வாரி இறைக் கிறார்கள்; ஓடுகிறார்கள். ஓடி வருகிறார்கள். பொத்தென்று நீரிலே குதிக்கிறார்கள். வாழை மரங்கள் அருவி நீரிலே மிதந்து வருகின்றன. அவற்றைப் பற்றி நீந்துகிறார்கள்.

இந்தச் சமயத்திலே வந்தான் ஓர் இளைஞன், இவர்களைப் பார்த்தான். பார்த்தபடியே நின்றுவிட்டான்.

"ஒருத்தி வாழையின் நுனி பற்றி நீந்தினால் மற்றொருத்தியும் அப்படியே நீந்துகிறாள். அவள் அடி பற்றினால் இவளும் அப்படியே பற்றுகிறாளே! அவள் ஆற்றுடன் நீரில் மிதந்து போனால் இவளும் போவாளோ?" என்று சொல்லிக் கொண்டே நின்றான்.

நீண்ட நேரம் நீரில் நீந்தியதால் கண்கள் சிவந்தன.

"மாரிக் காலத்தில் மலரும் பிச்சிப் பூ மாதிரி கண்கள் சிவந்து விட்டனவே!" என்றான்.

அவ்விருவரும் கரை சேர்ந்தனர். குளித்துவிட்டு வரும் அவர் தம் மேனி கண்டான்.

"என்ன அழகான மேனி. மழைக்குப் பின் தளிர்விட்டது மாதிரியல்லவா இருக்கிறது" என்றான்.

தலைப் புணைக் கொளினே, தலைப் புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்;
புணை கைவிட்டுப் புனலோடு ஒழுகின்,
ஆண்டும் வருகுவள் போலும் - மாண்ட
மாரிப் பித்திகத்து நீர் வார் கொழுமுகைச்
செவ் வெரிந் உறழும் கொழுங் கடைமழைக்கண்
துளி தலைத் தலைஇய தளிர் அன்னோளே.

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 87. பேரூர் விழாவும் பெண்ணின் மனமும்

பேரூர் ஒன்றிலே திருவிழா நடக்கிறது. அக்கம் பக்கத்திலே உள்ள சிற்றூர் மக்கள் கூடியிருக்கிறார்கள். ஆடல், பாடல், வேடிக்கை, விளையாட்டு எல்லாம் நடக்கின்றன. ஒரே ஆரவாரம்.

“திருவிழாவுக்குப் போய் வருவமா?” என்று கேட்டாள் தோழி.

“நான் வரமாட்டேன்” என்றாள் அவள்.

“சும்மா வாடி, போய் வரலாம்” என்று வற்புறுத்தினாள் தோழி. அப்பொழுதும் அவள் அசையவில்லை.

“வா, வா” என்று பல முறை வற்புறுத்தினாள்.

“சரி” என்றாள்; அவளோ பருவம் வந்தவள். பக்குவ மடைந்த பெண். இருவரும் தயாராயினர்; புறப்பட்டனர். புறப்பட்டபோது நல்ல நிமித்தங்கள் தோன்றின. நல்ல சகுனம் ஏற்பட்டது; பெரியவர்கள் வாயிலிருந்து மங்கலச் சொற்கள் வந்தன.

இருவரும் சென்றார்கள் திருவிழாவுக்கு. அங்கே துணங்கைக் கூத்து நடந்து கொண்டிருந்தது. இவளும் போய் நின்றாள். கட்டழகன் ஒருவன் வந்தான்; கண்டான்; கை கோத்தான். இருவரும் துணங்கை யாடினர்; பிறகு என்ன? கண்ணோடு கண் பேசிற்று. உள்ளமும் உடலும் ஒன்றின. இன்பம்! இன்பம்!

பிறகு பல நாட்கள் இருவரும் சந்தித்தனர் இரகசியமாக; இன்பம் துய்த்தனர்.

“கலியாணம் எப்பொழுது?” என்றாள் அவள்.



“போய் வருகிறேன்” என்றான்.

“எதற்கு?” என்றாள்.

“பொருள் கொண்டு வர” என்றான்.

“சரி. சீக்கிரம் வா.”

“நொடியில் வருவேன்.”

போனான். நாட்கள் பல சென்றன. வரவேயில்லை. வருந்தினாள் அவள். கண்டாள் அவள் தோழி. வருத்தம் போக்க முயன்றாள். ஏதேதோ சொன்னாள். ஏதும் பலன் தரவில்லை.

“வேடிக்கையாக எங்கேயாவது போய் வரலாம் வா! என்றாள்.

“எங்கே போகலாம்?”

“பேரூருக்கு.”

“என்ன அங்கே?”

“திருவிழா!”

பேரூர் என்ற பெயர் கேட்டாள். திருவிழா என்றும் சொல்லக் கேட்டாள். கேட்டதும் அவள் மனம் குழம்பியது. என்னவோ செய்தது. பழைய நினைவுகள் கண்முன் தோன்றின.

அன்று ஒரு நாள் தோழி அழைத்ததும், அவள் சென்றதும் அவனைக் கண்டதும், காதல் கொண்டதும், துணங்கைக் கூத்து ஆடியதும் எல்லாம் நினைவுக்கு வந்தன; மனம் துடித்தது.

“போதுமடி போதும்” என்று சீறினாள்.

“ஏன் கோபிக்கிறாய்?” என்று கேட்டாள் தோழி.

“அன்றும் இப்படித்தான் செய்தாய்?”

“எப்படிச் செய்தேன்?”

“திருவிழாவுக்கு வா, திருவிழாவுக்கு வா என்று துளைத்தாய். வந்தேன்.”

“அதற்கென்ன?”

"தழையும், தட்டையும், மணியும் தந்தான். உனக்கு இவை என்றான். இன்னும் என்ன என்னவோ சொன்னான்."

"என்ன சொன்னான்?"

"இல்லாதன எல்லாம் சொன்னான்! எனது பெண்மை நலத்தை உரிந்தான்; போயிற்று; வருந்துகிறேன். இன்னும் எதற்காக என்னை அழைக்கிறாய்?" என்றாள்.

'பேர் ஊர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம்' என்றி; அன்று, இவண்
நல்லோர் நல்ல பலவால் தில்ல;
தழலும் தட்டையும் முறியும் தந்து, 'இவை
ஒத்தன நினக்கு' எனப் பொய்த்தன கூறி,
அன்னை ஓம்பிய ஆய் நலம்
என்னை கொண்டான்; யாம் இன்னமால் இனியே.

*- மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்*

## 88. தேடிப் போ! நாடி வா!

பெண் யானை வருகிறது. அதன் பின்னே சிறு குட்டியும் வருகிறது. யானை என்ன செய்கிறது! வீட்டிற்கு முன்புறத் தோட்டத்தில் உள்ள தினையை உண்டு பசியாறுகிறது. அதே நேரத்தில் குட்டியானை என்ன செய்கிறது? தாய் யானையிடம் பால் குடித்துப் பசியாறுகிறது.

இத்தகைய காட்சியை மலை நாட்டிலே காணலாம். இதைச் சுட்டிக் காட்டினாள் தோழி. யாருக்கு? அந்த இளைஞனுக்கு. ஏன்? அவன் பொருள் தேடிப் போகிறான்; அதனால்.

"பெண் யானையானது தன் பசியை மாத்திரமா ஆற்றிக் கொள்கிறது? இல்லை. அதே நேரத்தில் அன்பு சுரந்து தன் கன்றுக்கும் பால் கொடுக்கிறது. அதே போல் நீயும் என்ன செய்ய வேண்டும்? பொருள் தேடும் கருத்து முற்றுப் பெற்றதும் தலைவியின் பால் அன்பு சுரந்து இன்பந்தர வருவாய்" என்று குறிப்பிட்டாள். மேலும் சொல்கிறாள்;

"வறுமையில் வாடினான் ஒருவன். அவனுக்கு உதவினர் சிலர். காலம் சென்றது; நிலை மாறியது வறியவனுக்கு. அரசு



கட்டில் ஏறினான். மன்னனாக முடி சூடினான். ஆனால் அவன் வறியனாயிருந்த போது தனக்கு உதவியவரை மறந்தான். நன்றி கொன்றான்."

"நீ அவனைப் பின்பற்றாதே. இவள் உனக்கு இன்பம் தந்தவள். பெறுதற்கரிய தனது பெண்மை நலனை உனக்கு அளித்தவள். இவளை மறவாதே; உனக்கு உரியவளாகச் செய்து கொள்."

கன்று தன் பய முலை மாந்த, முன்றில்
தினை பிடி உண்ணும் பெருங் கல்நாட!
கெட்ட இடத்து உவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்து அமையாய் ஆயின், மென் சீர்க்
கலி மயிற் கலாவத்தன்ன இவள்
ஒலி மென் கூந்தல் உரியவால் நினக்கே.

*- கபிலர்*

## 89. அலரும் மலரும்

பருவம் வந்த பெண் அவள். எனவே, வீட்டுக்குள் சிறை வைத்து விட்டார்கள் அவளை. அந்த வீட்டின் வேலிக்கு வெளியே வந்து நிற்கிறான் அவளது காதலன். அவளைப் பார்க்க நினைத்து.

பார்ப்பது எப்படி? இயலாது. பார்க்கவே முடியாது என்றால் பேச முடியுமா? அதுவும் முடியாது. என்ன செய்வது?

ஆனால் அவன் வந்திருக்கிறான் என்பதை அவள் அறிந்தாள். அவனிடம் சேதி சொல்ல வேண்டும். தான் படும் துன்பத்தைத் தெரிவிக்க வேண்டும். "இந்தச் சிறையிலிருந்து எப்படியாவது என்னை மீட்டுச் செல்" என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது அவளுக்கு; பேசினால் காது கேட்கும்; குரல் கேட்டு அறிந்து கொள்வான். எனவே அவள் சொல்கிறாள் தோழியிடம்.

"எனது தோள்கள் மெலிந்தன. வளைகள் கழன்றன. அவரை எண்ணி, எண்ணி ஏங்குகிறேன். எனது அழகும் போச்சு. எனது நாணமோ அன்றே போயிற்று!" என்றாள்.

"என்றே போயிற்று?"

"என்றைய தினம் அவன் என்மேனி தொட்டானோ அன்றே என் நாணத்தை விட்டேன்."

"இனி என்ன எஞ்சியிருக்கிறது?"

"உயிர் ஒன்றுதான்."

"ஊரார் பேசும் வம்பு?"

"அதற்குக் குறைவே இல்லை. ஊர் முழுதும் வம்புதான். காரணம் யார்? அவர்தான். மொட்டாக இருக்கும் மலரை எப்படித் தும்பி அலராக்கி விடுகிறதோ அப்படிச் செய்து விட்டார். முகராத முல்லையாகிய என்னை முகர்ந்து, என் அகம் மலரச் செய்து, ஊரார் வம்பு பேச இடமும் தந்து விட்டார்."

தொடி நெகிழ்ந்தனவே; தோள் சாயினவே;
வீடும் நாண் உண்டோ? - தோழி! விடர்முகைச்
சிலம்புடன் கமழும் அலங்கு குலைக் காந்தள்
நறுந் தாது ஊதும் குறுஞ் சிறைத் தும்பி
பாம்பு உமிழ் மணியின் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழவோற்கே.

*- ஆசிரியன் பெருங்கண்ணன்*

## 90. தாயின் அணைப்பும் தோகையின் தவிப்பும்

இரவு நேரம். எல்லாரும் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். வருகிறான் அவன், தன் காதலியைத் தேடி. யானை வருவது போல வருகிறான். வந்து என்ன செய்கிறான்? கதவைத் தட்டுகிறான் மெதுவாக.

கேட்டாள் அவள். 'உம்' என்று குரல் கொடுத்தாள். குரல் கேட்டாள் தாய்.

"என்னடி முனகுகிறாய்?" என்று சொல்லி இறுகக் கட்டி அணைத்தபடியே அயர்ந்தாள்.

பாவம் என்ன செய்வாள் அந்தப் பெண்! வெளியிலே காதலன் வந்து காத்திருக்கிறான். உள்ளே இருக்கிறாள் அவள்; விழித்திருக்கிறாள். ஆனால் வெளியே செல்ல முடியவில்லை.



தாயின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். எப்படி வெளியே செல்ல முடியும்?

வலையிலே அகப்பட்ட மயில் என்ன செய்யும்? கொண்டையையும் தோகையையும் முறுக்கிக்கொண்டு கிடக்கும். அந்த மாதிரி கிடந்தாள் அவள்.

வெளியே காத்திருந்தவன் என்ன செய்தான். நீண்ட நேரம் காத்திருந்து பார்த்தான். பேர்வழி வெளியே வரக் காணோம். போய் விட்டான். மறு நாள் அவனைப் பார்த்தாள் தோழி. இரவு நடந்ததைச் சொல்கிறாள்.

பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து,
உரவுக் களிறுபோல் வந்து, இரவுக் கதவு முயறல்
கேளேம் அல்லேம்; கேட்டனெம் - பெரும! -
ஓரி முருங்கப் பீலி சாய
நல் மயில் வலைப் பட்டாங்கு, யாம்
உயங்குதொறும் முயங்கும், அறன் இல் யாயே.

***- கண்ணன்***

## 91. கண்ணும் கண்ணீரும்

வேங்கை மரம் பூத்து நிற்கிறது. கண்டார்கள் பெண்கள். 'புலி புலி' என்று கூச்சலிட்டார்கள்.

இந்தக் கூச்சல் கேட்டு ஓடி வந்தான் ஓர் இளைஞன், எங்கே புலி? எங்கே புலி? என்று கேட்டான். எல்லாரும் நழுவினர். ஒருத்தி மாத்திரம் நின்றாள். அவனது கட்டழகிலே மயங்கி. அவனோ அவளது கண் பார்வையிலே மயங்கினான். மயக்கம் என்ன செய்தது? மன்மதனை அம்பு தொடுக்கச் செய்தது. காதல் முகிழ்த்தது. கட்டி அணைத்தான். இன்பமாக இருந்தான். இப்படிப் பல நாள். ஊர் சென்றான். சென்றவனை எண்ணி ஏங்கினாள் அவள்.

அப்போது சிறுவர்கள் கன்றுகளை ஓட்டிச் சென்றார்கள். வழியிலே வேங்கை மரத்தைக் கண்டார்கள். வேடிக்கையாகப் 'புலி புலி' என்றார்கள்.

"புலி புலி" என்ற குரல் கேட்டதும் வெளியே வந்தாள்; என்ன என்று பார்த்தாள். சிறுவர்களின் கூச்சல் என்று கண்டாள்.

*ஆனால் அவளது எண்ணம் எங்கு சென்றது? அன்று, தானும் பிற பெண்களும் 'புலி புலி' என்று கூவிய நிகழ்ச்சி மீது சென்றது. அது கேட்டுத்தானே அவன் வந்தான்! காதல் உண்டாயிற்று! அதை நினைத்தாள். இப்போது அவன் இல்லை. இதையும் நினைத்தாள். கண்கள் நீர் சொரிந்தன.*

*"ஏன் அழுகிறாய்?" என்றாள் தோழி.*

*"நானா அழுதேன்; என் கண் அல்லவா?" என்றாள் அவள்.*

யாம் எம் காமம் தாங்கவும், தாம்தம்
கெழுதகைமையின் அழுதன - தோழி!
கன்று ஆற்றுப்படுத்த புன் தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர் பதம் நோக்கி,
ஏறாது இட்ட ஏமப் பூசல்
விண் தோய் விடரகத்து இயம்பும்
குன்ற நாடர் கண்ட எம் கண்ணே.

*- கபிலர்*

## 92. வரைவும் விரைவும்

*'அவன் வருவானோ? வரைந்து செல்வானோ' என்று ஏங்குகிறாள் அவள். வெளியே வர முடியவில்லை. கட்டும் காவலும் அதிகம். என்ன செய்வாள் பாவம், அவளது நிலையை அவனிடம் எடுத்துக் கூறினாள் தோழி. கேட்டான் அவன். எழுந்தான். 'விரைவில் வருவேன்; வரைந்து செல்வேன்' என்றான். மகிழ்ந்தாள் தோழி. திரும்பினாள். இந்த நல்ல செய்தியை அவளிடம் கூறுகிறாள்;*

எழில் மிக உடையது; ஈங்கு அணிப்படூஉம்;
திறவோர் செய்வினை அறவது ஆகும்;
கிளையுடை மாந்தர்க்குப் புணையுமார் இவ், என
ஆங்கு அறிந்திசினே - தோழி! வேங்கை
வீயா மென் சினை வீ உக, யானை
ஆர்துயில் இயம்பும் நாடன்
மார்பு உரித்து ஆகிய மறு இல் நட்பே.

*- சேந்தம்பூதன்*



## 93. மலையும் மனமும்

*மலைச் சாரலில் மயில் தோகை விரித்து ஆடுகிறது. மழை பொழிகிறது. குளிர் நடுக்குகிறது. குரங்கு தன் குட்டியைக் கட்டிக்கொண்டு குளிரில் நடுங்குகிறது.*

*இத்தகைய மலை நாட்டு இளைஞன் ஒருவன், பொருள் தேடும் பொருட்டு வெளியூர் செல்கிறான்.*

*"போய் வா" என்றாள். வருத்தம் தொனித்தது குரலிலே.*

*"இப்பொழுதே உனது நெற்றி பசலை பாய்ந்து விட்டதே. அவர் வருமளவும் எப்படி ஆற்றியிருப்பாய்?" என்று கேட்டாள் தோழி.*

*"அதோ பார்! அவருடைய மலை. அதைப் பார்! இதோ பார்! எனது நெற்றியை! பழையபடி ஒளியுடனிருக்கிறதல்லவா! இப்படியே அந்த மலையைப் பார்த்துப் பார்த்து ஆற்றியிருப்பேன் மலையைப் பார்க்கும்போது தலைவனையே பார்த்ததாக எண்ணி மகிழ்வேன்" என்றாள்.*

இன மயில் அகவும் மரம் பயில் கானத்து,
நரை முகஊகம் பார்ப்பொடு பனிப்ப,
படு மழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்றம் நோக்கினென் - தோழி!
பண்டையற்றோ, கண்டிசின், நுதலே?

*- கபிலர்*

## 94. காதலும் கனியும்

*"மலை நாட்டிலே பலா காய்த்துத் தொங்குகிறது. மரத்திலும், கிளையிலும் ஒன்றாகத் தொடுத்து வைத்ததுபோல் தொங்குகிறது. இனிய பலா எப்படி மரம் விட்டு நீங்காது எங்கும் காய்த்துத் தொங்குகிறதோ அந்த மாதிரிதான் காதலும் முகிழ்க்கிறது.*

*எனது காதலனைக் கண்ட உடனே காதல் என்ன செய்கிறது? முகிழ்த்து எழுகிறது. இன்பம் தருகிறது. அவன் போன உடன் அது போகிறதா? இல்லை. இருக்கிறது. இருந்து என்னைத் துன்புறுத்து கிறது" என்று சொல்கிறாள் அந்தக் காதலி.*

வேரும் முதலும் கோடும் ஓராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ் தாழ்வு அன்ன வீழ் கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும், வரூஉம்;
ஆகலினும் அகலாதாகி
இகலும் - தோழி! - நம் காமத்துப் பகையே

*- உறையூர்ச் சிறுகந்தன்*

## 95. இரகசியம் அம்பலமாயிற்று!

*கட்டும் காவலும் அதிகமாயின. வீட்டை விட்டு வெளிவர முடியவில்லை. காதலனை நினைத்து நினைத்து வருந்தினாள் அவள்.*

*கண்டாள் தோழி. சென்றாள் தாயிடம். அவளது காதலை மெதுவாக அறிவித்தாள். பிறகு அவளிடம் வந்தாள்.*

*"சொல்லி விட்டேன்" என்றாள் தோழி.*

*"யாரிடத்தில் சொன்னாய்?" என்று கேட்டாள் அவள்,*

*"அம்மாவிடம் சொன்னேன்?"*

*"என்ன சொன்னாய்?"*

*"அன்று நடந்ததைச் சொன்னேன்."*

*"என்ன அது?"*

*"உன் காதலன் வந்தானே அது."*

*"ஏனடி சொன்னாய்?"*

*"பொய் சொல்லி மறைப்பதாலே என்ன பயன்? அதனால் சொன்னேன்."*

*"போடி! உன்னை என்ன செய்ய?"*

*"என்ன வேண்டுமானாலும் செய்? என்ன வேண்டு மானாலும் எண்ணிக் கொள். நான் உனக்கு நல்லதுதான் செய்தேன்."*



மழை சேர்ந்து எழு தரு மாரிக் குன்றத்து,
அருவி ஆர்ந்த தண்நறுங் காந்தள்
முகை அவிழ்ந்து, ஆனா நாறும் நறு நுதல்,
பல் இதழ் மழைக் கண், மா அயோயே!
ஒல்லை ஆயினும், கொல்லை ஆயினும்,
நீ அளந்து அறிவை நின் புரைமை; வாய்போல்
பொய்ம் மொழி கூறல் - அஃது எவனோ?
நெஞ்சம் நன்றே, நின்வயினானே. *- பரணர்*

## 96. இரவும் எருமையும்

*மழைக் காலம். 'பிசு பிசு' என்று தூறிக்கொண்டிருக்கிறது. எங்கும் ஒரே அமைதி. எல்லாரும் உறங்குகின்றனர். இரவு நேரம். மணி பார்த்து அறிவிக்கும் காவலர் சுறு சுறுப்பாக இருக்கின்றனர். அப்போதைக்கு அப்போது மணி என்ன என்பதை அறிவிக் கின்றனர். சேமக் கலத்திலே மணியடித்தது.*

*ஒன்று, இரண்டு, மூன்று என்று மணி ஓசை கேட்கிறது. ஒவ்வொன்றாக மணியை எண்ணிக்கொண்டே இருக்கிறாள் அவள்; தூங்கவில்லை. காரணம் என்ன? காதலனை எதிர் நோக்கி யிருக்கிறாள்.*

*பக்கத்திலே ஓர் எருமை. சேற்றிலே நின்று அவதிப்படுகிறது. அவதி தாங்கமுடியாமல் அலறுகிறது. அந்த இரவின் அமைதியைக் குலைத்தது அந்த எருமைக் குரல்.*

*இப்படியாக இரவு முழுதும் சென்றது. காலையிலே இதைத் தன் தோழியிடம் சொல்கிறாள் அவள்.*

பழமழை பொழிந்தெனப் பதன் அழிந்து உருகிய
சிதட்டுக் காய் எண்ணின் சில் பெயற் கடைநாள்,
சேற்று நிலை முனைஇய செங் கட் காரான்,
நள்ளென் யாமத்து, 'ஐ' எனக் கரையும்
அஞ்சுவரு பொழுதினானும், என் கண்
துஞ்சா வாழி - தோழி! காவலர்
கணக்கு ஆய் வகையின் வருந்தி, என்
நெஞ்சு புண் உற்ற விழுமத்தானே. *- கழாரக் கீரன் எயிற்றி*

## 97. காதல் பேயும் கிராமப் பூசாரியும்

"பூசாரி வந்தாரா?"

"வந்திருக்கிறார்"

"என்ன பூசாரி. இந்தப் பெண் என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாளே?"

"அப்படியா! சரி. வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆட்டிப் பார்த்து விடலாம்."

"பேய் பிடித்திருக்குமோ?"

"இல்லாவிட்டால் ஏன் இப்படி யிருக்கு?"

"சரி. ஆட்டுவதற்கு ஆற்றங்கரையிலே ஏற்பாடு செய்."

"சரி. ஆடுவெட்ட வேண்டுமே!"

"செய்ய வேண்டியதுதான்."

இந்த விதமாகப் பூசாரி பேச்சைக் கேட்டாள் தாய். அவளது மகளோ காதல் நோயால் வாடுகிறாள். பேயுமல்ல; பிசாசுமல்ல. பிடித்திருப்பது காதல் பேய். அதற்கு மருந்து பூசையல்ல; பூசாரியுமல்ல. ஆடு வெட்டவும் வேண்டுவதில்லை; ஆனால் பாவம்! அப்பாவியான தாய்! அறியாமையாலே என்ன என்னவோ செய்கிறாள்.

இதைத்தான் தோழி சொல்லுகிறாள். அவளது காதலனுக்கு. அதாவது என்ன? விரைவில் வந்து கலியாணம் செய்யவேண்டும் என்பதே.

மறிக் குரல் அறுத்து, தினைப் பிரப்பு இரீஇ,
செல் ஆற்றுக் கவலைப் பல் இயம் கறங்க,
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா
வேற்றுப் பெருந் தெய்வம் பல உடன் வாழ்த்தி,
'பேஎய்க் கொளீ இயள் இவள்' எனப்படுதல்
நோதக்கன்றே - தோழி! - மால் வரை
மழை விளையாடும் நாடனைப்
பிழையேம் ஆகிய நாம் இதற்படவே.

- பெருஞ் சாத்தன்



## 98. காதலின் வெம்மையும் காதலியின் செம்மையும்

காதலன் வெளியூர் சென்றிருக்கிறான். பொருள் கொண்டு வருவதற்காக. பிரிவு தாங்க முடியாமல் வருந்துகிறாள் அவள். ஆயினும் அதை வெளியே காட்டிக் கொள்ள வில்லை. சாமர்த்தியமாக மறைக்கிறாள். ஆனால் அவளது மேனி காட்டிக் கொடுத்து விடுகிறது. பசலை பாய்ந்து காணப்படுகிறாள்.

"என்னடி இப்படி வருந்துகிறாயே! அவர் வரும்வரையில் ஆற்றியிருக்க வேண்டாமா?" என்று கேட்கிறாள் தோழி.

"அதெல்லாம் இருப்பேன். நானும் அவரும் கொண்ட காதல் மிக உறுதியானது. ஆகவே ஆற்றியிருப்பேன்" என்கிறாள்.

கலி மழை கெழீஇய கான்யாற்று இகுகரை,
ஒலி நெடும் பீலி துயல்வர இயலி,
ஆடு மயில் அகவும் நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக்காலும், பயப்பு ஒல்லாதே

- கபிலர்

## 99. வண்டும் வரவும்

"என்னடி செய்வேன் நான்?"

"ஏன்?"

"அவர் போய்விட்டாரே!"

"போனால் என்ன?"

"வரைந்து கொள்ளவில்லையே!"

"வரைவார்"

"எப்போ? அதுதான் போய்விட்டாரே!"

"வருவார்"

"வராமலே இருந்துவிட்டால் நான் என்ன செய்வேன்?"

"இருக்கமாட்டார்."

"ஊர் முழுதும் அலராகி விடுமே. வம்பும் தும்பும் அதிக மாகுமே!"

"வீணாக ஏன் கவலைப்படுகிறாய்? மொட்டு மலர்வதன் முன்பே வண்டு வாய் வைத்து ஊதுகிறது அவனுடைய மலை நாட்டிலே. வண்டின் குணம் அவனுக்கு இல்லாமலா போகும்? ஊரில் அலராகு முன்பே அவன் உன்னை மண முடிப்பான்."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"அவன் பொருட்டு நீ படும் துயரத்தைச் சொன்னேன்; கேட்டான்; மிக வருந்தினான்; வெட்கப்பட்டான். 'என் பொருட்டு வருந்துவதா? என் காதலியை வருந்தவிடலாமா? சரி. விரைவிலே வருவேன். மணம் புரிவேன்' என்று கூறிப் போயிருக்கிறான். அதனால்தான் வருந்தாதே என்கிறேன். வருவான் என்கிறேன்."

காந்தள் அம் கொழு முகை, காவல்செல்லாது,
வண்டு வாய் திறக்கும் பொழுதில், யாண்டும்
தாம் அறி செம்மைச் சான்றோர் கண்ட
கடன் அறி மாக்கள் போல, இடன் விட்டு,
இதழ் தளை அவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் - தோழி! - நின் நிலை
யான் தனக்கு உரைத்தனென் ஆக,
தான் நாணினன், இஃது ஆகாவாறே.

*- கருவூர்க் கதப்பிள்ளை*

## 100. வா எனவும் முடியாது; போ எனவும் இயலாது

"காதலர் வருகிறார். இரவு நேரத்திலே வருகிறார். வரும் வழியோ மிகவும் பயங்கரமானது. அவற்றையெல்லாம் பொருட் படுத்தாது வருகிறார். இன்பமாக இருக்கிறார். எனக்கும் அது இன்பமாகத்தான் இருக்கிறது. பிறகு புறப்படுகிறார்.

"போய் வரவா? என்று கேட்கிறார். "சரி" என்று சொல்ல மனம் வரவில்லை. என்ன செய்வேன். செல்லும் வழி மிகவும் ஆபத்தானதே. அந்த வழியாகச் செல்கிறாரே! ஏதும் ஆபத்து வந்துவிடக் கூடாதே என்று நினைக்கிறேன். எனது நாடிகள் எல்லாம் ஒடுங்கி விடுகின்றன. பதில் பேசவே முடிவதில்லை.



'நாளைக்கும் வருவீர்களா?' என்று கேட்க மனம் விரும்புகிறது. வந்தால் மகிழ்ச்சிதானே! ஆனால் அவர் வரும்வழியை நினைக்கிறது. மனம். அவ்வழியில் இருக்கிற துன்பங்களை எண்ணுகிறது. இரவு நேரமாயிற்றே என்ற எண்ணமும் எழுகிறது. நா எழவில்லை. 'நாளை வருவீரோ' என்று கேட்க.

"இப்படியாக, சென்று வாருங்கள் என்றும் சொல்ல முடியாமல்; நாளை வாருங்கள் என்றும் அழைக்க முடியாமல் அவதிப்படுகிறேன். இந்த மாதிரி எத்தனை நாள் அவதிப் படுவேனடி தோழி?"

'சேறிரோ?' எனச் செப்பலும் ஆற்றாம்;
'வருவிரோ?' என வினவலும் வினவாம்;
யாங்குச் செய்வாம்கொல்? தோழி! பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடு நாள் என்னார், வந்து,
நெடு மென் பணைத் தோள் அடைந்திசினோரே.

*- கருவூர்ச் சேரமான் சாத்தன்*

## 101. கன்றும் காதலனும்

"யானைக் குட்டி என்ன செய்யும்? சிறுசாயிருக்கும் போது குறவர் சிறுவருடன் விளையாடும். பின்னே அதே யானைக் கன்று பெரிதாகி என்ன செய்யும்? குறவர் தம் தினைப்புனத்தை மேயும்; அழிக்கும்.

"அதேபோல. இவளது காதலன் முன்பு இவளுடன் விளையாடினான். இன்பம் தந்தான். பின்பு பிரிந்தான். துன்பம் தருகிறான். இவள் நலனை - அழகை அழிக்க ஏதுவானான். என்று சொல்கிறாள் தோழி."

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவு உலி பாக்கத்துக் குறங்கள் ஈன்ற
குறி இறைப் புதல்வரொடு உறுவந்து ஓடி,
முன் நாள் இனியது ஆகி, பின் நாள்
அவர் தினைப் புனம் மேய்ந்தாங்கு,
பகை ஆகின்று, அவர் நகை விளையாட்டே.

*- குறியிறையார்*

## 102. தும்பி விடு தூது!

*"மணி போலும் அழகிய சிறகுகள் கொண்ட தும்பியே! நீ வாழ்க! நீ அந்த மலை நாட்டுக்குச் சென்றால் இவளது காதலனிடத்திலே ஒரு வார்த்தை சொல்வாயாக. அது என்ன தெரியுமோ? அவனுடன் கூடி இல்லறம் நடத்த வேண்டிய அவள், இன்னமும் இங்கே மனையிலே அடைந்து வருந்திக் கிடக்கிறாள் என்று சொல்" என்றாள் தோழி.*

அம்ம வாழியோ - மணிச் சிறைத் தும்பி!
நல் மொழிக்கு அச்சம் இல்லை; அவர்நாட்டு
அண்ணல் நெடு வரைச் சேறிஆயின்,
கடவை மிடைந்த துடவைஅம் சிறு தினைத்
துளர் எறி நுண் துகள் களைஞர் தங்கை
தமரின் தீராள் என்மோ - அரசர்
நிரை செலல் நுண் தோல் போலப்
பிரசம் தூங்கு மலைகிழவோற்கே!

***- தும்பிசேர் கீரனார்***

## 103. நல்ல செய்தி!

*"நல்ல செய்தி" என்றாள் தோழி.*

*"என்ன? சொல்" என்றாள் அவள்.*

*"அவருடைய வேலையாளைக் கண்டேன்."*

*"எவருடைய வேலையாள்?"*

*"உன் காதலரின் வேலையாள்."*

*"என்ன கேட்டாய்?"*

*"எல்லாம் நன்றாக நடக்கிறதா? என்று கேட்டேன்."*

*"என்ன சொன்னான்?"*

*"திருமணத்துக்கான வேலைகள் எல்லாம் துரிதமாக நன்கு நடைபெறுகின்றன என்றான்."*

*"அவன் வாழ்க! அவனுக்கு நெய்யும் சோறும் கிடைப்பதாக."*



நெய் கனி குறும்பூழ் காயம் ஆக
ஆர்பதம் பெறுக - தோழி! அத்தை
பெருங் கல் நாடன் வரைந்தென, அவன் எதிர்
'நன்றோ மகனே?' என்றனென்;
'நன்றே போலும்' என்று உரைத்தோனே.

***- வேட்ட கண்ணன்***

## 104. காவலனும் காதலனும்

*அவள் அவனைக் காதலிக்கிறாள். அவனும் அவளைக் காதலிக்கிறான். இது எவருக்கும் தெரியாது. அவளைப் பெண் கேட்டு வந்தனர் சிலர். அப்போது அவள் சொல்கிறாள்.*

*"மலை நாட்டிலே பலா பழுத்திருக்கும். அதைக் காத்து நிற்பான் வேடன். அறியாது வரும் சில குரங்குகள், பலாப் பழத்தை உண்ண. வேடன் அம்பு எய்வான். பயந்து ஓடும் குரங்கு," என்றாள்.*

*"அந்த மாதிரி என்ன?" என்றாள் தோழி.*

*"என்னைக் காவல் புரியும் காதலன் இருக்கிறான். யார் யாரோ வந்து என்னைப் பெண் கேட்கிறார்கள்."*

பலவில் சேர்ந்த பழம் ஆர் இனக் கலை,
சிலை விற் கானவன் செந் தொடை வெரீஇ,
செரு உறு குதிரையின் பொங்கி, சாரல்
இரு வெதிர் நீடு அமை தயங்கப் பாயும்
பெரு வரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்;
'புதுவோர்த்து அம்ம, இவ் அழுங்கல் ஊரே.

***- கபிலர்***

## 105. மண் தோண்டினான் மணி கிடைத்தது

*அவளது காதலன் வெளியூர் சென்றிருக்கிறான். அந்த நேரத்திலே அயலார் பலர் வருகின்றனர். பெண் கேட்கின்றனர்; 'சரி' என்று பெற்றோர் கூறிவிட்டால் என்ன செய்வது? அதை எப்படியாவது தடுக்க வேண்டும். வழி என்ன? வழி ஒன்றே.*

அவளது காதலைத் தாயிடம் தெரிவிப்பது? எப்படித் தெரிவிப்பது? பேச்சுடன் பேச்சாகத் தெரிவிக்கிறாள் தோழி.

“வேடன் ஒருவன் கிழங்கு தோண்டினான் மலையிலே. அங்கே மணியும் கிடைத்தது அவனுக்கு. அந்த மாதிரி வேட்டை மேல் ‘வந்தான் அவன். நீ கிடைத்தாய். உனது கூந்தலைத் தடவினானே! ‘பருவம் வந்ததும் என் வீட்டுக்கு வா. இல்லறம் நடத்தலாம்’ என்று சொல்லிப் போனானே! அவன் இப்போது எங்கே இருக்கிறானோ?” என்றாள்.

இன்று யாண்டையனோ தோழி! குன்றத்துப்
பழங் குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு,
கண் அகன் தூ மணி, பொறூஉம் நாடன்,
‘அறிவு காழ்க்கொள்ளும் அளவை, செறிதொடி!
எம்மில் வருகுவை நீ’ எனப்
பொம்மல் ஓதி நீவியோனே?

## 106. மாறுதலும் ஆறுதலும்

“போய் வருகிறேன்” என்றான் அவன். அது கேட்டதுமே அவள் வருந்தினாள். தோள் நெகிழ்ந்தது. வளைகள் கழன்றன. கண்கள் நீர் சொரிந்தன. அழகு இழந்தன.

“இனி அவர் வருமளவும் எப்படி ஆற்றியிருப்பாய்?” என்று கேட்டாள் தோழி.

“அவருடன் நாம் சில நாளே பழகினோம். எனினும் அவரது சொல் உறுதியும் உயர் குணமும் கண்டு ஆற்றுவேன்” என்றாள் அவள்.

மலர் ஏர் உண்கண் மாண் நலம் தொலைய,
வளை ஏர் மென் தோள் ஞெகிழ்ந்ததன் தலையும்,
மாற்று ஆகின்றே - தோழி! ஆற்றலையே
அறிதற்கு அமையா நாடனொடு
செய்து கொண்டது ஓர் சிறு நல் நட்பே.

- **மோசி கொற்றன்**



## 107. முற்றிய பயிரும் முடிந்த காதலும்

“அவர் இனி இரவிலே வராமல் இருந்தால் நல்லது” என்றாள் அவளது தோழி.

“ஏன்?” என்று கேட்டாள் அவள்.

“தினை முற்றிவிட்டது. இரவு நேரத்திலே எல்லாரும் விழித்திருந்து தினையை அரிகின்றனர். தொண்டகப் பறை ஓயாது ஒலிக்கிறது. அவர் வந்தால் நம் களவு வெளிப்பட்டு விடும் என்றாள்.”

“நீ சொல்வதன் பொருள் என்ன?”

“பொருள் என்ன? ஒன்றே. தினை முற்றியது. தினை விதைத்தவர் அரிகின்றனர். உன் காதலும் முற்றியிருக்கிறது. காதல் விதைத்தவர் இன்னமும் வரையவில்லை. வரைய வேண்டும்.”

அம்ம வாழி, தோழி! - இன்று அவர்
வாரார் ஆயினோ நன்றே - சாரல்
சிறு தினை விளைந்த வியன்கண் இரும் புனத்து
இரவு அரிவாரின், தொண்டகச் சிறு பறை
பானாள் யாமத்தும் கறங்கும்,
யாமம் காவலர் அவியாமாறே.

## 108. ஒளித்த செய்தியும் களித்த செய்தியும்

“அடியே, எழுந்திரு, கண்ணைத் துடை. வருந்தாதே” என்றாள் தோழி.

“என்னடி, என்ன?” என்றாள் அவள்.

“அம்மாவிடம் சொல்லிவிட்டேன்.”

“எதை?”

“உனது காதலை!”

“அம்மா என்ன சொன்னாள்?”

“அப்பாவிடம் சொன்னாள்”

"அப்பா என்ன சொன்னார்?"

"ஊராரிடம் சொன்னார்"

"ஊரார் என்ன சொன்னார்?"

"சரி. அவன் வரட்டும். பெண் கொடுப்போம்" என்றனர்.

"அவர் என்ன செய்தார்?"

"வந்தார். பெண் கேட்டார்."

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

" 'சரி. அப்படியே ஆகட்டும். பெண்ணை உனக்கே கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள் என்றாள்."

மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள் அவள்.

எந்தையும் யாயும் உணரக் காட்டி,
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்,
மலை கெழு வெற்பன் தலைவந்து இரப்ப,
நன்று புரி கொள்கையின் ஒன்றாகின்றே
முடங்கல் இறைய தூக்கணங்குரீஇ,
நீடு இரும் பெண்ணைத் தொடுத்த
கூடினும் மயங்கிய மையல் ஊரே.

*- உறையூர்ப் பல்காயனார்*

## 109. உலகமே பெயர்ந்தாலும் உள்ளம் மாறாது!

"என்னடி இப்படி வம்பு பேசுகிறார்களே நமது ஊரார்?" என்று வருந்தினாள் அவள்.

"அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டுமே? அதனால் நிலைமை மாறிவிடப்போகிறதா? அவன் மீது நீ கொண்ட காதல் ஓடி ஒளிந்துவிடுமா? இந்த உலகமே இடம் வலமாக மாறிய போதிலும் சரியே. தீயும் நீரும் தம் இயற்கை மாறிய போதிலும் சரியே கடல் தன் எல்லை மாறினாலும் சரியே. உனது காதல் மாறப் போவதில்லை. ஏன் அஞ்சுகிறாய்?" என்றாள் தோழி.



நிலம் புடைபெயரினும், நீர் திரிந்து பிறழினும்,
இலங்கு திரைப் பெருங் கடற்கு எல்லை தோன்றினும்,
வெவ் வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடு எவன் உடைத்தோ - தோழி! நீடு மயிர்க்
கடும் பல் ஊகக் கறை விரல் ஏற்றை
புடைத் தொடுபு உடையூப் பூ நாறு பலவுக்கனி
காந்தள்அம் சிறுகுடிக் கமழும்
ஓங்கு மலை நாடனொடு அமைந்த நம் தொடர்பே?

*- மதுரைக் கொல்லன் புல்லன்*

## 110. வம்பும் வளியும்

பருவப் பெண் அவள். வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறாள். வெளியே காதலன் வந்து காத்திருக்கிறான். அந்த நேரத்திலே காற்று வீசுகிறது. பெருங்காற்று. புழுதியைக் கொண்டு வந்து கொட்டுகிறது. பனை மரத்தின் ஓலைக் குருத்தெல்லாம் அந்தப் புழுதி மூடிப் போகிறது.

"அடேயப்பா! இந்த மாதிரியல்லவா இருக்கிறது இந்த ஊரார் பேசும் வம்புப் பேச்சு" என்றாள் தோழி.

பனைத் தலைக் - கருக்குடை நெடு மடல் குருத்தொடு மாய,
கடு வளி தொகுத்த நெடு வெண் குப்பைக்
கணம் கொள் சிமைய உணங்கும் கானல்,
ஆழி தலைவீசிய அயிர்ச் சேற்று அருவிக்
கூழை பெய் எக்கர்க் குழீஇய பதுக்கை
புலர் பதம் கொள்ளா அளவை,
அலர் எழுந்தன்று, இவ் அழுங்கல் ஊரே.

*- விற்றூற்று மூதெயினனார்*

## 111. காதலும் வாடலும்

"ஏன் இப்படி வருந்துகிறாய்? உடம்பு மெலிந்து விட்டது. வளை நெகிழ்ந்து விட்டது. வருந்தாதே" என்றாள் தோழி.

"நானா வருந்துகிறேன்? இல்லையே. என்னைப் பிடித்த காதல் அல்லவா வாட்டுகிறது" என்றாள் அவள்.

கைவளை நெகிழ்தலும் மெய் பசப்பு ஊர்தலும்,
மை படு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும் நாடனொடு
மருவேன் தோழி! அது காமமோ பெரிதே.

*- உறையூர் முதுகூத்தன்*

## 112. நீலமும் நினைப்பும்

"என்னடி இது, ஏன் இவள் இன்னமும் வருந்துகிறாள்? கண்ணீர் சொரிகிறாள். முருகனுக்குப் பூசை போட்டாகி விட்டதே!" என்றாள் தாய்.

"எல்லாம் முன் பிறவித் தொடர்பு" என்றாள் தோழி.

"ஏன் அந்த நீலப் பூவைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் சொரிகிறாள்?"

"அதுவா? அவளுக்கு ஒரு நண்பன் இருக்கிறான். ஊழ் வினை கூட்டுவித்த நண்பன். அவன் நீலப்பூ கொடுத்தான் அவளுக்கு, நீலத்தைப் பார்க்கும்போது அவன் நினைவு வருகிறது அவளுக்கு. அதனால் அழுகிறாள்."

"அப்படியா சங்கதி?"

பால் வரைந்து அமைத்தல் அல்லது, அவர்வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ?
வேறு யான் கூறவும் அமையாள், அதன்தலைப்
பைங் கண் மாச் சுனைப் பல் பிணி அவிழ்ந்த
வள் இதழ் நீலம் நோக்கி, உள் அகைபு,
ஒழுகு கண்ணள் ஆகி,
பழுது அன்று அம்ம, இவ் ஆயிழை துணிவே. *- பேரிசாத்தன்*

## 113. அபாய அறிவிப்பு

"சென்று வருவேன்" என்றான் அவன்.

"நீ வரும்வரை உன் காதலி எப்படி ஆற்றியிருப்பாள்?" என்றாள் தோழி.



"இருக்கமாட்டாளோ?" என்றான்.

"உன்னையே எண்ணி எண்ணி ஏங்குவாள். தோள் மெலிந்து வளைகள் கழன்று, கண்கள் ஒளியிழந்து துன்புறுவாள்" என்றாள் தோழி.

கோடு ஈர் இலங்கு வளை நெகிழ, நாளும்
பாடு இல கலிழ்ந்து பனி ஆனாவே
துன் அரு நெடு வரைத் ததும்பி அருவி
தண்ணென் முழவின் இமிழ் இசை காட்டும்
மருங்கில் கொண்ட பலவின்
பெருங் கல் நாட! நீ நயந்தோள் கண்ணே.

*- மதுரை நல்வெள்ளி*

## 114. பலியும் கிலியும்

பூசாரி பூசை போட்டுக் கொண்டிருக்கிறான். உடுக்கையும், பம்பையும் ஒலிக்கின்றன. ஆட்டுக் குட்டியைப் பலியிட்டு வைத்திருக்கிறது. பல்வகைச் சோறும் பலியாக இருக்கிறது.

எதிரே அவள் உட்கார்ந்திருக்கிறாள். அவளது நெற்றியைத் தடவித் தடவிப் பேயோட்டுகிறான் பூசாரி.

கண்டாள் தோழி. மெதுவாக வந்தாள்.

"ஐயா, பூசாரியே! ஒன்று கேட்கிறேன். தயவு செய்து கோபிக்கக் கூடாது. இவ்வளவு பலியிட்டு இருக்கிறீர்களே! இது யாருக்கு?"

"இவளைப் பற்றியிருக்கும் பேய்க்கு."

"பேய் உண்ணுமோ!"

"ஆமாம்"

"அப்படியானால், இவளைப் பிடித்து ஆட்டும் காதல் பேய் அந்த மலை நாட்டவனது மார்புதான். அது இதை உண்ணுமா?" என்று கேட்டாள்.

முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்;
பல் வேறு உருவின் சில் அவிழ் மடையொடு
சிறு மறி கொன்று, இவள் நறு நுதல் நீவி,
வணங்கினை கொடுத்திஆயின், அணங்கிய
விண் தோய் மா மலைச் சிலம்பன்
ஒண் தார் அகலமும் உண்ணுமோ, பலியே?

*- வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்*

## 115. காதலும் காந்தளும்

"போய் வருகிறேன்" என்றான் அவன்.

"போய் வா" என்றாள் அவள்.

"வருந்தாதே" என்றான்.

"விரைவில் வா" என்றாள்.

சென்றான் அவன். அவள் என்ன செய்தாள். அவனையே எண்ணி இருந்தாள். அவனுடைய மலையிலே மழை பெய்தது மாலையிலே, அந்த மழை நீர் அருவியாகி ஓடையாகி ஓடி வந்தது. காலையிலே வரும்போது காந்தள் கிழங்குகளையும் அடித்து வந்தது.

அந்தக் காந்தள் கிழங்கு ஒன்றைக் கொண்டு வந்தாள் அவள். முற்றத்து மண்ணிலே நட்டாள். தண்ணீர் ஊற்றினாள்; வளர்த்தாள். காந்தள் செடியாயிற்று, மலர்ந்தது.

அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள் அவள். காதலனைக் காண்பது போல ஆனந்தம் கொண்டாள்.

காதலன் வந்துவிட்டான். கலியாண முயற்சிகள் நடக்கின்றன.

"பேஷ்! கெட்டிக்காரி நீ! காதலனைப் பிரிந்த வாட்டத்தைச் சிறிதும் வெளிக்காட்டவில்லையே!" என்று பாராட்டினாள் அவளது தோழி.

"போடி! பயித்தியம்! அம்மாவைப் பாராட்டு. அவள் வாழ்க?" என்றாள் அவள்.



"ஏன்?" என்றாள் தோழி.

"காந்தள் செடியை ஏன் வளர்க்கிறாய் என்று கோபித்துப் பிடுங்கிப் போடாதிருந்தாளே!" என்றாள்.

அம்ம வாழி! தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால் அவர் மலை
மாலைப் பெய்த மணம் கமழ் உந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தள்
மெல் இலை குழைய முயங்கலும்,
இல் உய்த்து நடுதலும், கடியாதோளே.

*- கபிலர்*

## 116. தாயும் பேயும்

"இனிமேல் இரவு நேரத்திலே வர வேண்டாம் என்று சொல்லு" என்றாள் அவள்.

"உன் காதலனிடமா?" என்று கேட்டாள் தோழி.

"ஆம்" என்றாள் அவள்.

"ஏன்?"

"வீட்டுக்குள்ளே போட்டு அடைத்து விட்டார்கள் என்னை. எனக்கு ஏதோ பேய் பிடித்திருக்கிறதாம். பூசாரி வந்து பேயோட்டப் போகிறான். அந்தப் பூசாரிக்கு ஓடுகிற பேயா இது? பிறகு, தானே, தாய்க்குத் தெரியும். இது அந்தப் பூசாரிக்கு ஓடும் பேயல்ல என்று" என்றாள் அவள்.

வெறி என உணர்ந்த வேலன் நோய் மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய,
அரும் படர் எவ்வம் இன்று நாம் உழப்பினும்,
வாரற்கதில்ல தோழி! சாரல்
பிடிக்கை அன்ன பெருங் குரல் ஏனல்
உண் கிளி கடியும் கொடிச்சி கைக் குளிரே
சிலம்பின் சிலம்பும் சோலை
இலங்கு மலைநாடன் இரவினானே.

*- மதுரை ஈழத்துப் பூதன் தேவன்*

## 117. வனப்பும் நினைப்பும்

மலை நாட்டு வேடர்கள் என்ன செய்வார்கள்? உயரமாகப் பரண் கட்டி அதிலே நின்று தினைப்புனத்தைக் காவல் செய் வார்கள். இரவு நேரத்திலே யானைகள் வரும் தினைப் புனத்திலே மேய. பரண்மீது நின்று கொள்ளிக் கட்டையைத் தட்டுவார்கள், கார்த்திகை மாதத்திலே சிறுவர்கள் தீப்பொறி சுற்றுவது போல. அது கண்டு அஞ்சி ஓடும் யானை. பிறகு எப்போதாவது வானத்தி லிருந்து விண் வீழ் கொள்ளி விழும். அதைக் கண்டதும் யானை அஞ்சி ஓடும். வேடுவர் சுற்றும் தீப் பொறியோ என்று எண்ணி.

இத்தகைய மலை நாட்டு இளைஞன் ஒருவனைக் காதலித்தாள் ஒருத்தி. அவனையே எண்ணி ஏங்குகிறாள். அதனால் உடல் மெலிந்தாள்.

"அவனைக் கண்டு இன்பம் துய்ப்பதன் முன்பு நீ அழகாக இருந்தாயே!" என்கிறாள் தோழி.

முனிபடர் உழந்த பாடு இல் உண்கண்  
பனி கால் போழ்ந்து, பணை எழில் ஞெகிழ் தோள்,  
மெல்லிய ஆகலின் மேவரத் திரண்டு,  
நல்ல என்னும் சொல்லை மன்னிய  
ஏனல்அம் சிறு தினை காக்கும் சேணோன்  
ஞெகிழியின் பெயர்ந்த நெடு நல் யானை  
மீன் படு சுடர் ஒளி வெரூஉம்  
வான் தோய் வெற்பன் மணவா ஊங்கே.

- கபிலர்

## 118. காதல் உந்தியது கால் முந்தியது

இரவு நேரம். மழை பெய்கிறது. எங்கும் ஒரே வெள்ளக் காடு. இருட்டு! இருட்டு!

அந்த நேரத்திலே வந்து சேருகிறான் காதலன் காதலியைத் தேடி. கண்டாள் தோழி. அச்சமும் வியப்பும் கொண்டாள்.

"நண்பா! நீ எப்படி வந்தாய், வழி எப்படித் தெரிந்தது? எங்கள் ஊர் எப்படித் தெரிந்தது? வீடு எப்படித் தெரிந்தது? ஒரே



இருட்டாயிருக்கிறதே? வழி எப்படிக் கண்டு வந்தாய்? மழையோ பெய்கிறது. வானமும் இருண்டிருக்கிறது. மழை பெய்து எங்கும் நீர் நிரம்பி இருக்கிறது. நிலமும் தெரியவில்லை. ஊரிலே எல்லாரும் தூங்குகின்றனர். இந்த இரவு நேரத்திலே நீ எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

பெயல் கால் மறைத்தலின், விசும்பு காணலரே;  
நீர் பரந்து ஒழுகலின், நிலம் காணலரே;  
எல்லை சேறலின், இருள் பெரிது பட்டன்று;  
பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்  
யாங்கு வந்தனையோ? - ஓங்கல் வெற்ப!  
வேங்கை கமழும் எம் சிறுகுடி யாங்கு  
யாங்கு அறிந்தனையோ? நோகோ யானே.

- கபிலர்

## 119. இணையும் பிணையும்

"இரவு நேரத்தில் வருகிறேனே" என்றான் அவன்.

"அது அவ்வளவு சுலபமல்ல" என்றாள் அவள்.

"ஏன்?" என்றான்.

இரவிலே தாய் அணைத்துக் கொண்டு படுத்திருப்பாள். அதிலிருந்து வெளியேறி வருவது கஷ்டம். நீ வந்து நிற்பாய். தூக்கமும் கொள்ளாது, வெளியே வரவும் இயலாது. துன்புற நேரும். பகல் நேரத்திலே அருவியிலே, உனது மார்பே தெப்பமாகக் கொண்டு நீந்தி விளையாடி இன்புறுவதே நல்லது" என்றாள் தோழி.

ஆர் கலிவெற்பன் மார்பு புணை ஆக,  
கோடு உயர் நெடு வரைக் கவாஅன், பகலே,  
பாடு இன் அருவி ஆடுதல் இனிதே;  
நிரை இதழ் பொருந்தாக் கண்ணோடு,இரவில்,  
பஞ்சி வெண் திரிச் செஞ் சுடர் நல் இல்  
பின்னு வீழ் சிறு புறம் தழீஇ,  
அன்னை முயங்கத் துயில் இன்னாதே.

- உறையூர் முது கூத்தன்

## 120. தையலும் மையலும்

அவள்மீது காதல் கொண்டான் அவன். அவளும் அவனைக் காதலிக்கிறாள். அவளை விட்டுப் பிரிய மனம் வரவில்லை அவனுக்கு. நாள் முழுதும் அவளுடனே இருக்கிறான். சுனையிலே மலர்ந்த மலர்களைத் தொடுத்து அவளது தலையிலே சூட்டுகிறான். தினைப்புனம் காக்கிறான். கிளிகளை ஓட்டுகிறான். மாலை நேரம் வந்துவிட்டது. ஏதோ ஒன்றைக் கேட்க விரும்புகிறான். ஆனால் வாய் திறந்து சொல்லவில்லை. என்ன அது? இரவு தங்கி இன்புற வேண்டும் என்ற எண்ணம். அதை வெளியே சொல்லவில்லை. குறிப்பினால் அறிந்து கொண்டாள் தோழி.

"போனால் போகிறது. இருந்துவிட்டுப் போகட்டும்" என்கிறாள் தோழி.

நாகு பிடி நயந்த முளைக்கோட்டு இளங் களிறு,
குன்றம் நண்ணி, குறவர் ஆர்ப்ப,
மன்றம் போழும் நாடன் - தோழி!
சுனைப் பூங் குவளைத் தொடலை தந்தும்,
தினைப் புன மருங்கில் படுகிளி ஒப்பியும்,
காலை வந்து, மாலைப் பொழுதில்
நல் அகம் நயந்து, தான் உயங்கிச்
சொல்லவும் ஆகாது அஃகியோனே

*- வாயில் இளங்கண்ணன்*

## 121. குரங்கு தின்ற கனி!

பலா பழுத்துத் தொங்குகிறது. மலை நாட்டிலே. வாசனை வீசுகிறது. மூக்கைத் துளைக்கிறது ஆளைத் தூக்குகிறது. குரங்கு என்ன செய்கிறது? முகர்ந்து பார்க்கிறது பலாப்பழத்தை. வேடன் வருகிறானா என்று சுற்றும் முற்றும் பார்க்கிறது. நல்ல வேளை. வேடனைக் காணோம். எங்கேயோ அயர்ந்திருக்கிறான். மெதுவாகப் பழத்தைத் தோண்டுகிறது. பலாச் சுளையைப் பிடுங்குகிறது. தின்கிறது. கண்டுவிட்டான் காவல்காரன். என்ன செய்தான்? இனிமேல் குரங்கு பலாப் பழத்தைச் சும்மா விடாது என்று கண்டான். வலை போட்டான்.



அந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி. ஒரு பெண், கட்டழகி, அவள் மீது காதல் கொண்டான் ஓர் இளைஞன். அவளும் காதல் கொண்டாள். இருவரும் இன்பமாக இருந்தனர். சில நாட்கள் சென்றன. பெற்றோருக்குச் சந்தேகம். பெண்ணைக் காவலில் வைத்தார்கள். வீட்டுக்குள்ளே இருக்கச் செய்தார்கள்.

இந்த நேரத்திலே தோழியிடம் வந்தான் அவன். அவளை அடைய வேண்டுமென்றான். அப்போது தோழி என்ன சொன்னாள்? மலை நாட்டிலே குரங்கு பலாப்பழம் தின்ற நிகழ்ச்சியைக் கூறினாள். வேடன் வலை வீசியிருப்பதையும் சொன்னாள். அதே மாதிரி கதி அவனுக்கும், அவளுக்கும் ஏற்பட்டிருப்பதைக் கூறினாள்.

"இதற்கு முடிவு என்ன?" என்றான்.

"மணந்து கொள் விரைவில்" என்றாள்.

கலை கை தொட்ட கமழ்சுளைப் பெரும் பழம்
காவல் மறந்த கானவன், ஞாங்கர்,
கடியுடை மரம் தொறும் படுவலை மாட்டும்
குன்ற நாட! தகுமோ - பைஞ் சுனைக்
குவளைத் தண் தழை இவள் ஈண்டு வருந்த,
நயந்தோர் புன்கண் தீர்க்கும்
பயம் தலைப்படாஅப் பண்பினை எனினே?

*- காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்.*

## 122. புகை மணமும் புகையும் மனமும்

மலை நாட்டிலே என்ன வழக்கம்? மரங்களை வெட்டி வீழ்த்துவார்கள். அடிக்கட்டை முதலியவற்றை நெருப்பில் இடுவார்கள். பிறகு அந்த நிலத்திலே தினை விதைப்பார்கள். இப்படி மரங்களுக்குத் தீ வைக்கும்போது அதிலே அகில் கட்டைகளும் இருக்கும். தீப் பிடித்த உடனே அகில் புகையும். மணம் வீசும். பக்கத்துச் சிறு குடிகளுக்கெல்லாம் சென்று பரவும்.

இத்தகைய மலை நாட்டு இளைஞன் ஒருத்தியைக் காதலித்தான். பிறகு மணம் செய்ய விரும்பினான். பொருள் கொண்டு வரப் பிரிந்தான். பிரிந்த காலத்தில் வருந்தினாள் காதலி. கண்டாள் தோழி.

"உன்னை மணம் செய்யத்தானே அவன் பிரிந்து போயிருக்கிறான். அதை அறியாமல் இப்படி வருந்துகிறாயே. அப்பொழுது இரவிலே வந்தபோது மாத்திரம் மகிழ்ந்தாய். இப்போது மணம் புரிய வேண்டிப் போயிருக்கிறான். துன்புறுகிறாய். ரொம்ப நன்றாயிருக்கிறது" என்றாள்.

நறை அகில் வயங்கிய நளி புன நறும் புகை
உறை அறு மையின் போகி, சாரல்
குறவர் பாக்கத்து இழி தரும் நாடன்
மயங்கு மலர்க் கோதை நல் மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி - தோழி! - மா இதழ்க்
குவளை உண்கண் கலுழப்
பசலை ஆகா ஊங்கலங்கடையே. *- பேயார்*

## 123. மேனி காட்டுதே! மோகம் வாட்டுதே!

கட்டழகி ஒருத்தி. அவளைக் கண்டான் ஒரு காளை. காதல் கொண்டான் மெதுவாகத் தோழியிடம் சென்றான். தனது காதலைத் தெரிவித்தான். கேட்டாள் அவள்.

"அவள் சிறு பெண்ணாயிற்றே. பருவம் வராதவளாயிற்றே. அவள் மீது காதல் கொண்டேன் என்கிறாயே. இன்பமாயிருக்க வேண்டும் என்கிறாயே!" என்று கூறிச் சிரித்தாள்.

கேட்டான் அவன்.

"அப்படி ஒன்றுமில்லை. நீ சொல்கிறபடி அவள் ஒன்றும் அறியாத பெண் அல்ல. பருவம் வந்தவள் என்பதை அவளது மேனி காட்டுகிறது. அதனால்தான் அது என்னை வாட்டுகிறது. ஆனால் அது அவளுக்குத் தெரியவில்லை" என்றான்.

முலையே முகிழ்முகிழ்த்தனவே, தலையே
கிளை இய குரலே கிழக்கு வீழ்ந்தனவே;
செறி முறை வெண் பலும் பறிமுறை நிரம்பின;
சுணங்கும் சில தோன்றினவே; அணங்கு என
யான் தன் அறிவல்; தான் அறியலனே;
யாங்கு ஆகுவள்கொல் தானே
பெரு முது செல்வர் ஒரு மட மகளே? *- பொதுக் கயத்துக் கீரந்தை*



## 124. 'வரவோ' என்றான் 'வரைவாய்' என்றாள்

இரவு நேரத்திலே வந்து போக எண்ணினான் அவன். தனது எண்ணத்தைத் தோழியிடம் கூறினான். அதற்கு அவள் இணங்கவில்லை.

"நண்பா! நீ வருகிற வழியோ மிகவும் ஆபத்தானது. நீ வந்து போனபின் அதையே எண்ணி எண்ணி ஏங்குவாள் உன் காதலி. இவையெல்லாம் எதற்கு?நான் சொல்வதைக் கேள். பேசாமல் அவளை மணந்துகொள்" என்றாள்.

செறுவர்க்கு உவகை ஆக, தெறுவர,
ஈங்கனம் வருபவோ? - தேம் பாய் துறைவ!
சிறு நா ஒண் மணி விளரி ஆர்ப்பக்
கடு மா நெடுந் தேர் நேமி போகிய
இருங் கழி நெய்தல் போல,
வருந்தினள், அளியள் - நீ பிரிந்திசினோளே. *- குன்றியன்*

## 125. 'எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி!'

காதல் மயக்கம். தலை சுற்றியது அவனுக்கு. எப்படியாவது அவளை அடைய எண்ணினான். இரவு நேரத்திலே எவருக்கும் தெரியாமல் இன்பமாயிருக்க விரும்பினான். தோழியிடத்திலே சென்றான். தனது கருத்தை மெதுவாக வெளியிட்டான்.

"எல்லாம் உன் தயவு" என்றான்.

"என் தயவில் ஏதுமில்லை."

"நீ மனசு வைத்தால் நடக்கும்."

"அது அவ்வளவு சுலபமல்ல. அவளது சகோதரர்கள் சாமானியர் அல்லர். வலிய வில்லை வைத்து வேட்டையாடும் வேடர். அவர்கள் அறிந்தால் உனக்குக் கஷ்டம் வரும்."

"எவருக்கும் தெரியாமல் ஏற்பாடு செய்யக் கூடாதா?"

"அவளை அடைவது அவ்வளவு சுலபம் அல்ல நண்பா. அவள் இருக்குமிடத்துக்கு நீ நெருங்கவே முடியாது. வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருக்கிறார்கள்."

"நிரை வளை முன்கை நேர் இழை மகளிர்
இருங் கல் வியல் அறைச் செந் தினை பரப்பிச்
சுனை பாய் சோர்வு இடை நோக்கி, சினை இழிந்து,
பைங் கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்பு அயல் நண்ணியதுவே - வார் கோல்
வல் விற் கானவர் தங்கைப்
பெருந் தோட் கொடிச்சி இருந்த ஊரே."

*- இருந்தையூர்க் கொற்றன் புலவன்*

## 126. அறைக்குள் இருந்தது அம்பலம் ஏறுகிறது

கள்ளக் காதல் எவ்வளவு நாள் நடக்கும்? நீண்டநாள் நடக்கவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சந்திப்புக்குச் சமயமில்லை. அவள் வருந்துகிறாள். கண்டாள் தோழி. அவளது வருத்தம் போக்க விரும்பினாள்.

வருத்தம் போக்கும் வழி எது? வழி ஒன்றே.

"அம்மாவிடம் உனது இரகசியக் காதலைச் சொல்லி விடுகிறேன்" என்றாள் தோழி.

"ஐயோ சொல்லாதே" என்றாள் அவள்.

"சொல்லாமல் என்ன செய்வது? சொன்னாலாவது அவர்களைச் சம்மதிக்கச் செய்யலாம். துணிந்து சொல்லிப் பார்க்கிறேனே. அதனால் என்ன?" என்றாள் அவள்.

குறும் படைப் பகழிக் கொடு விற் கானவன்
புனம் உண்டு கடிந்த பைங் கண் யானை
நறுந் தழை மகளிர் ஓப்பும் கிள்ளையொடு
குறும் பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக் குறை வருத்தம் வீட,
துணியின் எவனோ - தோழி! - நம் மறையே?

*- உழுந்திணைப் புலவன்*



## 127. ஆனை கண்டும் அறியாதவன்

அவளது காதலன் அவன். இரவு நேரத்திலே வருகிறான். இன்பமாக இருக்கிறான். போகிறான். இப்படியே நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு நாள் இப்படி நடக்கும்? அவனோ விரைவில் கலியாணம் செய்வதாகக் காணோம் அவள் அவதிப்படுகிறாள்.

"அவனது மலை நாட்டிலே ஆண் யானையும் பெண் யானையும் ஒன்றையொன்று தழுவிச் செல்கின்றன. அவனோ அது கண்டும் தனது கடமையை அறியாதிருக்கிறான். நீதான் அவனிடம் உனது துன்பத்தைச் சொல்லி விடேன்" என்றாள், தோழி.

வந்த வாடைச் சில் பெயற் கடைநாள்,
நோய் நீந்து அரும் படர் தீர நீ நயந்து
கூறின் எவனோ - தோழி! - நாறு உயிர்
மடப் பிடி தழீ இத் தடக்கையானை
குன்றகச் சிறுகுடி இழிதரும்
மன்றம் நண்ணிய மலைகிழவோற்கே?

*- மதுரை மருதங்கிழார் மகன் இளம் போத்தன்*

## 128. வாழையும் வனிதையும்

அவன்மீது கோபம் அவளுக்கு. அவனைக் கடிந்துகொள்ள விரும்புகிறாள். கடிதல் எப்படி? நேராகக் கடியலாமோ? அது பண்பாகாதே. எனவே மறைமுகமாகக் கடிந்துகொள்கிறாள்.

மலையிலிருந்து ஓடி வருகிறது ஆறு. வரும்போது என்ன செய்கிறது? மலையிலே விளைந்த வாழைகளை அடித்துக் கொண்டு வருகிறது; பெயர்த்துக் கொண்டு வருகிறது. வாழைக்குப் பெண் உவமை. எனவே அவள் சொல்கிறாள்!

"ஏ, ஆறே! மிகக் கொடிய இயல்புடனிருக்கிறாயே! இந்தக் காதலன்தான் கொடியன் என்றால் அவனைவிட அதிகமாகக் கொடுமை செய்கிறாயே. வாழைத்தண்டு போன்ற இந்தப் பெண்ணின் நலத்தையெல்லாம் கெடுத்துவிட்டான் அவன். ஆனால் நீயோ அந்த வாழையை அடியோடு பெயர்த்துக் கொண்டு வந்துவிட்டாயே" என்று சொல்கிறாள்.

'நல்கின் வாழும் நல்கூர்ந்தோர்வயின்
நயன் இலர் ஆகுதல் நன்று' என உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும், நன்றும்
நின் நிலை கொடிதால் - தீம் கலுழ் உந்தி!
நம் மனை மட மகள், 'இன்ன மென்மைச்
சாயலள்; அளியள்' என்னாய்,
வாழை தந்தனையால், சிலம்பு புல்லெனவே.

*- அம்மூவன்*

## 129. வருத்தமும் பொருத்தமும்

*காட்டிலே உள்ள வேடர்கள் என்ன செய்வார்கள்? காட்டுப் பசுக்களின் கூட்டத்திலே போய் விரட்டுவார்கள்; கலைப்பார்கள். அப்போது அவற்றின் கன்றுகள் பயந்து ஓடும். அவற்றைப் பிடித்து வந்து வீட்டிலே வளர்ப்பார்கள்.*

*தன் இயற்கைக்கு மாறுபட்டு இருப்பினும் கன்று என்ன செய்யும்? அவர்தம் வீட்டில் உள்ளாரைத் தழுவி வளரும்.*

*இதை எடுத்துக் காட்டினாள் அவள் தன் தோழிக்கு. ஏன்? அவளது காதலன் வரவில்லை. "சொன்னபடி வரவில்லை, பார்த்தாயா?" என்று கோபித்துக் கொண்டாள் தோழி. "அவன் உன் இயல்புக்குச் சிறிதும் பொருந்தாதவன்" என்றாள்.*

*"அவன் என் இயல்புக்குப் பொருந்தாவிடில் அவன் இயல்புக்குத் தக்கபடி நான் நடப்பேன். அவன் இங்கு வராவிட்டால் நாம் அங்கு செல்வோம்" என்றாள் அவள்.*

அமர்க்கண் ஆமான் அம் செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ, இனம் தீர்ந்து,
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென,
இளையர் ஓம்ப மரீஇ, அவண் நயந்து,
மனை உறை வாழ்க்கை வல்லியாங்கு,
மருவின் இனியவும் உளவோ?
செல்வாம் - தோழி! - ஒல்லாங்கு நடந்தே.

*- ஐயூர் முடவன்*



## 130. களவும் காரிகையும்

*"இரவு நேரத்திலே வருகிறான் அம்மா உன் காதலன்! மலையிலே விளைந்த சந்தனத்தை மார்பிலே பூசி வருகிறான். 'கம கம' என்று வாசனை வீசுகிறது. சுனையிலே மலர்ந்த மலர்களைச் சூடி வருகிறான். இரவு உன்னுடன் இன்பமாக இருக்கிறான். இரவோடு இரவாகத் திரும்புகிறான். அவன் வரும் வழியோ ஆபத்தானது. புலிக் கூட்டம் நிறைந்த வழி. இந்த மாதிரி எத்தனை நாள் வந்து போக முடியும்? வழியில் ஏதாவது ஆபத்து நேர்ந்து விடப் போகிறதே என்று பயமாக இருக்கிறது. இந்த இரகசியத்தை எவ்வளவு நாளைக்கு மூடிவைக்க முடியும்? அம்மாவிடம் சொல்லிவிட நினைக்கிறேன். அதுதான் நல்லது என்றாள் தோழி.*

மலைச் செஞ் சாந்தின் ஆர மார்பினன்,
சுனைப் பூங் குவளைச் சுரும்பு ஆர் கண்ணியன்,
நடு நாள் வந்து, நம் மனைப் பெயரும்
மடம் ஆர் அரிவை! நின் மார்பு அமர் இன் துணை;
மன்ற மரையா இரிய, ஏறு அட்டு,
செங் கண் இரும் புலி குழுமும்; அதனால்,
மறைத்தற் காலையோ அன்றே;
திறப்பல் வாழி - வேண்டு, அன்னை! - நம் கதவே.

## 131. எப்போ வருவாரோ?

*"வருவேன்" என்றான்.*

*"எப்போ?" என்றாள்.*

*"பனிக்காலம் வரும்போது" என்றான்.*

*அவனது வரவை எதிர்பார்த்து இருந்தாள் அவள். பிரிவு தாங்க முடியவில்லை. வருந்தினாள்.*

*"வருந்தாதே" என்றாள் தோழி.*

*"வருவாரோ?" என்றாள் அவள்.*

*"வருவார்" என்றாள் தோழி.*

"அவனது மலை நாட்டிலே உள்ள மரையான் என்ன செய்யும்? புளிப்பான நெல்லிக் கனியைத் தின்னும். பிறகு சுனை நீரைத் தேடிச் செல்லும். மூச்சு விடும். சுனையிலே படிந்துள்ள மலர்கள் விலகும். நீரைக் குடிக்கும்," என்றாள்.

"அந்த மாதிரி?"

"அந்த மாதிரி அவன் வருவான். துன்பமாகிய பிரிவினின்றும் உன்னைத் தேடி வருவான், சுனை நீராகிய உன்னை. உன்னைச் சுற்றி வம்பு பேசுகிறார்களே இவர்கள் வாயடைத்து விலகுவார்கள். உன்னை மணந்து இன்பம் துய்ப்பான்" என்றாள்.

புரி மட மரையான் கரு நரை நல் ஏறு
தீம் புளி நெல்லி மாந்தி, அயலது
தேம் பாய் மா மலர் நடுங்க வெய்து உயிர்த்து,
ஓங்கு மலைப் பைஞ் சுனை பருகும் நாடன்
நம்மைவிட்டு அமையுமோ மற்றே - கைம்மிக
வட புல வாடைக்கு அழி மழை
தென் புலம் படரும் தண் பனி நாளே!

- மதுரைக் கண்டரதத்தன்

## 132. கதிரவனும் காதலனும்

காதலன் வெளியூர் செல்கிறான். பொருள் தேடுவதற்காக. "அவன் வரும் வரையில் நீ எப்படிப் பொறுத்திருப்பாய்?" என்று கேட்டாள் தோழி.

"இருப்பேன்" என்றாள் அவள். "மதி அவன். கடல் நான். மலை அவன். அருவி நான். சூரியன் அவன். சூரியகாந்தி மலர் நான்" என்றாள்.

"சந்திரனைக் கண்ட உடனேதான் கடல் பொங்கி ஆரவாரம் செய்யும். மற்ற நேரத்தில் அடங்கி இருக்கும். அந்த மாதிரி அவரைக் கண்டதும் காதல் பொங்கும். காணாத போது அடங்கியிருக்கும்."

"மலையிலேதான் அருவியானது குதித்து ஓடி ஒலிக்கும். இல்லாத இடத்திலே அமைதியாக ஓடும்."



"சூரியகாந்தியானது சூரியனையே பார்த்திருக்கும். அந்த மாதிரி. அவன் வரும் திசையையே நோக்கியிருப்பேன். அவனையே எண்ணியிருப்பேன்" என்றாள்.

எழுதரு மதியம் கடற் கண்டா அங்கு
ஒழுகு வெள் அருவி ஓங்கு மலை நாடன்
ஞாயிறு அனையன் - தோழி!
நெருஞ்சி அனைய என் பெரும் பணைத்தோளே.

- மதுரை வேளாதத்தன்

## 133. கள்ளி என் காதலி!

அவனும் அவளைக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள்.. இரவு நேரத்திலே இருவரும் சந்தித்தார்கள். இன்பமாக இருந்தார்கள். இது எவருக்கும் தெரியாது.

இரவிலே மலர் கொண்டு வருவான் அவன். அவளது கூந்தலிலே சூட்டுவான். மகிழ்வான். இன்பம் துய்ப்பான். வைகறையிலே எழுவான். போய்விடுவான். அவளும் எழுவாள். அவன் சூட்டிய மலர்களைக் களைந்து எறிவாள். கூந்தலைச் சீவி முடிவாள்; முகத்தை நன்றாகக் கழுவுவாள். நெற்றியிலே சாந்து இடுவாள். இரவு நடந்தது எவரும் அறியா வகையில் நடந்து கொள்வாள்.

பகல் நேரத்திலே அந்த இருவரும் இருப்பார்கள். ஆனால் அவளோ தனது காதலை வெளியே காட்டிக் கொள்ளவே மாட்டாள். 'அவன் யாரோ? அவள் யாரோ?' என்கிற மாதிரி நடந்து கொள்வார்கள். இரவு வந்தாலோ இருவரும் இணை பிரியாக் காதலர்! இதை எண்ணிப் பார்த்தான் அவன்.

"கள்ளி!" என்றது அவன் நா.

"என்ன சாகசம்! என்ன சாகசம்! என்ன நடிப்பு! ஆகா!" என்று வியந்தான்.

இரண்டு அறி கள்வி நம் காதலோளே;
முரண் கொள் துப்பின் செவ் வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து,
நள்ளென் கங்குல் நம் ஓரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்து,
சாந்து உளர் நறுங் கதுப்பு எண்ணெய் நீவி,
அமரா முகத்தள் ஆகித்
தமர் ஓரன்னள், வைகறையானே.

- கபிலர்

## 134. வாழையும் வேழமும்

மலைநாடு. அதிலே வாழை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அந்த வாழைத் தோட்டத்திலே புகுந்து திரிந்து வருகிறது ஆண் யானை. அப்படி வரும்போது என்னாகிறது? வாழையின் இளம் குருத்து இலைகள் யானையின் மத்தகத்தைத் தடவுகின்றன. அவ்விதம் தடவவே யானைக்கு மயக்கம் உண்டாகிறது. அருவிக் கரையிலே சென்று படுத்து அல்லற் படுகிறது. அந்த நேரத்திலே பெண் யானை என்ன செய்கிறது, தன் காதலன் முதுகைத் தடவிக் கொடுக்கிறது.

இந்த அருமையான காதல் காட்சியை அவளுக்கு எடுத்துச் சொல்கிறாள் தோழி. எதற்காக?

“மலைநாட்டிலே உள்ள யானைகளே இப்படிக் காதல் வாழ்வு வாழுமானால் மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? உன் காதலன் வருவான். உன்மீது கொண்ட காதலை ஒருநாளும் மறக்கமாட்டான். வருந்தாதே” என்று சொல்கிறாள்.

சோலை வாழைச் சுரி நுகும்பு இனைய
அணங்குடை இருந்தலை நீவலின், மதன் அழிந்து,
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்கு உயிர் மடப் பிடி உலைபுறம் தைவர,
ஆம் இழி சிலம்பின் அரிது கண்படுக்கும்
மா மலைநாடன் கேண்மை
காமம் தருவது ஓர் கை தாழ்ந்தன்றே.

- பெருந்தோட் குறுஞ்சாத்தன்



## 135. நேரில் காணேன் நெஞ்சில் காண்பேன்

இன்னும் அவர் வரவில்லையே! சொல்லடி, தோழி, நான் என்ன செய்வேன்! என்னால் தாங்க முடியவில்லையே! துன்பம் பொறுக்க முடியவில்லையே! உயிரை விட்டு விடலாமா! அதற்கும் பயமாக இருக்கிறதே! ஏன் அவர் வரவில்லை? ஊரார் கூறும் அலர் கண்டு அஞ்சி விட்டாரோ? இரவு நேரத்திலே எல்லாரும் தூங்கிய பின் நெஞ்சிலே காண்கிறேன். அவரை! ஆனால் நேரில் காண முடியவில்லையே? என்ன செய்வேன்?”

உரைத்திசின் - தோழி! - அது புரைத்தோ அன்றே?
அருந் துயர் உழத்தலும் ஆற்றாம்; அதன்தலைப்
பெரும்பிறிதாகல் அதனினும் அஞ்சுதும்;
அன்னோ! இன்னும், நல் மலை நாடன்,
‘பிரியா நண்பினர் இருவரும்’ என்னும்
அலர் - அதற்கு அஞ்சினன்கொல்லோ? பலர் உடன்
துஞ்சு ஊர் மாமத்தானும், என்
நெஞ்சத்து அல்லது வரவு அறியானே.

- மாங்குடி கிழார்

## 136. ஆசையும் மணி ஓசையும்

பனை மரத்திலே கூடு கட்டி வாழ்கிறது அன்றில். ஆணும் பெண்ணுமாக. அன்புடன் இணை பிரியாது இருக்கிறது. பெண் பறவை சூல் கொண்டு இருக்கிறது. இதுதான் முதல்சூல்.

இரவு நேரம். பெண் அன்றில் அழைக்கிறது ஆண் பறவையை. அடிக்கொரு முறை கூவி அழைக்கிறது. அப்படி அன்றில் அழைக்கும் குரல் அவளது காதிலே வந்து விழுகிறது.

காதலனை நினைத்துக் கொண்டே இருக்கிறாள். காதலன் வருவதுபோல் தோன்றுகிறது அவளுக்கு. அவனது தேரிலே கட்டிய மணி ஒலிப்பது போல் தோன்றுகிறது. விழித்துக் கொண்டு பார்க்கிறாள். ஆனால் காதலன் வரவில்லை. தூக்கமும் வரவில்லை.

இரவு முழுதும் தான் பட்ட அவதியைச் சொல்கிறாள் தனது தோழியிடம்.

முழவு முதல் அரைய தடவு நிலைப் பெண்ணைக்
கொழு மடல் இழைத்த சிறு கோற் குடம்பைக்
கருங் கால் அன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப் பெடை அகவும் பானாட் கங்குல்,
மன்றம் போழும் இன மணி நெடுந் தேர்
வாராது ஆயினும், வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில் துறந்தனவால் - தோழி! என் கண்ணே.

*- குன்றியன்*

## 137. 'புவனமே வரினும் பிரியேன்'

"*அன்பே!*" *என்றான்.*

"*இன்பமே*" *என்றாள்.*

"*தேனே*" *என்றான்.*

"*திரவியமே*" *என்றாள்.*

"*பிரியேன்*" *என்றான்.*

"*பிரிந்தால் உயிர் தரியேன்*" *என்றாள்.*

*அவளுடைய முகத்திலே வியர்வை அரும்பியது; கண்களில் கலக்கம் காட்சியளித்தது. நெஞ்சு 'பட பட' என்று துடித்தது. கை பிடித்த காதலன் கை விடுவானோ என்று அஞ்சினாள்.*

*கண்டான் அவன். அவளது கூந்தலைத் தடவினான். முகத்தைத் துடைத்தான்.*

"*குவளை மலர் மணம் வீசுகிறது நின் கரும் கூந்தலிலே! செக்கச்சிவந்த நின் வாயிலே தேன் சுவைக்கிறது! மை அழகி! என் மன மோகனாங்கி. அஞ்சாதே! கடல் சூழ்ந்த இந்நில உலகம் அப்படியே எனக்குக் கிடைப்பதாயினும் சரியே. உன்னைப் பிரியமாட்டேன்*" *என்றான்.*



குவளை நாறும் குவை இருங் கூந்தல்,
ஆம்பல் நாறும் தேம் பொதி துவர் வாய்,
குண்டு நீர்த் தாமரைக் கொங்கின் அன்ன
நுண் பல் தித்தி, மா அயோயே!
நீயே, 'அஞ்சல்' என்ற என் சொல் அஞ்சலையே;
யானே, குறுங் கால் அன்னம் குவவு மணற் சேக்கும்
கடல் சூழ் மண்டிலம் பெறினும்,
விடல் சூழலன் யான், நின்னுடை நட்பே.

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 138. 'ஆளை, ஆளைப் பார்க்கிறாள்!'

"*அதோ பாரடி அவனை!*"

"*என்ன செய்கிறான்?*"

"*பின்னாடியே வந்து கொண்டிருக்கிறான்.*"

"*வந்து என்ன செய்கிறான்?*"

"*என்னவோ போலப் பார்க்கிறான்; பல்லை இளிக்கிறான்*"

"*இளித்து விட்டுப் போகட்டுமே!*"

"*போகட்டுமா? ஒரு நாளா? இரண்டு நாளா? தினந் தோறும் வருகிறானே!*"

"*வரட்டுமே!*"

"*வரட்டுமா? தெருவிலே நம் பின்னே வந்து கொண்டே இருக்கிறான். வீட்டு வாசல் வரை வருகிறான். தெருவிலும் வருகிறான்.*"

"*என்ன வேண்டும் என்று கேட்டுத் தொலையேன்.*"

"*சொல்ல மாட்டேன் என்கிறானே. ஏதோ சொல்ல நினைக்கிறான். நெஞ்சை விட்டு வெளியே வரவில்லை வார்த்தை. ஆனால் என்னவோ இனிமையாகப் பார்க்கிறான்.*"

"*கள்ளுப் பானையைப் பார்த்துப் பார்த்து இன்புறும் குடிகாரன் போல நிற்கிறானோ!*"

''ஆமாண்டி!''

''ஐயோ பாவம்!''

சேரி சேர மெல்ல வந்து வந்து,
அரிது வாய்விட்டு இனிய கூறி,
வைகல் தோறும் நிலம் பெயர்ந்து உறையும் அவன்
பைதல் நோக்கம் நினையாய் - தோழி!
இன் கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண் கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப் பிடிப் பரிசில் மானப்
பிறிது ஒன்று குறித்தது, அவன் நெடும்புறநிலையே,

*- பரணர்*

## 139. கூண்டுக் கிளி

''என்னவோ அம்மா எனக்குத் தெரிந்தது இது. சொல்லி விட்டேன்'' என்றாள் தோழி.

''என்ன சொல்லேன்'' என்றாள் அவள்.

''இரண்டு பேரும் ஓடிப்போங்கள்.''

''எவர் இரண்டு பேரும்?''

''நீயும் உன் காதலனும்.''

''ஓடிப் போய்?''

''ஓடிப்போய், வேறு எங்கேயாவது கலியாணம் செய்து கொண்டு விடுங்கள்.''

''அப்படியா?''

''ஆமாம்''

''அவர் இதற்குச் சம்மதிக்க வேணுமே?''

''அவனும் இதையே சொல்வான். அதற்கு முன்னால் நான் சொல்கிறேன்.''

''ஏன்?''



''அவனுக்குப் பெண் கொடுக்க உன் பெற்றோர் சம்மதிக்க வில்லை''

''அப்படியா?''

''ஆம்.''

'அவ் விளிம்பு உரீஇய கொடுஞ் சிலை மறவர்
வை வார் வாளி விறற் பகை பேணார்,
மாறு நின்று எதிர்ந்த ஆறுசெல் வம்பலர்
உவல் இடு பதுக்கை ஊரின் தோன்றும்
கல் உயர் நனந் தலை, நல்ல கூறி,
புணர்ந்து உடன் போதல் பொருள்' என
உணர்ந்தேன்மன்ற, அவர் உணரா ஊங்கே.

*- காவிரிப்பூம் பட்டினத்துக்காரிக் கண்ணன்*

## 140. கனி உண்டவளும் காதல் கொண்டவளும்

குறுநில மன்னன் ஒருவன். பெயர் நன்னன் என்பது. அவனுக்கு உரிய மாந்தோப்பு ஒன்று. அத்தோப்பிலே மா மரங்கள் பல. இனிய சுவை தரும் மா. ஒருநாள் மாங்கனி ஒன்று நீரிலே மிதந்து வந்தது. அந்தச் சமயத்திலே அங்கே நீராடிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். மாங்கனியைக் கண்டதும் அதன்மீது ஆசை யுண்டாயிற்று அவளுக்கு. அந்தப் பழத்தைத் தின்றுவிட்டாள்.

நன்னனின் ஆட்கள் இதை அறிந்தார்கள் அந்தப் பெண்ணைக் கொண்டு போனார்கள். நன்னன் முன்னே நிறுத்தினார்கள். அவளைக் கொன்று போடும்படி உத்தரவு பிறப்பித்தான் நன்னன்.

அந்தப் பெண்ணின் தந்தை அறிந்தார் இதை. ஓடி வந்தார். ''பெண்ணின் நிறையுள்ள பொன் பாவையும் எண்பது யானை களும் அபராதமாகக் கட்டுகிறேன். பெண்ணைக் கொல்லாதே'' என்றார். நன்னன் கேட்கவில்லை. கொலை செய்யச் சொன்னான்.

''பெண் பாவம் பொல்லாதது. நன்னனைப் போலத் தன் பெண்ணை உயிரோடு கொல்கிறாள் தாய்'' என்றாள் தோழி.

ஏன்? அவளது காதலன் ஒருநாள் வந்தான். கண்டு கொண்டாள் தாய். அது முதல் சீறுகிறாள். ''பெண்ணை வீட்டுக்குள் போட்டுப்

பூட்டி வைத்திருக்கிறாள். கட்டும். காவலும், உருட்டலும், மருட்டலும் கொஞ்ச நஞ்சமல்ல,'' என்றாள்.

எதற்காக இவ்விதம் சொன்னாள்? அவளது காதலன் அறிய வேண்டும் என்பதற்காக. அறிந்து ஆவன செய்தல் வேண்டும் என்பதற்காக.

மண்ணிய சென்ற ஒள் நுதல் அரிவை
புனல் தரு பசுங் காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று - ஒன்பது களிற்றொடு, அவள் நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும், கொள்ளான்,
பெண் கொலை புரிந்த நன்னன் போல,
வரையா நிரையத்துச் செலீஇயரோ? அன்னை!
ஒரு நாள், நகை முக விருந்தினன் வந்தென,
பகை முக ஊரின், துஞ்சலோ இலளே. *- பரணர்*

## 141. பாட்டும் பைங்கிளியும்

தினைப்புனத்திலே காவல் காக்கிறாள் ஒரு பெண். பரண் கட்டியிருக்கிறது. அதன்மீது நின்று கிளிகளை ஓட்டுகிறாள். மூங்கிலால் வீணைபோல் செய்த கருவியைத் தெறித்து ஓட்டுகிறாள். பாட்டும் பாடுகிறாள்,

கிளிகள் பயந்து ஓடினால்தானே! ஓடவில்லை. அவளது பாட்டிலே மயங்கிக் கிடக்கின்றன. கிளிகள் பயந்து ஓடாதது கண்டாள் அவள். அழுதுவிட்டாள். அப்போது அவளது கண்கள் எப்படியிருந்தன? சுனையிலே மலர்ந்த குவளைமலர்கள் மழைத் துளிகளை ஏந்தியிருப்பன போல் இருந்தன.

சுடு புன மருங்கில் கலித்த ஏனற்
படுகிளி கடியும் கொடிச்சி கைக் குளிரே
இசையின் இசையா இன் பாணித்தே;
கிளி, 'அவள் விளி' என, விழல் ஒவாவே;
அது புலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டு நீர்ப் பைஞ் சுனைப் பூத்த குவளை
வண்டு பயில் பல் இதழ் கலைஇ,
தண் துளிக்கு ஏற்ற மலர் போன்றவ்வே *- கபிலர்*



## 142. துன்பத்தில் இன்பம்

வெளியூர் சென்றிருந்தான் அவன். வர நாள் சென்றது. 'எப்பொழுது வருவானோ?' என்று ஏங்கிக் கொண்டிருந்தாள் அவள். ஒரு நாள் வந்துவிட்டான். வரவு அறிந்தாள் அவள். ஆனால் அது தெரியாது தோழிக்கு.

"கொஞ்சங்கூட அன்பில்லை அவருக்கு. இப்படி உன்னை வருத்தலாமா?'' என்றாள்.

"போடி! இது ஒரு துன்பமா? துன்பம்போல் தோன்றும். முடிவில் இன்பமாகவே இருக்கும். இதுக்கு ஈடு எது சொல்? இதைவிட இனியது எனக்கு வேறு எதுவுமே இல்லை. அந்தத் தேவலோகம்கூட இல்லை'' என்றாள்.

கறி வளர் அடுக்கத்து ஆங்கண், முறி அருந்து
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங் கல் நாடன்
இனியன்; ஆகலின், இனத்தின் இயன்ற
இன்னாமையினும், இனிதோ
இனிது எனப்படூஉம் புத்தேள் நாடே?

*- கபிலர்*

## 143. உருசி கண்டவன்!

"ஆகா! என்ன என்று சொல்வேன்! என்ன அழகு! என்ன அழகு! அகில் மணக்கும் கூந்தல்! ஆரம் மணக்கும் கூந்தல். கன்னங்கரேல் என்ற கூந்தல்! பவழச் செவ்வாய்! முல்லை முறுவல்! முறுக்கும் செருக்கும் நிறைந்த பார்வை! கொள்ளை கொள்ளும் விழிகள்! அவளது தோற்றம் என் கண்முன் அப்படியே நிற்கிறதே! அகலவில்லையே! அரைக் கணமும் மறக்கு தில்லையே இந்தப் பாழும் மனம்! ஆகா! அந்தப் பல்வரிசையைச் சொல்வேனோ! அந்த இதழில் ஊறிய இன்பத்தைச் சொல்வேனோ? எதைத்தான் சொல்வேன்!''

உள்ளிக் காண்பென் போல்வல் - முள் எயிற்று
அமிழ்தம் ஊறும் செவ் வாய், கமழ் அகில்
ஆரம் நாறும் அறல் போல் கூந்தல்,
பேர் அமர் மழைக்கண், கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே.

*- எயிற்றியனார்*

## 144. அலரும் அறியாமையும்

“எனக்கு ஒரே கவலையாக இருக்கு” என்றாள் அவள்.

“ஏன், என்ன கவலை?” என்று கேட்டாள் தோழி.

“வெளியூர் சென்றிருக்கிறவர் வருவாரோ மாட்டாரோ?”

“வராமல் எங்கே போவார்?”

“ஊரிலிருந்து வரமாட்டார் என்றா நான் சொன்னேன்? வரைந்து செல்ல.”

“வருவார்; வருவார்”

“நாளாகி விட்டால். . .”

“அதனால் என்ன?”

“இந்த ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்குமே அஞ்சுகிறேன்.”

“அஞ்சாதே, ஊராருக்கு என்ன புத்தியில்லையா? அவன் நேர்மையாக நடந்து கொள்ளாவிட்டால் அதற்காக நம்மை ஏசுவாரா? ஏசினால் அவர்களுக்கு அறிவில்லை என்று பொருள்.”

பொருத யானைப் புகர் முகம் கடுப்ப,
மன்றத் துறுகல் மீமிசைப் பல உடன்
ஒண் செங் காந்தள் அவிழும் நாடன்
அறவன் ஆயினும், அல்லன் ஆயினும்,
நம் ஏசுவரோ? தம் இலர்கொல்லோ?
வரையின் தாழ்ந்த வால் வெள் அருவி
கொன் நிலைக் குரம்பையின் இழிதரும்
இன்னாது இருந்த இச் சிறுகுடியோரே.

*- மிளைவேள் தித்தன்*



## 145. ‘அப்புறம் அரை நாள் வாழ்வும் வேண்டேன்!’

குறிஞ்சி நாட்டு இளைஞன் ஒருவன். செல்வர் குடியிலே பிறந்தவன். ஆற்றின் கரையருகிலே ஒரு பெண்ணைக் கண்டான். கண்டதும் காதல் கொண்டான். அவளோ, கண்டவர் காமுறும் காரிகை. குறு நகையாள்; இளவழகி.

அவளையே நினைத்து நினைத்து ஏங்குகிறான் குறிஞ்சி நாட்டு இளவல். ஊண் செல்லவில்லை; உறக்கம் கொள்ள வில்லை. உன்மத்தன் ஆனான். கண்டான் அவனது தோழன்.

“என்ன இது? மலை நாட்டு வீரன் செய்யும் காரியமா? எங்கேயோ, ஒருத்தியைக் கண்டானாம். காதல் கொண்டானாம். கசிந்து உருகுகிறான். பயித்தியம் பிடித்து விட்டதா?” என்றான்.

“நண்பா! என்ன சொல்வேன் உனக்கு. என் நெஞ்சு என்வச மில்லை, அவள் கொண்டு போய்விட்டாள். என்ன அழகு! என்ன அழகு! என் கண் முன் அப்படியே நிற்கிறாளடா! அவளிடம் -ஒரு நாள் - ஒரு நாள் - போதும் - போதும். அப்புறம் எனக்கு இந்த உயிரே வேண்டியதில்லை. அரை நாள் கூட வாழ வேண்டாம். சாகத் தயார்.”

கேளிர்! வாழியோ, கேளிர்! நாளும் என்
நெஞ்சு பிணிக் கொண்டஅம் சில் ஓதிப்
பெருந்தோட் குறுமகள் சிறு மெல் ஆகம்
ஒரு நாள் புணரப் புணரின்,
அரை நாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.

*- நக்கீரர்*

## 146. வஞ்சினமும் வாலிபமும்

அவளும் காதலித்தாள். அவனும் காதலித்தான். இருவரும் இன்பமாகப் பொழுது போக்கினர். அவன் வருவான் பகல் நேரத்திலே. பஞ்சாய்க் கோரையைப் பிடுங்குவான். பாவை செய்வான். அவளுக்குப் பரிசளிப்பான். அவளும் அதை ஏற்று மகிழ்வாள்; விளையாடுவாள்

அவளது தோளைத் தொட்டுத் தொய்யில் எழுதுவான் அவன். அவளும் அதைப் பார்த்து ஆனந்தம் அடைவாள். இது

எவருக்கும் தெரியாது. இரகசியம். தோழிக்குக் கூடத் தெரியாது. இவ்வளவும் தினைப்புனத்திலே நடந்தது.

காவல் முடிந்தது. வீட்டுக்குப் புறப்படுகிறாள் அவள். வீட்டிலே அவளைச் சந்திப்பது எப்படி? தோழியின் தயவு இல்லாமல் முடியாது. எனவே தோழியிடம் போனான் அவன். தனது காதல் உள்ளத்தைத் திறந்து காட்டினான். ஒரு முறையல்ல; பல முறை. ஆனால் தோழியோ சிறிதும் விட்டுக் கொடுக்க வில்லை. 'போடா போ!' என்று கூறி விட்டாள்.

கோபம் கொண்டான் அவன்.

"சரி சரி. இப்படியா சொல்கிறாள்? இருக்கட்டும். நான் மடலேறி வருகிறேன். ஊராரிடம் உண்மையைச் சொல்கிறேன். இவளுக்கு நான் பாவை பண்ணிக் கொடுத்ததையும், தோள் தொட்டு தொய்யில் எழுதியதையும் பகிரங்கமாகச் சொல்கிறேன். அப்போது இந்தத் தோழி என்ன செய்வாள்? என்னை எப்படித் தடுப்பாள்? அதையும் பார்த்து விடுகிறேன்." என்று வஞ்சினம் கூறினான்; போனான்.

பணைத் தோட் குறுமகள் பாவை தைஇயும்,
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும், மற்று - இவள்
உருத்து எழு வன முலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்,
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான் தற் கடவின் யாங்கு ஆவதுகொல்?
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானே - இவ் அழுங்கல் ஊரே!

- *கோழிக் கொற்றன்*

## 147. தங்கையின் கணையும் தமையன்மார் கணையும்

"இது ஒன்றும் நன்றாக இல்லை" என்றான் நண்பன்.

"எது?" என்றான் அவன்.

"நீ செய்வது?"

"என்ன செய்து விட்டேன்?"



"இப்படி மனதை அலைய விடலாமா?"

"அந்தப் பெண்ணைப் பற்றித்தானே சொல்கிறாய்?"

"ஆமாம்!"

"நண்பா! நீ விஷயம் தெரியாமல் சொல்கிறாய். ஏதோ அருவிக்கரையில் நின்றுகொண்டிருந்த பெண். அவள்மீது நான் மோகம் கொண்டு விட்டேன் என்றுதானே சொல்கிறாய்!"

"ஆமாம்"

"அது தவறு. மலை நாட்டினர்களில் செல்வர் வீட்டுப் பெண் அவள். அவளது சகோதரர்கள் மிகவும் கெட்டிக் காரர்கள்; வீரர்கள். வில் வல்லவர்கள். எப்போதும் செங்குருதி படிந்த அம்பும் வில்லுமாகவே தோன்றுவார்கள். அந்த அம்பு போன்ற கண்ணுடையவள் அவள். அவளை அடைவது எளிதல்ல நண்பா! எளிதல்ல!"

தீண்டலும் இயைவதுகொல்லோ - மாண்ட
வில்லுடை வீளையர் கல் இடுபு எடுத்த
நனந் தலைக் கானத்து இனம் தலைப்பிரிந்த
புன்கண் மட மான் நேர்பட, தன்னையர்
சிலை மாண் கடு விசைக் கலை நிறத்து அழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறு கொண்டன்ன உண்கண்,
நாறு இருங் கூந்தல், கொடிச்சி தோளே!

- *ஒரு சிறைப் பெரியன்*

### குறிஞ்சித் தொகை முற்றும்

● ● ●

# பாலைத் தொகை

## பாலைக் கண்ணாடி

| | | | |
|---|---|---|---|
| *1.* | தெய்வம் | : | துர்க்கை |
| *2.* | உயர்ந்தோர் | : | விடலை, காளை, மீளி, எயிற்றி |
| *3.* | தாழ்ந்தோர் | : | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| *4.* | பறவை | : | புறா, பருந்து, எருவை, கழுகு |
| *5.* | விலங்கு | : | செந்நாய் |
| *6.* | ஊர் | : | குறும்பு |
| *7.* | நீர் நிலை | : | பாழுங் கிணறு, நீர் வற்றிய நிலைகள் |
| *8.* | மலர் | : | குராம்பூ, மராம்பூ |
| *9.* | மரம் | : | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை |
| *10.* | உணவு | : | வழிப்பறிப் பொருள்கள், திருடிய பொருள்கள் |
| *11.* | பறை | : | துடி |
| *12.* | யாழ் | : | பாலை யாழ் |
| *13.* | பண் | : | பஞ்சுரம் |
| *14.* | தொழில் | : | போரிடுதல், பகற் கொள்ளையடித்தல் |

### பாலை என்பது என்ன?

பழந் தமிழ்ப் பெருமக்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார்கள் அல்லவா? அந்தப் பிரிவில் ஒன்றுதான் பாலை என்பது.

பாலை என்பது ஒரு தனி நிலம் அன்று. இயற்கையின் சீற்றத்தினாலே உருக்குலையப் பெற்ற நிலமே பாலை. மலைப் பாங்கான பகுதிகள் பாலை நிலமாதலும் உண்டு. காட்டுப் பகுதிகள் பாலை நிலமாதலும் உண்டு!

பாலை நிலத்திலே வாழும் உயர் குடி மக்கள் எவ்வாறு அழைக்கப் பெறுவர்? ஆண்கள் விடலை, காளை என்று அழைக்கப் பெறுவர். பெண்களுக்கு எயிற்றி, மீளி என்று பெயர். மற்ற குடிப் பிறந்தோருள் ஆண்களுக்கு எயினர் என்றும் மறவர் என்றும் பெயர்; பெண்களுக்கு மறத்தியர் என்றும் எயிற்றியர் என்றும் பெயர்.

புறா, பருந்து, கழுகு - இவை பாலை நிலத்துப் பறவைகள்.

செந்நாய்தான் பாலை நிலத்திலே காணப்படும் விலங்கு.

இந்நிலத்து மக்கள் வாழ்ந்த குடியிருப்புகளுக்குக் குறும்பு என்று பெயர். நீர் வற்றிய குழிகளையும் கிணறுகளையும் இங்கே காணலாம்,

குராம் பூ, மராம் பூ - இவையே இந்நிலத்துப் பூக்கள். உழிஞை, பாலை, ஓமை, இருப்பை முதலியன இங்கே காணப்படும் மரங்கள்.

போர் செய்தல், பகற் சூறையாடல், வழிப்பறி, திருட்டு - இவையே இந் நில மக்களின் தொழில். இத் தொழில் செய்து பெற்றதைக் கொண்டு உண்டு உயிர் வாழ்வர்.

இந் நிலமக்களின் இசைக் கருவிகள் இரண்டு. ஒன்று: யாழ். மற்றொன்று: பறை. யாழுக்குப் பாலையாழ் என்று பெயர். பறைக்கு, துடி என்று பெயர். இவர் தம் இசை: பஞ்சுரம்.

பாலை நிலத்தின் தெய்வம் கன்னி; அதாவது துர்க்கை



## 148. கட்டும் வெட்டும்

பருவம் வந்த பெண் அவள். கண்கள் நாலா பக்கமும் சுழல்வது இயற்கைதானே! கண்கள் சுழன்றன. அந்தச் சுழலில் சிக்கினான் அவன். இருவரும் இன்பமாக இருந்தனர். இது எவருக்கும் தெரியாது.

“என்னோடு வருகிறாயா?” என்று கேட்டான் அவன்.

“வருகிறேன்” என்றாள் அவள்.

“எப்போது?”

“இரவு”

“நான் வரட்டுமா?”

“வா”

“எங்கே வந்து நிற்க?”

“கொல்லைப்புறத்திலே. வேலிக்கு அருகே. வெளியிலே.”

“சரி”

அமாவாசை இருட்டு. கன்னங்கரிய இருள். நடு நிசி. அவன் வந்தான். வேலிக்கு வெளியே உடம்பைப் போர்த்தி மூடி நின்றான்.

வீட்டுக்குள்ளே படுத்திருந்தாள் அவள். அவள் அருகே செவிலித் தாயும் படுத்திருந்தாள். இருவரும் ஒரே படுக்கையில் தான் படுப்பது வழக்கம். குழந்தை முதல் அவளைக் கட்டி அணைத்த வண்ணம் படுத்துத் தூங்குவாள் செவிலி. அன்றும் அதே மாதிரி படுத்திருந்தாள்.

இது பெரிய சிறையாயிற்றே! இதிலிருந்து தப்புவது எப்படி? யோசித்துக் கொண்டே படுத்திருந்தாள் அந்தக் கள்ளி.

"உஸ்" என்று, சொல்லிப் புரண்டு படுத்தாள். செவிலித்தாய் தன்னை அணைத்திருந்தாளே, அந்தக் கையை எடுத்து அப்பால் போட்டாள்.

'என்னடி, ஏன்?' என்று கேட்டாள் செவிலி.

"வேர்க்கிறது" என்றாள்.

பாவம்! அப்பாவி! செவிலித் தாய்! மெய்தான் போலும் என்று நினைத்தாள். அயர்ந்து குறட்டை விட்டுத் தூங்கினாள்.

மெதுவாக உருண்டாள். அப்பால் போய்ப் படுத்தாள் அவள். செவிலி விழித்துக் கொள்கிறாளா பார்க்கலாம் என்று.

ஓடிப் போவதற்கு அவள் சதி செய்கிறாள் என்பது செலிவிக்குத் தெரியுமா? தெரியாது. சிறிதும் சந்தேகமின்றித் தூங்கினாள் அவள்.

எழுந்தாள் அவள். பூனைபோல் மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்தாள். கொல்லைக் கதவை மெதுவாகத் திறந்தாள். வெளியேறினாள். வேலிக்கருகே காத்திருந்தான் அவன். வேடன் கண்ணி வைத்துக் காத்திருப்பது போல. புறாவும் சிக்கியது. இருவரும் ஓடினர்!

பொழுது விடிந்தது. எழுந்தாள் செவிலி. அருகில் பார்த்தாள். அவளைக் காணோம். கொல்லைப்புறம் பார்த்தாள். கதவு திறந்திருந்தது. சந்தேகப் பட்டாள். "இருக்கட்டும், பார்க்கலாம்" என்று நினைத்தாள். பகல் வந்தது. அவளைக் காணோம்.

"எங்கே அவள்!"

எல்லாரும் ஒரே குரலில் வினவினர்.

"இராத்திரி நான் அவளைக் கட்டியணைத்துப் படுத்திருந்தேன்."

"உம்" என்றாள் தாய்.

"கையை எடுத்து அப்பால் போட்டாள். 'என்னடி' என்றேன். 'வியர்க்கிறது' என்றாள் கபடமின்றி நம்பினேன் நான்."

"சரிதான். ஓடிப் போகிறதுக்கு வழி செய்திருக்கிறாள்" என்றாள் தாய்.



"அது இப்போதுதானே எனக்கு விளங்குகிறது" என்றாள் செவிலி.

பெயர்த்தனென் முயங்க, 'யான் வியர்த்தனென்' என்றனள்;
இனி அறிந்தேன், அது துணி ஆகுதலே
கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி,
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே.

- *மோசிகீரன்*

## 149. சென்றவரும் கண்டவரும்

அவன்மீது காதல் கொண்டாள் அவள். அவனும் அவளைக் காதலித்தான். இது பெற்றோருக்குத் தெரியாது.

"எங்கேயாவது ஓடிப் போகலாமா?" என்று கேட்டாள் அவள்.

"எங்கே?" என்றான் அவன்.

"நீ எங்கே அழைத்துச் சென்றாலும் சரி" என்றாள்.

"நிஜமாகவா?"

"சத்தியமாக"

"அப்படியானால் சரி"

"புறப்படவா?"

"புறப்படு"

பட்சிகள் இரண்டும் புறப்பட்டன. அப்படி ஒன்றும் அதிக வயது ஆகவில்லை. இளம் வயதுதான். காலிலே கட்டிய வீரக் கழலை இன்னும் அவிழ்க்கவில்லை அவன்.

அவளோ தன் கால் சிலம்பைக் கழற்றவில்லை. கரும்பைக் கையிலே கொண்டு செல்பவனைப்போல் சென்றான்.

பாலை நிலம். அதைக் கடந்து செல்கின்றனர். எவரும் அஞ்சும் பாலை. இளங் கன்றுகள் இரண்டும் பயம் அறியாது செல்கின்றன. எதிரே சிலர் வந்தனர்; கண்டனர்.

"பார்த்தியா?"

"பார்த்தேன்; சிறு வயசு; போகிறார்கள்"

"அவள் காலைப் பார்த்தியா?"

"பார்த்தேனே!"

"என்ன கண்டாய்?"

"கால் சிலம்பு கழற்றவில்லை."

"அவன் காலிலே?"

"வீரக் கழல் கண்டேன்"

"கையிலே? . . . . "

"வில் கண்டேன்"

"பெற்றோருக்குத் தெரியாதுபோல் இருக்கு, பயல் அவளைக் கொண்டு செல்கிறான்."

"ஐயோ பாவம்! போகட்டும். சிறு வயது. நன்றாக வாழட்டும்" என்று வாழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியை அழகாகச் சொல்கிறார் கவி

வில்லோன் காலன கழலே! தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே! நல்லோர்
யார் கொல்! அளியர் தாமே! ஆரியர்
கயிறு ஆடு பறையின் கால் பொரக் கலங்கி
வாகை வெள் நெற்று ஒலிக்கும்
வேய் பயில் அழுவம் முன்னியோரே.

- பெரும்பதுமனார்

### 150. கனவும் காதலனும்

"என்னடி! ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"

"எப்படி இருக்கிறேன்?"

"கண் எப்படியோ இருக்கே?"

"ராத்திரி தூக்கமில்லை"



"ஏன் தூங்கவில்லை?"

"கனவு கண்டேன்"

"அப்படிச் சொல்லு! என்ன கனவு?"

"சொல்லவா, போடி, வெட்கமா இருக்கு!"

"என்னடி வெட்கம்! சும்மாச் சொல்லு"

"இராத்திரி தூக்கத்திலே. . . "

"உம். தூக்கத்திலே என்ன? . . . "

" ஆகா! இன்பக் கனவு! இன்பக் கனவு!"

"சரிதானடி, அந்த இன்பத்தை நீயே நினைத்து நினைத்துக் கொண்டிருந்தால் எப்படி? எனக்கும்தான் கொஞ்சம் சொல்லேன்."

"இரவு, வந்தாரடி"

"யார் வந்தார்?"

"போடி! எல்லாம் சொல்ல வேணுமாக்கும்"

"உன் காதலனா. . . .சரி, சரி. சொல்லு"

"கண்ணே! என்றான். கட்டி அணைத்தான். . . . "

"உம். நீ என்ன செய்தாய்?"

"பேசாதிருந்தேன்"

"ஊமையா! பேசாதிருக்க"

"ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்! அதனால் பேசா திருந்தேன்."

"இன்ப உருவே என்றான். இறுகத் தழுவினான்."

"நீ"

"பக்கத்தில் தடவினேன்."

"உம்"

"அவனைக் காணவில்லை. அப்போதுதான் நான் கண்டது கனவு என்று அறிந்தேன். என்ன செய்வேன்! ஏங்கினேன்! கண்ணைக் கசக்கினேன்; விழித்தேன். வண்டுகள் உழக்கிய குவளை மலர் போலாயிற்று என் கண்."

கேட்டிசின்! வாழி! தோழி! அல்கல்
பொய் வலாளன் மெய்யுறன் மரீய
வாய் தகை பொய்க்கனா மருட்ட, ஏற்று எழுந்து
அமளி தைவந்தனனே! குவளை
வண்டு படும் மலரில் சாய்
தமியேன், மன்ற, அளியேன் யானே.

*- கச்சிப்பேட்டு நன்னாகையார்*

## 151. புல் நீரும் கண் நீரும்

"பனிக்காலம். இரவு முழுதும் பனி பெய்கிறது. அருகம் புல்லின் நுனியிலே அந்தப் பனி தூங்குகிறது. மாலை அறுந்தால் எப்படி முத்துக்கள் சிதறுமோ அப்படிச் சிதறிக் கிடக்கிறது பனி. அப்படிப் பனி உறைந்த அருகம் புல்லை மேய்ந்து கொண்டிருக்கிறது பசு.

காதலனைப் பிரிந்ததால் இரவு முழுதும் தூக்கமின்றி இருந்த அவள் இதைப் பார்க்கிறாள்; புலம்புகிறாள்.

"என்னுடன் இருந்து இன்பம் தரவேண்டிய இந்தக் குளிர் காலத்திலே என்னைப் பிரிந்து போய்விட்டாரே! போனவர் விரைவில் வரக் கூடாதோ? எவ்வளவு நாளாயின! இன்னும் எவ்வளவு நாள் நான் தனிமையில் வாடுவேன்; தவிப்பேன்; கண்ணீர் உகுப்பேன்?"

அம்ம வாழி, தோழி! காதலர்
நூல் அறு முத்தின் தண் சிதர் உறைப்ப,
தாளித் தண் பவர் நாள் ஆ மேயும்
பனி படு நாளே, பிரிந்தனர்;
பிரியும் நாளும் பல ஆகுபவே!

*- காவன் முல்லைப் பூதனார்*



## 152. பாலும் பாழும்

"அதோ பார்" என்றாள் அவள்.

"எதோ?" என்றாள் தோழி.

அங்கே நின்று கொண்டிருந்த பசுவைச் சுட்டிக் காட்டினாள். நல்ல பசு. கொழு கொழு என்று வளர்ந்த பசு. நன்றாகப் புல் மேய்ந்து, பசியாறி, வயிறு நிரம்பி வருகிறது, தன் கன்றைத் தேடி. கன்றைக் காணோம். கன்றை நினைக்கிறது பசு. நினைத்த உடனே அதன் மடிக் காம்பிலிருந்து பால் சொரிகிறது. அவ்விதம் சொரிந்த பால், கீழே ஓடுகிறது; கால் எடுத்து ஓடுகிறது. அதைக் காட்டுகிறாள்.

"ஐயையோ! கன்றும் குடிக்கவில்லை. கலத்திலும் கொள்ள வில்லையே! பால், வீணாகிறதே!" என்றாள் தோழி.

"கன்றும் உண்ணாது. . . கலத்தினும் படாது. . ." என்று முணுமுணுத்தது அவளது வாய்.

"பாழாகிறதே! பால் பாழாகிறதே!" என்றாள் தோழி.

"அதுபோல . . . " என்றாள் அவள்.

"அது போல என்ன?"

"எனக்கும் ஆகாது . . . . . என்னைக்கும் உதவாது . . . . " என்று பாடினாள் . . . அவள்.

"எது?" என்று கேட்டாள் தோழி.

"என் கவினே" என்றாள் அவள்.

"ஆமாம்! ஐயோ! உன் அழகு பாழாகிறதே. உடம்பு பசலை கொண்டு விட்டதே. உனக்கும் பயனில்லை. உன் காதலனும் உன் அழகை அனுபவிக்கவில்லை!"

"அவர்தான் இல்லையே!" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் அவள்.

"மாந்தளிர் போன்ற உனது மேனியழகை அவன் இன்புற வேண்டும். அது கண்டு நீ இன்புற வேண்டும். இரண்டும் இல்லையே. பாழாகிறதே!" என்றாள் தோழி.

*மெல்லிய குரலில் அவ்விருவரும் பாடினர்; திரும்பத் திரும்பப் பாடினர்; மாறி மாறிப் பாடினர்.*

*"கன்றும் உண்ணாது . . . . கலத்தினும் படாது. . . . "*

*"எனக்கும் ஆகாது . . . என்னைக்கும் உதவாது . . . . "*

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல் ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீயர் வேண்டும்
திதலை அல்குல் என் மா மைக் கவினே.

*- வெள்ளி வீதியார்*

## 153. 'முட்டவோ? மோதவோ?

*"ஐயோ! நான் என்னடி செய்வேன்? என்னால் தாங்க முடியவில்லையே!" என்றாள்.*

*"என்னடி! என்ன?" என்றாள் தோழி.*

*"சுவர் மீது 'நறுக்கு நறுக்' கென்று முட்டிக்கொள்ளட்டுமா?"*

*"பைத்தியமா?"*

*"கல்லைத் தூக்கித் தலையிலே 'மொட்'டென்று இடித்துக் கொள்ளட்டுமா?"*

*"எதுக்காகடி?"*

*"தூக்கம் வரவில்லையே! மனம் அலையுதே! நிம்மதியில்லையே! நெஞ்சு என்னவோ பண்ணுதே. அழுகை அழுகையாக வருகுதே!*

*"பொறு; பொறு."*

*"ஐயோ! அப்பா! என்று கத்த வேணும் போலிருக்கே! கத்தட்டுமா? கதறட்டுமா?"*

*"அப்பாவும் அம்மாவும் நிம்மதியாகத் தூங்குகிறார்களே! என் துன்பத்தைக் கேட்பாரில்லையே! காண்பாரில்லையே! நான் என்னடி செய்வேன். இன்னும் காதலர் வரவில்லையே!"*



முட்டுவேன் கொல்! தாக்குவேன் கொல்!
ஓரேன்! யானும் ஓர் பெற்றி மேலிட்டு
'ஆ ஒல்' எனக் கூவுவேன் கொல்!
அலமரல் அசை வளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.

*- ஔவையார்*

## 154. கிட்டிய பெண்ணும் கட்டிய தாலியும்

*அவள் அவன் மீது காதல் கொண்டாள். அவனும் அவளைக் காதலித்தான்.*

*"வருகிறாயா?" என்று கேட்டான்.*

*"எங்கே?" என்றாள்.*

*"என்னோடு" என்றான்*

*"ஓ, சரி" என்றாள் அவள்.*

*இரவு வந்தது. எல்லாரும் தூங்கி விட்டனர். அவள் தூங்க வில்லை. படுக்கையிலே தலையணையை வைத்தாள். அதன் மீது போர்த்தினாள். யாராவது பார்த்தால் தூங்குவதாக எண்ணிக் கொள்ளட்டும் என்று. மெதுவாக இருமினாள். யாராவது விழித்துக் கொள்கிறார்களா என்று பார்ப்பதற்காக. யாரும் விழித்துக் கொள்ளவில்லை. கொல்லைக் கதவைத் திறந்தாள். வெளியே வந்தாள். வேலி அருகே அவன் நின்று கொண்டிருந்தான். இருவரும் வேகமாக ஓடினர்.*

*பொழுது விடிந்தது. படுக்கையைப் பார்த்தார்கள். அவளைக் காணோம். எங்கேயாவது குளத்தங்கரைக்குப் போயிருப்பாள் என்று எண்ணியிருந்தனர். நேரம் ஆயிற்று; அவளைக் காணோம். எங்கே அவள் என்று தேடினர்.*

*"ஏன் தேடுகிறீர்கள்? பட்சி பறந்து போயிற்று" என்றாள் தோழி.*

*"அப்படியா?" என்றாள் செவிலி.*

*"ஓடிப் போய் விட்டாளா?" என்றாள் தாய்.*

"ஓடு! பிடி! விடாதே!" என்று சீறினர் சிலர்.

"சும்மா ஏன் பதறுகிறீர்கள். இவ்வளவு நேரம் தாலி கழுத்தில் ஏறியிருக்கும்" என்றாள்.

"ஏறியிருக்குமா?"

"ஆலமரத்தடியிலே நாலு ஊரார் கூடிச் செய்த திருமணம் போலத்தானோ?"

"ஆம், அப்படியே தான்."

"மேளதாளம் உண்டோ?"

"உண்டு."

பறைபடப் பணிலம் ஆர்ப்ப, இறை கொள்பு
தொல் மூது ஆலத்து, பொதியில் தோன்றிய
நாலூர் கோசர் நன் மொழி போல
வாயாகின்றே! தோழி! ஆய் கழல்
சே இலை வெள் வேல் விடலை யொடு
தொகு வளை முன் கை மடந்தை நட்பே.

- *ஔவையார்*

## 155. வாழ்வும் வருத்தமும்

"ஏன் அழறே!" என்று கேட்டாள் தோழி.

"நான் என்னடி செய்வேன்?"

"ஏன்? என்ன வந்துவிட்டது உனக்கு?"

"எப்படிப் பிரிந்து வாழ்வேன்?"

"பிரிந்து ஏன் வாழ வேண்டும்?"

"அவர் போகப் போகிறார்"

"எங்கே?"

"பொருள் தேட"

"போடி பயித்தியம்! போனால் உன்னையும் உடன் அழைத்துக் கொண்டு போக மாட்டாரோ! தனியாக உன்னை விட்டு



எவர்தான் போவார்? அதெல்லாம் ஒன்றும் போக மாட்டார். கவலைப் படாதே! கண்ணீரைத் துடை!" என்றாள் தோழி.

நீர் வார் கண்ணை! நீ இவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே! சாரல்
சிலம்பு அணி கொண்ட வலம் சுரி மராத்து
வேனில் அம்சினை கமழும்
தேம் ஊர் ஒள் நுதல்! நின்னொடும் செலவே.

- *சேரமான் எந்தை*

## 156. 'நொந்தனையோ? நிந்தனையோ?

காதலன் வெளியூர் போகிறான். பொருள் தேடிவர. அதைக் கேட்டாள் காதலி. மனம் நொந்து போனாள். வருந்தினாள். புலம்பினாள். துக்கத்தின் எல்லைக்குச் சென்று விட்டாள்.

"நிச்சயம்தானா?"

"எது?"

"போவது"

"எங்கே?"

"வெளியூருக்கு"

"எதற்காக?"

பொருள் தேடிவர"

"நிச்சயம்தான்; நிச்சயம்தான்" என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

"உம்; அன்பு இருந்தால் போவாரா? ஐயோ! நம்மைப் பிரிந்து இவள் வருந்துவாளே என்ற இரக்கம் இருந்தால் இப்படிக் கல்நெஞ்சனாகப் போவாரா?

"இந்த மாதிரி மனிதர்தான் அறிவுடையவராம். இருக்கட்டும் இருக்கட்டும். இவர் அறிவுடையவர் என்றால் அவ்விதமே இருக்கட்டும். நாம் அறிவில்லாதவராகவே இருப்போமே.

அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து
பொருள் வயிற் பிரிவோர் உரவோராயின்
உரவோர், உரவோர் ஆக
மடவம் ஆக, மடந்தை நாமே!

*- கோப்பெருஞ் சோழன்*

## 157. பல்லியும் பாலையும்

“ஏன் வாட்டமாயிருக்கிறாய்?”

“ஒன்றுமில்லையே!”

“ஒன்றுமில்லையா? கண் குழி விழுந்து கிடக்கிறது.”

“இராத்திரி யெல்லாம் தூக்கமில்லை.”

“ஏன் தூக்கமில்லை?”

“கொசுக்கடியா?”

“இல்லை; இல்லை”

“புழுக்கமோ?”

“அதெல்லாம் ஒன்றுமில்லை.”

“அப்போ! தூக்கம் வராததற்குக் காரணம்?”

“காரணத்தையெல்லாம் அப்படியே புட்டுச் சொல்ல வேண்டுமாக்கும்.”

“ஓ! அப்படிச் சொல்லு. காதலனை நினைத்து வருத்தமோ! ஐயோ! பாவம். சிறிசு! நீ என்ன செய்வாய்? காதலனுடன் சுகித்திருக்க வேண்டிய வயது. அவனோ? பொருள் தேடி வர வெளியூர் போயிருக்கிறான். கவலைப்படுவது சகஜம் தானே! அதனால்தான் தூக்கம் வரவில்லை” என்றாள் தோழி.

அவள் கண்ணீர் சொரிந்தாள். முத்து முத்தாக நீர்த் திவலைகள் உருண்டு ஓடின.

“டக் டக்” என்ற சப்தம்.

“என்னது?” என்று கேட்டாள் அவள்.



“பல்லி சொல்கிறது” என்றாள் தோழி.

“கள்வர் தம் கருவிகளையெல்லாம் உலையிலே போட்டுப் புரட்டி அடிப்பது போல் இருக்கிறதே.”

“அது அந்தப் பாலை வனத்தில் அல்லவா!” என்றாள் தோழி.

“ஆம் அங்கேதான் சொல்கிறேன். அங்கேயுள்ளவர்கள் உலையிலே போட்டுக் காய்ச்சி தங்கள் ஆயுதங்களைச் சரி செய்வார்கள்.”

“அப்போது கேட்கிற ஓசை போல பல்லியும் சப்தம் செய்து தன் காதலியை அழைக்கும்.”

“அழைக்குமோ!”

“அப்போ! அவர் என்னை நினைப்பாரோ, மாட்டாரோ?”

“நினைப்பார். நினைத்து விரைவிலே வருவார். கவலை கொள்ளாதே. கண்ணீரைத் துடை.”

உள்ளார் கொல்லோ! தோழீ! கள்வர்
பொன் புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர் நுதி புரட்டும் ஓசை போல,
செங் கால் பல்லி தன் துணை பயிரும்
அம் கால் கள்ளியங்காடு இறந்தோரே.

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 158. கண்ணும் பூத்தது! காலும் ஓய்ந்தது!

“கண்ணா!” என்றாள்.

“ஏன்?” என்றான்.

“கட்டிக் கொள்” என்றாள்.

அவன் அவளை அணைத்துக் கொண்டான். அவன் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் அவள்.

“இன்பமே” என்றான்.

“ஏன்?” என்றாள்.

"அழுவது ஏன்?" என்றான்.

"என்ன செய்வேன்?"

"எதற்கு?"

"கை கூடாவிட்டால்"

"எது"

"கல்யாணம்"

"அஞ்சாதே"

"அப்பா ஒப்புக் கொள்ள வேணுமே!"

"ஒப்புக்கொள்ளா விட்டால்?"

"ஓடிப் போகலாமா?"

"சந்தேகம் இல்லை"

அந்த இளம் காதலர் இருவரும் இவ்விதம் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஒரு நாள். அந்த வீடு அல்லோலப் பட்டது. தாய் சீறினாள். தகப்பன் சீறினார். தோழியும் செவிலியும் மூலைக்கு மூலை ஓடினர். காரணம் என்ன?

பருவம் வந்த பெண். வீட்டை விட்டு ஓடிப் போனாள். காதலனுடன் சென்றாள்.

ஓடிப் போன அந்த இளம் காதலரை எங்கும் தேடினாள், செவிலி. கொஞ்ச தூரத்திலே ஆணும் பெண்ணுமாக இருவரைக் கண்டால் உடனே ஓடுவாள். யார் என்று பார்ப்பாள். ஏமாந்து போவாள்.

எங்கேயாவது மர நிழலில் இளைப்பாறுகிறார்களோ என்று தேடுவாள்.

இவ்விதம் தேடித்தேடி அலைந்தாள். கண்டவர் பலர். ஆனால் வேண்டியவரைக் காணோம்!



"அம்மாடீ! தேடித்தேடி அலுத்துப் போனேன், நடந்து நடந்து காலும் ஓய்ந்தன. பார்த்துப் பார்த்துக் கண்களும் பூத்தன" என்று கூறி ஓய்ந்து உட்கார்ந்தாள்; புலம்பினாள்.

காலே பரி தப்பினவே; கண்ணே  
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே;  
அகல் இரு விசும்பின் மீனினும்  
பலரே மன்ற, இவ் உலகத்துப் பிறரே.

*- வெள்ளிவீதியார்*

## 159. தனிமையும் தவிப்பும்

பாலை நிலத்திலே என்ன இருக்கும்? வேம்பும், கள்ளியும் தான் இருக்கும். கிளி என்ன செய்கிறது? வேப்பம் பழத்தைத் தனது அலகிலே கவ்விக் கொள்கிறது. அது எது போலிருக்கிறது? காசுமாலை செய்கிற பொற் கொல்லன் தனது நகத்தினாலே பொற்காசைப் பிடித்துக் கொண்டு கம்பி செலுத்துவது போல் இருக்கிறது.

இத்தகைய பாலை நிலத்தின் வழியே செல்கிறான் அவன். எதற்கு? பொருள் தேட. அவனை நினைத்துக் கொள்கிறாள் அவள். அவன் தன்னை நினைப்பானோ மாட்டானோ என்ற சந்தேகம் அவளுக்கு.

"ஏனடி தோழி. அவர் என்னை நினைத்திருப்பாரோ? அல்லது மறந்திருப்பாரோ?" என்று கேட்கிறாள்.

"நினைப்பாரடி"

"நினைத்தால் வந்திருப்பாரே!"

உள்ளார்கொல்லோ - தோழி! - கிள்ளை  
வளை வாய்க் கொண்ட வேப்ப ஒண் பழம்  
புதுநாண நுழைப்பான் நுதி மாண் வள் உகிர்ப்  
பொலங் கல ஒரு காசு ஏய்க்கும்  
நிலம் கரி கள்ளிஅம் காடு இறந்தோரே?

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 160. 'போகலாமடீ தோழி!'

பழந்தமிழ் நாட்டிலே குறு நாடுகள் பல இருந்தன. அவற்றுள் ஒன்று கட்டி நாடு என்பது. இந்த நாட்டின் தலைவன் கட்டி என்பவன். வேல் எறிந்து போர் செய்வதில் வல்லவன் இவன். எனவே, வல்வேல் கட்டி என்று புகழ் பெற்றான். இவனது நாட்டை அடுத்து இருந்தது வடுக நாடு' இந்த நாட்டு மக்களுக்கு வடுகர் என்று பெயர். கஞ்சங்குல்லையைத் தொடுத்து மாலையாக அணியும் வழக்கம் உள்ளவர் வடுகர். இவர் தம் மொழியும் வேறு.

இந்த வடுகர் நாட்டுக்குச் சென்றிருந்தான் அவன். எதற்காக? அரசு காரணமாக., அவனது பிரிவு தாங்காது வருந்துகிறாள் காதலி.

கையிலே வளை அணிந்திருந்தாள். எப்பேர்ப்பட்ட வளை? சங்கினை அறுத்துச் செய்த வளை. அந்த வளை நழுவி விழுந்து விட்டது. காரணம் என்ன? உடல் மெலிந்தாள்.

கண்கள் நீர் சொரிந்தன. தூக்கமே இல்லை. மனத்திலே நிம்மதி இல்லை.

"போய் விடலாமோ?" என்றாள் அவள்.

"எங்கே?" என்று கேட்டாள் தோழி.

"வடுக நாட்டுக்கு"

"பேச்சுப் புரியாதே!"

"ஏன்?"

"அவர்கள் பேசும் மொழி வேறே"

"அதனால் என்ன? பாதகமில்லை"

"ஏன் அப்படி முடிவு செய்கிறாய்?"

"இங்கிருந்து தப்ப வேண்டுமே!"

"ஏன்?"

"இந்தத் துன்பம் தாங்க முடியவில்லையே!"

"என்ன செய்கிறது?"



"பார்! சங்கு வளை நழுவி விட்டது. உடல் மெலிந்து போயிற்று. தூக்கமேயில்லை. மனசிலே நிம்மதியில்லை. என்னவோ செய்கிறது. என்னால் தாங்க முடியவில்லை. எங்கேயாவது ஓடிப் போகலாமா என்று தோன்றுகிறது."

கோடு ஈர் இலங்கு வளை நெகிழ, நாள்தொறும்
பாடு இல கலிழும் கண்ணொடு, புலம்பி
ஈங்கு இவண் உறைதல் உய்குவம்; ஆங்கே
எழு இனி! வாழி! என் நெஞ்சே! முனாது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது,
வல்வேல் கட்டி நல் நாட்டு உம்பர்
மொழி பெயர் தேயத்தர் ஆயினும்,
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.

- மாமூலனார்

## 161. பாலையும் பகையும்

"ஐய! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை" என்றாள் அவள்.

"யாரை?" என்று கேட்டாள் தோழி.

"இந்த ஜனங்களைத் தான்"

"ஏன்?"

"கொஞ்சம்கூட ஆழ்ந்து சிந்திக்கிற புத்தியே கிடையாது.

எதையாவது ஆகா ஊஹூ என்று ஆரவாரம் செய்கிறது."

"அப்படி என்னடி ஆரவாரம் செய்கிறது?"

"அவர் போனாரே . . . . . "

"எவர்?"

"அவர் தான்"

"உன் காதலனைச் சொல்கிறாயா?"

"ஆமாம்"

"உம். சொல்லு"

"போன வழி எப்படிப்பட்டது?"

"எறும்பு வளை போலச் சிறு சிறு சுனைகள் உடையது"

"உம். அப்புறம்"

"வெயிலில் சூடு ஏறி உலையில் இட்ட கல்போல் பழுக்கக் காய்ந்த பாறைகள் உள்ளன"

"உம், இன்னும் சொல்லு"

"எயினர் தம் அம்புகளைத் தீட்டி வைத்துக் கொண்டு தயாராகக் காத்திருக்கும் பாலை நிலம்"

"உம், இவை எல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"சொல்லக் கேள்வி"

"உம், சரி"

"அதைக் கொஞ்சம்கூட எண்ணிப் பார்க்கவில்லை. நான் வருந்துகிறேன் காதலனை நினைத்து என்று கதை அளக்கிறார்கள்."

எறும்பி அளையின் குறும்பல் சுனைய,
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடு வில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப, அவர் சென்ற ஆறே!
அது மற்று அவலங் கொள்ளாது
நொதுமல் கழறும் இவ் அழுங்கல் ஊரே.

*- ஓதலாந்தையார்*

## 162. பாலையும் பயமும்

பாலை நிலம் மிகவும் அபாயம் நிறைந்தது. கொலை அஞ்சாத கள்வர் மலிந்தது. அவர்கள் என்ன செய்வார்கள்? வழிப்போக்கர்களைக் கொன்று விடுவார்கள். அவர் தம் பொருளைக் கவர்ந்து கொள்வார்கள்.

இவ்விதம் கொன்றவர்களை எல்லாம் குவியலாகப் போட்டு அதன்மேல் தழையை மூடி வைப்பார்கள். அந்தக் குவியல் மிக



உயரமாக இருக்கும். அவ்விதம் உள்ள குவியலின் நிழலிலே ஒரு யானை தங்கலாம் என்றால் அப்புறம் சொல்ல வேண்டுமா?

இத்தகைய பாலை நிலத்தின் வழியே தான் அவனும் செல்கிறான். அதை எண்ணினாள் அவள். நெஞ்சு 'பகீர்' என்றது. மனம் பதைத்தது. கண்கள் நீர் சொரிந்தன. தோள்கள் மெலிந்தன.

அம்ம வாழி, தோழி! - யாவதும்,
தவறு எனின், தவறோ இலவே - வெஞ் சுரத்து
உலந்த வம்பலர் உவல் இடு பதுக்கை
நெடு நல் யானைக்கு இடு நிழல் ஆகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளிய ஆகிய தட மென் தோளே.

*- மதுரை மருதன் இளநாகனார்*

## 163. பாலை நிலப் புறா

பாலை நிலத்திலே வெயிலின் கொடுமை தாங்க இயலாது பெண் யானை துடிக்கும். அப்போது ஆண் யானை என்ன செய்யும்? மரப் பட்டையை உரித்துக் கொடுக்கும்.

அவ்விதம் பட்டை உரிக்கப் பெற்ற மரக் கிளைகளிலே ஆண் புறாக்கள் அமர்ந்திருக்கும். பெண் புறாக்களை அழைக்கும்.

"இந்த மாதிரியான சிறு ஊர்களிலே அவர் தங்கி விட்டாரோ?" என்றாள் அவள்.

"ஏன்?" என்று கேட்டாள் தோழி.

"வெளியூர் செல்கிறேன் என்று சொன்னால், வேண்டாம் என்பேனோ என்று பயந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே போனாரே; அதனால் தான் கேட்கிறேன். கோபித்துக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டாரோ! அல்லது மறந்தே போனாரோ! அப்படி மறந்தாலும் அந்தப் புறாக்களைக் கண்டாவது நினைவு வரும் அல்லவா?"

கான யானை தோல் நயந்து உண்ட
பொரிதாள் ஓமை வளி பொரு நெடுஞ் சினை
அலங்கல் உலவை ஏறி, ஒய்யெனப்
புலம்பு தரு குரல புறவுப் பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே - யாம் தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லாது ஏகல் வல்லுவோரே.

*- குடவாயிற் கீரனக்கனார்*

## 164. மருந்தும் மனமும்

வெளியூர் செல்ல நினைக்கிறான் அவன். பொருள் தேடுவதற்காக. காதலியைப் பிரிந்து செல்வது எப்படி என்று யோசிக்கிறான். கவலை கொள்கிறான்.

"இன்பத்தின் சுரங்கம் இவள்; செல்வமிவள். என்னது காமநோய்க்கு மருந்து இவள். இவளை எப்படிப் பிரிவேன்?" என்று ஏங்குகிறான்.

மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம் பகட்டு இள முலை,
பெருந் தோள், நுணுகிய நுசுப்பின்,
கல் கெழு கானவர் நல்குறு மகளே.

*- கருவூர் ஓத ஞானியார்*

## 165. நெஞ்சும் நினைவும்

பொருள் தேடும் பொருட்டு வெளி நாடு செல்ல நினைத்தான் அவன். காதலியைப் பிரிந்துபோக வேண்டுமே! இதை நினைத்தான். மிக வருந்தினான். தன் நெஞ்சுக்குச் சொல்கிறான்:

"பொருள் தேட வேண்டியதுதான். பொருள் இன்றேல் ஈகை இல்லை. இன்பம் துய்த்தல் இல்லை. எனவே பொருள் அவசியம். பொருள் தேடும் பொருட்டுப் பிற நாட்டுக்குப் போக வேண்டியதும் அவசியம்.



"பொருள் தேடும் ஆசையைக் கொடுத்த நெஞ்சே; இன்னும் என்ன செய்ய இருக்கிறாய்? பொருள் தேடும் பொருட்டு என்னை மட்டும் வெளி நாடுகளுக்கு அனுப்பப் போகிறாயா? அல்லது எனது அருமைக் காதலியையும் அனுப்பப் போகிறாயா? சொல்."

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' எனச்
செய் வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்கு
அம் மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் - நெஞ்சே!

*- உகாய்க்குடி கிழார்*

## 166. நினைப்பும் மறப்பும்

"இன்னும் வரவில்லையே! என்றாள் அவள்.

"வந்துவிடுவார்; கவலைப்படாதே" என்றாள் தோழி.

"ரொம்ப நாள் ஆயிற்றே"

"அதற்கு என்னம்மா செய்வது? பாலை நிலங்கள் பல வற்றைக் கடந்து செல்ல வேண்டும்."

"சீக்கிரமாக வரப்படாதோ?"

"பொருள் என்ன? அங்கே கொட்டிக் கிடக்கிறதா? போனதும் அள்ளிக் கொண்டு ஓடி வர?"

"விரும்பிய பொருள் முழுதும் கிடைக்கிற மட்டும் வரமாட்டாரோ என்னவோ?"

"அப்படி ஒன்றுமிராது. எவ்வளவு தேவையோ அது கிடைத்த உடனே வந்து விடுவார்."

"என்னைப் பற்றிய நினைவு அவருக்கு இருக்கிறதோ? இல்லையோ?"

"போடி பயித்தியமே! அரலைக் குன்றின் தலைவன் அவன். பாணர் முதலியவருக்குப் பரிசில் வழங்குபவன். உன்னை மறப்பானோ? ஒருநாளும் மறவான்."

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத்து அகல் வாய்க் குண்டு சுனைக்
குவளையொடு பொதிந்த குளவி நாறு நறு நுதல்
தவ்வென மறப்பரோ - மற்றே; முயலவும்,
சுரம் பல விலங்கிய அரும் பொருள்
நிரம்பா ஆகலின், நீடலோ இன்றே.

*- மோசிகீரனார்*

## 167. நீரும் நினைப்பும்

"போய் வருகிறேன்" என்றான் அவன்.

"எங்கே?" என்றாள் தோழி.

"பொருள் தேட" என்றான்.

"காதலியையும் உடன் அழைத்துப் போகலாமே" என்றாள்.

"முடியாது" என்றான்.

"ஏன்?" என்றாள்.

"போகிற வழி அப்படிப்பட்டது" என்றான்.

ஒருவாறு சமாதானம் செய்துவிட்டுப் புறப்பட்டான். நல்ல வெயில் சுட்டுப் பொசுக்குகிறது. பாலை நிலத்தின் வழியே செல்கிறான். நா வறள்கிறது. தண்ணீருக்கு ஏங்குகிறான்.

அங்கே ஒரு சுனை. காட்டு மல்லிகை மலர்கள் உதிர்ந்து மூடப்பட்டிருக்கிறது. அங்கே சென்று பார்க்கிறான். ஒரே நாற்றம். அழுகல் நாற்றம்.

வேட்டை நாய் தோண்டி நீருண்ட சுனை அது. அந்த நீரைப் பருகினான். அப்போது அவள் நினைவு வந்தது அவனுக்கு.

"நானும் வருவேன் என்று சொன்னாளே! வந்தால் இந்த நீரைத்தானே குடிக்க வேண்டி நேரும்," என்று எண்ணினான்.

"நல்ல காலம்! அவளை விட்டு வந்தேன்" என்று சொல்லிக் கொண்டான்.



வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில் நீர்
வளையுடைக் கையள், எம்மொடு உணீ இயர்,
வருகதில் அம்ம, தானே;
அளியளோ அளியள், என் நெஞ்சு அமர்ந்தோளே!

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 168. பாலையும் யானையும்

"அழாதே! கண்ணீரைத் துடை" என்றாள் தோழி.

"நான் என்னடி செய்வேன்? அவர் என்னை மறந்தே போனாரே."

"வருந்தாதே. அவர் உன்னை ஒருநாளும் மறக்க மாட்டார். அப்படி மறந்தாலும் அவர் சென்ற வழி இருக்கிறதே! அது அவருக்கு உனது நினைவை உண்டு பண்ணும்."

"அப்படியா! அது எப்படி?"

"அந்த வழியிலே யானைகள் ஏராளமாகத் திரியும். ஆணும் பெண்ணுமாகத் திரியும்."

"உம்."

"வெயில் தாங்க முடியாது. நீர் வேட்கை கொண்டு திரியும் பெண் யானை."

"உம். ஆண் யானை என்ன செய்யும்?"

"மரப் பட்டையைப் பிளந்து தன் பெண் யானைக்கு ஊட்டும்."

"அதைக் கண்டதும் அவருக்கு உன் நினைவு வந்துவிடும். விரைவில் வருவார். வருந்தாதே."

காதலனைப் பிரிந்து வருந்தும் காதலியை இவ்வாறு தேற்றினாள் அவளது தோழி.

நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடி பசி களை இய பெருங்கை வேழம்
மென் சினையா அம்பொளிக்கும்
அன்பின்! தோழி! அவர் சென்றவாறே!

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 169. வாகையும் வருத்தமும்

"ஏன் இப்படி வருந்துகிறாய்?"

"அவர் சென்ற வழியை நினைத்தேன். வருத்தம் ஏற்பட்டது."

"அப்படியா!"

"கடந்து செல்வதற்கு மிகவும் கஷ்டமான பாலை நிலம் என்பார்களே. பெருங்காற்று அனல் கொண்டு வீசும் என்பார்களே! வாகை மரத்திலே உள்ள முற்றிய காய்கள் ஒலிக்கும் என்பார்களே! என்று எண்ணினேன். கண்ணீர் வந்தது. ஐயோ! அந்த வழியிலே அவர் எப்படிக் கஷ்டப்படுகிறாரோ என்று நினைத்தேன், வருத்தமாயிருக்கிறது" என்றாள்.

வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலை யுடை அரும் சுரம் என்ப நம்
முலையிடை முனிநர் சென்றவாறே.

- ஔவையார்

## 170. அணிலும் அணங்கும்

பாலை நிலம். அதிலே குடியில்லாத வீடு ஒன்று. அந்த வீட்டின் முற்றத்திலே அணில் ஒன்று விளையாடுகிறது! எப்படி?

மக்கள் அதிகம் இல்லாதது பாலை. அதிலும் திறந்த வீடு. அந்த வீட்டிலே அணில் விளையாடுகிறது. எப்பேர்ப்பட்ட தனிமை!

இந்த அணில் மாதிரி இருக்கிறாள் ஒருத்தி. எப்போது? காதலன் இல்லாதபோது.

காதலன் அருகில் இருந்து விட்டால் ஒரே குதூகலம்; மகிழ்ச்சி; திருவிழா தான்.

இதைத்தான் ஒரு காதலி சொல்கிறாள். யாரிடத்திலே? தன் தோழியிடத்திலே.

"ஏனடி?" ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என்று கேட்டாள்.



"மாதிரி என்ன?" எப்போதும் போல்தான் இருக்கிறேன். அவர் இருந்தால் திருவிழாபோல் குதூகலமாக இருப்பேன். இல்லாவிட்டால், தனி வீட்டிலே அணில் விளையாடுவதுபோல் இருப்பேன்" என்கிறாள்.

காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் - தோழி! அவர் அகன்றஞான்றே.

- அணிலாடு முன்றிலார்

## 171 அரவும் அவதியும்

"வெளியூர் போகிறேன்" என்று சொன்னால் அவள் வருந்துவாள் என்று தெரியும் அவனுக்கு. எனவே, அவளிடம் சொல்லவில்லை. சொல்லாமலே போய்விட்டான்.

அவள் என்ன நினைத்தாள்? "நம்மைவிட்டு இவன் எங்கே போகப் போகிறான்?" என்று நினைத்தாள். "நம்மிடத்திலே இவ்வளவு அன்பு கொண்டிருக்கிறான். பிரிந்திருக்க இவனால் முடியாது" என்று எண்ணினாள்.

இப்படியாக இந்த இரண்டு பேரும் ஒருவரைப் பற்றி மற்றொருவர் தவறாகவே எண்ணினர்.

அதன் பலன் என்ன? அவன் பிரிந்தான். அவள் வருந்தினாள்.

"நல்ல பாம்பு தீண்டினால் எப்படியோ அப்படிப்பட்ட துன்பத்தில் அவதிப்படுகிறேனே" என்று வருந்தினாள் அவள்.

'செல்வார் அல்லர்' என்றுயான் இகழ்ந்தனனே.;
'ஒள்வாள் அல்லள்' என்று அவர் இகழ்ந்தனரே;
ஆயிடை, இருபேர் ஆண்மை செய்த பூசல்,
நல்அராக் கதுவியாங்கு, என்
அல்லல் நெஞ்சம் அலமலக்குறுமே.

- ஔவையார்

## 172. வரையா வருத்தம்

பகல் நேரத்திலே வந்து போய்க் கொண்டிருக்கிறான் அவன். அப்போதும்கூட அவள் வருந்துகிறாள். அவன் வருவதற்கு நேரமானால் ஏங்குகிறாள். அந்த ஏக்கத்தினாலே அவளது மேனி பசலை பாய்கிறது.

அது கண்டாள் தோழி.

"ஐயோ! இவள் இப்படி வருந்துகிறாளே. மெலிந்து போகிறாளே. இவளுக்கு இதமான அந்தச் சொல்லை அவர் சொல்லாரோ? விரைவில் வந்து மணப்பேன் என்று சொல்ல மாட்டாரா? சொன்னால் என்ன? அதுகேட்டு இவள் ஆறுதல் அடைவாளே!" என்கிறாள்.

'தாதின் செய்த தண் பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு' என,
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பின் இனை பெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசை ஆகு பண்பின் ஒரு சொல்
இசையாது கொல்லோ, காதலர் தமக்கே?

*- பூங்கணுத்திரையார்*

## 173. கூறியதும் சீறியதும்

பொருள் தேடி வர எண்ணினான் அவன். அவளிடம் சொன்னால் போகவிட மாட்டாள். அவளிடம் சொல்லிக் கொள்ள வில்லை. போய்விட்டான். இதை அறிந்தாள் தோழி. அவளிடம் வந்தாள்.

"உன்னிடத்தில் கூடச் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டாரே!" என்றாள்.

"இதுதான் எனக்கும் தெரியுமே. நீ வந்துதான் சொல்ல வேணுமா? எவ்வளவோ பேர் வந்து சொல்லிவிட்டனர். நீ என்ன செய்தாய்? அவரைத் தடுத்து நிறுத்த. எல்லாரையும் போலவே வந்து எனக்குச் சேதி சொல்கிறாயே!" என்று சீறினாள் அவள்.



'செப்பினம் செலினே செலவு அரிது ஆகும்' என்று
அத்த ஓமை அம் கவட்டு இருந்த
இனம் தீர் பருந்தின் புலம்பு கொள் தெள் விளி
சுரம் செல் மாக்கட்கு உயவுத் துணை ஆகும்
கல் வரை அயலது தொல் வழங்கு சிறு நெறி,
நல் அடி பொறிப்பத் தா அய்ச்
சென்றெனக் கேட்ட நம் ஆர்வலர் பலரே.

*- உறையனார்*

## 174. வேனில் வந்தது வேதனை தந்தது!

"வருந்தாதே! வருந்தாதே! என்று சொல்கிறாயே! நாள் எப்படி வருந்தாமல் இருப்பேன்? அதோ பார், குயில் கூவுது. மா மணக்கிறது. இளவேனில் வந்துவிட்டது. அவரோ வரவில்லை. என் கூந்தலையும் சீவி முடியவில்லை. எப்படி வருந்தாமல் இருப்பேன்?" என்கிறாள் அவள். காதலனைப் பிரிந்த காதலி.

'ஈங்கே வருவர், இனையல், அவர்' என,
அழா அற்கோ இனியே? - நோய் நொந்து உறைவி!
மின்னின் தூவி இருங் குயில், பொன்னின்
உரை திகழ் கட்டளை கடுப்ப, மாச் சினை
நறுந் தாது கொழுதும் பொழுதும்,
வறுங் குரற் கூந்தல் தைவருவேனே.

*- கச்சிப்பேட்டு நன்னாகையார்*

## 175. தேரும் தெளிவும்

அரசனது கட்டளையை நிறைவேற்றுவதற்காக வேற்றூர் செல்கிறான் அவன். மனமோ காதலியை நாடுகிறது. பிரிய மனம் வரவில்லை.

"இதோ! இப்பொழுதே புறப்பட்டுப் போய் வேலையை முடித்துவிட்டு நாளை மாலை வந்துவிடலாம். தலைவியுடன் இன்பமாயிருக்க" என்று கூறி மனத்தைத் தேற்றிக் கொள்கிறான்.

"விரைவாக ஓட்டு தேரை" என்று தேர்ப்பாகனை முடுக்குகிறான்.

*பயிர்களையெல்லாம் நசுக்கிக் கொண்டு உருண்டு ஓடுகிறது தேர்!*

இன்றே சென்று வருதும்; நாளைக்
குன்று இழி அருவியின் வெண் தேர் முடுக,
இளம் பிறை அன்ன விளங்கு சுடர் நேமி
விசும்பு வீழ் கொள்ளியின் பைம் பயிர் துமிப்ப,
கால் இயல் செலவின், மாலை எய்தி,
சில் நிரை வால் வளைக் குறுமகள்
பல் மாண் ஆகம் மணந்து உவக்குவமே.

*- மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்*

## 176. தேடியது கை, கூடியதோ?

*யானைகள் கூட்டமாக வந்து கரும்புக் கொல்லையை முற்றுகை இடுகின்றன. அப்போது முறிந்து விழுகிறது கரும்பு. அந்தக் கரும்பின் ஒரு கணை அளவு பருமனே உள்ள மூங்கில்கள் வளரப் பெற்றது பாலை நிலம். அந்நிலத்தைக் கடந்து சென்று பொருள் தேடப் போனான் அவன். அவனையே எண்ணி வருந்துகிறாள் காதலி.*

*“போன இடத்திலே கருதிய பொருள் கை கூடியதோ இல்லையோ. கிடைத்திருந்தால் விரைவில் வந்திருக்க மாட்டாரா?” என்று கூறினாள் தோழி. அவளைச் சமாதானம் செய்ய.*

பழூஉப் பல் அன்ன பரு உகிர்ப் பா அடி
இருங் களிற்று இன நிரை ஏந்தல் வரின், மாய்ந்து,
அறை மடி கரும்பின் கண் இடை அன்ன
பைதல் ஒரு கழை நீடிய சுரன் இறந்து,
எய்தினர் கொல்லோ பொருளே - அல்குல்
அவ் வரி வாடத் துறந்தோர்
வன்பர் ஆகத் தாம் சென்ற நாட்டே?

*- கச்சிப்பேட்டு நன்னாகையார்*



## 177. அருளும் பொருளும்

*“பொருள் தேடப் போகிறேன்” என்றான் அவன். அவளுக்குக் கோபம் வந்து விட்டது.*

*“இந்த உலகிலே பொருள் ஒன்றுதான் எல்லாமோ? அருளே இல்லையா?” என்றாள்.*

*“அவருக்கு அருள் உண்டேல் பிரியார். பொருளே பெரி தென்று கருதினால் பிரியட்டும்” என்பது கருத்து.*

பெயல் மழை துறந்த புலம்பு உறு கடத்துக்
கவை முடக் கள்ளிக் காய் விடு கடு நொடி
துதை மென் தூவித் துணைப் புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்து,
பொருள்வயிற் பிரிவார் ஆயின், இவ் உலகத்துப்
பொருளே மன்ற பொருளே;
அருளே மன்ற ஆரும் இல்லதுவே.

*- வெண்பூதியார்*

## 178. பிச்சியும் பெண்ணும்

*பிச்சி என்பது மாரிக்காலத்திலே மலர்வது. சிவந்திருக்கும். அதைக் கூடை கூடையாக நிரப்பி அள்ளிக் கொட்டியது போலிருக் கிறதாம் அவளது மேனி. எவளது மேனி? காதலியின் மேனி. காதலன் ஒருவன் சொல்கிறான். அது மாத்திரம் அல்ல. தெப்பம் போலிருக் கிறதாம் அவளது தோள். அவளைப் பிரிவது எப்படி? என்று கேட்கிறான். நிச்சயமாக முடியாது; கூடாது. என்பதுதானே பதில்?*

மாரிப் பித்திகத்து நீர் வார் கொழு முகை
இரும் பனம் பசுங் குடைப் பலவுடன் பொதிந்து
பெரும் பெயல் விடியல் விரித்து விட்டன்ன
நறுந் தண்ணியளே, நல் மா மேனி;
புனற் புணை அன்ன சாய் இறைப் பணைத் தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே;
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 179. காதல் புறாவும் பாலைப் புறாவும்

பாலை நிலம், பாம்புச் சட்டை உரித்ததுபோல் தோன்றுகிறது பகல். கள்ளியிலே அமர்ந்திருக்கிறது பெண் புறா. ஆண் புறா இரை தேடச் சென்றிருக்கிறது. அதை நினைத்துக் கூவுகிறது பெண் புறா.

"இத்தகைய காட்சியைக் கண்ட பிறகும் என்னைப் பிரிந்து இருக்கிறாரே அவர்! அந்த மனோவலிமையை எப்படிப் பெற்றார்?" என்று கேட்கிறாள் அவள். காதலனைப் பிரிந்த துக்கம் தாங்க முடியாமல்.

யாங்கு அறிந்தனர்கொல் - தோழி! - பாம்பின்
உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவிர் அமையத்து,
இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளி,
பொறி மயிர் எருத்தின் குறு நடைப்பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய் அம் கவட்டுத்
தயங்க இருந்து, புலம்பக் கூஉம்
அருஞ் சுர வைப்பின் கானம்
பிரிந்து, சேண் உறைதல் வல்லுவோரே?

*- மதுரைச் சீத்தலைச் சாத்தனார்*

## 180. வங்காவும் மங்கையும்

வங்கா என்று ஒரு பறவை. ஆண் வங்கா இல்லாத சமயத்திலே பெண் வங்கா மீது பாய்கிறது வல்லூறு. அது கண்டு அஞ்சுகிறது பெண் வங்கா. தனது காதலனைக் கூவி அழைக்கிறது.

காதலியைப் பிரிந்து செல்ல நினைக்கிறான் அவன். அப்போது அவனுக்கு வங்கா நினைவுதான் வருகிறது.

"சீச்சி! இளமை நீண்டநாள் இராது. இந்த இளமை இருக்கும் போது காதல் இன்பத்தை அனுபவித்து விட வேண்டும். பொருள் தேடிப் பிரிந்தால் இளமை முடிந்து விடும். இன்பம் துய்க்க முடியாது" என்று முடிவு செய்கிறான்.



வங்காக் கடந்த செங் காற் பேடை
எழால் உற வீழ்ந்தென, கணவற் காணாது,
குழல் இசைக் குரல் குறும் பல அகவும்
குன்று உறு சிறு நெறி அரிய என்னாது,
'மறுப்பு அருங் காதலி ஒழிய
இறப்பல்' என்பது, ஈண்டு இளமைக்கு முடிவே.

*- தூங்கலோரி*

## 181. அலைமோதிய அபலை

"கடற்கரையிலே அலைமோதுகிறது. வேகமாக மோதிக் கொண்டே யிருக்கிறது. நீண்ட நேரம் மோதுகிறது. கரையில் உள்ள மணல் என்னாகிறது, இடிந்து சரிகிறது" என்றாள் அவள்.

"அந்த மாதிரி?" என்று நீட்டினாள் தோழி.

"அந்த மாதிரி?" நாணம் என்றதொரு கரையிருந்தது என்னிடத்திலே. காதல் என்ற அலை மோதியது. மோதி மோதி, அந்த நாணம் என்ற கரை சரிந்து இடிந்து விழுந்து விட்டது. இனி என்ன இருக்கிறது? நீ என்ன என்றால் காதலனுடன் ஓடிப்போ என்கிறாய்" என்றாள் அவள்.

அளிதோ தானே - நாணே நம்மொடு
நனி நீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான் பூங் கரும்பின் ஓங்கு மணற் சிறு சிறை
தீம் புனல் நெரிதர வீழ்ந்து உக்கா அங்கு,
தாங்கும் அளவைத் தாங்கி,
காமம் நெரிதரக் கைந் நில்லாதே.

*- வெள்ளிவீதியார்*

## 182. இன்பக் கனவு

பொருள் தேடுவதற்காகப் போயிருக்கிறான் அவன். போன இடத்திலே காதலியின் நினைவு வந்து வாட்டுகிறது. அவளை மறக்க முடியவில்லை அவனால்.

தூக்கத்திலே அவளைக் கண்டான். கட்டியணைப்பது போன்ற கனவு. 'பொக்' கென்று விழித்தான், காதலியைக்

காணோம். கனவு, அந்த இன்பக் கனவை வாழ்த்துகிறேன். "கனவே! உன்னை யாரே இகழ்வார்?" என்கிறான்.

வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன
மயிர் ஏர்பு ஒழுகிய அம் கலுழ் மாமை,
நுண் பூண், மடந்தையைத் தந்தோய் போல,
இன் துயில் எடுப்புதி - கனவே!
எள்ளார் அம்ம, துணைப் பிரிந்தாரே.

*- கோப்பெருஞ்சோழன்.*

## 183. பட்சி பறந்து விட்டது!

"அவள் எங்கே?"

"காணோமே!"

"கழியிடத்திலே மலர் பறித்துக் கொண்டிருக்கிறாளோ, பார்."

"பார்த்துவிட்டேன். இல்லை."

"தோழிமாருடன் கடலிலே நீந்தி விளையாடுகிறாளோ?"

"அங்கும் இல்லையே."

"பின் எங்கே போனாள்?"

"இவை ஒன்றும் அவளுக்குப் பிடிக்கவில்லை."

"பிடித்தது எது?"

"அந்த மலை நாடுதான்."

"அப்போ அங்கே போய்விட்டாளோ?"

"ஆமாம். காதலனுடன் போய்விட்டாள்."

"ஐயோ! பஞ்சுபோன்ற கால் பாலைவனத்திலே நடக்கும் போது வருந்துமே!"



கழிய காவிய குற்றும், கடல
வெண் தலைப் புணரி ஆடியும், நன்றே
பிரிவு இல் ஆயம் உரியது ஒன்று அயர,
இவ் வழிப்படுதலும் ஒல்லாள் - அவ் வழிப்
பரல்பாற் படுப்பச் சென்றனள் மாதோ
செல் மழை தவழும் சென்னி
விண் உயர் பிறங்கல் விலங்கு மலை நாட்டே!

*- மதுரை ஆசிரியன் கோடங் கொற்றன்*

## 184. இனமும் சினமும்

"பொருள் தேடச் சென்றிருக்கிறான் அவளது காதலன். அவனது பிரிவை ஆற்றி யிரு" என்று கூறுகிறாள் தோழி. கேட்டாள் அவள். சீறினாள். ஏன்? தோழியின்மீது கோபம் அவளுக்கு. காரணம்? அவன் 'போகிறான்' என்றபோது தடுத்து நிறுத்தவில்லை. அந்தக் கோபம். எனவே, தோழி மீது சீறினாள்.

"அப்போது அவரைத் தடுத்து நிறுத்தக் காணோம். இப்போது வந்து எனக்கு ஆறுதல் சொல்ல வந்துவிட்டாள்" என்று எரிந்தாள்.

"நான் வருந்துவது எப்படித் தெரிந்தது இந்த ஊராருக்கு?" என்று கேட்டாள்.

வேதின வெரிநின் ஓதி முது போத்து,
ஆறு செல் மாக்கள் புள் கொள, பொருந்தும்
சுரனே சென்றனர், காதலர்; உரன் அழிந்து,
ஈங்கு யான் அழுங்கிய எவ்வம்
யாங்கு அறிந்தன்று - இவ் அழுங்கல் ஊரே:

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 185. அஞ்சினவளும் வெஞ்சினமும்

"பிரியேன்" என்றான் காதலன். கேட்டாள் அவள். "பிரிய எண்ணி யிருக்கிறான்" என்று முடிவு செய்தாள். வருந்தினாள். முகம் வேறுபட்டது. கண்டான் அவன்.

"சத்தியமாகச் சொல்கிறேன். உன்னைப் பிரியமாட்டேன்." என்றான்.

"பிரிந்தாலோ. . . ?" என்றாள் அவள்.

"இரவலர் வாராத வைகல் பல நான் பெறுக" என்றான்.

குறுநில மன்னர்க்குப் பெருமை எது? இரவலர்களுக்கு வாரி வாரி வழங்குவது. இரவலர் ஏதாவது ஒருநாள் அவன் வீடு தேடி வரவில்லையானால் அந்த நாளே குறுநில மன்னர்க்குத் துன்ப நாள். 'எனவே இரவலர் வாராத நாள் பல ஆகுக' என்றால், 'நீண்ட நாள் துன்பம் அடைவேனாக' என்று பொருள்.

மெல் இயல் அரிவை! நின் நல் அகம் புலம்ப,
நிற் துறந்து அமைகுவென் ஆயின் - எற் துறந்து
இரவலர் வாரா வைகல்
பல ஆகுக - யான் செலவுறு தகவே.

- பாலை பாடிய பெருங்கடுங்கோ.

## 186. உயிரும் உடலும்

"ஆருயிரே!" என்றாள்.

"அன்பே!" என்றான்.

"காதலிக்கு உயிர்?" என்று கேட்டாள்.

"காதலன்" என்றான். மகிழ்ந்தாள்.

"காதலனுக்கு உயிரோ?" என்றாள்.

"தொழில்" என்றான்.

தூக்கி வாரிப்போட்டது அவளுக்கு. முகம் சுண்டியது. அவள் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. "காதலிக்கு உயிர் காதலன்; காதலனுக்கு உயிர் காதலி" என்று எண்ணினாள். ஆனால் அவனோ'தொழில்' என்றான். "சரி. தொழில் கருதி இவர் பிரிய எண்ணியிருக்கிறார்" என்று முடிவு செய்தாள். முகம் வாடியது.

கண்டாள் தோழி.

"கலங்காதே" என்றாள்.

"காதலிக்கு உயிர் காதலன். அப்படியானால் உயிர் தங்கும் உடம்பு எது? காதலிதானே. அதை மறவாதே. உடம்பை விட்டு



உயிர் பிரியாது. அவர் உன்னை விட்டுப் பிரிய மாட்டார்" என்றாள்.

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாள் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என,
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழா அல் - தோழி! அழுங்குவர் செலவே.

- பாலை பாடிய பெருங்கடுங்கோ.

## 187. கழனி உழவும் காதலன் வரவும்

நாட்கள் பல ஆயின. காதலியைப் பிரிந்திருந்தான். பொருள் தேடுவதில் கருத்துடன் இருந்தான். வேண்டிய பொருள்களைத் தேடி முடித்தான். ஊர் திரும்புகிறான். வெகு வேகமாக நடக்கிறான். அவனுக்கு முன்னே அஞ்சல் வைத்து ஓடுகிறது அவனது நெஞ்சு. காதலியைக் காண்பதற்காக.

வழியிலே என்ன கண்டான்? குடியானவன் ஒருவனைக் கண்டான். குடியானவன் என்ன செய்கிறான்? ஒரே ஒரு ஏர். அதை வைத்துக்கொண்டு தனது சிறு நிலத்தை உழுது கொண்டிருக் கிறான். வெகு விரைவாக உழுகிறான். ஏன்? மண்ணிலே ஈரம் போய்விடுமோ என்ற அச்சம். ஈரம் உலருமுன் உழுது முடிக்க வேண்டும். உள்ளதோ ஓர் ஏர்.

அந்த உழவனின் வேகத்தையும் தனது வேகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான் அவன். தனக்குச் சொந்தமானது சிறு நிலம். உள்ளது ஒரே ஏர். அதைக்கொண்டு உழுது பயிர் செய்து பலன் காண ஆசை உழவனுக்கு.

உழவனின் உள்ளத்து ஆசையைத் தன் ஆசையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான் அவன்.

தனது காதலியின் இளமை முதிருமுன்னே இல்லற இன்பம் துய்த்து, விரைவாகக் குழந்தைகளைப் பெற்றுப் பயன்பெற விரும்புகிறான் அவன்

ஆசை உந்துகிறது. அந்த அளவுக்கு நடை ஓடவில்லை. காதலியின் ஊர் தொலைவில் உள்ளதுபோல் தோன்றுகிறது.

"அடேயப்பா! இன்னும் எவ்வளவு தூரம்!" என்று சொல்கிறான்.

ஆடு அமை புரையும் வனப்பின் பணைத் தோட்
பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ் சேண் ஆர் இடையதுவே; நெஞ்சே,
ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத்து
ஓர் ஏர் உழவன் போல,
பெருவி துப்பு உற்றன்றால்; நோகோ யானே.

*- ஓ - ரேருழவனார்.*

## 188. அழிந்த உள்ளமும் இழந்த காதலனும்

விம்மி விம்மி அழுதாள் அவள். கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள். துயரமே உருவாகத் தோற்றமளித்தாள். காரணம் என்ன? காதல்.

"விரைவில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிப் போனான் அவளது காதலன். ஆனால் வரவில்லை. நாட்கள் பல சென்றன. 'வருவான் வருவான்' என்று எண்ணி வழிமேல் விழி வைத்து நின்றாள். நாள்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின. வந்தபாடில்லை.

"காதலனைக் காணோமே" என்று சொல்லிக் கண்ணீர் வடித்தாள்.

"ஏன் அழறே. அழாதே. கண்ணீரைத் துடை" என்றாள் தோழி.

"இன்னும் வரவில்லையே" என்று கூறினாள் அவள்.

"அவரைத் தேடி அழைத்து வர ஆள் அனுப்புவோம்."

"எங்கே போய்த் தேடுவது?"

"எங்கே போய்த் தேடுவதா? அவர் என்ன பூமியைக் குடைந்து கொண்டா போயிருப்பார்?"

"வானத்திலே பறந்தா போயிருப்பார்?"

"மாட்டார்."

"கடல்மேலே நடந்தா போயிருப்பார்?"



"மாட்டார்."

"பின்னே என்ன? எங்கேயாவது ஒரு நாட்டில்தானே இருப்பார்?"

"ஆமாம்."

"நாடு நாடாகத் தேடச் சொல்லி ஆள் அனுப்புவோம். ஊர் ஊராகத் தேடச் சொல்லுவோம். ஒவ்வொரு குடியிலும் தேடச் சொல்லுவோம். கிடைக்காமலா போய் விடுவார்?"

"அப்படியானால் சரி. புறப்படு, போவோம்."

நிலம் தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்;
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்,
கெடுநரும் உளரோ? - நம் காதலோரே.

*- வெள்ளிவீதியார்.*

## 189. 'போகிறேனடி தோழி'

"போய் வருகிறேன்" என்றான் அவன்.

"எங்கே?" என்று கேட்டாள் தோழி.

"பொருள் தேடுவதற்கு" என்றான்.

"அவளையும் உடன் அழைத்துப் போ."

"எவளை?"

"உன் காதலியை."

"ஐயோ! முடியாது."

"ஏன்?"

"போகிற வழி எப்படிப்பட்டது தெரியுமா?"

"எப்படிப்பட்டது?"

"பாலை நிலம். பாழும் தோற்றம். உப்பு வியாபாரிகள் பலர் செல்லும் வழி. ரொம்பக் கஷ்டம். ரொம்பக் கஷ்டம்."

"அது சரி. நீ இல்லாத இடம் எப்படிப்பட்டது?" நிழலும் சுகமும் நிரம்பியிருப்பினும் அது அவளுக்குப் பாலை நிலம்தான். எனவே, உடன் கொண்டு போ."

உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின், அகன் தலை,
ஊர் பாழ்த்தன்ன ஓமைஅம் பெருங் காடு
இன்னா என்றிர்ஆயின்,
இனியவோ - பெரும! - தமியோர்க்கு மனையே?

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 190. உறுமி இடிக்குதே! உயிர் துடிக்குதே!

"கார் காலத்தின் தொடக்கத்தே வருவேன்" என்று சொல்லிப் போனான் அவன். பொருள் தேடுவதற்காக.

"வந்துவிடுவான்; வந்துவிடுவான்" என்று ஒவ்வொரு நாளும் மனதைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

"கார் காலம் வந்துவிட்டது. மேகங்கள் குமுறுகின்றன. இடிஇடிக்கிறது. மின்னல் வெட்டுகிறது.

"ஐயோ! வந்துவிட்டதே கார் காலம். 'உன் உயிரைக் கொள்ளை கொள்வேன்' என்பதுபோல் நகைத்துக் கண் உருட்டுகிறதே மின்னல்!"

"அவரோ, பொருள் தேடிப் போயிருக்கிறார். நானோ தூங்காமல் துடிக்கிறேன். மெலிந்து வாடுகிறேன். 'ஐயோ!' பாவம் என்று எண்ணாமல் இரக்கமின்றி மேலும் இடிக்கிறதே தோழி!" என்று அலறினாள்.

அவரே, கேடு இல் விழுப்பொருள் தருமார், பாசிலை
வாடா வள்ளி அம்காடு இறந்தோரே;
யானே, தோடு ஆர் எல்வளை ஞெகிழ, நாளும்,
பாடு அமை சேக்கையில், படர் கூர்ந்திசினே;
'அன்னள் அளியள்' என்னாது, மா மழை
இன்னும் பெய்யும்; முழங்கி
மின்னும் - தோழி! - என் இன் உயிர்குறித்தே.

*- கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன்*



## 191. வேழம் நோக்கினாள் வேதனை போக்கினாள்!

"வருந்தாதே, வந்துவிடுவார். அதோ பார். அந்த யானைகளை! இவ்வளவு நேரம் அத்தக் குளத்திலே துழாவிக் கொண்டிருந்தன. சூரியன் மலை வாயில் வீழ்ந்து விட்டான்."

அந்த யானைகளும் ஆணும் பெண்ணுமாகப் படுத்து விட்டன; ஒன்றை மற்றொன்று தழுவுதல் காண்! அதோ அந்த மலைச் சாரலில் இனி அந்தப் புலி என்ன செய்யும்? தாக்குமா? இதே மாதிரி உன் காதலன் வருவார். உன்னைத் தழுவுவார். ஊராரின் ஏச்சுப் பேச்சிலிருந்து உன்னைக் காப்பார். வருந்தாதே!" என்றாள் தோழி.

படரும் பைபயப் பெயரும்; சுடரும்
என்றூழ் மா மலை மறையும்; இன்று அவர்
வருவர்கொல், வாழி - தோழி! - நீர் இல்
வறுங்கயம் துழைஇய இலங்கு மருப்பு யானை
குறும் பொறை மருங்கின் அமர் துணை தழீஇக்
கொடு வரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கின் சுரன் இறந்தோரே.

*- மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்*

## 192. அம் மானும் இம் மானும்

"ஐயோ, நமது காதலி வருந்துவாளே! என்று நினைத்து ஓடிவந்து விடுவாரோ? காதலியைக் காணாது எப்படியிருப்பது? என்று கலங்கி வந்து விடுவாரோ? மேற்கொண்ட காரியத்தைக் கைவிட்டு வந்து விடுவாரோ!" என்று கலங்கினாள் அவள்; வருந்தினாள்.

ஏன் திரும்பி வரக்கூடாது என்ற எண்ணமா? இல்லை. பின் என்ன? "பொருள் தேடிக் கொண்டு வந்து மணந்து செல்வேன்" என்று கூறிப் போயிருக்கிறான். அவனது இலட்சியம் என்ன? பொருள் தேடுவது. அப்படிப் பொருள் தேடுங்கால் வரும் இடையூறுகளைப் பொறுத்துக் கொண்டு வெற்றி பெற்றே திரும்ப வேண்டும்.

இல்லையானால் - போன வேலையை முடிக்காமல் பாதியிலே திரும்பிவிட்டால் - ஊரார் என்ன சொல்வர்? கையாலாகாதவன் என்றல்லவா ஏசுவர்? இதை எப்படி அவள் பொறுப்பாள்?

எனவே, தன் காதலனுக்கு இத்தகைய இழிவு ஏதும் வரக்கூடாது என்று கருதுகிறாள். தன்மீது உள்ள காதலால் எங்கேயாவது திரும்பி ஓடி வந்து விடுவானோ என்று கலங்குகிறாள்.

அப்போது தோழி சொல்கிறாள்:

"போன வேலை வெற்றி பெறாமல் திரும்ப மாட்டார். கவலைப்படாதே. அத்தகைய கடமை உணர்ச்சியூட்டும் சென்ற வழி."

"அப்படியா? அது எப்படி?" என்றாள் அவள்.

"மான் என்ன செய்யும்? மரப்பட்டைகளை உதைத்துத் தள்ளும். மான் குட்டியை உண்ணச் செய்யும். அதன் பிறகே தான் உண்ணும். குட்டி பசியோடிருக்கும்போது தான் உண்ணாது. குட்டி வெயிலில் வருந்தாது இருக்க அதற்கு நிழலாக நிற்கும்."

"சரிதான். அதனால் என்ன?"

"என்னவா? காண்பார் உன் காதலர்"

"உம். கண்டால் . . . . . . . "

"'ஆகா! இந்த மானின் மன உறுதிதான் எப்பேர்ப் பட்டது. தனக்குப் பசியாயிருப்பினும் முதலில் தன் குட்டிக்கு உணவு ஊட்டுகிறது. தனக்கு வெயிலாயிருப்பினும், வருத்த மாயிருப்பினும் தன் குட்டியின் வாட்டம் போக்கி நிழல் தருகிறது' என்று வியப்பார்."

"வியந்து. . . . . . . . . . . ?"

"நாமும் அப்படி நடப்போமாக. நமக்குத் துன்பமாக இருப்பினும் அதைப் பொறுப்போம். நமது காதலிக்கு இன்பம் தரும் இல்லறம் வளர்க! என்று எண்ணுவார்."

"எண்ணி . . . . . . . . . ?"

"எடுத்த காரியம் வெற்றி பெறச் செல்வார்."



நசை நன்கு உடையர் - தோழி! - ஞெரேரெனக்
கவைத் தலை முது கலை காலின் ஒற்றிப்
பசிப் பிணிக்கு இறைஞ்சிய பரூஉப் பெருந் ததரல்
ஒழியின் உண்டு, அழிவு இல் நெஞ்சின்
தெறித்து நடை மரபின் தன் மறிக்கு நிழல் ஆகி,
நின்று வெயில் கழிக்கும் என்ப - நம்
இன் துயில் முனிநர் சென்ற ஆறே.

***- கச்சிப் பேட்டுக் காஞ்சிக் கொற்றன்***

### 193. மானே! மனங்கலங்காதே!

காதலன் ஒருவன். காதலியைப் பிரிந்து சென்றிருக்கிறான். பொருள் தேடுவதற்காக. போயிருக்கிற வழி எப்பேர்ப்பட்டது? மிகவும் பயங்கரமான பாலை நிலம். மரா மரங்கள் நிறைந்தது. அந்த மரா மரங்கள் மலர்ந்திருக்கும். தும்பி என்ன செய்யும்? அந்த மலர்களிலே வந்து மொய்க்கும். தேன் உண்பதற்காக. மலரிலே மொய்த்த பிறகுதான் தெரியும் அதிலே தேன் இல்லை என்று. திரும்பும்! இத்தகைய வழியிலே போகும்போது காதலன் தனது காதலியை நினைப்பானா? நினைத்தால் என்ன செய்வான்? மேற்கொண்ட காரியத்தை முடித்து வெற்றியுடன் மீளாது பாதியிலே திரும்புவானா? காதலியைக் காண்பதற்காக.

அப்படிப் பாதியிலே திரும்பி வந்தால் அது கேவல மாயிற்றே.

இந்த மாதிரியெல்லாம் மனம் குழம்புகிறாள் அவள்.

"பாதி வழியிலேயே திரும்பி வந்து விடுவாரோ?" என்று கேட்கிறாள்.

"சீச்சீ. அப்படி ஒன்றும் வந்துவிடமாட்டார். கோழையல்லர் அவர். மன உறுதி படைத்தவர். சென்ற காரியத்தை முடித்தே வருவார். பாதியிலே திரும்பும் கோழையாயின் உன்னைப் பிரிந்து சென்றிருக்க மாட்டாரே!" என்றாள் தோழி.

அம் சில் ஓதி ஆய் வளை நெகிழ
நொந்தும், நம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல்
எஞ்சினம் வாழி - தோழி! - எஞ்சாது
தீய்ந்த மரா அத்து ஓங்கல் வெஞ் சினை
வேனில் ஓர் இணர் தேனோடு ஊதி,
ஆராது பெயரும் தும்பி
நீர் இல் வைப்பின் சுரன் இறந்தோரே.

*- காவன் முல்லைப் பூதனார்*

## 194. ஒரே நினைவு!

*காதலியைப் பிரிந்து சென்றான் அவன். எதற்கு? பொருள் தேடுவதற்கு. தேடிய பொருள் கிட்டியது. திரும்பினான். காதலியைக் காண வந்தான். வரும் வழியிலே அவளது தோழி நின்றாள்.*

*"வாருங்கள்; வாருங்கள். எப்போது வந்தீர்கள்?"*

*"இப்போதுதான். வந்துகொண்டே இருக்கிறேன்."*

*"உம். சரி. போன காரியம் எப்படி?"*

*"எப்படி இருந்தால் என்ன? வெற்றிதான்."*

*"ரொம்பசரி; நீண்ட நாள் அவளைப் பிரிந்து இருந்தீர்கள் அல்லவா?."*

*"ஆமாம். ஆமாம்"*

*"அப்போது எதை எதைப்பற்றியெல்லாம் நினைத் தீர்களோ?"*

*"எதைப்பற்றி நினைக்க முடியும்? ஒன்றே தான். ஒரே நினைவுதான்."*

*"என்னவோ?"*

*"காதல் நினைவு; காதலி நினைவு!"*



சுரந்தலைப் பட்ட நெல்லிஅம் பசுங்காய்
மறப் புலிக் குருளை கோள் இடம் கரக்கும்
இறப்பு அருங்குன்றம் இறந்த யாமே,
குறு நடைப்புள் உள்ளலமே, நெறிமுதல்
கடற்றில் கலித்த முடச் சினை வெட்சித்
தளை அவிழ் பல் போது கமழும்
மை இருங் கூந்தல் மடந்தை நட்பே.

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 195. ஆசையும் பூசையும்

*"குகையிலே கோயில் கொண்டு இருக்கும் துர்க்கைக்குப் பூசை செய்யவில்லையே!" என்றாள் தோழி.*

*"அதனால் என்ன?" என்றாள் அவள்.*

*"கையிலே காப்பு நூலைக் காணோமே?"*

*"நூல் கட்டா விட்டால் என்ன?"*

*"நோன்பு இருக்கவில்லையே!"*

*"அதனால் என்ன?"*

*"நல்ல சகுனம் எதுவும் பார்க்கவில்லையே!"*

*"அதனால் என்ன?"*

*"விரிச்சி கேட்பமே! மங்கலச் சொல் யார் வாயிலிருந்தாவது வராதா?"*

*"கேட்கா விட்டால் என்ன?"*

*"என்னடி எதுவுமே வேண்டாமா?"*

*"அடியே, அவர்தான் பிரிந்து போயிருக்கிறார். இமைப் பொழுது பிரிந்தாலும் சகியாத என்னைப் பிரிந்திருக்கிறார். விரைவில் வர வேண்டும். அது அவரது கடமை. அதையுணர்ந்து அவர் வராவிட்டால் இவற்றால் என்ன பயன்? கொற்றவைக்குப் பூசையிடுவதோ, நூல் கட்டுவதோ, நோன்பிருப்பதோ என்ன செய்துவிடும்?"*

விடர்முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்; கைந் நூல் யாவாம்;
புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்;
உள்ளலும் உள்ளாம் அன்றே - தோழி!
உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின், தம் இன்று
இமைப்பு வரை அமையா நம்வயின்
மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே.

*- கொற்றன்*

## 196. ஊமையின் துன்பம்

*இரவு நேரம். பசு ஒன்று கிணற்றிலே விழுந்துவிட்டது. அவதிப் படுகிறது. அதைக் கண்டான் ஒருவன். அவனுக்கு இரக்க முண்டாயிற்று. பசு படும் துயர் கண்டு அவனும் துன்புற்றான். அவனோ ஊமை. வாய் திறந்து பேச முடியாதவன். 'ஆ, ஊ' என்கிறானே தவிர இன்னது என்று எவருக்கும் விளங்கச் சொல்ல முடியவில்லை அவனாலே. அவனது துயரத்தை எங்ஙனம் ஆற்றுதல் இயலும்? அல்லது அவனது துயரத்தினாலே ஏதாவது பயனுண்டா? ஒன்றுமில்லை.*

*"இந்த ஊமையனைப் போல அவதிப்படுகிறாள் எனது தோழி. ஏன்? நான் படும் துயர் கண்டு. நான்தான் எனது காதலனை எண்ணி வருந்துகிறேன். இவள் என்னைக் கண்டு ஏன் வருந்து கிறாள்? இதுதான் எனக்கு மிக வருத்தமாயிருக்கிறது" என்றாள் அவள்.*

கவலை யாத்த அவல நீள் இடைச்
சென்றோர் கொடுமை எற்றி, துஞ்சா
நோயினும் நோய் ஆகின்றே - கூவற்
குரால் ஆன் படு துயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர் பொறுக்கல்லேன், தோழி நோய்க்கே.

*- கூவன் மைந்தன்*



## 197. அன்று மோதியவர் இன்று காதலர்

*"பார்த்தியா" என்று கேட்டான் வழிப்போக்கன்.*

*"யாரை?" என்றான் இன்னொருவன்.*

*"இதோ போகிறார்கள் பார்"*

*"ஆமாம்! புது ஜோடி போலிருக்கே!"*

*"தெரியவில்லையா?"*

*"தெரியவில்லையே! யார் அது?"*

*"அடே! நம்ம வடக்குத் தெருவிலே இல்லே?"*

*"ஆமாம்! சிறிசுகளா இருந்தாங்களே! இந்த இரண்டும் சிண்டைப் பிய்த்துக்கொண்டு சண்டை போடும். அம்மா தடுத்தாலும் கேளாது; நில்லாது. என்னடா என்றால் இப்போ! காதல்! காதல் ஜோடி!"*

*"இரண்டு பேரும் ஊரை விட்டு ஓடிப் போகிறார்கள்"*

*"காலத்தின் கோலத்தைப் பார்த்தியா?"*

*"பாலை நிலத்தின் மகிமையே மகிமை!"*

*"ஊழின் வலிமையே வலிமை!"*

இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்
புன் தலை ஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,
ஏதில் சிறு செரு உருபமன்னோ;
நல்லை மன்றம்ம பாலே - மெல் இயல்
துணை மலர்ப் பிணையல் அன்ன இவர்
மணம் மகிழ் இயற்கை காட்டியோயே.

*- மோதாசனார்*

## 198. நேமி பின்னே நெஞ்சு முன்னே

பொருள் தேடப் போயிருந்தான் அவன். தேடி விட்டான். மீண்டு வருகிறான் தலைவியைக் காண்பதற்கு. வெகு வேகமாக வருகிறது தேர்.

"போய் விட்டதா என் மனம்" என்றான்.

"எங்கே?" என்றான் பாகன்.

"அவளிடத்திலே"

"அது போய் என்ன பயன்?"

"ஆமாம் என் இரு கைகளாலும் இறுகத் தழுவிக் கொள்வது போல் தழுவ முடியுமா? முடியாதே. அதனால் என்ன பயன்?"

"இதோ ஆயிற்று. விரைவில் போகலாம்"

"ஐயோ! இன்னும் தொலை தூரம் இருக்கிறதே! மலைகள் எத்தனை? சோலைகள் எத்தனை?"

அஞ்சுவது அறியாது, அமர் துணை தழீஇ,
நெஞ்சு நப்பிரிந்தன்று; ஆயினும், எஞ்சிய
கை பிணி நெகிழின் அஃது எவனோ? நன்றும்
சேய அம்ம, இருவாம் இடையே;
மாக் கடல் திரையின் முழங்கி, வலன் ஏர்பு,
கோட் புலி வழங்கும் சோலை
எனைத்து என்று எண்ணுகோ - முயக்கிடை மலைவே?

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 199. 'வாடையே வாட்டாதே!'

நீண்ட காலமாயிற்று. காதலியைப் பிரிந்திருந்தான். இப்போது திரும்பி வருகிறான். வெகு வேகமாகத் தேரைச் செலுத்திக் கொண்டு வருகிறான். அந்த நேரத்திலே வாடைக் காற்று வீசுகிறது. "வாடை வந்துவிட்டதே! அவள் வருந்து வாளே!" என்று நினைக்கிறான்.

"வாடைக் காற்றே! நீ வாழ்க! அதோ பார்! அந்த மலையின் உச்சியிலே பாம்புச் சட்டை மாதிரி தெரிகிறதே! அருவி! அதற்குப்



பக்கத்திலே சில குடிசைகள்! அதுதான் எனது காதலி வசிக்கும் ஊர். அங்கே சென்று அவளைப் பாதுகாப்பாயாக!" என்கிறான்.

ஓம்புமதி; வாழியோ - வாடை! பாம்பின்
தூங்கு தோல் கடுக்கும் தூ வெள் அருவிக்
கல் உயர் நண்ணியதுவே - நெல்லி
மரையினம் ஆரும் முன்றிற்
புல் வேய் குரம்பை நல்லோள் ஊரே.

*- மாயேண்டன்*

## 200. 'உனைக் கண் தேடுதே'

வெகு வேகமாக வருகிறது தேர். அதற்கு முன்னே பாய்ந்து ஓடுகிறது அவனது நெஞ்சு. ஏன்? நீண்ட நாள் ஆயிற்று காதலியைப் பிரிந்து. காணத் துடிக்குது உள்ளம்.

வழியில் சில மான்களைக் கண்டுவிட்டான். ஆணும் பெண்ணுமாக இணைந்திருக்கின்றன அவை. கண்களை உருட்டி உருட்டிப் பார்க்கின்றன. கண்டான் அவன்; காதலியை எண்ணினான்.

"ஓட்டு! ஓட்டு! விரைவாக ஓட்டு தேரை! மாலை வருமுன்னே ஓட்டு" என்றான் பாகனிடம்.

பரல் அவற்படு நீர் மாந்தி, துணையோடு,
இரலை நல் மான் நெறிமுதல் உகளும்
மாலை வாரா அளவை, கால் இயல்
கடு மாக் கடவுமதி - பாக! - நெடு நீர்ப்
பொருகயல் முரணிய உண்கண்
தெரி தீம் கிளவி தெருமரல் உயவே.

*- நாமலார் மகன் இளங்கண்ணன்*

## 201. மறந்தாரே!

"இளவேனில் வந்தது. கோங்கு முகிழ்த்தது; மலர்ந்தது. ஆனால் காதலன் வரவில்லை. அவன் வருகிறான் எனும் தூதுச் செய்தியும் வரவில்லை. அவன் என்னை மறந்தான்; ஆம், மறந்தே போனான்" என்று புலம்புகிறாள் அவள்.

இலை இல் அம் சினை இன வண்டு ஆர்ப்ப,
முலை ஏர் மென்முகை அவிழ்ந்த கோங்கின்
தலை அலர் வந்தன; வாரா - தோழி!
துயில் இன் கங்குல் துயில் அவர் மறந்தனர்;
பயில் நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார்
'செய்பொருள் தரல் நசைஇச் சென்றோர்
எய்தினரால்' என, வரூஉம் தூதே.

*- பார்காப்பான்*

## 202. காது கேட்குதில்லையே!

*வெளியூர் சென்றிருக்கிறான் அவன். பிரிவு ஆற்றாது வருந்து கிறாள் அவள். வருத்தம் கண்டாள் தோழி. சொல்கிறாள்.*

*"அடி, நீ விம்மி விம்மி யழுங் குரல் அவர் காதில் விழவில்லையே; அவர் கேட்கவில்லையே. கேட்டால் உடனே திரும்பிவிடுவார். எவ்வளவு பொருள் போவதாயினும் அதை இலட்சியம் செய்யமாட்டார்."*

கேளார் ஆகுவர் - - - தோழி! - - - கேட்பின்,
விழுமிது கழிவது ஆயினும், நெகிழ்நூல்
பூச் சேர் அணையின் பெருங் கவின் தொலைந்த நின்
நாள் துயர் கெடப் பின் நீடலர்மாதோ
ஒலி கழை நிவந்த ஓங்கு மலைச் சாரல்,
புலி புகா உறுத்த புலவு நாறு கல் அளை
ஆறு செல் மாக்கள் சேக்கும்
கோடு உயர் பிறங்கல் மலை இறந்தோரே.

*- பூங்கண்ணன்*

## 203. யூதநாதன் போதனை

*"பொருள் தேடிவருவேன்" என்று சொல்லிப் போயிருக் கிறான் அவன். அந்தப் பிரிவு தாங்க முடியவில்லை அவளால்; வருந்துகிறாள். கண்டாள் தோழி.*

*"வருந்தாதே! அம்மா வருந்தாதே!" என்றாள்.*

*"நான் என்னடி செய்வேன்?"*



*"ஏன்?"*

*"போனவர் பாதி வழியிலே திரும்பி வந்து விட்டால்?"*

*"போடி பயித்தியமே! அப்படியும் திரும்புவாரா?"*

*"என் போல் அவரும் வருந்தினால் திரும்பாமல் என்ன செய்வார்."*

*"அஞ்சாதே. அந்த வழியிலே யானைக் கூட்டங்கள் ஏராளமாக உண்டு. அக்கூட்டத்தின் தலைவனான யானையை யூதநாதன் என்று சொல்வர். அந்த யூதநாதன் என்ற யானை என்ன செய்யும்? மரங்களைத் தன் கொம்பினாலே குத்திச் சாய்த்துத் தன் இனத்தை உண்பிக்கும். இதைக் கண்டதும் உன் காதலனுக்கு என்ன தோன்றும்? நாமும் யூதநாதன் போலவே நடக்க வேண்டும் என்று தோன்றும். நெஞ்சிலே உரமுண்டாகும். மேற்கொண்டு செல்வான். வெற்றியுடன் வருவான்."*

பொத்து இல் காமு அத்த யாஅத்துப்
பொரி அரை முழுமுதல் உருவக் குத்தி,
மறம் கெழு தடக்கையின் வாங்கி, உயங்கு நடைச்
சிறு கட் பெரு நிரை உறு பசி தீர்க்கும்
தட மருப்பு யானை கண்டனர் - தோழி!
தம் கடன் இறீஇயர் எண்ணி, இடம்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம் வேங் காதலர் சென்ற ஆறே.

*- கடுகு பெருந் தேவன்*

## 204. கண்ணீரும் கலக்கமும்

*போய் வருகிறேன்" என்றான்.*

*"எங்கே?" என்றாள்*

*"பொருள் தேட" என்றான்.*

*கல கல என்று கண்ணீர் உகுத்தாள் அவள். கண்டான். கலங்கினான்.*

*நான் திரும்பிவரும்வரை நீ ஆற்றியிருக்கமாட்டாய். நானோ வழியிலே மான் தன் பிணையோடு இருப்பது கண்டு மனம்*

நெகிழ்வேன். மேற்செல்ல மாட்டேன். திரும்பி வந்து விடுவேன். எனவே, நான் போகவில்லை. நீ வருந்தாதே" என்றான்.

மணி வார்ந்தன்ன மாக் கொடி அறுகைப்
பிணங்கு அரில் மென் கொம்பு பிணையொடு மாந்தி,
மான் ஏறு உகளும் கானம் பிற்பட,
வினை நலம் படீஇ, வருதும்; அவ் வரைத்
தாங்கல் ஒல்லுமோ, பூங்குழையோய்? எனச்
சொல்லா முன்னர், நில்லா ஆகி,
நீர் விலங்கு அழுதல் ஆனா,
தேர் விலங்கினவால், தெரிவை கண் ணே.

## 205. நல்ல சகுனமடி தோழி!

"வருந்தாதே. எழுந்திரு. நல்ல சகுனங்களைப் பார். கூதிர் காலம் வந்துவிட்டது. நாரைகள் திரிகின்றன. வண்டுகள் ஊதுகின்றன. அரும்புகள் மலர்கின்றன. நெகிழ்ச்சி நீங்குகிறது. எனவே உன் காதலர் வருவது உறுதி" என்றாள் தோழி.

குருகும் இரு விசும்பு இவரும்; புதலும்
வரி வண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே;
சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்;
வருவர்கொல் வாழி - தோழி! - பொருவார்
மண் எடுத்து உண்ணும் அண்ணல் யானை
வண் தேர்த் தொண்டையர் வழை அமல் அடுக்கத்து,
கன்று இல் ஓர் ஆ விலங்கிய
புன் தாள் ஓமைய சுரன் இவந்தோரே.

- *கல்லாடனார்.*

## 206. தோழி காட்டிய வழி

"ஏதடா! பருவம் வந்த பெண் ஆயிற்றே. மனத்தில் என்ன எண்ணியிருக்கிறாளோ! அதை அறிந்து ஆவன செய்ய வேண்டும் என்ற யூகம் தாய்க்கு இல்லை. வேறு என் செய்வது? என்று கேட்டாள் தோழி."

"அதற்கு வழி ஓடிப் போவதுதானா" என்று கேட்டாள் அவள்.



"வேறு என்ன இருக்கிறது?"

"ஊரிலே ஏச்சும் பேச்சுமாயிருக்குமே!"

"இருந்துவிட்டுப் போகிறது. அதனால் உனக்கு என்ன?"

"நீ அவருடன் ஜம்மென்று போ. நெல்லிக்காயைத் தின்றுவிட்டுப் பிறகு நீர் குடித்தால் எப்படியோ அப்படி இரு."

ஊஉர் அலர் எழ, சேரி கல்லென,
ஆனாது அலைக்கும் அறன் இல் அன்னை
தானே இருக்க, தன் மனை; யானே,
நெல்லி தின்ற முள் எயிறு தயங்க
உணல் ஆய்ந்திசினால், அவரொடு - சேய் நாட்டு,
விண் தொட நிவந்த விலங்கு மலைக் கவா அன்,
கரும்பு நடு பாத்தி அன்ன,
பெருங் களிற்று அடி வழி நிலைஇய நீரே.

- *பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 207. சொன்ன எல்லாம் மறந்தாரோ?

நாட்கள் பல சென்றன. சென்றவர் வரவில்லை. 'வருவார் வருவார்' என்று எதிர்பார்த்தாள். வந்தால்தானே. வர முடியா விட்டால் தூது விடலாம் அல்லவா!

"தூதுகூட விடவில்லையே! 'சரி. நமக்குத்தான் தூதுவிட வில்லை. நம்மை மறந்து விட்டார்' என்றே வைத்துக் கொள்வோம். நமது தோட்டத்தில் உள்ள இந்த வேங்கை மரத்தையுமா மறந்து விட்டார்? அடடா! இந்த மரத்தின் கீழ் எத்தனை இரவுகள் வந்து எனக்காகக் காத்திருந்தார். எவ்வளவு பேச்சுப் பேசினோம். எல்லாவற்றையும் மறந்து விட்டாரே!" என்று புலம்பினாள் அவள்.

நமக்கு ஒன்று உரையார், ஆயினும் தமக்கு ஒன்று
இன்னா இரவின் இன் துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பு அரும் பணைத் தோள் மரீ இத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே?-

- *நக்கீரர்*

## 208. காதலும் கரும்பும்

பொருள் தேடவேண்டும் என்ற ஆசை தோன்றியது அவனுக்கு. அதே சமயத்தில் "இளம் காதலியை எப்படிப் பிரிவது" என்ற எண்ணமும் தோன்றியது. இளமை என்றும் நிலைத்திருப்பதா? இல்லையே. ஆகவே இளமை இருக்கும்போதே இன்பம் துய்ப்பதுதானே நல்லது. இன்று இருப்பவர் நாளை இருப்பது என்ன உறுதி? கரும்பின் அடிக்கட்டைபோல் சுவை தரும் இந்த இளம் காதலியின் இன்பத்தை இப்பொழுது நுகராமல் பின் எப்பொழுது நுகர்வது?

இவ்வாறு தனக்குத்தானே எண்ணினான். "சீச்சீ! பெருநிதி பெறினும் இவளைப் பிரியேன்" என்று கூறினான்.

இருங் கண் ஞாலத்து ஈண்டு பயப் பெரு வளம்
ஒருங்குடன் இயைவது ஆயினும், கரும்பின்
கால் எறி கடிகைக் கண் அயின் றன்ன
வால் எயிறு ஊறிய வசை இல் தீம் நீர்க்
கோல் அமை குறுந் தொடிக் குறுமகள் ஒழிய,
ஆள்வினை மருங்கில் பிரியார் - நாளும்
உறல் முறை மரபின் கூற்றத்து
அறன் இல் கோள் நற்கு அறிந்திசினோரே.

– *காலெறி கடிகையார்.*

## 209. கொம்புத் தேனும் கணு ஏணியும்

" ஏன் வருந்துகிறாய்? என்று கேட்டாள் தோழி."

"அவர் பிரிந்து போகிறார்."

"போடி பயித்தியம். அவராவது பிரிந்து போகிறதாவது."

"இல்லை, இல்லை. மெய்தான். பொருள் தேடப் போகிறார்."

"உன்னைப் பிரிந்து போகவா?"

"ஆம்"

"போகமாட்டார். போனாலும் பாதி வழியிலேயே திரும்பி விடுவார். என்னவோ நான் கண்டது சொல்கிறேன். கேள். மலையிலே



என்ன செய்வார்கள்? தேன் எடுப்பார்கள். எப்படி? மூங்கிலின் கணுவைக் கழியாமல் அப்படியே சார்த்தி அதையே படியாகக் கொண்டு ஏறுவார்கள். பிறகு அதை அப்படியே விட்டு வைப்பார்கள். இப்படி விட்டு வைக்கப்பட்ட பழைய ஏணி ஒன்றின்மீது ஏறினால் அது உறுதியாக இருக்குமா? இராது. ஏதடா இது, பழைய ஏணியாயிற்றே. தாங்காதே என்று யோசியாமல் ஒருவன் ஏறினான். சிறிது தூரம் ஏறியதும் உறுதியற்ற ஏணி என்பதை அறிந்தான். திரும்பிவிட்டான். அதே மாதிரிதான். கவலைப்படாதே."

அல்குறு பொழுதில் தாது முகை தயங்கப்
பெருங் காடு உளரும் அசைவளி போல,
தண்ணிய கமழும் ஒண்ணுதலோயே!
நொந்தனை ஆயின், கண்டது மொழிவல்
பெருந் தேன் கண்படு வரையில் முது மால்பு
அறியாது ஏறிய மடவோன் போல,
ஏமாந்தன்று, இவ் உலகம்,
நாம் உளேம் ஆகப் பிரியலன் தெளிமே.

– *சிறைக்குடி ஆந்தையார்*

## 210. வாடை வருவது எப்போ?

"போய் வருவேன்" என்றான் அவன்.

"எப்போது வருவாய்?" என்று கேட்டாள்.

"வாடை வரும்போது" என்றான்.

"வாடை வரும் காலத்தை எதிர்பார்த்து இருந்தாள் அவள். வாடைக்காலம் எப்போது வரும்? இன்னும் எவ்வளவு நாள் செல்லும்? என்று அறிந்துகொள்ள விரும்பினாள் தோழி. எவரிடம் கேட்டு அறிவது? இப்படி யோசித்துக் கொண்டேயிருந்தாள்.

அந்த நேரத்திலே அங்கு ஒரு துறவி சென்றார். அருகில் சென்றாள் அவள். அவரை வணங்கினாள்.

"சாமீ!" என்றாள்.

"ஏன் தாயே!" என்றார் சாமியார்.

"நாய் இல்லாததொரு வீட்டிலே செந்நெல் அரிசிச் சோறும் வெண்மையான நெய்யும் தங்களுக்குக் கிடைப்பதாக. வயிறு நிறைய உண்டு, பனிக்காலத்துக்கு வேண்டிய வெந்நீரும் கமண்டலம் நிறையப் பெறுவீராக!" என்றாள்.

"வாழ்க" என்றார் சாமியார்.

"வாடைக்காலம் வருவது எப்போது?" என்று கேட்டாள்.

"ஏன் கேட்கிறாய்? என்றார்."

"அப்போது வருவார் என் தோழியின் காதலர். அதனால் கேட்கிறேன்" என்றாள்.

ஆசு இல் தெருவின் ஆசு இல் வியன் கடை,
செந்நெல் அமலை வெண்மை வெள் இழுது
ஓர் இல் பிச்சை ஆர மாந்தி,
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ, நீயே,
'மின்னிடை நடுங்கும் கடைப் பெயல் வாடை,
எக் கால் வருவது? என்றி;
அக் கால் வருவர், எம் காதலோரே.

- *ஓரிற் பிச்சையார்*

## 211. இன்ப நினைப்பும் துன்ப மறப்பும்

பாலை நிலத்தின் வழியே செல்கிறான் அவன். வெம்மை தாங்க முடியவில்லை. தவிக்கிறான். காதலியை நினைக்கிறான். அவளது மேனி அழகை எண்ணுகிறான். அவளது இன்ப நோக்கினைச் சிந்திக்கிறான். அவ்விதம் சிந்தித்தபடியே செல்கிறான். மனம் அவள் வசம் சென்றது. வழியின் கொடுமையை மறந்தான்.

"ஆகா! என்ன ஆனந்தம்!" என்று மகிழ்கிறான்.

புறவுப் புறத்தன்ன புன் கால் உகாஅத்து
இறவுச் சினை அன்ன நளி கனி உதிர,
விடு கணை வில்லொடு பற்றி, கோடு இவர்பு,
வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்



நீர் நசை வேட்கையின் நார் மென்று தணியும்
இன்னாக் கானமும், இனிய - பொன்னொடு
மணிமிடை அல்குல் மடந்தை
அணி முலை ஆகம் முயங்கினம் செலினே.

- *உருத்திரன்*

## 212. மந்தியும் மங்கையும்

காதலன் வந்தான். கஞ்சாங்கோரையினாலே பாவை செய்து கொடுத்தான். அதை வைத்து விளையாடினாள் அவள்; மகிழ்ந்தாள். அவன் பிரிந்து சென்று காலத்திலே அந்தப் பாவையை வைத்து மகிழ்ந்தாள்.

"இந்தப் பாவையையும் என்னையும் மறந்தாரோ" என்று ஏங்கினாள்.

"மலைநாட்டிலே உள்ள ஆண் குரங்கு என்ன செய்யும்? மரத்தின்மீது ஏறிக்கொள்ளும். பெண் குரங்கு தன் குட்டிகளுடன் கீழே இருக்கும். ஆண் குரங்கு மரக்கிளையை உலுக்கும். பழங்கள் உதிரும். கீழே உள்ள பெண் குரங்கும் குட்டிகளும் அவற்றைப் பொறுக்கித் தின்னும்."

"இது கண்டிருப்பார் அவர். அப்போதாவது என்மீதும் இப்பாவை மீதும் நினைப்பு ஏற்படலாம் அல்லவா? இல்லையே! மறந்தே போனாரோ!" என்று ஏங்கினாள்.

உறு வளி உளரிய அம் தளிர் மாஅத்து
முறி கண்டன்ன மெல்லென் சீறடிச்
சிறு பசும் பாவையும் எம்மும், உள்ளார்
கொடியர் வாழி - தோழி! - கடுவன்
ஊமுறு தீம் கனி உதிர்ப்ப, கீழ் இருந்து,
ஓர்ப்பன ஓர்ப்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலை இறந்தோரே

- *பேரிசாத்தன்*

## 213. பாலையும் கவலையும்

“ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்!” என்று கேட்டாள் தோழி.

“ஒன்றுமில்லை. வெளியூர் சென்றாரே! பாலை நிலத்தைக் கடந்தாரோ! கடக்கவில்லையோ! என்று எண்ணினேன்” என்றாள், அவள்.

“கடந்து சென்றிருப்பார்”

“ஐயோ பாவம்! எப்படிக் கடந்து சென்றாரோ. எவ்வளவு கஷ்டப்பட்டாரோ?” என்று பெருமூச்சு விட்டாள்.

வெண் மணற் பொதுளிய பைங் கால் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண் தோட்டு,
அத்த வேம்பின் அமலை வான் பூச்
சுரி ஆர் உளைத் தலை பொலியச் சூடி,
குன்று தலைமணந்த கானம்
சென்றனர் கொல்லோ - சேயிழை! - நமரே?

- குடவாயிற் கீரத்தன்.

## 214. வரகும் வரவும்

“கார் காலத்தே வருவேன்” என்று சொல்லிப் போனான் அவன். சொன்ன காலமும் வந்து விட்டது. செம்மண் நிலத்திலே விதைக்கப்பட்ட வரகு முற்றியது. மான் குட்டிகள் தின்று மகிழ்ந்தன.

“அவர் போன இடத்திலும் இப்படித்தானே இருக்கும்? ” என்று கேட்டாள் அவள்.

“இப்படியேதான் இருக்கும்” என்றாள் தோழி.

“அவர் பார்த்தாரோ பார்க்கவில்லையோ?”

“பார்த்தால் கார்ப் பருவம் வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளமாட்டாரா? எனது தோள்வளை கழன்று ஓடும் என்பதையும் அறியாரோ? அறிவார். எனவே விரைவில் வருவார்.” என்றாள்.



செவ்வி கொள் வரகின் செஞ் சுவற் கலித்த
கவ்வை நாற்றின் கார் இருள் ஓர் இலை
நவ்வி நாள் மறி கவ்விக் கடன் கழிக்கும்
கார் எதிர் தண் புனம் காணின், கைவளை,
நீர் திகழ் சிலம்பின் ஓராங்கு விரிந்த
வெண் கூதாளத்து அம் தூம்பு புது மலர்
ஆர் கழல்பு உகுவ போல,
சோர்குவ அல்ல என்பர்கொல் - நமரே?

- நாகம் போத்தன்.

## 215. பருந்தும் பாலையும்

“பொருள் தேடப் போகிறேன்” என்றான் அவன்.

“போதிய பொருள்தான் இருக்கிறதே. இன்னும் தேட வேண்டுமா?” என்று கேட்டாள் அவள்.

“அட, அசடே. இது என் முன்னோர் தேடிய பொருள் அல்லவா? இதை வைத்து வாழ்தல் எனக்குப் பெருமை தராது. அது இரந்து வாழ்தலினும் மிகத் தாழ்ந்தது” என்றான். புறப்பட்டான். அவன் சென்ற வழியையே பார்த்து ஏங்கினாள் அவள்.

“ஏன் இப்படி வருந்துகிறாய்?” என்று கேட்டாள் தோழி.

“அவர் பிரிந்தது பற்றி நான் வருந்தவில்லையே!”

“பின் எது பற்றியோ?”

“அந்தப் பாலை நிலம், கொலைக்கு அஞ்சாதவர் மலிந்தது. அவ்வழி வருவோரைக் கொன்று குவிக்கும் கொடியவர் நிறைந்தது. ‘எவர் வருவார்?’ என்று காத்திருப்பார் அக் கொடியவர். “எவரைக் கொல்வார் உண்ணலாம்” என்று வட்டமிடும் பருந்து. இத்தகைய நீரற்ற பாலை வழியே செல்கிறார். அவர் வாழ்க!” என்றாள்.

‘உள்ளது சிதைப்போர்’ உளர் எனப்படா அர்;
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி - தோழி! - என்றும்

கூற்றத்தன்ன கொலை வேல் மறவர்
ஆற்று இருந்து அல்கி, வழங்குநர்ச் செகுத்த
படு முடைப் பருந்து பார்த்திருக்கும்
நெடு மூதிடைய நீர் இல் ஆறே.

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ.*

## 216. பகலும் வாரார் இரவும் வாரார்

*"வருவேன் என்று சொல்லிப் போன பருவமும் வந்து விட்டது. ஆனால் அவர் இன்னமும் வரவில்லை" என்று வருந்தினாள் அவள்.*

*"அன்று அன்று. இதுவன்று அவர் கூறிய பருவம்" என்றாள் தோழி.*

*"ஆமாம். நீ ரொம்ப கண்டாயாக்கும். இதுதான் அவர் சொன்ன பருவம். அதோ பார்! அந்த ஆண் புறாவும் பெண் புறாவும் எவ்வளவு இன்பமாயிருக்கின்றன. எத்தனை முறை அணைத்து இன்புறு கின்றன! நான் மட்டும் இப்படித் தனிமையில் தவிக்கிறேனே"*

*"பொறு; பொறு. வந்து விடுவார்" என்றாள் தோழி.*

*"வந்து விடுவார் வந்து விடுவார் என்று நீயும் சொல்லிக் கொண்டேயிருக்கிறாய். நானும் நம்பிக் கொண்டே இருக்கிறேன். பகல் நேரம் முழுதும் வருவார் வருவார் என்று எதிர் பார்க்கிறேன். ஏமாந்து போகிறேன். பிறகு இரவு வருவார் என்று எண்ணுகிறேன். இப்படி இரவும் பகலும் போய்க் கொண்டேயிருக்கின்றன. அவரோ வரக் காணேன். எங்கேதான் இருக்கிறாரோ தெரியவில்லயே!"*

வைகா வைகல் வைகவும் வாரார்;
எல்லா எல்லை எல்லவும் தோன்றார்;
யாண்டு உள்கொல்லோ? - தோழி! - ஈண்டு இவர்
சொல்லிய பருவமோ இதுவே; பல் ஊழ்
புன் புறப் பெடையொடு பயிரி, இன் புறவு
இமைக்கண் ஏது ஆகின்றோ! - ஞெமைத் தலை
ஊன் நசைஇப் பருந்து இருந்து உகக்கும்
வான் உயர் பிறங்கல் மலை இறந்தோரே.

*- பூதத் தேவன்.*



## 217. மதியும் மங்கையும்

*"பாலை நிலத்திலே பெண் யானை வருந்தும், குடிப்பதற்கு நீர் கிடைக்காமல். ஆண் யானை என்ன செய்யும்? மரப் பட்டையைத் தனது கொம்பினாலே குத்தும். ஈரமே இராது அந்தப் பட்டையில். "ஐயோ! நமது காதலியின் வருத்தம் போக்க முடியவில்லையே" என்று வருந்தும். துதிக்கையைத் தூக்கி ஓலமிடும்*

*இதைக் கண்டும்கூட அவருக்கு என் நினைவு தோன்ற வில்லையே. வரவில்லையே, மறந்து போனாரோ?*

*செவ்வானத்திலே பிறையும் தோன்றிவிட்டது. எனது துன்பத்தை அதிகரிக்க. கன்னிமார் பலரும் தொழுகின்றனர். நான் என்ன செய்வேன்?"*

வளை உடைத்தனையது ஆகி, பலர் தொழ,
செவ் வாய் வானத்து ஐயெனத் தோன்றி,
இன்னாப் பிறந்தன்று, பிறையே; அன்னோ,
மறந்தனர் கொல்லோ தாமே - களிறு தன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது,
நிலை உயர் யாஅம் தொலையக் குத்தி,
வெண் நார் கொண்டு, கை சுவைத்து அண்ணாந்து,
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அந்த நீள் இடை அழப் பிரிந்தோரே?

*- கடம்பனூர்ச் சாண்டிலியன்.*

## 218. பனியும் வந்தது காதலனும் வந்தான்

*"பின் பனிக்காலம் வந்து விட்டது. கதிரவன் மலைவாயில் விழுந்தான். ஆணும் பெண்ணுமாக வெயிலுக்கு நிழலில் ஒதுங்கித் தூங்கிய மான்கள் வந்தன. பயறு முற்றிய கதிர்களைத் தின்றன."*

*"எழு! வருந்தாதே! அதோ உன் காதலன் வந்து விட்டான். இனி நீயும் இந்த மான்களைப் போல இணை பிரியாது தூங்கலாம்" என்றாள் தோழி.*

திரிமருப்பு இரலை அண்ணல் நல் ஏறு
அரி மடப் பிணையோடு அல்கு நிழல் அசைஇ,
வீ ததை வியல் அரில் துஞ்சி, பொழுது செல,
செழும் பயறு கறிக்கும் புன்கண் மாலை,
பின் பனிக் கடைநாள் தண் பனி அற்சிரம்
வந்தன்று, பெருவிறற் தேரே - பணைத் தோள்
விளங்கு நகர் அடங்கிய கற்பின்
நலம் கேழ் அரிவை புலம்பு அசாவிடவே.

*- பெருங்குன்றூர் கிழார்.*

## 219. காதலி எனும் செல்வம்

"பொருள் தேடப் போகிறாராமே" என்றாள் அவள்.

"உன்னை விடச் சிறந்த பொருளும் அவருக்குண்டோ?" என்றாள் தோழி.

"போனால் என்ன செய்வேன்?"

"நீர் இல்லாத பாலை. கொலைகாரக் கள்வர் மலிந்த இடம். கொள்ளையைக் கூட்டுறவாகச் செய்யும் கூட்டம் நிறைந்த வழி. இந்த வழி கடந்து போவாரா? மாந்தளிர் போன்ற உன் மேனி வாட விடுவாரா?" என்றாள் தோழி.

நெடுங் கழை திரங்கிய நீர் இல் ஆர் இடை,
ஆறு செல் வம்பலர் தொலைய, மாறு நின்று,
கொடுஞ் சிலை மறவர் கடறு கூட்டுண்ணும்
கடுங்கண் யானைக் காளம் நீந்தி,
இறப்பர்கொல் வாழி - தோழி! - நறுவடிப்
பைங் கால் மா அத்து அம் தளிர் அன்ன
நல் மா மேனிப் பசப்ப,
நம்மினும் சிறந்த அரும் பொருள் தரற்கே.

*- வாடாப் பிரமந்தன்.*



## 220. நல்ல யோசனை!

"நான் ஒரு யோசனை சொல்லவா?"

"சொல்லேன்"

"சொல்கிறேன். அதை நீ எண்ணிப்பார்."

"உனது காதலன் இருக்கிறானே! மலைநாடன்."

"ஆமாம். இருக்கிறான் அதற்கென்ன?"

"அந்த மலைநாட்டிலே வேங்கைப் பூ வாடிக்கிடக்கும். வேங்கைப் புலியும் துவண்டு கிடக்கும். எதனால்? யானைமீது பாய்ந்து, அதன் கொம்பினால் குத்தப்பட்டதால்."

"சரி. அதற்கென்ன இப்போ?"

"அவனுடன் நீ போய் விடு"

"காதலனுடன் ஓடிப் போகச் சொல்கிறாயா?"

"ஆமாம்!"

நினையாய் வாழி - தோழி! - நனை கவுள்
அண்ணல் யானை அணி முகம் பாய்ந்தென-
மிகு வலி இரும் புலிப் பகுவாய் ஏற்றை
வெண் கோடு செம் மறுக்கொளீஇய, விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங் கால் வேங்கை
வாடு பூஞ் சினையின், கிடக்கும்
உயர் வரை நாடனொடு பெயருமாறே.

*- ஈழத்துப் பூதன் தேவன்.*

## 221. பிரிய மனம் வரவில்லையே!

பொருள் தேட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது அவனுக்கு. பிரிந்து போக நினைத்தான். எப்படிப் பிரிவது? காதலியைப் பிரிந்து செல்ல மனம் வரவில்லை அவனுக்கு.

போகும் வழியை எண்ணினான். பாலை நிலத்தைக் கருதினான். ஒரு காலத்திலே நீர் நிரம்பியிருந்தது சுனைகளிலே; இப்போது

வற்றிப்போய் விட்டது. வாகை மலர்ந்து நிற்கும். அது மயிலின் கொண்டைபோல் தோற்றமளிக்கும். இத்தகைய கானல் நிலம். இதைக் கடந்து செல்வது எப்படி? அவளும் கூட வந்தால்தான் நல்லது. அவள் எப்படி வருவாள்? முடியாது. எனவே பிரிவு நின்றது.

மல்கு சுனை உலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறு வீ
மட மாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள் இடை, தானும் நம்மொடு
ஒன்று மணம் செய்தனள் இவள் எனின்,
நன்றே - நெஞ்சம்! - நயந்த நின் துணிவே.

*- காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்.*

## 222. அரும்பும் கண்ணீரும்

"நான் என்னடி செய்வேன்?"

"ஏன்?"

"அவர் போய்விடுவார் போல் இருக்கே?"

"எங்கே போவார்?"

"பிரிந்து போவார்"

"பயப்படாதே. காட்டிலே யானை தழை தின்றது. அப்போது முல்லைக்கொடி ஒன்றும் அதன் கொம்பிலே சிக்கிக் கொண்டது. முல்லை அரும்பு கொம்பிலே. எந்த நேரமும் வாய்க்குள் போய் விடலாம். அந்தமாதிரி உன் உயிர். அவர் பிரிந்தால் யானைக் கொம்பிலே சிக்கிய முல்லைதான். நீ உகுக்கும் கண்ணீரும் முத்து முத்தாக அரும்பி உன் மார்பில் விழுகிறது. இதைக் கண்ட பிறகும் அவர் போவாரோ?"

தாமே செல்ப ஆயின், கானத்துப்
புலம் தேர் யானைக் கோட்டிடை ஒழிந்த
சிறு வீ முல்லைக் கொம்பின்தா அய்,
இதழ் அழிந்து ஊறும் கண்பனி, மதர்எழில்
பூண் அக வன முலை நனைத்தலும்
காணார் கொல்லோ - மாணிழை! - நமரே?

*- மாவளத்தன்*



## 223. விடையும் தடையும்

"இதோ பாரம்மா, ஒன்று சொல்கிறேன். கேள்."

"சொல்"

"உன்னிடம் சொல்லிக் கொண்டார் அல்லவா?"

"சொல்லிக் கொண்டார்."

"போய் வருகிறேன். வருந்தாதிரு என்றாரல்லவா?"

"முடியாது. என்னால் பிரிந்திருக்க முடியாது என்றால் போவாரா?"

"மாட்டார்"

"பின், அப்போது சரி என்று சொல்லிவிட்டு இப்போது வருந்துவது அழகா? வருந்தாதே."

அம்ம வாழி - தோழி! - முன் நின்று,
'பனிக் கடுங்குரையம்; செல்லா தீம்' எனச்
சொல்லினம் ஆயின், செல்வர் கொல்லோ
ஆற்று அயல் இருந்த இருங் கோட்டு அம் சிறை
நெடுங் காற் கணந்துள் ஆள் அறிவுறீஇ,
ஆறு செல் வம்பலர் படை தலைபெயர்க்கும்
மலையுடைக் கானம் நீந்தி,
நிலையாப் பொருட் பிணிப் பிரிந்திசி னோரே?

*- ஆலத்தூர் கிழார்*

## 224. அல்லியும் வௌவாலும்

காதலனைப் பிரிந்து வாடுகிறாள் காதலி. மாலைக் காலம் வந்து விட்டது; வருத்தத்தை மிகுவிக்க.

அல்லிப் பூவின் புற இதழ் போன்ற இறகு கொண்ட வௌவால்கள் என்ன செய்கின்றன?

பகல் காலத்திலே தங்கியிருந்த மரங்களை விடுத்துப் பறந்து செல்கின்றன; மலையிலே உள்ள பலாமரங்களுக்கு; பார்க்கிறாள் அவள்.

*“அவர் இல்லாதபோது தானடி மாலைக் காலத்தை நான் அறிகிறேன்” என்கிறாள்.*

நெடு நீர் ஆம்பல் அடைப் புறத்தன்ன
கொடு மென் சிறைய கூர்உகிர்ப் பறவை
அகல் இலைப் பலவின் சாரல் முன்னி,
பகல் உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறு புன் மாலை உண்மை
அறிவேன் - தோழி! - அவர்க் காணா ஊங்கே.

***- கடியலூர் உருத்திரங் கண்ணனார்***

## 225. போனாளே! போனாளே! பொன்னரசி

*“போய் விட்டாளா?”*

*“ஆமாம்.”*

*“எப்படித்தான் இவ்வளவு தைரியம் வந்ததோ அவளுக்கு?”*

*பாலும் பொரியும் கலந்து கொண்டு வந்து கொடுப்பேன். அம்மா சாப்பிடு. கண்ணே சாப்பிடு என்பேன். அதிலும் மிகுதி வைப்பாள். ஆனால் இப்போது! பாலை நிலத்திலே வெப்பத்தால் கலங்கிய சுனை நீரைக் குடிக்கும் மனோவலி எப்படி வந்தது? நீரும் நிழலுமில்லாத அந்தப் பாலையிலே தன் காதலனுடன் எப்படி நடப்பாள்?*

நிழல் ஆன்று அவிந்த நீர் இல் ஆர் இடைக்
கழலோன் காப்ப கடுகுபு போகி,
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ் வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்கு வல்லுநள்கொல் தானே - ஏந்திய
செம் பொற் புனை கலத்து அம் பொரிக் கலந்த
பாலும் பல என உண்ணாள்.
கோல் அமை குறுந்தொடித் தளிர் அன்னோளே?

***- கயமனார்.***



## 226. ஓடியதும் தேடியதும்

*“அவளது மகள் தன் காதலனுடன் சென்றுவிட்டாள். தேடித் தேடி அலுத்தாள் தாய்.” முடிவில் அறிந்தாள். என்ன? ஓடிப்போன செய்தி! இப்போது சொல்கிறாள்; தெய்வத்தை வேண்டுகிறாள்.*

*“அவள் செல்லும் வழியிலே வெயில் காயாதிருப்பதாக; நிழல் தருவதாக; கற்கள் இல்லாது மணல் மிகுந்திருப்பதாக; மழை பெய்வதாக!”*

ஞாயிறு காணாத மாண் நிழற் படீஇய,
மலைமுதல் சிறு நெறி மணல் மிகத் தாஅய்.,
தண் மழை தலையவாகுக - நம் நீத்துச்
சுடர் வாய் நெடு வேற் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே!

***- கயமனார்***

## 227. அளியும் கிளியும்

*“புறப்படு என்றாள் தோழி”*

*“எங்கே?” என்றாள் அவள்.*

*“உன்னைஅழைத்துக் கொண்டு போய் மணம் செய்து கொள்ளப் போகிறார் உன் காதலர்”*

*“அப்படியா?”*

*“ஆமாம்! பாலை நிலத்திலே காற்று வீசும். வாகை நெற்று ஒலிக்கும், சிலம்பு ஒலி போல. அவர் கைபற்றி அவ்வழியே செல்வாய்!”*

அத்த வாகை அமலை வால் நெற்று,
அரி ஆர் சிலம்பின், அரிசி ஆர்ப்பக்
கோடை தூக்கும் கானம்
செல்வாம் - தோழி! நல்கினர் நமரே.

***- குடவாயிற் கீரத்தனார்***

## 228. பாலையும் எருதும்

"பொருள் தேடப் போகிறேன்" என்றான் அவன். கேட்டாள் தோழி. அவள் கண்முன் தோன்றியது எது? பாலை நிலம். நல்ல வெயில் நேரம். பசு ஒன்று மேய்கிறது. அதைக் கண்டு பெருமூச்சு விடுகிறது எருது. எங்கே? உகாய் மர நிழலிலே நின்று கொண்டு.

"பசுவை எண்ணி, எண்ணி எருது பெருமூச்சு விடுவது போல் நீயும் அவளைஎண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு பாலை வழிச் செல்லப் போகிறாயா? அதுதான் இனிமையாயிருக்கிறதா?" என்று கேட்டாள் அவள்.

கண்ணி மருப்பின் அண்ணல் நல் ஏறு,
செங் காற் பதவின் வார் குரல் குறிக்கும்
மடக் கண் மரையா நோக்கி, வெய்துற்று,
புல் அரை உகா அய் வரி நிழல் வதியும்
இன்னாஅருஞ் சுரம் இறத்தல்
இனிதோ - பெரும! இன் துணைப் பிரிந்தே?

*- செல்லூர்க் கொற்றனார்*

## 229. குளிரும் காதலும்

"முன் பனிக் காலத்தின் தொடக்கத்திலே வருவேன்" என்று சொல்லிப் போனான் அவன். கூதிர் காலம் முடியும் சமயம்.

"இன்னும் வரவில்லையே! எங்கேயோ வெகு தொலைவில் இருக்கிறாரோ! என்ன செய்வது? எவ்வாறு ஆற்றுவது?" என்று வருந்துகிறாள் தோழி.

விசும்பு கண் புதையப் பாஅய், வேந்தர்
வென்று எறி முரசின் நன் பல முழங்கி,
பெயல் ஆனாதே, வானம்; காதலர்
நனி சேய் நாட்டர்; நம் உன்னலரே;
யாங்குச் செய்வாம்கொல் - தோழி! - ஈங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர
முன்னர்த் தோன்றும் பனிக் கடு நாளே!

*- கருவூர்க் கதப்பிள்ளையார்*



## 230. முன்னே சரி என்றாள் பின்னே பயந்தாள்

யாருக்கும் தெரியாமல் காதலனுடன் ஓடிப் போவது என்று ஏற்பாடாயிற்று. 'சரி' என்றாள் அவள். குறித்த நாளில் அவன் வந்து விட்டான். அழைத்துக் கொண்டு போக. ஆனால் அவளுக்குத் தைரியமில்லை. கையும் காலும் துவண்டன. தீயிலிட்டமலர் போல் துவண்டாள். 'நாளைக்கு ஆகட்டுமே' என்றாள்.

'சரி' என்று நீ சொல்லியதால்தானே இந்த ஏற்பாடு செய்தேன். இப்போது இப்படி நடுங்குகிறாயே! நான் என்ன செய்வேன்? அவரும் வந்து காத்திருக்கிறாரே! என்கிறாள் தோழி.

நீ உடம்படுதலின் , யான் தர, வந்து,
குறி நின்றனனே, குன்ற நாடன்;
'இன்றை அளவைச் சென்றைக்க' என்றி;
கையும் காலும் ஓய்வன ஒடுங்கத்
தீ வுறு தளிரின் நடுங்கி
யாவதும் இலை, யான் செயற்கு உரியதுவே.

*- படுமரத்து மோசி கீரனார்*

## 231. பாலும் பந்தும்

காதலனுடன் ஓடிவிட்டாள் அவள். அவள் விளையாடிய பந்து ஒருபுறமிருக்கிறது. பால் காய்ச்சியது ஒருபுற மிருக்கிறது. விளையாடிய தோழிமார் நிற்கின்றனர்; வருந்து கிறாள் செவிலி.

"பாலும் குடிக்கவில்லை. பந்தும் விளையாடவில்லை. தோழிகள் கூட்டம் இருக்கிறது. எல்லாவற்றையும் மறந்து எப்படிப் போகிறாளோ? என்ன செய்கிறாளோ?' என்று ஏங்குகிறாள்.

பாலும் உண்ணாள், பந்துடன் மேவாள்,
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே,
எளிது என உணர்ந்தனள்கொல்லோ - முளிசினை
ஓமைக் குத்திய உயர் கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்அறைக் கவாஅன்
மழை முழங்கு கடுங் குரல் ஓர்க்கும்
கழை திரங்கு ஆர் இடை, அவனொடு செலவே?

- கயமனார்

## 232. இரவும் இன்னலும்

"எனது நெஞ்சமோ ஒரு வழி நிற்க மறுக்கிறது; அலைகிறது. துன்புறுத்துகிறது. என்னால் தாங்க முடியவில்லை. அவரோ பொருளே பெரிது என்று எண்ணிப் போய்விட்டார். அருள் பெரிது என்று எண்ணவில்லை. எனக்கொரு வார்த்தை ஆறுதல் கூறுவோரும் இங்கேயில்லை. சந்திரனுக்குக் கிரகணம் பிடிக்கிற போது உலகத்தார் என்ன என்னவோ பேசிப் பின் தூங்குவது போலத் தூங்கி விட்டாள் எனது தோழி. நான் என்ன செய்வேன்? அவர் இருக்குமிடத்துக்கே போகலாமா?" என்று புலம்புகிறாள் அவள்.

நெஞ்சே நிறை ஒல்லாதே; அவரே,
அன்பு இன்மையின், அருள் பொருள் என்னார்
வன்கண் கொண்டு வலித்து வல்லுநரே;
அரவு நுங்கு மதியிற்கு இவணோர் போலக்
களையார் ஆயினும், கண் இனிது படீஇயர்;
அஞ்சல் என்மரும் இல்லை; அந்தில்
அளிதோதானே நாணே -
ஆங்கு அவர் வகிவயின் நீக்கப்படினே!

## 233. காளையும் காதலியும்

காதலன் காதலி இருவரும் நடந்து செல்கின்றனர் பாலை வழியே. இளம் வயது. கையிலே வேல் ஏந்தி நடக்கிறான் அவன். அவன் கைபற்றி நடக்கிறாள் அவள். பொழுது சாய்ந்தது. அந்த நேரத்திலே அவர்களைக் கண்டனர் வழி நடப்போர் சிலர்.

"எங்கே போகிறீர்கள் பொழுது போன நேரத்திலே? மேலே போகாதீர்கள். பாலைநிலக் கள்வர்களின் பறை முழங்குகிறதே! கேட்கவில்லையா?"

"கேட்கிறது"

"வேண்டாம். போகாதீர்கள்"

"நான் வீரன். கள்வருக்கு அஞ்சேன்"



"நீ வீரன்தான். ஆனால் உன் அருகே இந்த இளம் பெண் இருக்கிறாளே. இவளைக் காக்க வேண்டாமா? சொல்வதைக் கேள்."

எல்லும் எல்லின்று ; பாடும் கேளாய்
செல்லாதீமோ, சிறுபிடி துணையே!
வேற்று முனை வெம்மையின், சாத்து வந்து இறுத்தென,
வளை அணி நெடு வேல் ஏந்தி
மிளை வந்து பெயரும் தண்ணுமைக் குரலே.

*- உறையூர் முதுகொற்றனார்*

## 234. 'சோலையல்ல பெண்ணே! பாலை'

"நானும் வருகிறேன்" என்றாள் அவள்.

"ஐயோ! நீயுமா? என்றான் அவன்."

"ஆமாம்"

"செல்லும் வழி எப்பேர்ப்பட்டது தெரியுமா? நீரில்லாத பாலை நிலம். அதிலே நீ எப்படி நடப்பாய்? வாடிப் போவாய்."

"அடியிலே நீர் உள்ள குவளை மலர் மேல் காற்றுக் காலத்திலே வாடுமோ? வாடாது. அதுபோல உன்னுடன் வருவதால் பாலை நிலம் வருத்தம் தராது."

"உப்பு வியாபாரிகள் மொட்டை வண்டியில் மூட்டைகளை ஏற்றிச்செல்வார்கள். அந்த மாதிரி மொட்டையான மரங்கள் நிற்கும். நிழல் தராது. நீர் தேடி அகப்படாமல் வருந்திய யானை மரப்பட்டைகளை உரித்துக் கடிக்கும். அதிலும் நீர் இன்றியிருப்பதைக் கண்டு துதிக்கை தூக்கி வருந்தும். இத்தகைய பாலை நிலத்திலே நடக்க முடியுமா?"

"முடியும். உன்னுடன் வந்தால் போதும். அதுவே இன்பம். வராதிருப்பதே துன்பமாகும்."

நீர் கால்யாத்த நிரை இதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடாதாகும்;
கவணை அன்ன பூட்டுப் பொருது அசாஅ
உமண் எருத்து ஒழுகைத் தோடு நிரைத்தன்ன
முளி சினை பிளக்கும் முன்பு இன்மையின்,
யானை கைம்மடித்து உயவும்
கானமும் இனிய ஆம், நும்மொடு வரினே.

*- ஔவையார்*

## 235. 'எனக்கொரு வாசகம் சொல்வாரில்லையே'

*"வருந்தாதே! எழுந்திரு. இது உலக இயற்கை. தலைவர் பிரிவதும்; பிரிந்து வந்து சேர்வதும். அவர் வரும்வரை தேறியிரு" என்றாள் தோழி.*

*"ஆமாம்! ஆற்றியிரு; ஆற்றியிரு என்று எனக்கு ஆறுதல் சொல்கிறார்களே தவிர, வந்து விட்டார் என்று சொல்வார் இல்லையே!" என்று மீண்டும் வருந்தினாள் அவள்.*

தேற்றாம் அன்றே - தோழி! தண்ணெனத்
தூற்றும் திவலைத் துயர் கூர் காலை,
கயல் ஏர் உண்கண் கனங் குழை மகளிர்
கையிறை ஆக நெய் பெய்து மாட்டிய
சுடர் துயர் எடுப்பும் புன் கண் மாலை,
அரும் பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்பு,
மெய்ம் மலி உவகையின் எழுதரு
கண் கலிழ் உகுபனி அரக்குவோரே.

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*

## 236. "அவர்க்கு நினைவில்லையோ!"

*"அவர் வரவில்லையே!" என்றாள் அவள்.*

*"வந்து விடுவார். வருந்தாதே" என்றாள்தோழி.*

*"அவர் சென்ற வழியிலே 'யா' மரங்கள் நிறைய இருக்கு மல்லவா?"*



*"ஆமாம். இருக்கும்"*

*"அந்த 'யா' மரத்தின் தழைகளை ஒடித்து யானை உண்ணு மல்லவா?"*

*"ஆமாம்"*

*"அந்த நிழலில் மான் தூங்கும் அல்லவா?"*

*"அது கண்டுமா அவருக்கு எனது நினைவு வரவில்லை?"*

*"நினைப்பு வராமலா இருக்கும்? வரும்; வரும். வந்து என்ன பயன்?"*

*"ஆமாம். சென்ற காரியம் முடிய வேண்டுமே!"*

உள்ளார் கொல்லோ? - தோழி! - உள்ளியும்
வாய் புணர்வு இன்மையின் வாரார் கொல்லோ?
மரற்புகா அருந்திய மா எருத்து இரலை,
உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய
யா அ வரி நிழல், துஞ்சும்
மா இருஞ் சோலை மலை இறந்தோரே.

*- ஊண்பித்தையார்*

## 237. கண்ணும் கண்ணீரும்

*பாலை நிலம். அங்கே இலுப்பை மரங்கள் பல. பூத்திருக் கின்றன. அந்த இலுப்பைப் பூ எங்கும் சிதறிக் கிடக்கிறது. அந்த வழியே செல்கிறான் அவன். எதற்காக? வெளியூர் சென்று பொருள் கொண்டுவர. அவனை எண்ணி வருந்துகிறாள் அவள்.*

*"வருந்தாதே, கண்ணீர் சொரியாதே" என்று ஆற்றுகிறாள் தோழி.*

*"நானா வருந்துகிறேன்? கண்ணீர் சொரிகிறேன்? இல்லையே! என் கண்கள் அல்லவா! நீண்ட நாளாகத் தூக்கம் இல்லை. அதனால் கண்கள் நீர் சொரிகின்றன," என்றாள் அவள்.*

கான இருப்பை வேனில் வெண் பூ
வளி பொரு நெடுஞ் சினை உஞற்றலின், ஆர் கழல்பு,
களிறு வழங்கு சிறு நெறி புதையத் தா அம்
பிறங்குமலை அருஞ் சுரம் இறந்தவர்ப் படர்ந்து,
பயில் இருள் நடுநாள் துயில் அரிது ஆகி,
தெள் நீர் நிகர் மலர் புரையும்
நல் மலர் மழைக்கணிற்கு எளியவால், பனியே.

*- ஓதலாந்தையார்*

**பாலைத் தொகை முற்றும்.**

● ● ●



# முல்லைத் தொகை

## முல்லைக் கண்ணாடி

| | | |
|---|---|---|
| 1. தெய்வம் | : | திருமால் |
| 2. உயர்ந்தோர் | : | குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி |
| 3. தாழ்ந்தோர் | : | இடையர், ஆயர், இடைச்சியர், ஆய்ச்சியர் |
| 4. பறவை | : | காட்டுக்கோழி |
| 5. விலங்கு | : | மான், முயல் |
| 6. ஊர் | : | பாடி |
| 7. நீர் நிலை | : | குறுஞ்சுனை, கான்யாறு |
| 8. மலர் | : | குல்லை, முல்லை, தோன்றி, பிடவம் |
| 9. மரம் | : | கொன்றை, காயா, குருந்தம் |
| 10. தானியம் | : | வரகு, சாமை. முதிரை |
| 11. பறை | : | ஏறுகோட் பறை |
| 12. யாழ் | : | முல்லை யாழ் |
| 13. பண் | : | சாதாரி |
| 14. தொழில் | : | விதை விதைத்தல். களை கட்டல், அரிதல், கடா விடுதல், மாடு மேய்த்தல் |
| 15. விளையாட்டும் பொழுதுபோக்கும் | : | கொன்றைக் குழல் ஊதல், குரவைக் கூத்தாடல், கான்யாறு ஆடல், ஏறு தழுவுதல். |

## முல்லை என்பது என்ன?

காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை எனப்படும். இடை நிலம் என்றும் சிலர் சொல்வர். அதாவது குறிஞ்சிக்கும் மருதத்துக்கும் இடையே உள்ள நிலம்.

முல்லை நிலத்தின் கடவுள் திருமால். மக்களிலே செல்வருக்கு என்ன பெயர்? குறும்பொறை நாடன், தோன்றல் என்பன ஆண்களின் பெயர். மனைவி, கிழத்தி என்பன பெண்களுக்குரிய பெயர். ஏழை மக்களை எவ்வாறு அழைப்பர்? இடையர், ஆயர் என்பர். இது ஆண்களுக்கு. பெண்கள் எவ்வாறு அழைக்கப் பெறுவர்? இடைச்சியர் என்றும் ஆய்ச்சியர் என்றும் அழைக்கப் படுவர்.

இங்கே காணப்படும் பறவை காட்டுக் கோழி. மானும், முயலுமே விலங்குகள். ஊர்களுக்குப் பாடி என்று பெயர். குறுஞ்சுனை, கான்யாறு - இவையே நீர் நிலைகள். கொன்றை, காயா, குருந்தம், - இவை மரங்கள். குல்லைப் பூ, முல்லைப் பூ, தோன்றிப் பூ, பிடவம் பூ- இவை மலர்கள். வரகு, சாமை முதிரை முதலியன உணவு தானியங்கள்.

முல்லை நில மக்களின் இசைக் கருவிகள் இரண்டு. ஒன்று: யாழ்; மற்றொன்று: பறை.

யாழுக்கு முல்லை யாழ் என்று பெயர். பறைக்கு ஏறுகோட் பறை என்று பெயர். அவர்கள் பாடிய பண், சாதாரி.

அவர்களது தொழில் என்ன? சாமை, வரகு முதலியன விதைத்தல்; களை கட்டல்; அரிதல்; கடா விடுதல்; ஆடு மாடு மேய்த்தல்.

முல்லை நில மக்களின் விளையாட்டும் பொழுது போக்கும் எவை?

கொன்றையினால் குழல் செய்து ஊதுவது; குரவைக் கூத்தாடுவது; காட்டாற்று நீரிலே விளையாடுவது; ஏறு தழுவல் முதலியன.



## 238. அளைந்த அத்தியும் உளைந்த நெஞ்சும்

“வருவேன்” என்றான்.

“வருவாய்” என்றாள்.

“விரைவில்” என்றான்.

“வரைவாய்” என்றாள்.

“மறவேன்” என்றான்.

“இளவேனில்” என்றாள்.

“வருவது உறுதி” என்றான்.

இளவேனில் காலத்தை எதிர்பார்த்திருந்தாள் அவள். இளவேனிலும் வந்தது. அவன் வரவில்லை. என்ன செய்வாள் அவள்? பாவம்! துடிக்கிறாள்; துன்புறுகிறாள்; கண்ணீர் வடிக்கிறாள்.

“அழாதே! கண்ணீரைத் துடை” என்றாள் தோழி.

“நான் என்னடி செய்வேன்? அவர் வரவில்லையே! ஊரார் கூறும் பழி என்னால் தாங்க முடியவில்லையே! நண்டு துளைத்த அத்திப் பழம்போல என் நெஞ்சைத் துளைக்கிறதே” என்று புலம்புகிறாள் அவள்.

கருங்கால், வேம்பின் ஒண் பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ!
ஆற்று அயல் எழுந்த வெண் கோட்டு அதவத்து?
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய, கொடியோர் நாவே
காதலர் அகல, ‘கல்’ என்று அவ்வே!

## 239. காரும் காதலனும்

"போய் வருகிறேன்" என்றான் அவன்.

"எப்பொழுது வருவாய்?" என்று கேட்டாள் அவள்.

"கார் காலத்தே"என்றான்.

"காத்திருப்பேன்" என்றாள்.

"கவலைப் படாதே" என்றான்.

நாட்கள் சென்றன. 'இன்று, நாளை' என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள் அவள். கொன்றை பூத்தது. மகளிர் குழல் போல் சரம் சரமாகத் தொங்கின.

கார் காலம் வரும் அறிகுறி தோன்றியது. காதலன் வரவில்லை. அவள் வருந்துவாளோ என்ற கவலை தோழிக்கு.

"வருந்தாதே! வந்து விடுவான் உன் காதலன்" என்றாள் தோழி.

"இன்னும் கார் காலம் வரவில்லையே! வந்திருந்தால் அவரும் வந்திருப்பாரே பொய் சொல்லக் கூடியவர் அல்லர் அவர்" என்றாள் அவள்.

வண்டு படத் ததைந்த கொடியிணர் இடை இடுபு
பொன்செய் புனை இழை கட்டிய மகளிர்
கதுப்பில் தோன்றும் புதுப் பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன்; அவர் பொய் வழங்கலரே

*- ஓதலாந்தையார்*

## 240. கொன்றை மலரும் கொண்டவன் வரவும்

மாரிக் காலம் வந்து விட்டது. மழை பெய்கிறது. கொன்றை மரங்கள் மலர்கின்றன. இவற்றைக் கண்டாள் அவள்.

"கொன்றை மலருங் காலத்தே வருவேன். என்று சொல்லிப் போனவர் இன்னும் வரவில்லையே!" என்று ஏங்கினாள்.

"அடி பயித்தியமே! கார் காலம் வந்துவிட்டது என்றா நினைக்கிறாய்? அதெல்லாம் ஒன்றுமில்லை. பருவமில்லாக் காலத்திலே பெய்த வம்ப மாரி இது. இதுகண்டு கொன்றை மலர்கிறது. தவறாக மாரிக் காலம் என்று எண்ணிவிட்டாய், இன்னும் மாரிக் காலம் வரவில்லை. 'மழை பெய்து விட்டதே! கொன்றை மலர்கிறதே ! பாலை வழிச் சென்ற நம் காதலன் வரவில்லையே' என்று எண்ணி வருந்தாதே!" என்றாள் தோழி.



மடவமன்ற, தடவு நிலைக் கொன்றை
கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாராஅளவை நெரிதரக்
கொம்பு சேர் கொடி இணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார் என மதித்தே

*- கோவர்த்தனார்.*

## 241. காரும் கலையும்

"போய் வருகிறேன்"என்றான் அவன்.

"ஆகா! விரைவில் வந்துவிடு"என்றாள்.

"கார் தொடங்கும் காலத்தே வருவேன்" என்றான்.

"மறவாதே" என்றாள்.

"மாட்டேன்" என்றான்.

நாட்கள் பல சென்றன. 'இன்று நாளை' என்று ஒவ்வொரு நாளையும் எண்ணிக் கொண்டிருந்தாள் அவள். கார் காலமும் வந்தது. "வருவான் வருவான்" என்று வழிமேல் விழி வைத்த வண்ணம் இருந்தாள்.

தூரத்திலே அருவி ஒன்று. 'சல சல' என்று ஓடிக்கொண்டிருந்தது நீர். கூழாங்கற்களின் இடையே ஓடிய நீரைத் தன் காதலிக்கும் ஊட்டித் தானும் உண்டு களித்தது கலைமான். துள்ளி விளையாடியது. அதைக் கண்டாள் அவள். கண்ணீர் வடித்தாள்.

"ஏன் அழுகிறாய்?"என்று கேட்டாள் தோழி.

"அதோ பார்" என்றாள்.

"என்ன?"

"மான் விளையாடுவது பார்"

"ஆமாம். அதற்கென்ன? நீயும் அந்த மாதிரித் துள்ளி விளையாடேன்"

"அவர் வரவில்லையே!"

"வருவார்; வருவார்"

"எப்போ?"

"சீக்கிரம்"

"இன்னுமா உயிர் வைத்துக் கொண்டிருக்கிறாய் என்று கேட்பது போல் கார் காலம் வந்துவிட்டதே" என்றாள். கண்ணீர் வடித்தாள்.

வன் பரற் தெள் அறல் பருகிய இரலை தன்
இன்புறு துணையொடு மறுவந்து உகள,
தான் வந்தன்றே, தளி தரு தண் கார்
வாராது உறையுநர் வரல் நசைஇ,
வருந்தி நொந்து உறைய இருந்திரோ எனவே.

*- கோவூர் கிழார்.*

## 242. பிரிவும் பீர்க்கும்

"நமக்கு வேண்டியவர் யாரும் இல்லையே! என்ன செய்வேன்?" என்றாள் அவள்.

"ஏன்?" என்று கேட்டாள் தோழி.

"நமது கொல்லையிலே பீர்க்கு பூத்து விட்டது."

"ஆமாம்; அதற்கென்ன?"

"அதைக் கொண்டுபோய் அவருக்குக் காட்டவேண்டும்"

"ஏன்?"

"நீ புறப்பட்டபோது அழகாக இருந்த உன் காதலியின் நெற்றி அழகு இழந்து பீர்க்கம் பூப்போல் பசலை படர்ந்து விட்டது. கார் காலத்தின் தொடக்கத்திலே வருவேன் என்றாயே! கார் காலமும் வந்தது. பீர்க்கும் பூத்தது. நீயோ வரவில்லை.



அவளோ வருந்துகிறாள் என்று சொல்லக் கூடியவர் எவரு மில்லையே!" என்றாள்.

'இன்னள் ஆயினள் நன்னுதல்' என்று, அவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே,
நன்றுமன் வாழி - தோழி! - நம் படப்பை
நீர் வார் பைம் புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர் சில கொண்டே.

*- கோக்குளமுற்றத்தார்.*

## 243. உள்ளமும் வெள்ளமும்

"வாருங்கள்! வாருங்கள்!" என்றாள் தோழி.

"வந்தேன்" என்றான் அவன்.

"எப்போ?"

"இப்பதான்"

"போன இடத்திலே எப்படி? நிறைய பொருள் சம்பாதிக்க முடிந்ததா?"

"ஓ"

"ஆமாம்! அங்கே போயிருந்த காலத்திலே. . . . "

"காலத்திலே என்ன?"

"எப்போதாவது எங்களை நினைத்தது உண்டா?"

"நினைக்காமலா இருப்பேன்?"

"ஒரு தரம்தானே?"

"ஊஹும்! ஒரு முறையா! பல முறை! நினைத்தேன். திரும்பத் திரும்ப நினைத்தேன். எண்ணி எண்ணி ஏங்கினேன். ஆற்றிலே வெள்ளம் வருகிறது. உயர்ந்த மரங்களின் கிளையைத் தொடும் அளவு தண்ணீர்! உயர்ந்து ஓடுகிறது. போகப்போக என்னாகிறது? கடலுடன் கலக்குமிடத்திலே! அடங்கி விடவில்லையா? கையால் இறைத்து உண்ணும் அளவுக்கு அடங்கி விடவில்லையா? அந்த மாதிரி தூரத்தில் இருந்தபோது காம வெள்ளம் பெருக்கெடுத்தது.

*அலைப்புற்றேன். இப்போது நெருங்கி வந்துவிட்டேன். அடங்கி விட்டது. அள்ளிக் குடிக்கலாம்.''*

உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி,
நினைந்தனென் அல்லெனோ பெரிதே? நினைந்து,
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே?
நீடிய மரா அத்த கோடு தோய் மலிர் நிறை
இறைத்து உணச் சென்று அற்றாங்கு,
அனைப் பெருங் காமம் ஈண்டு கடைக்கொளவே.

*- ஔவையார்.*

### 244. கன்றும் காதலும்

*மாலை நேரம். பசுக்கள் வீடு நோக்கித் திரும்புகின்றன.*

*பகல் முழுதும் வயிறாரப் புல் மேய்ந்து வருகின்றன. வீட்டிலே இருக்கும் கன்றுகளை எண்ணி ஓடி வருகின்றன. கன்றுகளோ ''அம்மா!'' என்று கதறுகின்றன.*

*இதைப் பார்த்தாள் அவள். கண்ணீர் வடித்தாள். கண்டாள் தோழி.*

*''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டாள்.*

*''அதோ பார்!'' என்றாள். பசுவையும் கன்றையும் பார்த்தாள் தோழி.*

*''ஆமாம் அதற்கு என்ன?''*

*''அந்தக் கன்றுபோல் நான் கதறுவேன் என்பது அவருக்குத் தெரியவில்லையே! பசுகூடத் தன் கன்றை நினைத்து ஓடி வருகிறதே! அவர் வரவில்லையே'' என்றாள்.*

*''கோ'' என்று கதறினாள்.*

*''சீ! அசடே! அழாதே! அவருக்குத் தெரியாதா என்ன? சீக்கிரம் வந்துவிடுவார்''*

*''தெரிந்தும் அவர் வரவில்லையே!'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள் அவள்.*



பல்ஆ நெடு நெறிக்கு அகன்று வந்தென,
புன்தலை மன்றம் நோக்கி, மாலை
மடக் கண் குழவி அலம்வந்தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் - தோழி! - சேய் நாட்டோரே.

*- கருவூர்க் கதப்பிள்ளையார்*

### 245. கார் அல்ல காரிகையே!

*மழை பெய்தது. முல்லை முகிழ்த்தது.*

*''கார் வந்தது'' என்றாள் அவள்.*

*'ஆம்' என்றால்; அவள் வருந்துவாள். ஏன் காதலன் வரவில்லை என்பாள்.*

*எனவே, ''இது கார் அன்று'' என்றாள்.*

*''கார் ஆயின், அவர் வந்திருப்பாரே! அவர் வந்து விட்டால் கார் வந்ததாக அர்த்தம்'' என்றாள்.*

*''மழை பெய்வதும், முல்லை முகிழ்ப்பதும் கார் காலத்துக்கு அறிகுறி அல்ல. அவர் வருவதே அறிகுறி'' என்றாள்.*

தண் துளிக்கு ஏற்ற பைங் கொடி முல்லை
முகை தலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூ அமல் தளவமொடு, தேம் கமழ்பு கஞல,
வம்புப் பெய்யுமால் மழையே; வம்பு அன்று,
கார் இது பருவம் ஆயின்,
வாராரோ, நம் காதலோரே?

*- குறுங்கீரனார்*

### 246. ஒன்றிய உடலும் ஒன்றா உடலும்

*''என் கணவனைத் தட்டிக் கொண்டுவிட்டாள்'' என்று சொன்னாள் ஒருத்தி. அது கேட்டாள் அந்த ஆடல் அழகி.*

*''அப்படி ஒன்றுமில்லை. நானாகச் செய்வது எதுவுமில்லை. எல்லாம் அவன் செயல். அவன் இங்கே இருந்தால் ஈருடலா*

*யிருப்போம். அணைத்து இறுக்கிப் படுத்தால் ஒருடலாயிருப்போம். அவ்வளவுதான்" என்றாள்.*

பொய்கை ஆம்பல் அணி நிறக் கொழு முகை
வண்டு வாய் திறக்கும் தண் துறை ஊரனொடு
இருப்பின், இரு மருங்கினமே; கிடப்பின்,
வில்லக விரலின் பொருந்தி; அவன்
நல் அகம் சேரின், ஒரு மருங்கினமே.

*- வில்லக விரலினார்*

## 247. முல்லை மலர்ந்தது முகம் மலர்வாய்

*காதலன் வரும் நாளைக் கணக்கிட்டுச் சுவரிலே கோடு போட்டிருந்தாள். அதை எண்ணி எண்ணிப் பார்த்து ஏங்கினாள்; வருந்தினாள். வளைகள் நெகிழ்ந்தன.*

*"வருந்தாதே! இதோ பார்! வந்துவிட்டது. முல்லை மலரும் காலம்!" என்றாள் தோழி.*

*மாடு மேய்க்கும் இடையர்கள் தலையிலே முல்லை மலர் சூடிச் சென்றார்கள். அதைக் காட்டினாள் அவளுக்கு.*

வீங்கு இழை நெகிழ, விம்மி, ஈங்கே
எறிகண் பேதுறல்; ஆய்கோடு இட்டுச்
சுவர்வாய் பற்றும் நின் படர் சேண் நீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்:
தனியோர் இரங்கும் பனி கூர் மாலைப்
பல் ஆன் கோவலர் கண்ணிச்
சொல்லுப அன்ன, முல்லை வெண் முகையே.

*- கொற்றனார்*

## 248. மடிகண்ட மங்கை

*பனிக்காலம்! மாலை நேரம். பகல் முழுதும் புல் மேய்ந்த பசுக்கள் வீடு திரும்புகின்றன. கன்றை நினைந்து மடிகனத்துப் பால் வழிகிறது.*

*பார்த்தாள் அவள். கண்ணீர் வடித்தாள்.*



*"புண்ணியசாலிகள்" என்றாள்.*

*"யார்!" என்றாள் தோழி.*

*"இத்தகைய மாலையிலே காதலன் வரப்பெற்றோர்" என்றாள்.*

நோற்றோர் மன்ற - தோழி! தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக் கடுந் திங்கள்
புலம் பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலம் தூங்கு அணல வீங்கு முலைச் செருத்தல்
பால் வார்பு, குழவி உள்ளி, நிரை இறந்து,
ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை,
அரும் பெறல் பொருட் பிணிப் போகிப்
பிரிந்து உறை காதலர் வர, காண்போரே.

*- குறுங்குடி மருதனார்*

## 249. தள்ளு குப்பை!

*"பாணன் பண் இசைக்க வேண்டும். முல்லை மணம் வீச வேண்டும். அவள் தோளை அணைய வேண்டும். இதுதான் வாழ்க்கை! மற்ற வாழ்க்கை என்ன வாழ்க்கை? எல்லாம் எதற்குப் பயன்? சாரமற்ற வாழ்க்கை பதடி வாழ்க்கை, தள்ளு குப்பை! " என்கிறான்.*

*பொருள் தேடச் சென்றவன் வெற்றியுடன் காதலியைக் காண்பதற்கு வருகிறான். அந்த ஜோர்! பேச்சுக்குக் கேட்க வேண்டுமா?*

எல்லாம் எவனோ? பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத்து அஞ்சுவர நல் இசை வீழ,
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசு முகைத் தாது நாறும் நறு நுதல்
அரிவை தோள் - அணைத் துஞ்சிக்
கழிந்த நாள் இவண் வாழும் நாளே.

*- பதபடி வைகலார்.*

## 250. மானும் மானும்

*"வருந்தாதே! வருந்தாதே! என்று சொல்கிறாய். நான் எப்படியடி வருந்தாமல் இருப்பேன்? ஆண்மான் பெண்மானை அணைக்கிறது. புதரிலே மறைகிறது. ஆண்யானை பெண் யானையைத் தழுவுகிறது. மலைச் சாரலிலே ஒதுங்குகிறது. மழையும் பெய்கிறது; மாலையும் வந்தது. என்னைத் தழுவிக் கொள்ள வந்திலரே காதலர்" என வருந்தினாள்.*

மான்ஏறு மடப் பிணை தழீஇ, மருள் கூர்ந்து,
கானம் நண்ணிய புதல் மறைந்து ஒடுங்கவும்,
கையுடை நல் மாப் பிடியொடு பொருந்தி,
மை அணி மருங்கின் மலையகம் சேரவும்,
மாலை வந்தன்று, மாரி மா மழை;
பொன் ஏர் மேனி நல் நலம் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்,
என் ஆம், தோழி நம் இன் உயிர்நிலையே? **- தாயங் கண்ணனார்.**

## 251. வந்திலரே

*"வானத்திலே மின்னல் மின்னுகிறது. இடி இடிக்கிறது. மழை பெய்கிறது. மாலையும் வந்தது. ஆனால் என்னைக் கட்டி அணைத்திட வந்திலரே" என்று வருந்துகிறாள் அவள்.*

சேயுயர் விசும்பின் நீர் உறு கமஞ்சூல்
தண்குரல் எழிலி ஒண் சுடர் இமைப்ப,
வாரார் வாழி - வாழி! - வரூஉம்
இன் உறல் இள முலை ஞெமுங்க
இன்னா வைப்பின் சுரன் இறந்தோரே. **- பேரிசாத்தனார்.**

## 252. கசக்கிய தளிர்

*"மாரிக்காலம் வந்தது. இன்னும் வரவில்லயே! கொஞ்சங் கூட இரக்கமில்லாதவர்" என்றாள் தோழி.*

*"காமமோ நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. வளர் பிறை போல, தோள்வளை நெகிழ்கிறது. தளிரைக் கசக்கியது போல் ஆகிவிட்டேன். போதாக்குறைக்கு மழைக் காலமும் வந்து விட்டது. என்மீது இரக்கம் காட்டுவார்போல அவரைக் கொடியவர் என்று சொல்கிறார்களே!" என்றாள் அவள்.*



வளர்பிறை போல வழிவழிப் பெருகி,
இறை வளை நெகிழ்த்த எவ்வ நோயொடு
குழை பிசைந்தனையேம் ஆகிச் சாஅய்,
உழையர் அன்மையின் உழப்பது அன்றியும்,
மழையும் - தோழி! - மான்றுபட்டன்றே;
பட்ட மாரி படா அக்கண்ணும்,
அவர் திறத்து இரங்கும் நம்மினும்,
நம் திறத்து இரங்கும், இவ் அழுங்கல் ஊரே.

***- பெருங் கண்ணனார்.***

## 253. சூல்கொண்ட மகளும் மேகமும்

*"பூரண கர்ப்பிணி. பச்சைப் புளி தின்னும் ஆசை. நடக்க மாட்டாமல் நடக்கிறாள். அந்த மாதிரி மேகங்கள் சூல்கொண்டு நிற்கின்றன. வானத்தின் மேலே ஏறமுடியாது தளர்கின்றன. பார்த்தாயா!" என்றாள் தோழி. அதாவது என்ன? காதலன் வந்துவிடுவான். விரைவிலே நீயும் இந்நிலை அடைவாய் என்பது கருத்து.*

அம்ம வாழி - தோழி! -காதலர்
இன்னே கண்டும், துறக்குவர்கொல்லோ
முந்நாள் திங்கள் நிறை பொறுத்து அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும் புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல நீர் கொண்டு,
விசும்பு இவர்கல்லாது தாக்குபு புணரி,
செழும் பல் குன்றம் நோக்கி,
பெருங் கலி வானம் ஏர்தரும் பொழுதே?

***- கச்சிப்பேட்டு நன்னாகையார்.***

## 254. இரவும் எருமையும்

"வருந்தாதே" என்றாள் தோழி.

"நான் என்னடி செய்வேன்? அவர் வரக் காணேன். இரவு தூக்கம் வரவில்லை. எருமை தன் கொம்பை அசைக்கும் போதெல்லாம் அதன் கழுத்து மணியோசை கேட்கிறதே தவிர, அவர் வரும் தேர் மணியோசை கேட்கவில்லையே!" என்று ஏங்கினாள்.

திரிமருப்பு எருமை இருள் நிற மை ஆன்
வருமிடறு யாத்த பகுவாய்த் தெண் மணி,
புலம்பு கொள் யாமத்து, இயங்குதொறு இசைக்கும்
இதுபொழுது ஆகவும் வாரார்கொல்லோ
மழை கழூஉ மறந்த மா இருந் துறுகல்
துகள் சூழ் யானையின் பொலியத் தோன்றும்
இரும் பல் குன்றம் போகி,
திருந்து இறைப் பணைத் தோள் உள்ளாதோரே?

*- மதுரை மருதன் இளநாகனார்*

## 255. மணி ஓசை கேட்குதம்மா!

மாரிக்காலம். மாலைநேரம். மணி யோசை கேட்கிறது.

"மணியோசை கேட்கிறதே!" என்றாள் அவள்.

"ஆமாம். தேரின் மணி யோசையோ அல்லது மாட்டின் மணி ஓசையோ?" என்றாள் அவள்.

"அந்த முல்லை படர்ந்த கல்லின்மீது ஏறி நின்று பார்ப்போம் வா" என்றாள் அவள்.

முல்லை ஊர்ந்த கல் உயர்பு ஏறிக்
கண்டனம் வருகம்; சென்மோ - தோழி!
எல் ஊர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்
புல் ஆர் நல் ஆன் பூண் மணிகொல்லோ?
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல் வில் இளையர் பக்கம் போற்ற,
ஈர் மணற் காட்டாறு வரூஉம்
தேர் மணிகொல்? - ஆண்டு இயம்பிய உளவே.

**- ஒக்கூர் மாசாத்தியார்**



## 256. இடித்து முழங்கு! மேகமே!

"மாரிக் காலத்தே வருவேன்" என்று சொல்லிப் போனான். சொன்னபடி வந்துவிட்டான். காதலியுடன் இன்பமாயிருக்கிறான். அப்போது மழை பெய்கிறது. மழையைப் பார்த்து சொல்கிறான்.

"நன்றாக இடித்து முழங்கு; மின்னி ஒளி வீசு; குளிர் துளி பொழிவாய்! மழையே! வாழி"

தாழ்இருள்தும்மிய மின்னி, தண்ணென
வீழ் உறை இனிய சிதறி, ஊழின்
கடிப்பு இகு முரசின் முழங்கி, இடித்து இடித்துப்
பெய்க, இனி; வாழியோ, பெரு வான்! - யாமே,
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
இவளின் மேவினம் ஆகி, குவளைக்
குறுந் தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல் அணையேமே.

*- பாண்டியன் பன்னாடு தந்தான்*

## 257. பாத்திரத்தைக் காலி செய்கிறது

கார்காலம் வந்தது. கண்டாள் அவள்; காதலன் வரவில்லையே என்று வருந்தினாள்.

"இது கார்காலம் அன்று. வருந்தாதே" என்றாள் தோழி.

"என்னடி சொல்கிறாய்? மழை பெய்கிறது. மயில் ஆடுகிறது. பிடவம் மலர்கிறது. இது கார்காலம் அல்லவா?" என்றாள் அவள்.

"இல்லையடி இல்லை. யார் கடன் நின்றாலும் மாரி கடன் நில்லாது அல்லவா? சென்ற கார் காலத்திலே பெய்யாது எஞ்சிய மழையே இப்போது பெய்கிறது. இது வம்பு மாரி, பாத்திரத்தைக் காலி செய்கிறது. அது கண்டு முட்டாள் தனமாக மயில் ஆடுகிறது" என்றாள் தோழி.

மடவ வாழி - மஞ்ஞை மா இனம்
கால மாரி பெய்தென, அதன் எதிர்
ஆலலும் ஆலின்; பிடவும் பூத்தன;
கார் அன்று - இருளை! - தீர்க, நின் படரே!
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழ நீர்,
புது நீர் கொளீஇய, உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்கு குரல் கேட்டே,

*- இடைக்காடனார்*

## 258. பிரியமும் பிரியாமையும்

*"நம்ம பெண்ணைப் பார்த்தியா? எப்படிக் குடித்தனம் செய்கிறாள்?" என்று கேட்டாள் தாய்.*

*"ஓ பார்த்தேனே! நன்றாகத்தான் இருக்கிறாள்" என்கிறாள் செவிலி.*

*"கணவன் பிரியமாயிருக்கிறானா?"*

*"பிரியமாவும் இருக்கிறான்; பிரியாமலும் இருக்கிறான். எங்கே போனாலும் அதிக நேரம் தங்குவதில்லை. அவளை நினைத்து வந்து விடுகிறான். அரசன் ஆணைப்படி வெளியூர் சென்றால் கூட சுறு சுறுப்பாக வேலையை முடித்து வந்து விடுகிறான்."*

கானங்கோழிக் கவர் குரற் சேவல்
ஒண் பொறி எருத்தில் தண் சிதர் உறைப்பப்
புதல் நீர் வாரும் பூ நாறு புறவில்
சீறூரோளே, மடந்தை; வேறு ஊர்
வேந்து விடு தொழிலொடு செலினும்,
சேந்து வரல் அறியாது, செம்மல் தேரே.

*- குழற்றத்தனார்*

## 259. எல்லாக் காலமும் மாலையே!

*"மாலை வந்துவிட்டதே!" என்று மயங்கினாள் தோழி.*

*"என்னடி, மாலை மாலை என்று மயங்குகிறாய்? சூரியன் மலைவாயில் விழுந்து, வானம் சிவந்து, முல்லை மலரும் காலம் தான் மாலையோ? அது எல்லோருக்கும் பொருந்தாது. என் போல்*



*காதலரைப் பிரிந்தவருக்கு இரவு, பகல் முதலிய எல்லாக் காலமும் மாலைக் காலமே" என்றாள் அவள்.*

சுடர் செல் வானம் சேப்ப, படர் கூர்ந்து,
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார், மயங்கியோரே;
குடுமிக் கோழி நெடு நகர் இயம்பும்
பெரும் புலர் விடியலும் மாலை;
பகலும் மாலை - துணை இலோர்க்கே.

*- மிளைப் பெருங் கந்தனார்*

## 260. தேர் வேகமும் மனோ வேகமும்

*பொருள் தேடச் சென்ற காதலன் திரும்பிவிட்டான். வெற்றி யுடனே. காதலியைக் காணப் போகிறான். வேகமாகச் செல்கிறது தேர். அதைவிட வேகமாக ஓடுகிறது மனம்.*

*"அதோ தெரிகிறதே முல்லைக்காடு! பொன்போல் பூத்திருக்கும் கொன்றைத் தோப்பு! அதுதான்! அதுதான்!" என்றான்.*

*அந்த வழியே தேரைச் செலுத்தினான் பாகன். வழியிலே கிழங்கு தோண்டி எடுத்த பள்ளங்கள். செல்வர் தம் கஜானாப் பெட்டி திறந்தது போல!*

*"இவையெல்லாம் என் மாமனாருக்குச் சொந்தமான நிலம்" என்றான் பெருமையுடன்.*

*"அன்னக் கொடி கட்டிப் பறக்கிறது! இல்லையெனாது கொடுக்கும் வள்ளல் அவர்" என்றான்.*

கவலை கெண்டிய கல்வாய்ச் சிறு குழி
கொன்றை ஒள் வீ தா அய், செல்வர்
பொன் பெய் பேழை மூய் திறந்தன்ன
கார் எதிர் புறவினதுவே - உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்து மிச்சில், யாவர்க்கும்
வரைகோள் அறியாச் சொன்றி,
நிறை கோற் குறுந்தொடி தந்தை ஊரே.

*- பேயனார்*

## 261. இடையன் வரவும் இன்ப நினைவும்

*கார்காலம். மாலை நேரம். மேய்ச்சல் நிலத்திலிருந்து பால் கொண்டு வருகிறான் இடையன். பாலை வீட்டிலே கொடுத்து விட்டுச் சோறு கொண்டு செல்கிறான். பனை யோலையாலே செய்த பாயையும் எடுத்துச் செல்கிறான். தலையிலே முல்லை சூடியிருக்கிறான். கண்டாள் அவள். காதலன் நினைவு வந்தது.*

*"பாரடி, இன்னும் வரவில்லை" என்று ஏங்குகிறாள் அவள்.*

அவரோ வாரார் - முல்லையும் பூத்தன;
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய,
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறு பசு முகையே.

***- உறையூர் முதுகொற்றனார்***

## 262. மாலை வந்தது மணாளன் வரவில்லை

*கார் காலம் வந்து விட்டது. வரகுக் கொல்லையிலே முல்லை அரும்பி விட்டது. வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. மாலையும் வந்து விட்டது. ஆனால் அவளைப் பிரிந்த காதலன் வர வில்லை.*

*"பாரடி தோழி, இன்னும் வரவில்லையே அவர்" என்று புலம்புகிறாள் அவள்.*

பழ மழைக் கலித்த புதுப் புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவி சேர் மருங்கில் பூத்த முல்லை,
வெருகு சிரித்தன்ன, பசு வீ மென் பிணிக்
குறு முகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டு சூழ் மாலையும், வாரார்;
கண்டிசின் - தோழி! - பொருட் பிரிந்தோரே.

***- ஒக்கூர் மாசாத்தியார்***



## 263. காகம் கரைந்தது; காதலன் வந்தான்!

*காகம் கரைந்தது.*

*"சரி, இன்றுவந்து விடுவார் உன் காதலர்" என்றாள் தோழி.*

*காதலன் வந்துவிடுவான் என்ற துணிவுண்டாயிற்று அவளுக்கு. மனம் கலங்காதிருந்தாள். காதலன் வந்தான். காதலிக்கு ஆறுதல் கூறி வந்ததற்காகத் தோழியைப் பாராட்டினான்.*

*அப்போது தோழி சொல்கிறாள்.*

*"ஆறுதல் அளித்தவள் நானா? அல்ல; அல்ல. அந்தக் காகம் அல்லவா? அதற்கு எவ்வளவு சோறு போட்டாலும் தகும்" என்றாள்.*

*நள்ளி என்றொரு வள்ளல். அவன் காட்டிலே பசுக்கள் ஏராளம். "அந்தப் பசுவின் நெய்யும். தொண்டியிலே விளைந்த அரிசியும் கலந்து ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தாலும் போதாது" என்றாள் தோழி.*

திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண் ணெல் வெஞ் சோறு
எழு கலத்து ஏந்தினும் சிறிது - என் தோழி
பெருந் தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே.

***- காக்கை பாடினியார் நச்செள்ளையார்***

## 264. மயிலும் மங்கையும்

*மின்னல் மின்னுகிறது. மேகம் இடிக்கிறது. மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. அவள் வருந்தினாள்.*

*"மேகம் வருத்துகிறது?" என்றாள்.*

*"மேகம் மட்டுமா வருத்துகிறது? இந்த மயிலும்தான். என் நெஞ்சு படும் பாட்டை என்ன என்பேன்?"*

என் எனப்படுங்கொல் - தோழி! மின்னு வர
வான் ஏர்பு இரங்கும் ஒன்றோ? அதன் எதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்;
ஏதில கலந்த இரண்டற்கு என்
பேதை நெஞ்சம் பெரு மலக்குறுமே?

*- கோவர்த்தனார்*

## 265. அணைப்பும் ஆனந்தமும்

*"காதலனைப் பிரிந்து நீண்ட நாள் ஆயிற்றே. எப்படி ஆற்றியிருந்தாய்?" என்று கேட்டாள் தோழி.*

*"களவுக் காதல் நிகழ்ந்தபோது முல்லை மலர் மணம் வீச வந்த நிலவிலே என்னைக் கட்டி அணைத்தானே, அதை நினைத்தேன். அந்த மணம் இன்னமும் என் மேனியில் இருக்கிறது. அது என்னை ஆற்றியது" என்றாள் அவள்.*

மட்டம் பெய்த மணிக் கலத்தன்ன
இட்டு வாய்ச் சுனைய பகுவாய்த் தேரை,
தட்டைப் பறையின், கறங்கும் நாடன்
தொல்லைத் திங்கள் நெடு வெண்ணிலவின்
மணந்தனன் மன் எம் தோளே
இன்றும், முல்லை முகை நாறும்மே.

*- அரிசில் கிழார்*

## 266. அவை கூவின : அவள் சீறினாள்

*இரவு நேரம். பறவைகள் ஆணும் பெண்ணுமாக இருக்கின்றன. இன்பமாக இருக்கின்றன. அந்த மகிழ்ச்சியால் கூவுகின்றன.*

*காதலனைப் பிரிந்த காதலிக்கு எப்படி இருக்கும்? துன்பமாயிருக்கிறது. காதலனை நினைக்கிறாள். கோபம் வருகிறது. நம்மை இப்படி வருந்தவிட்டானே என்று.*

*"இங்கே வரட்டும். தலையைத் தொட்டுப் பிறகு உடம்பைத் தொடுவான். 'போதும் போதும் ஒன்றும் வேண்டாம், விடு' என்று சொல்கிறேனா இல்லையா பார்! என்று சீறுகிறாள்."*



உதுக்காண் அதுவே: இது என மொழிகோ?
நோன் சினை இருந்த இருந் தோட்டுப் புள்ளினம்
தாம் புணர்ந்தமையின், பிரிந்தோர் உள்ளத்
தீம் குரல் அகவக் கேட்டும், நீங்கிய
ஏதிலாளர் இவண் வரின், 'போதின்
பொம்மல் ஓதியும் புனையல்;
எம்மும் தொடாஅல்' என்குவெம்மன்னே.

## 267. பசுவும் பாக்கியமும்

*தொழுவத்திலே ஏராளமான பசுக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றின் மத்தியிலே ஒரே காளை. அதன் கழுத்திலே ஒரு மணி. இரவு நேரத்தில் அந்த மணி ஓசை கேட்கிறது. மணி ஓசை கேட்டதும் தூங்காதிருந்த அவள் என்ன நினைக்கிறாள்? காதலன் வந்துவிட்டதாக நினைக்கிறாள். எட்டிப் பார்க்கிறாள். தலைவனைக் காணோம். வருந்துகிறாள்.*

*அப்போதுதான், மணி ஓசை எங்கிருந்து வருகிறது என்று பார்க்கிறாள். தொழுவத்திலிருந்து வருகிறது.*

*"ஆகா! இந்தக் காளை மத்தியில் இருக்கும் பசுக்கள் செய்த பாக்கியம்கூட நான் செய்யவில்லையே!" என்று ஏங்குகிறாள்.*

நெறி இருங் கதுப்பொடு பெருந் தோள் நீவி,
செறிவளை நெகிழ, செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி - தோழி! - பொறி வரி
வெஞ் சின அரவின் பைந்தலை துமிய
நரை உரும் உரறும் அரை இருள் நடுநாள்,
நல் ஏறு அயங்குதொறு இயம்பும்
பல் ஆன் தொழுவத்து ஒரு மணிக் குரலே?

*- பூதம்புல்லனார்*

## 268. அழகு குலைத்த அன்பர்

*"கார் காலம் வந்துவிட்டது. மழை பொழிகிறது. முல்லை நிலம் இனிய காட்சி தருகிறது. முல்லைக் கொடிகள் அரும்பிவிட்டன. எனது மனங் குலைய வைக்க வந்துவிட்டது மாலை. ஆனால் என் அழகு குலைத்த அன்பர் இன்னும் வரவில்லையே!"*

முகை முற்றினவே முல்லை; முல்லையொடு
தகை முற்றினவே, தண் கார் வியன் புனம்
வால் இழை நெகிழ்ந்தோர் வாரார்
மாலை வந்தன்று, என் மாண் நலம் குறித்தே.

*- மதுரை அளக்கர் ஞாழர் மகனார் மள்ளனார்*

## 269. ஏங்கியது உள்ளம்

*இடி இடித்தது. மழை பெய்தது. கொல்லையிலே முல்லை அரும்பியது. கண்டாள் அவள். கார் காலம் வந்துவிட்டது என்று அறிந்தாள். ஆனால் அவனோ வரவில்லை. வரவில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு. தூக்கம் வரவில்லை.*

*"ஏனடி முகம் ஒரு மாதிரி இருக்கிறதே?" என்றாள் தோழி.*

*"தூங்கவில்லை" என்றாள்.*

*"ஏன் தூங்கவில்லை?"*

*"கார் வந்துவிட்டது. கொல்லையிலே முல்லையும் அரும்பியது. ஆனால் அவர் வரவில்லை. ஏங்கியது என் உள்ளம்" என்றாள்.*

ஆர்கலி ஏற்றொடு கார் தலைமணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென் கொடி
எயிறு என முகையும் நாடற்குத்
துயில் துறந்தனவால் - தோழி! - எம் கண்ணே.

*- ஒக்கூர் மாசாத்தியார்*

## 270. வருவார் மறவார்!

*"கார் காலம் வந்துவிட்டதே. அவர் போயுள்ள இடத்திலே கொன்றை மலரும் அல்லவா? அதைப் பார்க்கும் போது அவருக்கு என்னைப் பற்றிய நினைவு வராதா? ஐயோ! நமது காதலியும் இந்தக் கொன்றை நிறம்போல பசலை பாய்ந்திருப்பாளே என்று எண்ணி வரமாட்டாரா? அங்கே மான் இணைபிரியாது இருக்குமல்லவா? அது கண்டாவது என் நினைவு வராதா? அவர் வரமாட்டாரா? பார்க்கலாம்" என்று கூறி மனம் தேறினாள் அவள்.*



சென்ற நாட்ட கொன்றைஅம் பசு வீ
நம் போல் பசக்கும் காலை, தம் போல்
சிறு தலைப் பிணையின் தீர்ந்த நெறி கோட்டு
இரலை மானையும் காண்பர்கொல், நமரே? -
புல்லென் காயாப் பூக் கெழு பெருஞ் சினை
மென் மயில் எருத்தின் தோன்றும்
புன் புல வைப்பிற் கானத்தானே.

*- ஔவையார்*

## 271. புளிக் குழம்பும் புதுக் குடித்தனமும்!

*"நம்ம பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்தோமே. கணவன் வீட்டிலே எப்படி யிருக்கிறாள்? குடித்தனம் எப்படிச் செய்கிறாள் என்று பார்க்க வேண்டாமா?" என்றாள் தாய்.*

*"நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டாள் செவிலி; போனாள். பார்த்தாள். ஒருநாள் இருந்தாள்; திரும்பி வந்தாள்; வந்தவளைக் கேட்கிறாள் தாய்.*

*"ஏண்டி பார்த்தியா?"*

*"பார்த்தேன்"*

*"எப்படி யிருக்கிறாள்?"*

*"சந்தோஷமாகத்தான் இருக்கிறாள்"*

*"புருஷனுக்குச் சமையல் செய்து போடுகிறாளா?"*

*"ஓ, போடுகிறாள்"*

*"ஏனடி, அவளுக்கு என்னடி சமையல் தெரியும்? சிறிசு"*

*"அதென்னவோ அம்மா, சிறிசோ பெரிசோ. அவள் சமைத்துப் போடுகிறாள். அவன் ஆசையோடு சாப்பிடுகிறான். நன்றாயிருக்கு என்கிறான்"*

*"ஏனடி, அடுப்பு மூட்டவே தெரியாதே அவளுக்கு"*

*"ஊதி ஊதி எரிய விடுகிறாள். புகை தாங்க முடியவில்லை. கண் இரண்டும் கலங்கியிருக்கின்றன"*

"உம். அப்புறம்"

"குழம்பு வைத்தாள்......"

"எப்படி யிருந்தது?"

"ஒரே புளிப்பு"

"உம். அப்புறம்"

"தயிர் ஊற்றிச் சோறு பிசைந்தாள்; அந்தக் கையை அப்படியே துணியில் துடைத்துக் கொண்டாள்"

"ஏனடி, சீலையைத் துவைத்துக் கட்டுகிறாளா?"

"அதுதானே இல்லை. ஒரே அழுக்கு"

"ஏனடி, அழுக்குச் சீலை, புளிக் குழம்பு, கவித்த கண் இப்படிச் சோறு போட்டால் ஓர் ஆண்பிள்ளை எப்படியடி சாப்பிடுவான்?"

"சாப்பிடுகிறானே! நன்றாயிருக்கு நன்றாயிருக்கு என்று சொல்லிச் சாப்பிடுகிறானே. அவளும் மகிழ்ந்து போகிறாளே!"

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்,
கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ,
குவளை உண்கண் குயப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீம் புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்,
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

– கூடலூர் கிழார்

## 272. சிரிக்காதே சிறு முல்லையே!

பிரிந்து சென்ற காதலன் வருகிறான்; காதலியைக் காண்பதற்காக. மாலை வந்துவிட்டது .வழியிலே முல்லை அரும்பு காண்கிறான். கண்ட உடனே அவனுக்கு என்ன தோன்றியது?

"அட பயித்தியக்காரா! இளம் வயது. தங்கப் பதுமை போலிருக்கிறாள் காதலி. அவளைக் கண் எடுத்துப் பார்க்காமல் எங்கேயோ போய்விட்டாயே!" என்று சிரிப்பது போல் தோன்றியது?



"முல்லையே! தனியே இருக்கும் என்னைப் பார்த்துச் சிரிக்கலாமா? சிரிக்காதே! இதோ போகிறேன்" என்று சொல்லி வேகமாகச் செல்கிறான்.

கார் புறந்தந்த நீருடைவியன் புலத்துப்
பல் ஆ புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை! வாழியோ, முல்லை - நீ நின்
சிறு வெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ, மற்று - இது தமியோர் மாட்டே? – கருவூர்ப் பவுத்திரனார்

## 273. பயிரும் பருவமும்

உழவர்கள் என்ன செய்கிறார்கள்? ஆரவாரம் செய்கிறார்கள். ஏன்? உழவு நடக்கிறது. உழவு ஆயிற்று. விதை விதைக்கிறார்கள். கார் காலமல்லவா?

மாலை நேரம். உழவர்கள் வீடு திரும்புகிறார்கள் காலையிலே விதை கொண்டு சென்ற பனை ஓலை வட்டிலிலே என்ன கொண்டு வருகிறார்கள்? முல்லை கொண்டு வருகிறார்கள்.

கண்டாள் அவள்.

"கார் வந்துவிட்டது. முல்லையும் வந்துவிட்டது. ஆனால் தேர் ஏறிச் சென்ற என் காதலர் மாத்திரம் வரவில்லையே!" என்று கூறினாள்; வருந்தினாள்.

"உழவர்கள் பயிர் செய்யத் தொடங்கிவிட்டார்களே. வாழ்க்கைப் பயிர் செய்யத் தொடங்க வேண்டிய காதலர் இன்னும் வரவில்லையே!" என்று ஏங்கினாள்.

முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக் குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான் வந்தன்துற; மெழுகு ஆன்று
ஊது உலைப் பெய்த பகுவாய்த் தெண் மணி
மரம் பயில் இறும்பின் ஆர்ப்ப, சுரன் இழிபு,
மாலை நனி விருந்து அயர்மார்
தேர் வரும் என்னும் உரை வாராதே. – உரோடகத்துக் கந்தரத்தன்

## 274. கனவோ? நினைவோ?

"கார் காலம் வந்துவிட்டது," என்றாள் அவள். கண் கலங்கினாள். ஏன்? காதலன் வரவில்லை. கண்டாள் தோழி.

"இது கார் காலம் அல்ல. கார் காலமாக இருந்தால் அவர் வந்திருப்பாரே! பொய்யா சொல்லுவார்? சொல்ல மாட்டாரே" என்றாள் தோழி.

"இல்லையடி இல்லை. இது கார் காலம்தான் தெரியாமல் சொல்கிறாய் நீ. கனவு காண்கிறாயோ என்னவோ? அதோ பார். கொன்றை பூத்துவிட்டது; சிறு குழந்தைகளின் இடுப்பில் கட்டிய பொன் காசு போல," என்றாள் அவள்.

செல்வச் சிறா அர் சீறடிப் பொலிந்த
தவளை வா அய பொலம் செய் கிண்கிணிக்
காசின் அன்ன போது ஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந் தண் காலையும்,
'கார் அன்று' என்றி ஆயின்,
கனவோ மற்று இது? வினவுவல் யானே. *- இளங்கீரந்தையார்*

## 275. முல்லை தரும் தொல்லை

"பொருள் பொருள் என்று இப்படிப் பொருள் ஆசை கொண்டு போய்விட்டாரே. இளமை வீணாகிறதே. எங்கே இருக்கிறாரோ? என்ன செய்கிறாரோ? 'கார் காலத்திலே வருவேன்' என்றாரே! கார் வந்து விட்டதே என்று ஏங்கி வாடுகிறேன் நான். "இன்னுமா உயிர் வைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக் கேலி செய்து நகைப்பதுபோல் அரும்பி விட்டதே முல்லை."

காதலன் வரவு நோக்கி வாடும் காரிகையின் உள்ளத்து எதிரொலி இது.

இளமை பாரார் வளம் நசைஇச் சென்றோர்
இவணும் வாரார்; எவணரோ? என
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகு முகை இலங்கு எயிறு ஆக
நகுமே - தோழி! - நறுந் தண் காரே. *- ஒக்கூர் மாசாத்தியார்*



## 276. வந்தால் என்ன? வராவிட்டால் என்ன?

"வருந்தாதே. வந்துவிடுவார்" என்றாள் தோழி.

"ஆமாம். அவர் வந்தால் என்ன வராவிட்டால்தான் என்ன?" என்றாள் அவள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"ஆமாம். வாடை வீசுகிறதே. அவள் எப்படி வருந்துகிறாளோ என்று எண்ணினாரா? வந்தாரா? இல்லையே. இனி நான் எப்படி உயிர் தரிப்பேன்! இறந்து போவேன். அதன் பிறகு அவர் வந்தால் என்ன? வராவிட்டால்தான் என்ன? இரண்டும் ஒன்றே" என்றாள் அவள்.

வாரார் ஆயினும், வரினும், அவர் நமக்கு
யார் ஆகியரோ - தோழி! - நீர
நீலப் பைம் போது உளரி, புதல
பீலிஒண் பொறிக் கருவிளை ஆட்டி,
நுண் முள் ஈங்கைச் செவ் அரும்பு ஊழ்த்த
வண்ணத் துய்ம் மலர் உதிர, தண்ணென்று
இன்னாது எறிதரும் வாடையொடு
என் ஆயினள்கொல் எண்ணாதோரே?

*- கிள்ளிமங்கலங் கிழார்*

## 277. கார் வந்தது – காதலன் வரவில்லை

கார் காலம். முல்லை நிலம். செம்மண் பூமி. மாலையிலே முல்லை மலர்கிறது. அதைப் பார்க்கிறாள் அவள். ஆகாயத்தையும் அண்ணாந்து பார்க்கிறாள். வானமும் சிவந்திருக்கிறது. நட்சத்திரங் களும் காட்சி யளிக்கின்றன. இவற்றைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறாள்.

"அம்மா!" என்று அலறுகிறது கன்று. பகல் முழுவதும் புல் மேய்ந்த பசு வெகு வேகமாக ஓடி வருகிறது. கன்றை நினைத்து.

இதைப் பார்த்தாள் அவள். "கார் காலம். கன்று தேடி வருகிறது பசு. ஆனால் என்னைத் தேடி வரவில்லையே அவர்" என்று ஏங்குகிறாள்.

மழை விளையாடும் குன்று சேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படர, புறவில்
பாசிலை முல்லை ஆசு இல் வான் பூச்
செவ் வான் செவ்வி கொண்டன்று;
உய்யேன் போல்வல் - தோழி! - யானே.

*- வாயிலான் தேவனார்*

## 278. சகியேனடி சகியே!

*"மழை பெய்தது. மயில்கள் ஆடின; கூவின."*

*"அது கேட்டும் நான் எவ்வாறு சகிப்பேன்? தனிமையைப் பொறுப்பது எப்படி?" என்று ஏங்கினாள் அவள்.*

உவரி ஒறுத்தல் உழா அது மடியப்
புகரி புழுங்கிய புயல் நீங்கு புறவில்,
கடிது இடி உருமின் பாம்பு பை அவிய,
இடியொடு மயங்கி இனிது வீழ்ந்தன்றே;
வீழ்ந்த மா மழை தழீ இப் பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலை,
பூஞ் சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தா அம்நீர் நனந்தலை புலம்பக்
கூஉம் - தோழி! பெரும் பேதையவே!

*- பொன்மணியார்*

## 279. பாகனும் பாராட்டும்

*பொருள் தேடச் சென்ற காதலன் திரும்பி வருகிறான் வெற்றி பெற்று. கார் காலம் வநதுவிட்டது. 'காதலி ஏங்குவாளே' என்று கலங்குகிறது அவனது நெஞ்சம். கண்டான் பாகன். வெகு வேகமாகச் செலுத்தினான் தேரை. மாலை வருமுன்னே வந்து நின்றது தேர். கண்டான் காதலியை. கட்டி அணைத்தான். மகிழ்ந்தான். மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்த தேர்ப் பாகனைப் பாராட்டுகிறான்.*

*"பாகனே, நீர் தேர் தந்தாயில்லை. என் காதலிக்கு உயிர் தந்தாய்" என்கிறான்.*



'சேயாறு செல்வாம் ஆயின், இடர் இன்று,
களைகலம் காமம், பெருந்தோட்கு' என்று,
நன்று புரிந்து எண்ணிய மனத்தை ஆகி,
முரம்பு கண் உடைய ஏகி, கரம்பைப்
புது வழிப் படுத்த மதியுடைய வலவோய்!
இன்று தந்தனை தேரோ
நோய் உழந்து உறைவியை நல்கலானே?

*- பேயனார்*

## 280. கார் வந்தது - கவலை பிறந்தது!

*"மேகம் இடிக்கிறது. மழை பெய்கிறது. பிச்சிப் பூ மலர்கிறது. இவை கண்டு நான் மருளவில்லை" என்றாள் அவள்.*

*"பின் எதற்குக் கலங்குகிறாய்?"*

*"அவரை நினைத்துத்தான்"*

*"ஏன்?"*

*"கார் காலம் வந்துவிட்டதே. காதலி வருந்துவாளே என்று எண்ணிச் சென்ற காரியம் முடியுமுன்பே வந்துவிடப் போகிறாரே! என்றுதான் வருந்துகிறேன்" என்றாள்.*

பெருந் தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச் சிவந்தனவே;
யானே மருள்வென்? - தோழி! - பானாள்
இன்னும் தமியர் கேட்பின், பெயர்த்தும்
என் ஆகுவர்கொல், பிரிந்திசினோரே?
அருவி மா மலைத் தத்தக்
கருவி மா மழைச் சிலை தரும் குரலே.

*- கதக் கண்ணனார்*

## 281. இரவு வருகிறதே! என்ன செய்வேன்?

*"பகலின் எல்லை சென்றது. மாலை வந்தது. முல்லை மலர்ந்தது. சூரியனின் வெம்மை தணிந்தது. மாலையைக் கண்டு எவ்வாறு சகிப்பேனடி தோழி? அதன் பிறகு இரவு வருகிறதே.*

*அதை நினைக்கும்போது நெஞ்சு பகீரென்கிறதே! என்ன செய்வேன்?" என்று புலம்புகிறாள் அவள்.*

எல்லை கழிய, முல்லை மலர,
கதிர் சினம் தணிந்த கையறு மாலை,
உயிர் வரம்பாக நீந்தினம் ஆயின்,
எவன்கொல் வாழி? - தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!

***- கங்குல் வெள்ளத்தார்.***

### 282. மறைந்த குன்றும் கவிழ்ந்த குலமும்!

*வாடை வந்துவிட்டது. முல்லை மலர்கிறது. மாலை நேரம். அந்தக் குன்றினையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள். ஏன்? அது அவளது காதலனின் குன்று. அவனோ அவளைப் பிரிந்து சென்றிருக்கிறான்; பொருள் தேட. அந்த மலையைப் பார்க்கும்போது அவனைப் பார்க்கும் எண்ணம் அவளுக்கு. மாலை நேரத்திலே கதிரவன் மலை வாயில் விழுகிறான். இருள் வந்துவிடுகிறது. குன்றும் மறைகிறது. கண்ணுக்குத் தெரியாமல் கடலிலே மரக்கலம் தோன்றி அமிழ்வதுபோல இருக்கிறது அவளுக்கு. கப்பல் கவிழ்ந்தது போன்ற துயரம்.*

*"அந்த மலை கண்டு மனம் தேறினேன். அதுவும் மறைந்ததே. கடலில் கப்பல் ஆழ்ந்தது போல" என்றாள் அவள்.*

பனிப் புதல் இவர்ந்த பைங் கொடி அவரைக்
கிளி வாய் ஒப்பின் ஒளிவிடு பல் மலர்
வெருக்குப் பல் உருவின் முல்லையொடு கஞலி,
வாடை வந்ததன் தலையும், நோய் பொர,
கண்டிசின் வாழி - தோழி! - தெண் திரைக்
கடல் ஆழ் கலத்தின் தோன்றி,
மாலை மறையும், அவர் மணி நெடுங் குன்றே.

***- கொல்லன்அழிசியார்***

**முல்லைத் தொகை முற்றும்.**

● ● ●



# ம ரு த த்   தொ கை

## மருதக் கண்ணாடி

| | | | |
|---|---|---|---|
| *1.* | தெய்வம் | : | இந்திரன் |
| *2.* | செல்வர் பெயர் | : | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி. |
| *3.* | மற்றையோர் பெயர் | : | உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் |
| *4.* | பறவை | : | வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா |
| *5.* | விலங்கு | : | எருவை, நீர்நாய் |
| *6.* | ஊர் | : | பேரூர், மூதூர் |
| *7.* | நீர் நிலைகள் | : | ஆறு, கிணறு, குளம் |
| *8.* | மலர் | : | தாமரை, கழுநீர், குவளை |
| *9.* | மரம் | : | காஞ்சி, வஞ்சி, மருதம் |
| *10.* | உணவு தானியம் | : | செந்நெல் அரிசி, வெண்நெல் அரிசி |
| *11.* | பறை | : | நெல்லரிக்கிணை, மணமுழவு |
| *12.* | யாழ் | : | மருத யாழ் |
| *13.* | பண் | : | மருதப் பண் |
| *14.* | தொழில் | : | வயல் களை கட்டல், நெல் அரிதல், கடா விடல், குளங் குடைதல் |
| *15.* | விளையாட்டும் பொழுது போக்கும் | : | புது நீராடல். |

## மருதம் என்பது என்ன?

வயலும் வயல் சூழ்ந்த இடமும் மருதம் எனப்படும். மருத நிலத்தின் தெய்வம் இந்திரன். மக்களிலே செல்வருக்கு என்ன பெயர்? ஊரன், மகிழ்நன் என்று பெயர். ஆண்களுக்கு வழங்கிய பெயர் இது. கிழத்தி, மனைவி என்பன பெண்களுக்கு வழங்கிய பெயர். நடுத்தர மக்களுக்கு உழவர் என்று பெயர். பெண்களை உழத்தியர் என்று அழைப்பர். சமூகத்தின் கடைசித் தட்டில் வாழ்ந்த மக்களுக்கு என்ன பெயர்? கடையர் என்று பெயர். அதாவது என்ன? பொருளாதார நிலையை ஒட்டியது. பொருளாதார ரீதியில் குறைந்தவர்களுக்குக் கடையர் என்று பெயரிட்டார்கள். பெண்களுக்குக் கடைசியர் என்றுபெயர்.

வயலும், புனலும் சூழ்ந்த நாட்டிலே எத்தகைய பறவை இருக்கும்?

வண்டாளம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, குருகு, தாரா, கம்புள் - இவையே மருத நிலப் பறவைகள்.

எருமை, நீர்நாய், எருவை - இவை அந்நிலத்து விலங்குகள். ஊர்களுக்குப் பேரூர் என்றும் மூதூர் என்றும் பெயர்.

ஆறு, கிணறு, குளம் - இவையே நீர்நிலைகள்.

தாமரைப் பூ, கழுநீர்ப் பூ, குவளைப் பூ - இவை மலர்கள்.

காஞ்சி மரம், வஞ்சி மரம், மருத மரம் - இவை மரங்கள்.

நெல் அரிசியே உணவு தானியம். இதிலே இருவகை, செந்நெல் அரிசி என்றும் வெண் நெல் அரிசி என்றும்; இருவகை.

மருத நில மக்களின் இசைக் கருவிகள் இரண்டு, ஒன்றுபறை. மற்றொன்று யாழ். பறையிலே இருவகை. நெல்லரிகிணை என்று



ஒன்று. மணமுழவு என்பது மற்றொன்று. அதாவது தப்பட்டையும், மத்தளமும், மருத நில வாத்தியங்கள் : தோல் கருவிகள்.

யாழுக்கு மருத யாழ் என்று பெயர். அவர்கள் இசைத்த பண் மருதப் பண் எனப்படும்.

வயலில் களை கட்டுவது. நெல் அரிவது, கடாவிடுவது, குளம் தோண்டுவது - இவை அவர்தம் தொழில்.

புது நீர் நீந்தி விளையாடுவது அவருடைய பொழுது போக்கு விளையாட்டு.

## 283. அவள் அழைத்தாள் அவன் நாணினான்!

ஆடல் மகளிர் வீடே கதி என்று கிடக்கிறான் அவன். அவன் மனைவி என்ன செய்தாள்? மிக வருந்தினாள். வாடினாள். எனினும், தனது துயரை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. வீட்டிலே செய்யவேண்டிய விழாக்களை நிறுத்தவில்லை. எல்லாவற்றையும் செய்தாள். அவன் இருந்தால் குடும்பம் எப்படி நடக்குமோ அப்படியே செய்தாள். குடும்ப வரவு செலவுகளைக் கவனித்தாள்.

ஒரு நாள் அவன் வந்தான். அவள் என்ன செய்தாள்? கோபித்தாளா? விரட்டினாளா? 'வராதே' என்றாளா? இல்லை. வரவேற்றாள். முகம் மலர்ந்து வரவேற்றாள். அது கண்டான் அவன். நாணங்கொண்டான்; தாங்க முடியாத நாணம். இவன் நாணும்படி செய்தது எது? அவள் மகிழ்ச்சியுடன் வரவேற்றது. இந்த நிகழ்ச்சியை மிக அருமையாகச் சொல்கிறார் கவி.

யாய் ஆகியளே! விழவு முதலாட்டி
பயறு போல் இணர் பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ் பூ மென் சினைக்
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே.

*- ஓரம்போகியார்*

## 284. ஆடும் மகனும் ஆடும் மகளும்!

"ஏன் வருந்துகிறாய்?"

"என்ன செய்வேன்? எனக்குக் கலியாணம் செய்யப் போகிறார் களாமே!"

"அடி அசடே! கலியாணம் என்று சொன்னால் சந்தோஷப்பட வேண்டாமா! அழலாமா?"

"சந்தோஷப்படும்படி இருந்தால்தானே?"

"இல்லையா?"

"இல்லையே"

"ஏன்?"

"யாரோ ஒருவனுக்கு என்னைக் கலியாணம் செய்து கொடுக்கப் போகிறார்களாம்."

"யாருக்காவது வாழ்க்கைப்பட வேண்டியதுதானே"

"யாரையாவது மனதில் எண்ணியிருக்கிறாயா?"

"எண்ணாமலா இருப்பேன் இது வரையில்?"

"அப்படிச் சொல்லு! யாரடி அவன்?"

"ஒரு நல்ல ஆட்டன்"

"ஆட்டனா? ஆட்டனாவது பாட்டனாவது?"

"என்னடி கேலி செய்கிறாய்?"

"ஆட்டன் என்றாள் யாரடி?"

"நாட்டியம் ஆடுபவன்"

"அப்படிச் சொல்லு! நீயும் நன்றாக ஆடுவாய். அவனும் ஆடுவானா? சரியான ஜோடிதான்"

"அதை அவர்களிடம் சொல்வதுதானே?"

"எப்படியடி சொல்ல முடியும் வெட்கமில்லாமல்?"

"நீ சொல்ல வேண்டாம். உன் காதலனிடம் சொல்வது"

"அவனைக் காணோமே!"

"காணோமா? எங்கே போயிருப்பான்? தேடிப் பார்க்கிறது தானே!"

"தேடினேனே!"

"எங்கே தேடினாய்?"

"வீரர் கூடியிருக்கும் இடங்களில் தேடினேன். திருவிழா நடக்கும் இடங்களில் எல்லாம் தேடினேன்"



"யாராவது பெண்களுக்கு ஆடல் கற்பித்துக் கொண்டு இருக்கிறானோ என்று பார்க்கிறதுதானே?"

"பார்த்தேனே! பெண்கள் துணங்கைக் கூத்து ஆடும் இடங்களில் எல்லாம் தேடினேனே"

"காணவில்லையா?"

"காணவில்லையே! என்ன செய்வேன்?"

மள்ளர் குழீஇய விழவினானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டும் காணேன்! மாண் தக்கோனை!
யானும் ஓர் ஆடு கள மகளே! என்கை,
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த
பீடு கெழு குரிசிலும் ஓர் ஆடு கள மகனே!

*- ஆதிமந்தியார்*

## 285. பாணனும் பரிவும்

காதலன் ஒருவனைத் தூதனுப்பியிருக்கிறான். அவன் யார்? பாணன். அவனைக் கண்ட உடனே காதலிக்கு மகிழ்ச்சி. இன்பம். அதைத் தெரிவிக்க எண்ணினாள். தனது தோழியிடம் பேசுகிறாள்:

"யாரது?"

"பாணர் வகுப்புச் சிறுவன்"

"பார்த்தால் சிறுவனாயிருக்கிறான். ஆனால் நன்றாகப் பேசுகிறானே!"

"இங்கேயே இப்படிப் பேசுகிறவன், சொந்த ஊர்ப் பொது மேடையில் எப்படிப் பேசுவான்!"

"கேட்க வேணுமா!"

"பாவம்! இளைத்திருக்கிறான்"

"இரந்து உண்பவன்தானே!"

"நன்றாகச் சாப்பிடட்டும். வயிறு நிறைய சோறு போடு."

அன்னாய்! இவன் ஓர் இள மாணாக்கன்!
தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்து ஊண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெரும் செம்மலனே.

*- படுமரத்து மோசிகீரனார்*

## 286. வாடையும் வாட்டமும்

"போய் வருகிறேன்" என்றாள்.

"போய் வா" என்றாள்.

"ஆற்றியிரு; வருந்தாதே" என்றான்.

"எப்பொழுது வருவாய்?" என்று கேட்டாள்.

"வாடை வரும் காலத்தே" என்றான்.

"குளிர் காலத்தை மறந்து விடாதே" என்றாள்.

"மறவேன். வருவேன்" என்றான்.

அவன் சென்ற பின் நாட்களும் சென்றன. கூதிர் காலமும் வந்தது. பச்சைப் பாம்பு சூல் கொண்டது போல் இருந்த கரும்புப் பயிர் மெல்ல மலரத் தொடங்கியது. வாடையும் வீசியது. குளிரும் வந்தது. ஆனால் அவன் வரவில்லை. "வரவில்லையே" என்று எண்ணினாள். கண்ணீர் விட்டாள்.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள் தோழி.

"நான் என்ன செய்வேன்? இந்தக் கண்கள் வெட்கமின்றி நீர் சொரிகின்றன" என்றாள் அவள்.

நாண் இல, மன்ற, எம் கண்ணே! நாள்நேர்பு
சினைப் பசும் பாம்பின் சூல் முதிர்ப்பு அன்ன
கனைத்த கரும்பின் கூம்பு பொதி அவிழ,
நுண் உறை அழி துளி தலைய
தண் வரல் வாடையும் பிரிந்திசினோர்க்கு அழலே.

*- கழார்க் கீரன் எயிற்றியனார்*



## 287. விரைந்தான் வரைந்தான்

"உன் வருத்தம் நீங்கிற்று" என்றாள் தோழி.

"ஏன்?" என்றாள் அவள்.

"ஆமாம்! இனிமேல் அங்கே போகாதே. இங்கே போகாதே என்று அம்மா கோபிக்க மாட்டாள் அல்லவா!"

"வருந்தாதே! என்று நாங்கள் ஆறுதல் கூறவேண்டியதில்லை. தூக்கம் வராமல் நீயும் துன்புற வேண்டியதில்லை. தூங்கவில்லை என்பது. மற்றவருக்குத் தெரியாமல் இருப்பதற்காகத் தூங்குவது போல் பாசாங்கு செய்யவும் வேண்டியதில்லை" என்றாள்.

"என்னடி, என்னவோ கற்பனை செய்து கொண்டே போகிறாய்?"

"ஆமாண்டி ஆம்! அவர் வந்துவிட்டாரடி பரிசம் போட!"

"வந்துவிட்டாரா?"

"ஆம். இனி உன்னை மணந்தே செல்வாரடி"

ஒறுப்ப, ஓவலர் மறுப்ப, தேறலர்
இனியது கேட்டு இன்புறுக இவ்வூரே!
தமியா, உறங்குங் கௌவை இன்றாய்!
முனாது யானையங் குருகின் கானலம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்புஇசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை யன்ன எம்
குழல் விளங்கு ஆய் நுதல் கிழவனும் அவனே.

*- கொல்லிக் கண்ணனார்.*

## 288. மீட்சியும் மாட்சியும்

அவள் கருவுற்றிருந்தாள். அவன் என்ன செய்தான்? ஆடல் மகளிருடன் ஆனந்தமாக இருந்தான்.

காலையிலே எழுவது. வண்டியைப் பூட்டுவது. ஆடல் மகளிர் வீடு செல்வது. ஆடிப்பாடி மகிழ்வது. இப்படியே காலம் போய்க்கொண்டு இருந்தது.

பேறு காலம் வந்தது. அவள் தாய் ஆனாள். ஆண் குழந்தையைப் பெற்றாள். செய்தி கேட்டான் அவன். குழந்தையைப் பார்க்க

விரும்பினான். ஆனால் அவள் கோபிப்பாளோ என்ற பயம். ஆட்கள் மூலம் சொல்லி அனுப்பினான்.

“ஐயா வருகிறார்” என்றான் வந்தவன்.

“வரட்டுமே” என்றாள் அவள்.

தோழிக்கு இது பிடிக்கவில்லை. “ அவன் என்னடா என்றால் ஆடல் மகளிர் வீட்டிலே கிடந்தான். இப்போது குழந்தை பிறந்தது என்றதும் ‘பார்க்க வருகிறேன்’ என்கிறான். இவளும் ஆசையுடன் அழைக்கிறாள். அவனால் நேர்ந்த துன்பத்தை யெல்லாம் மறந்து விட்டாளே! அடேயப்பா! கஷ்டம்! கஷ்டம்! இப்பேர்ப்பட்ட உயர் குடிப் பிறப்பது மிகக் கஷ்டம்!” என்று கூறினாள்.

காலை எழுந்து, கடுந் தேர் பண்ணி,
வால் இழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன், ‘எல்லினன் பெரிது’ என,
மறுவரும் சிறுவன் தாயே;
தெறுவது அம்ம, இத் திணைப்பிறத்தலே.

*- ஆலங்குடி வங்கனார்*

## 289. இங்கு முண்டு! அங்கு முண்டு!

“ஏன் இப்படி யிருக்கிறாய்?” என்று கேட்டாள் அவள்.

“ஒன்றுமில்லை. கவலைதான்” என்றாள் தோழி.

“என்ன கவலை உனக்கு?”

“உன்னைப் பற்றித்தான்.”

“என்னைப் பற்றி என்ன கவலை?”

“எப்படி நீ பொறுப்பாயோ?”

“எதை?”

“பிரிந்து சென்றால் என்ன? நீண்ட நாள் தங்கிவிடவா போகிறார்?”

“இல்லை. இருந்தாலும் சீக்கிரம் திரும்பி வரவேண்டுமே!”

“வருவார்! வருவார்! அதோ பார்! அது என்ன?”



“குருவி”

“எப்பேர்ப்பட்ட குருவி”

“சாம்பல் நிறச் சிறகு கொண்ட குருவி.”

“எது போன்ற சிறகு?”

“அல்லிப் பூவின் புற இதழ் வாடினாற் போன்ற நிறங் கொண்ட குவிந்த சிறகு”

“குருவி என்ன செய்கிறது?”

“வீட்டிலே கூடு கட்டி வசிக்கிறது; குஞ்சுகளுடன் வசிக்கிறது”

“அப்புறம்”

“முற்றத்திலே உலர்த்தியுள்ள தானியங்களைத் தின்கிறது.”

“இந்த மாதிரி குருவிகள் அங்கேயும் இருக்குமல்லவா?”

“எங்கே?”

“அவர் சென்ற இடத்திலே”

“குருவி தன் குஞ்சுகளுடன் கொஞ்சி விளையாடுவதைக் கண்ட பிறகாவதுஅவருக்குத் தன் பெண்டாட்டி பிள்ளைகளின் நினைவு வராதா?”

“வரும்; வரும்.”

நமக்கு வருகிற - துன்பந் தருகிற இந்த மாலை அவருக்கும் உண்டு அல்லவா! அங்கும் வருமல்லவா! இவற்றையெல்லாம் கண்ட பிறகு அவர் விரைவில் வராமல் இருப்பாரா?

ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனை உறை குரீஇ
முன்றில்உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின் நுண் தாது குடைவன ஆடி,
இல் இறைப் பள்ளித் தம் பிள்ளையொடு வதியும்
புன் கண் மாலையும், புலம்பும்,
இன்றுகொல் - தோழி! - அவர்சென்ற நாட்டே?

*- மாமலாடனார்*

## 290. விலைமாதும் விளையாட்டும்

அவளுக்குக் கோபம் காதலன்மீது. காரணம் அவன் பரத்தை வீட்டில் தங்கியிருப்பதே.

ஒரு நாள் அவனது நண்பன் ஒருவன் வந்தான்.

"என்ன, எப்படி" என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

"வாருங்கள், உட்காருங்கள்"

"எங்கே அவர்?"

"எவர்? உங்கள் நண்பரா? இருக்கிறார். சந்தோஷமாக இருக்கிறார்!"

"எங்கே?"

"இங்கே யில்லை"

"இங்கே யில்லையா? பின் எங்கே?"

"விளையாடுகிறார்."

"விளையாடுகிறாரா? என்ன விளையாட்டு?"

"விலைமாதர் விளையாட்டு."

"அப்படியா?"

"ஆமாம். அவர் விளையாடும் நீர்த்துறை அழகாயிருக்கிறது. மருத மலர் மலர்ந்து மணம் வீசுகிறது. ஆனால் அவரை மணந்த எனது தோள்கள் நாளுக்கு நாள் வாடுகின்றன; இளைத்துப் போகின்றன. தனிமையில் தவிக்கிறேன்" என்று தனது கோபத்தைக் கொட்டினாள்.

ஐயவி அன்ன சிறு வீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலோடு தா அய்த்
துறை அணிந்தன்று; அவர் ஊரே; இறை இறந்து
இலங்கு வளைநெகிழ, சா அய்ப்
புலம்பு அணிந்தன்று, அவர் மணந்த தோளே.

- குன்றியனார்



## 291. கரும்பும் காதலும்

பாணன் என்று ஒருவன். அவனுக்கு வேலை என்ன தெரியுமா? பாட்டுப் பாடுவது. ஆடல் மகளிர்களிடத்திலே அவனுக்குத் தொடர்பு உண்டு. அந்தக் காலத்திலே வாழ்ந்த பணக்காரர்களை ஆடல் மகளிரிடம் சேர்ப்பது. ஆடல் மகளிர் வீட்டிலிருந்து மறுபடியும் வீட்டில் கொண்டு சேர்ப்பது. இதுவே தொழில்.

பெரிய பணக்காரன் ஒருவன் ஆடல் மகளிர் வீட்டிலே தங்கி விட்டான். அவனது மனைவி கோபித்துக் கொண்டிருக்கிறாள். மெதுவாக அவளைச் சமாதானம் செய்ய நினைத்து வருகிறான் பாணன். வழியிலே தோழி எதிர்ப்படுகிறாள்.

"எங்கே? அவர் இல்லையா?"

"எவர்?"

"அவர்தான் ஊரன்."

"அவரா? உனக்குத் தெரியாதா?"

"தெரியாதே!"

"ஐயோ பாவம்! அவருக்கும் ஒன்றும் தெரியாது. உனக்கும் ஒன்றும் தெரியாது."

"நிசம்தான்"

"அங்கே எங்கேயாவது தேடிப்பார்."

"அவர் அந்தமாதிரி போக மாட்டாரே! நல்லவராயிற்றே!"

"ஐயோ பாவம்! ரொம்ம நல்லவர். நல்லவர் என்று நீதான் சொல்ல வேணும்."

"ஏன்? என்ன?"

"அதோ பார்! துள்ளும் நடைக் குருவி. தன்னுடைய காதலியின் பால் எவ்வளவு அன்பாயிருக்கிறது. அதோ தெரிகிறதே! கரும்பு! அதன் பூவைக் கொண்டு வந்து மெத்தை போட்டுக் கூடு கட்டிக் கொடுக்கிறது. ஏன்? பெண் குருவி முட்டையிடப் போகிறது. அந்தக் குருவிக்குத் தான் எவ்வளவு அன்பு! கரும்பு எவ்வளவு

ருசியானது? இருந்தும் அதிலே கருத்துச் செலுத்தியதா? இல்லையே! தன் காதலிக்கு வேண்டிய வசதி செய்வதில் தானே கருத்துச் செலுத்தியது. அந்த அளவுகூட இல்லை அவருக்கு. இவர் என்னடா என்றால் அவர் நல்லவர் என்கிறார்'' என்றாள்.

யாரினும் இனியன்; பேர் அன்பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல் முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்,
தேம் பொதிக் கொண்ட தீம் கழைக் கரும்பின்
நாறா வெண் பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே.

*- வடம வண்ணக்கன் தாமோதரனார்.*

## 292. வம்பும் வள்ளைப் பாட்டும்

ஓரி என்று ஒருவன். வல்வில் ஓரி என்றும் சொல்வதுண்டு. அதாவது ஒரே கணையில் பல பொருள்களைத் தாக்கும் திறமை மிக்கவன் என்று பொருள். வள்ளல்கள் எழுவருள் ஒருவன் ஓரி. கொல்லி மலை இவனுக்குச் சொந்த மானது. காரி என்பவன் ஓரியுடன் போர் செய்தான். வென்றான். கொல்லி மலையைச் சேரனுக்குக் கொடுத்து விட்டான்.

இத்தகைய கொல்லி மலையின் மேல்புறத்தே ஒரு பாவை யிருந்ததாம். கண்டவர் நெஞ்சு கலங்கி மயங்கி விழுந்து உயிர் விடச் செய்யுமாம்.

இந்தப் பாவை போன்ற பெண் ஒருத்தி. அவள் ஒருவனைக் காதலித்தாள்.

ஒரு நாள். உரலிலே நெல்லைப் போட்டு இடித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு பாட்டுப் பாடினாள். தன் காதலனைப் பற்றிய பாட்டு.

அது கேட்டனர் ஊரார். அவளைப் பற்றி வம்பு பேசத் தொடங்கி விட்டனர்! வம்பு! வம்பு! தலை காட்ட முடியவில்லை.

ஒரு நாள் அவளது காதலன் வந்தான். வேலிக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். அப்போது இந்த வம்பு பற்றி அவனுக்கு அறிவிக்கிறாள் தோழி.



பாஅடி உரல் பகுவாய் வள்ளை
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப;
அழிவது எவன்கொல், இப் பேதை ஊர்க்கே?
பெரும் பூண் பொறையன் பேஎம் முதிர் கொல்லிக்
கருங் கட் தெய்வம் குடவரை எழுதிய
நல் இய பாவை அன்ன இம்
மெல் இயல் குறுமகள் பாடினன் குறனே.

*- பரணர்.*

## 293. காதல் மனைவியும் கவ்வும் பரத்தையும்

நீண்ட நாள் பரத்தை வீட்டில் தங்கிவிட்டான் அவன். ஒரு நாள் மனைவிமீது எண்ணம் தோன்றியது. வீட்டுக்கு வந்தான்.

அப்போது அவனது மனைவி என்ன செய்தாள்? கோபித்தாளா? 'சிடுசிடு' என்றாளா? இல்லை! சிரித்த முகத்துடன் அவனை எதிர் கொண்டு அழைத்தாள்; வரவேற்றாள்; கொஞ்சினாள். கண்டாள் தோழி.

"பிரம்புக் கொடியிலே பழம் பழுத்திருக்கும். குளத்திலே உள்ள கெண்டை மீன் அதைக் கவ்வும். அந்த மாதிரி உன் மனையிலே வதியும் இவனை அக் கெண்டை விழிப் பரத்தைமார் கவ்வுகின்றனர். நீ மீண்டும் இவனைச் சேர்த்துக் கொண்டால் மறுபடியும் பரத்தை வீடு செல்வான். நீயும் தூங்காமல் பலநாள் துன்புறுவாய். எதுபோல? அதியமான் அஞ்சியின் போர்க்களத்து அருகேயுள்ள மக்கள் அச்சத்தால் இரவில் தூங்கமாட்டார். அதுபோல'' என்றாள்.

அரில் பவர்ப் பிரம்பின்வரிப் புற வீளை கனி
குண்டு நீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண் துறை ஊரன் பெண்டினை ஆயின்,
பல ஆகும், நின் நெஞ்சில் படரே!
ஓவாது ஈயும் மாரி வண் கை,
கடும் பகட்டு யானை, நெடுந் தேர், அஞ்சி
கொன் முனை இரவு ஊர் போலச்
சில ஆகுக, நீ துஞ்சும் நாளே!

*- ஔவையார்*

## 294. அத்தனா? அத்தானா?

“கோபிக்காதே! போனால் போகிறார். இப்போதுதான் திரும்பி வந்துவிட்டாரே” என்றாள் தோழி.

“இப்பொழுதுதான் வந்துவிட்டாரா?”

“வரட்டும். நான் வேண்டாம். என்றா சொல்கிறேன்? அன்னை போல் அன்பு காட்டுகிறேன். அன்னை பிரிவதில்லையா? அதுபோலாகட்டும். அப்பனைப் போல் அவர் ஆணையிடட்டும். அடங்கி நடக்கிறேன். ஆனால் காதலர் என்ற பேச்சுக்கு இடமில்லை. எனவே ஊடலுக்கு இடமில்லை.”

நல் நலம் தொலைய, நலம் மிகச் சா அய்,
இன் உயிர் கழியினும் உரையல்; அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ?
புலவி அஃது எவனோ, அன்பிலங்கடையே!

- *அள்ளூர் நன்முல்லையார்*

## 295. அம்மையும் பொம்மையும்

ஆடல் மகள் ஒருத்தி. அவள் மீது ஆசை கொண்டான் ஒருவன். அவனோ பெரும் செல்வன். நில புலங்கள் மிக உள்ளவன். சில காலம் அந்த ஆடல் மகள் வீட்டிலே தங்கினான். இன்பமாக இருந்தான். நீண்ட நாள் அப்படி இருக்க முடியுமா? முடியாது. அவனோ கலியாணம் ஆனவன். மனைவி இருக்கிறாள்.

எனவே என்றாவது ஒருநாள் மனைவி வீட்டுக்குத் திரும்ப வேண்டியவன்தானே. திரும்பி விட்டான். வந்தவனைக் கண்டாள் அவனது மனைவி. ஊடல் கொண்டாள். சிறிது நேரம் சென்றது. ஊடல் தணிந்தாள் அவள். அமைதி நிலவியது. குடும்பத்திலே இன்பம் தோன்றியது. மறுபடியும் அவன் அந்த ஆடல் மகள் வீட்டு வாசல் பக்கமே நாடவில்லை.

ஆடல் மகள் வீட்டில் வம்பர் மகாசபை கூடிற்று.

“என்னடி! என்னவோ பிரமாதமாகச் சொன்னியே!” என்றாள் ஒருத்தி.



“என்ன சொன்னேன்?”

“அந்தப் பெரிய மனிதரை வலைவீசிப் பிடித்து விட்டேன் என்றாய். பொடி போட்டு மயக்கிவிட்டேன் என்றாய். என் மீது மோகம் கொண்டுவிட்டார் என்றாய். இப்போ எங்கே அவர்?”

“அதை ஏன் கேட்கிறாயடி! இங்கே இருந்தபோது அவன் என்ன என்னவோ பேசினான். ‘கண்ணே!’ என்றான். கண் மணியே!’ என்றான். ‘உன் மேல் உயிர்’ என்றான் . . .”

“நீ அதை மெய் என நம்பினாயாக்கும்”

“நம்பாமல் என்ன செய்வது.”

“அப்புறம்?”

“அப்புறம் என்ன? இப்போது அவள் கிழித்த கோட்டைத் தாண்டுவதில்லை. ‘நில்’ என்றால் நிற்கிறான். ‘செல்’ என்றால் செல் கிறான். பொம்மலாட்டத்தில் ஆடும் பொம்மை மாதிரி இருக்கிறான். அவள் ஆட்டிவைக்கும் பொம்மை! பொம்மையடி பொம்மை!”

“எவள் ஆட்டி வைக்கிறாள் அந்த மாதிரி?”

“தாலி கட்டிய பெண்டாட்டி!”

கழனி மாத்து விளைந்துகு தீம் பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மில் பொருமொழி கூறி, தம்மில்
கையுங் காலும் தூக்க தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே,

- *ஆலங்குடி வங்கனார்*

## 296. குதிரை வண்டியும் குழந்தை இன்பமும்

“பெரியவர்கள் என்ன செய்கிறார்கள்?

குதிரை வண்டியிலே சவாரி செய்கிறார்கள். அதே மாதிரி குதிரை வண்டி செய்ய வேண்டும் என்ற ஆசை குழந்தைகளுக்கு. என்ன செய்கிறார்கள்? குதிரை வண்டியிலா சவாரி செய்கிறார்கள் இல்லை.

சிறிய வண்டியும் குதிரையும் செய்து கொடுக்கிறான் தச்சன். அந்த வண்டியிலே கயிறு கட்டி இழுத்துக் கொண்டு ஓடுகிறார்கள் சிறுவர்கள். குதிரை வண்டியிலே சவாரி செய்தது போல ஆனந்த மடைகிறார்கள்,'' என்றாள் தோழி.

''அந்த மாதிரி'' என்று நீட்டினான் பாணன்.

''அந்த மாதிரி அந்த ஆடல் மகளிர் அவரிடம் இன்பம் பெறுகின்றனர். அவளோ சிறுவர்கள் தச்சன் செய்த குதிரை வண்டியை இழுத்து இன்புறுவது போல இன்பமடைகிறாள்.''

''அது எப்படி?''

''தன் காதலனையே எண்ணி எண்ணி, அவன் தன்னிடமிருந்த போது காட்டிய பரிவுகளை நினைத்து நினைத்து இன்பம் அடைகிறாள்''

''அப்போ!''

''அவர் இங்கே எதற்கு? வந்து என்ன செய்யப் போகிறார்? அங்கேயே இருக்கட்டும்''

ஆடல் மகளிர் வீட்டிலே இருக்கிறான் அவன். தாலி கட்டிய மனைவியைத் திருப்பிக் கூட பார்க்கவில்லை. அவனுடைய தோழனாகிய பாணன் வந்தான். அவனிடத்திலேதான் மேற்கண்ட வாறு கூறினாள் தோழி.

தச்சன் செய்த சிறு மா வையம்,
ஊர்ந்து இன்புறா அர் ஆயினும், கையின்
ஈர்ந்து இன்புறூஉம் இளையோர் போல,
உற்று இன்புறேஎம்ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம்; செறிந்தன வளையே.

– தும்பிசேர்கீரனார்



## 297. பாணனும் பாடலியும்

படை எடுத்துச் சென்றிருக்கிறான் அவன். போர்க்களத்திலே பாசறையிலே தங்கியிருக்கிறான். அவளைப் பிரிந்து சென்று நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. 'வருவான் வருவான்' என்று எதிர்பார்த்தாள்; வரவில்லை. அவளால் தாங்கமுடியவில்லை. பாணனைத் தூது அனுப்பினாள். பாணனும் சென்றான். அவனைக் கண்டான். அவளது துன்பத்தை யெல்லாம் எடுத்துச் சொன்னான். கேட்டான் அவன். அவள்மீது ஆசை பிறந்தது. புறப்பட்டு வருகிறான், பாசறையிலிருந்து வருகிறான்.

''வந்துவிட்டார்; வந்துவிட்டார்'' என்று கூவிக் கொண்டே வந்தான் பாணன்.

''வந்து விட்டாரா? யார்?''

''உமது காதலர் அம்மா!''

''நிஜமாகவா? இப்படித்தான் எல்லாம் பல முறை கூறினர். அவர் வரவேயில்லை''

''இல்லை. இப்போது நிசம்''

''மெய்யாகவா? நீ பார்த்தாயா?''

''ஆம், பார்த்தேன்''

''யாராவது சொல்லக் கேட்டியா?''

''இல்லை; இல்லை''

''உண்மையைச் சொல்''

''உண்மைதானம்மா''

''அப்படியா! உமக்குச் செல்வம் பெருகுவதாக. சோணை யாற்றின் கரையிலே பாடலி என்று ஓர் நகரமுளது. மகத நாட்டின் தலைநகர். அங்கே பொன்னுக்குப் பஞ்சமேயில்லை. செல்வம் கொழிக்கிறது, அந்த நகரத்தையே உனக்குப் பரிசு வழங்குவேன்.''

நீ கண்டனையோ? கண்டோர்க் கேட்டனையோ?
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ!
வெண் கோட்டு யானை சோணை படியும்
பொன் மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை, காதலர் வரவே?

*- படுமரத்து மோசிகீரனார்*

## 298. முறிந்த யாழும் உடைந்த மனமும்

*ஆடல் மகளிர் வீட்டிலே தங்கியிருந்தான் அவன். நீண்ட நாள் தங்கிவிட்டான். பின்னே ஒரு நாள் மனைவியை எண்ணினான்; வீடு வந்தான். வந்தபோது ஊடல் கொண்டாள் அவள். அவளது ஊடல் தணிக்க முயன்றான்.*

*நல்ல வார்த்தை சொன்னான்; சிரித்தான்; பாடினான்; ஆடினான்; விளையாடினான்; கொஞ்சினான்; ஏதும் பயன் தரவில்லை.*

*“ஊம்” என்று பெருமூச்சு விட்டான்.*

*“நெஞ்சே! இனி என்ன இருக்கிறது? இவள் வேறுபட்டு நிற்கிறாள். நான் என்ன செய்வேன். கொல்லையிலே மலர்ந்த முல்லை சூடிய கூந்தலாள் கோபிக்கிறாள். என்ன செய்வேன்! யாழ் முறிந்த பாணன் போல் ஆகிவிட்டேனே!”*

*எவ்வி என்று ஒருவன் இருந்தான். உழுவித்து உண்ணும் வேளாளன். பாணர்களுக்குப் பொற்பூ அளித்து ஆதரித்தான். அந்த எவ்வி இறந்தான். பாணர் எப்படி ஆனார்கள்? வறியவர் ஆனார்கள். அந்த மாதிரி நானும் வறியவன் ஆனேன்.*

*படு மனமே! படு! துன்பப்படு! வருத்தப்படு? வேறு என்ன இருக்கிறது உனக்கு? என்று புலம்பினான்.*

எவ்வி இழந்த வறுமை யாழ்ப் பாணர்
பூ இல் வறுந்தலை போல, புல்லென்று
இனைமதி! வாழிய நெஞ்சே! மனை மரத்து
எல் உறு மௌவல் நாறும்
பல் இருங் கூந்தல் யாரளோ: நமக்கே *- பரணர்*



## 299. விழாவும் விழைவும்

*காதலன் விஷயத்திலே பெண்களுக்குள் சண்டை ஏற்படுவது ஏனோ தெரியவில்லை. நீண்ட காலமாகவே இந்தச் சண்டை இருந்து வருகிறது.*

*ஆடல் மகள் ஒருத்தி மீது ஆசை வைத்தான் அவன். சில காலம் மகிழ்ந்தான். பிறகு திரும்பி வந்தான் மனைவியிடத்தே.*

*“என்பால் வந்த காதலனைப் பிடித்து இழுத்துக் கொண்டாள்” என்று ஏசினாள் ஆடல்மகள்.*

*“அடியே சும்மா இரு! துணங்கை விழாவும், மள்ளர் போரும் விரைவில் வருகின்றன. அப்போது தெரியுமடி. யார் மீது யாருக்கு ஆசை என்பது ” என்று சீறினாள் மனைவி.*

*துணங்கை விழாவின் போது ஆடவர் தாம் விரும்பிய மகளிருடன் கைகோத்து ஆடுவது வழக்கம். அப்போது தெரியும் என்பது கருத்து.*

அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாள் இறை பெறூஉம் ஊரன்
பொன் கொல் அவிர் தொடித் தற்கெழு தகுவி
எற் புறங்கூறும் என்ப; தெற்றென
வணங்கி இறைப் பணைத் தோள் எல் வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன; அவ் வரைக்
கண் பொர, மற்றுஅதன்கண் அவர்
மணம் கொளற்கு இவரும் போரே. *- ஔவையார்*

## 300. தழுவினான்! தழுவினாள்!

*“நேற்றுஇரவு என்ன நடந்தது தெரியுமா?” என்று கேட்டாள் தோழி.*

*“என்ன நடந்தது?” என்று கேட்டான் பாணன்.*

*“அவர் வந்தார்”*

*“வந்தாரா?”*

*"ஆமாம்"*

*"என்ன ஆச்சு"*

*"அவன் மலர்ப் படுக்கையிலே படுத்திருந்தான்"*

*"மகனா?"*

*"ஆமாம்"*

*"என்ன ஆச்சு?"*

*"அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார் அவர் . . . ."*

*"பேஷ்! பேஷ்!?"*

*"அம்மையார் கோபித்தாரோ?"*

*"கேள்"*

*"சொல்"*

*"அம்மையார் அவரைத் தழுவிக் கொண்டாள் . . "*

*"ஊடல்? . . ."*

*"தணிந்தது!"*

கண்டிசின் - பாண! - பண்பு உடைத்து அம்ம:
மாலை விரிந்த பசு வெண் நிலவின்
குறுங் காற் கட்டில் நறும் பூஞ் சேக்கை,
பள்ளி யானையின் உயிர்த்தனள் நசைஇ,
புதல்வற் தழீ இயினன் விறலவன்;
புதல்வன் தாய் அவன் புறம் கவை இயினளே. *- பேயன்*

## 301. பழகப் பழகப் பாலும் புளிக்கும்

*தாலி கட்டிய மனைவியைக் கவனிக்கவில்லை. தாசி வீட்டிலேயே கிடந்தான் அவன். ஒருநாள் மனைவி வீட்டுக்கு வந்தான். அப்போது சொல்கிறாள் தோழி.*

*"அவளைத் தந்தை வீட்டில் கொண்டு விடு. கொடிய பாம்புப் புற்றின் மத்தியிலே வாழ்வதுபோல அங்கேயே இருக்கட்டும்" என்றாள்.*



*"ஏன்?" என்றான்.*

*"பழகப் பழகப் பாலும் புளிக்கும். நீண்ட நேரம் நீரில் விளையாடினால் கண்ணும் சிவக்கும். சும்மா குடித்துக் கொண்டே இருந்தால் தேனும் புளிக்கும்!" என்றாள்.*

*"அந்த மாதிரி?"*

*"அந்த மாதிரி ஆயிற்று அவள் கதி."*

நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்;
ஆர்தேரா வாயில் தேனும் புளிக்கும்;
தணந்தனை ஆயின், எம்இல் உய்த்துக்கொடுமோ
அம் தண் பொய்கை எந்தை எம் ஊர்க்
கடும் பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்கு அஞர் எவ்வம் களைந்த எம்மே?

*- கயத்தூர் கிழானார்*

## 302. வெளுத்த துணியும் உளுத்த மனமும்

*வண்ணாத்தி என்ன செய்கிறாள்? துணியை வெளுக்கிறாள். பிறகு கஞ்சியிலே நனைக்கிறாள். வெயிலில் உலர்த்துகிறாள். உலர்ந்த துணி எப்படியிருக்கிறது? பகன்றைப் பூ மாதிரி இருக்கிறது.*

*"இந்தப் பகன்றையும், மாலையும் அவர் சென்ற நாட்டில் இல்லையோ?" என்று வருந்துகிறாள் அவள். இருப்பின் பிரிந்த காதலர் வந்திருப்பாரே என்பது கருத்து.*

நலத்தகைப் புலைத்தி பசை தோய்த்து எடுத்துத்
தலைப் புடைப் போக்கித் தண் கயத்து இட்ட
நீரின் பிரியாப் பரூஉத் திரி கடுக்கும்
பேர் இலைப் பகன்றைப் பொதி அவிழ் வான் பூ
இன் கடுங் கள்ளின் மணம் இல கமழும்
புன் கண் மாலையும், புலம்பும்,
இன்றுகொல் - தோழி! - அவர் சென்ற நாட்டே?

*- கழார்க் கீரன் எயிற்றியனார்.*

## 303. பூங்கொடியும் பெண் கொடியும்!

*ஆடல் மகளிர் வீட்டிலிருந்து வருகிறான். அவன் மனைவியின் வீடு நோக்கி.*

*'வருக!' என்று வரவேற்கிறாள் தோழி.*

*"வயலிலே நெய்தல் மலர்கிறது. களைந்தெறிகின்றனர் உழவர். சீ! இனி இங்கே மலர்தல் கூடாது என்று எண்ணுகிறதா? இல்லை. மீண்டும் பயிராகி மலர்கிறது அல்லவா. அத்தகைய குணமுடைய கொடி இவள். நீ எவ்வளவு இடர் செய்தாலும் மீண்டும் மீண்டும் உன்பால் அன்பு செலுத்துவாள்" என்றாள்.*

கைவினை மாக்கள் தம் செய்வினை முடிமார்,
சுரும்பு உண மலர்ந்த வாசம் கீழ்ப்பட,
நீடிய வரம்பின் வாடிய விடினும்,
கொடியோர் 'நிலம் பெயர்ந்து உறைவேம்' என்னாது,
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின் ஊர் நெய்தல் அனையேம் - பெரும!
நீ எமக்கு இன்னாதன பல செய்யினும்
நின் இன்று அமைதல் வல்லாமாறே

*- உறையூர்ச் சல்லியன் குமாரனார்*

## 304. கோழியும் சண்டையும்

*சண்டைக்கென்று சிலர் கோழி வளர்ப்பார்கள். அந்தச் சண்டைக் கோழிகளைப் பலர் தூண்டி உற்சாகமூட்டிச் சண்டையிடச் செய்வர்.*

*குப்பைக் கோழிகளும் சண்டை செய்யும். ஆனால் அதைப் பார்க்கவோ தூண்டவோ எவருமிரார்.*

*'குப்பைக் கோழிச் சண்டைபோல் ஆயிற்றே' என்று வருந்தினாள் அவள். ஏன்?*

*காதலினால் வருந்துகிறாள். காதலன் பால் தூது செல்வாரில்லை. காதலுக்கு ஆறுதல் கூறுவாருமில்லை. வீட்டுக்குள் கிடந்து ஏங்குகிறாள்.*



கண் தர வந்த காம ஒள் எரி
என்பு உற நலியினும், அவரொடு பேணிச்
சென்று, நாம் முயங்கற்கு அருங் காட்சியமே
வந்து அஞர் களைதலை அவர் ஆற்றலரே;
உய்த்தனர் விடாஅர் பிரித்து இடை களையார்
குப்பைக் கோழித் தனிப் போர் போல,
விளிவாங்கு விளியின் அல்லது,
களைவோர் இலை - யான் உற்ற நோயே.

*- குப்பைக் கோழியார்*

## 305. அடிவைத்த அதிர்ஷ்டம்!

*நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் ஒருத்தி மீது காதல் கொண்டான். மணம் ஆயிற்று. இல்லறம் தொடங்கியது. கொஞ்சம் செல்வம் பெருகியது. பானை பிடித்தவளின் பாக்கியம். ஆனால் அவனோ மதியிழந்தான். ஆடல் மகளிர் வலையில் வீழ்ந்தான். மனைவியைப் புறக்கணித்தான். அப்போது ஒருநாள் தோழி சொல்கிறாள் அவனை நோக்கி:*

*"இவள் வந்த பிறகு தான் உன் குடும்பத்திலே செல்வம் பெருகிற்று. அதற்கு முன்பு ஒரே பசு உள்ள எளிய குடும்பமாயிருந்தது என்று ஊரார் சொல்கின்றனர் அப்படிப்பட்ட பாக்கியசாலியான உன் மனைவியை மறந்து ஆடல் மகளிருடன் விளையாடுகிறாய்! இது நியாயமா!"*

உடுத்தும், தொடுத்தும், பூண்டும், செரீ இயும்,
தழை அணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி,
விழவொடு வருதி, நீயே; இஃதோ
ஓர் ஆன் வல்சிச் சீர் இல் வாழ்க்கை
பெரு நலக் குறுமகள் வந்தென,
இனி விழவு ஆயிற்று என்னும், இவ்வூரே

*- தூங்கலோரியார்*

## 306. நுங்கும் மங்கையும்

*கொண்ட கணவன். விலை மாதர் வீட்டிலிருந்து திரும்பி வந்தான். 'ஏற்றுக் கொள்' என்று சிபாரிசு செய்தாள் தோழி. 'சரி' என்றாள் அவள்.*

*"ஆனால் பனங் கள் குடிக்கச் சென்றோர் கள்ளைக் குடித்து விட்டு நுங்கையும் கொண்டு வருவது போலாகுமே" என்றாள்.*

*"அப்படி என்றால் என்ன?"*

*"அந்த விலைமாது இங்கே வந்து என்னையும் அவமானம் செய்து மீண்டும் என் கணவனைக் கொண்டு சென்றால் என் செய்வேன்?" என்று தவித்தாள்.*

கள்ளின் கேளிர் ஆர்த்திய, உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சி அம் குறுங் காய்
ஓங்கு இரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூர் அன்ன,
அய வெள்ளாம்பல் அம் பகை நெறித் தழை
தித்திக் குறங்கின் ஊழ் மாறு அலைப்ப,
வருமே சேயிழை, அந்தில்
கொழுநற் காணிய; அளியேன் யானே!

*- கள்ளில் ஆத்திரையனார்.*

## 307. மணந்தேன் ஒருநாள் - வருந்துவேன் பலநாள்!

*"என்னவோ, வந்திருக்கிறான், ஏற்றுக்கொள்" என்றாள் தோழி.*

*"ஆமாம் வாழ்க்கைப்பட்டது ஒரு நாள். வருந்துவது பல நாள்! என்ன செய்வது. அவர் ஆடும் ஆட்டங்களுக்கெல்லாம் உடம்படத்தானே வேண்டியிருக்கிறது?" என்றாள் அவள்.*

அருவி அன்ன பரு உறை சிதறி
யாறு நிறை பகரும் நாடனைத் தேறி,
உற்றது மன்னனும் ஒரு நாள்; மற்று - அது
தவப் பல் நாள் தோள் மயங்கி,
வௌவும் பண்பின் நோய் ஆகின்றே.

*- அழிசி நச்சாத்தனார்.*



## 308. போதும்! வராதே!

*"போதும் போதும். இங்கே ஏன் வருகிறீர்? இவளது அழகு பாழ்பண்ணி விட்டீர். இனி என்ன இருக்கிறது இங்கே? நீர் பரத்தை வீடே கதி என்று கிடப்பதையும், இவள் அழுது புலம்பு வதையும் கண்டு ஊரார் வம்பு அளக்கின்றனர்" என்றாள் தோழி.*

வாரல் எம் சேரி; தாரல் நின்தாரே;
அலராகின்றால் - பெரும! - காவிரிப்
பலர் ஆடு பெருந் துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை,
அரியல் அம்புகவின் அம் கோட்டு வேட்டை
நிரைய ஒள் வாள் இளையர்பெருமகன்,
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழி தீர் மாண் நலம் தொலைவன கண்டே

*- பரணர்*

## 309. கெடுத்ததைக் கொடுத்துவிடு!

*'காக்காய்ப் பிடிக்கிறது' இன்று நேற்று வந்த பழக்கமல்ல! தொன்று தொட்டு வந்தது.*

*அவன் மனைவியைப் புறக்கணித்து மற்றொருத்தியிடம் மையல் கொண்டிருந்தான். அது கண்டு மனைவி கோபம் கொண்டாள்.*

*அவனோ பொய் சத்தியம் செய்கிறான். 'காக்காய்ப் பிடிக்கிறான்' தோழியை.*

*"நான் மிக யோக்கியன்" என்கிறான்.*

*கண்டாள் தோழி, கோபம் வந்துவிட்டது அவளுக்கு.*

*"போதும் ஐயா உன் சத்தியம்! இங்கு யார் கேட்கிறார் அதை? நீ எடுத்துக் கொண்டு போ. எங்கே இவளது அழகு? நீ அழித்த அழகு. அதைக் கொடுத்துவிட்டுப் போ! என்றாள்."*

பாசவல் இடித்த கருங் காழ் உலக்கை
ஆய் கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி,
ஒண் தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்ன என் நலம் தந்து,
கொண்டனை சென்மோ - மகிழ்ந! - நின் சூளே.

*- குன்றியனார்.*

## 310. கசந்த வாழ்வு

*தொட்டுத் தாலி கட்டிய மனைவிதான் அவள். இருந்த போதிலும் என்னவோ தெரியவில்லை. அவளைப் புறக் கணித்து விட்டான் அவன். அந்த ஆடல் மகளிர் வீட்டுக்கே போய் விட்டான்.*

*இவ்வளவுக்கும் அவன் அந்த ஊரிலேதான் வசிக்கிறான் வேற்றூர் போகவில்லை. தப்பித் தவறி வழியிலே அவளைக் கண்டு விட்டால் 'விர்' ரென்று பாய்ந்து ஓடிவிடுவான் வில்லி லிருந்து விடுபட்டுச் செல்லும் கணைபோல!*

*இதை அவள் தன் தோழியிடத்திலே சொல்கிறாள்:*

*"நீ என்னவோ சொல்கிறாய். அவருக்கு என்னிடத்திலே சிறிதும் அன்பு இல்லை. இருந்தால் வர மாட்டாரா? ஊருக் குள்ளேயேதான் அவரும் வசிக்கிறார். இந்தத் தெரு பக்கம் வருகிறாரா, பார்த்தியா? வருவதே இல்லை. வந்தாலும் என்ன? என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு விடுகிறாரா? வில்லெறி கணைபோல விரைந்து ஓடுகிறார். யாரோ அந்நியர் போல!"*

ஓர் ஊர் வாழினும் சேரி வாரார்;
சேரி வரினும் ஆர முயங்கார்;
ஏதிலாளர் சுடலை போல
மாணாக் கழிபமன்னே - நாண் அட்டு,
நல் அறிவு இழந்த காமம்
வில் உமிழ் கணையின் சென்று சேண் படவே.

*- பாலை பாடிய பெருங்கடுங்கோ*



## 311. காலம் மலையேறிப் போச்சு

*ஆடல் மகளிர்களிடம் சிலகாலம் சிக்கியிருந்தான் அவன். பிறகு மனைவி மீது நாட்டம் சென்றது. மெதுவாக அவளது தோழியிடம் சென்றான். "முன்பு என்னைச் சேர்த்து வைத்தாய் இப்போதும் எப்படி யாவது என்னைச் சேர்த்து விடு" என்றான்.*

*"பார்க்கிறேன்" என்று சொல்லிப் போனாள் அவள்.*

*"என்னவோ போகட்டும். நடந்ததை மறந்து விடு. வந்திருக்கிறான். அழைத்து வைத்துக் கொள்" என்றாள்.*

*"அதெப்படி முடியும்? இவ்வளவு நாள் கண் தெரிந்ததா? முனிவர்களைக் கண்டு அஞ்சி ஒதுங்குகிறவர்களைப் போல அஞ்சி ஒதுங்கிப் பதுங்கி ஓடினாரே" என்றாள் அவள்.*

*"முந்தி யெல்லாம் வரவில்லையா?"*

*"ஆமாம். வந்தார். அந்த மாதிரி எப்பொழுதும் வருகிறது தானே. மலையிலா இருக்கிறார்! இல்லை காட்டில் இருக் கிறாரா? என் அருகில்தானே இருக்கிறார். மலையிலே இருந்த போதும் காட்டிலே இருந்தபோதும் கூட ஓடி வந்தாரே, காதல் காதல் என்று"*

*"அப்போதெல்லாம் அன்புடன்தானே இருந்தார்?"*

*"ஆமாம். அவரும் அன்புடன் இருந்தார். நானும் அன்புடன் இருந்தேன். அந்தக் காலம் மலையேறிப் போச்சே" என்றாள்.*

மலை இடையிட்ட நாட்டரும் அல்ல;
மரந்தலை தோன்றா ஊரரும்; அல்ல
கண்ணின் காண நண்ணுவழி இருந்தும்,
கடவுள் நண்ணிய பாலோர் போல,
ஒரீ இனன் ஒழுகும் என்னைக்குப்
பரியலென்மன் யான், பண்டு ஒரு காலே.

*- நெடும்பல்லியத்தனார்*

## 312. நெஞ்சும் நெருஞ்சியும்

"போனால் போகிறது. மறந்துவிடு. என்னவோ மனிதருக்கு இயற்கைதானே. அவளிடம் போயிருந்தார். இப்பொழுதுதான் உன்னிடம் வந்துவிட்டாரே. முன்பு உன்னிடம் எவ்வளவு அன்பு காட்டினார். அதை நினை" என்றாள் தோழி.

"நெருஞ்சியிருக்கிறது. முதலில் மலர்கிறது. நன்றாக இருக்கிறது. அதனுடன் முள்ளும் இருக்கிறதே. அந்த மாதிரி முன்னே அவர் அன்பு காட்டினார். அப்புறம் முள் குத்துவது போல் நெஞ்சிலே துன்பம் தைத்துவிட்டாரே!"

"கிடக்கிறது போ"

"முடியாது. என் மனம் துடிக்கிறதடி; துடிக்கிறது" என்றாள்.

நோம், என் நெஞ்சே! நோம் என் நெஞ்சே!
புன் புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கு இன் புதுமலர் முட் பயந்தா அங்கு,
இனிய செய்த நம் காதலர்
இன்னா செய்தல் நோம், என் நெஞ்சே!

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 313. வேம்பும் கரும்பாச்சே! கரும்பும் வேம்பாச்சே!

"என்ன, நீதான் கொஞ்சம் சொல்லப்படாதா?" என்றான்.

"என்ன சொல்ல?" என்று கேட்டாள் தோழி.

"என்னைப்பற்றி"

"யாரிடம்?"

"அவளிடம்தான்"

"அவளிடமா?"

"ஆம்"

"முன்பு எல்லாம் அவள் வேப்பங்காயைக் கொடுத்தால் கூட 'இனிக்கிறது' என்று சொன்னாய்"



"ஆமாம்!"

"இப்பொழுது?"

"இப்பொழுதும் அப்படித்தான்"

"இல்லையே! நல்ல அருமையான சுனை நீர் கொடுத்தாலும் கடுக்கிறது என்கிறாயே. உன் மனத்திலே அன்பில்லையே!"

வேம்பின் பைங் காய் என் தோழி தரினே,
'தேம் பூங் கட்டி' என்றனிர்; இனியே,
பாரி பறம்பில் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
'வெய்ய உவர்க்கும்' என்றனிர்
ஐய! -அற்றால் அன்பின் பாலே.

**- மிளைக் கந்தனார்**

## 314. வாளும் வைகறையும்

காதலன் வந்தான். கட்டி அணைத்துப் படுத்திருக்கிறாள். இரவு முழுவதும் இன்பக் கனவுகள்! விடியற்காலை நேரத்திலே சிறிது கண் அயர்ந்தாள். அப்போது 'குக்கூ' என்று கூவியது கோழி. எல்லோரும் விழித்து எழுந்தனர். அவரவர் தம் வேலை மேல் சென்றனர். அந்த மாதிரி சந்தர்ப்பத்திலே அவள் மாத்திரம் காதலனை அணைத்துப் படுத்திருக்க முடியுமா? முடியாது. எனவே, எழுந்திருக்க வேண்டியதாயிற்று. 'காதலரைப் பிரிக்கும் வாள் போல் வந்ததே' வைகறை என்று சபிக்கிறாள்.

குக்கூ என்றது கோழி; அதன் எதிர்
துட்கென்றன்று என் தூஉ நெஞ்சம்
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே.

*- அள்ளூர் நன்முல்லையார்*

## 315. எருமையும் மனைவியும்

கணவன் பரத்தையோடு மகிழ்ந்திருக்கிறான். மனைவி வருந்தியிருக்கிறாள். அது கண்டாள் தோழி. ஆறுதலான மொழி கூற விரும்பினாள்.

"இப்படி ஒரு மனிதரும் இருப்பாரா? என்ன கல்நெஞ்சு! கிளிபோல் உள்ள காதலியை விட்டுக் குரங்கு போன்ற காமக் கிழத்தி பின் திரிகிறாரே!" என்றாள்.

மனைவிக்குக் கோபம் வந்து விட்டது. என்ன இருந்தாலும் கொண்ட கணவன் அல்லவா! பிறர் குறை கூறினால் பொறுக்குமா?

"அது ஏன் நமக்கு? கன்றின் பக்கத்திலே எருமையைக் கட்டி விட்டுப் போகிறான் உழவன். எருமை என்ன செய்கிறது? கன்றை விட்டு அப்பால் போகிறதா? இல்லையே! அந்த மாதிரிதான். என்னையும் என் குழந்தையையும் விட்டு அவன் போயிருக் கிறான். திரும்பி வரமாட்டானா? வந்துவிடுவான். எனவே. அவன் வரும்வரையில் குடும்ப வேலைகளைக் கவனிப்போம்" என்றாள்.

இது மற்று - எவனோ - தோழி! - துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இரு மருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது,
காஅல் பைம் பயிர் ஆகும் ஊரன்
திரு மனைப் பல் கடம் பூண்ட
பெரு முது பெண்டிரேம் ஆகிய நமக்கே?

*- கிள்ளிமங்கலங்கிழார்.*

## 316. அல்லிக் குளமும் அடங்காத தாகமும்

புதுக் குடித்தனம். கணவனும் மனைவியும் ஆனந்தமாக வாழ் கின்றனர். முன்பு களவுக் காதல் செய்த காலத்திலே உதவியாயிருந்த தோழி வந்தாள். இவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்க்க.

"அல்லிக் குளத்திலே இறங்கி மலர் பறிப்போர், தாகம் தாகம் என்று தவித்துத் தண்ணீரை அள்ளி அள்ளிக் குடிப்பது போலிருக்கே" என்றாள்.



"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"அந்த மாதிரி நீ சதா காலமும் மோகம் கொண்டு இருக்கிறாயே. உன் அருமைக் காதலி அருகில் இருக்கிறாள். அல்லிக் குளத்து நீரை அள்ளி அள்ளிக் குடிக்கிறாய். அப்படியும் தாகம் அடங்க வில்லையே!" என்றாள்.

அவன் சிரித்தான்.

"அடேயப்பா! உனக்கு இவ்வளவு ஆசையிருக்கும் என்று அப்போது தெரியவில்லை" என்றாள்.

"எப்போது" என்றான்.

"என்றோ ஒரு நாள் கார்த்திகைப் பிறை மாதிரி காதலியைக் காண வருவாயே களவுக் காலத்திலே. எப்படித்தான் இவ்வளவையும் அடக்கிவைத்துக் கொண்டிருந்தாயோ?" என்றாள்.

அயிரை பரந்த அம் தண் பழனத்து
ஏந்து எழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர் வேட்டாங்கு, இவள்
இடை முலைக் கிடந்தும், நடுங்கல் ஆனீர்;
தொழுது காண்பிறையின் தோன்றி, யாம் நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர்; நோகா யானே.

*- நெடும்பல்லியத்தையார்*

## 317. பாணனின் வாணாள்

ஆடல் மகளிர் வீட்டிலிருந்து வந்தான் அவன். மனைவி கோபமாக இருந்தாள்; கண்டான். அவளைக் கெஞ்சினான்.

"கண்ணே! ஏன் இப்படிக் கோபமாயிருக்கிறாய்?" என்று கூறினான். கூந்தலைக் கோதினான். 'வெடுக்'கென்று அவனது கையைத் தூக்கி எறிந்தாள். 'கடு கடு' என்று பார்த்தாள். 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டாள்.

"இன்பமே! எங்கே கொஞ்சம் சிரி. பார்க்கலாம். ஏன் இப்படி 'வெடு வெடு' என்றிருக்கிறாய்?" என்றான்.

"போதும் போதும்" என்றாள்.

"முன்பு எல்லாம் நீ எப்படிச் சிரித்தாய். நீ சிரித்தால் முல்லை கொட்டியது போல் இருக்குமே" என்றான்.

"ஆமாம். உன்னோடு சிரித்தது. பாவம்தான். சிரித்த பல் சிதைந்து கொட்டிப் போவதாக!" என்றாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய் ஆருயிரே!" என்றான்.

"மீன் நாற்றமடிக்கும் பாணனது வாணாள் போலாயிற்று என் வாழ்வு. அந்த வாணாள் எதற்குப் பயன்? அந்த மாதிரி என்னால் உனக்கும் பயனில்லை. எனக்கும் பயனில்லை. எனக்குச் சாவுதான் வரவேண்டும்" என்றாள்.

சுரம் செல் யானைக் கல் உறு கோட்டின்
தெற்றென இறீஇயரோ -ஐயா! - மற்று யாம்
நும்மொடு நக்க வால் வெள் எயிறே;
பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும் புலவு ஆகி,
நும்மும் பெறேஎம், இறீஇயர் எம் உயிரே.

- *வெள்ளி வீதியார்*

## 318. ஆசை நாயகியின் சபதம்!

ஆடல் மகளிர் வீடே கதி என்று கிடந்தான் கணவன்; மனைவி வருந்தினாள்.

"என்ன பொடி போட்டாளோ தெரியவில்லை. மயக்கி விட்டாள். என் குடியைக் கெடுத்து விட்டாள்" என்று சீறினாள். இது கேட்டாள் அந்த ஆடல் மகள்.

"நான் எந்தப் பொடியும் போடவில்லை. மயக்கவுமில்லை. அவன் தானாகவே ஆசையுற்று வந்தான். அவ்வளவே. அதை அறியாது அவள் கோபிக்கிறாள். அவ்விதம் நான் அவளது கணவனை வலிதில் அழைத்துக் குடி கெடுத்திருப்பேனாயின் கடல் என்னை விழுங்குவதாக!" என்றாள்.



கணைக் கோட்டு வாளைக் கமஞ் சூல் மட நாகு
துணர்த் தேக்கொக்கின் தீம் பழம் கதூஉம்
தொன்று முதிர் வேளிர், குன்றூர்க் குணாது
தண் பெரும் பௌவம் அணங்குக -தோழி
மனையோள் மடமையின் பிலக்கும்
அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே!

- *மாங்குடி மருதனார்*

## 319. காட்டுப் பூனையும் வீட்டுக்காரியும்

ஆடல் மகளிர் வீட்டிலே நீண்ட நாள் தங்கிவிட்டான் அவன். பிறகு ஒரு நாள் மனைவியிடம் வந்தான். அப்போது அவள் சொல்கிறாள்:

"மாலையிலே காட்டுப் பூனை வந்து வழக்கமாகத் தங்கும் வேலியருகே பதுங்கும். அது கண்டு கோழி என்ன செய்யும்? பயந்து போகும்? கூவும். தன் குஞ்சுகளை அழைக்கும்."

"அந்த மாதிரி?" என்றான் இடை மறித்து.

"அந்த மாதிரி உன் ஆசை நாயகி அலறுவாள். பழி கூறுவாள். உன்னை நான் இருத்திக் கொள்வேனோ என்று அஞ்சுவாள்"

"அதனால். . . . ?"

"அதனால் . . . . வராதே"

மனை உறை தோழிக் குறுங் காற் பேடை,
வேலி வெருகினம் பாலை உற்றென,
புகும் இடன் அறியாது தொகுபு உடன்குழீ இய
பைதற் பிள்ளைக் கிளை பயிர்ந்தா அங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல், வாழியர்! - ஐய! - எம் தெருவே.

- *ஒக்கூர் மாசாத்தியார்*

## 320. கயலும் செயலும்

*பாணன் ஒருவன். ஆடல் மகள் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டான் ஒரு செல்வனை; அறிந்தாள் மனைவி; கோபம் கொண்டாள்.*

*சில நாட்கள் சென்றன. காதலன் வீடு திரும்பினான். மற்றொரு பாணனை மனைவியிடத்தே தூது விடுகிறான். அப்போது அந்த மனைத் தலைவி சொல்கிறாள்.*

*"கொக்கு என்ன செய்யும்? கெண்டை மீனைக் கவ்வும். அதன் பிடியிலிருந்து தப்பும் சில, அவ்விதம் தப்பிய மீன் நீரிலே முகிழ்த்து எழும்போது என்ன காணும்? தாமரை மொட்டைப் பார்க்கும். அதைப் பார்த்து அஞ்சும். கொக்கின் மூக்கோ? என்று.*

*அந்த மாதிரி நானும் அஞ்சுகிறேன். பாணன் ஒருவன் பொய் சொல்லி விட்டான். அதனால் பாணர் எல்லோருமே பொய்யர் போல் தோற்றமளிக்கின்றனர் எனக்கு" என்றாள்.*

குருகு கொளக் குளித்த கெண்டை அயலது
உரு கெழு தாமரை வால் முகை வெரூஉம்
கழனி அம் படப்பைக் காஞ்சி ஊர!
ஒரு நின் பாணன் பொய்யன் ஆக,
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர், நீ அகன் றிசினோர்க்கே.

*- ஓரம்போகியார்*

## 321. வம்புக் கோட்டான்

*பசும்பூட் பாண்டியனுக்கும் கொங்கருக்கும் போர் நடந்தது. கடுமையான போர். ஆரவாரம் மிக்க போர். இறுதியில் பாண்டியன் வென்றான்.*

*அந்தப் போர்க்களத்திலே ஆரவாரம் எப்படியிருந்ததோ அப்படியாக ஊரிலே பெருத்த ஆரவாரம் ஏற்பட்டு விட்டது. ஏன் தெரியுமா? அவளுக்கும் அவனுக்கும் காதல்! அவ்வளவு தான். இதை வெகு ஆத்திரத்துடன் சொல்கிறாள் அவள்.*



*"அவர் வந்து இன்பமாக இருந்த நாட்கள் சிலவே. ஆனால் இந்தக் கோட்டான்களின் வம்போ சொல்ல முடியாது" என்றாள்.*

மயங்கு மலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாள் தவச் சிலவே, அலரே,
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும் பூட் பாண்டியன் வினை வல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை,
ஒளிறு வாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே.

*- பரணர்*

## 322. இன்பத்துக்கு இடம்

*"எங்கள் ஊருக்கு அருகே ஒரு பொய்கை யிருக்கிறது. பொய்கைக்கு அருகே கான் ஆறு உள்ளது. அதன் அருகே ஒரு பொழில் இருக்கிறது. அங்கே எவருமிரார். குருகுகள் தான் இருக்கும். "தலைக்குக் களிமண் தேய்த்து முழுகுவதற்காக நாங்கள் அங்கே வருவோம்" என்கிறாள் தோழி. எதற்காக? "நீயும் அங்கே வரலாம்" என்பதற்காகக் குறிப்பாகச் சொல்கிறாள். "சோலையிலே எவரும் இரார். இன்பமாகப் பேசலாம்" என்று அறிவிக்கிறாள். யாரிடம்? காதல் கொண்ட காளையிடம்.*

ஊர்க்கும் அணித்தே, பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே; சிறு கான்யாறே,
இரை தேர் வெண் குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றால், பொழிலே; யாம் எம்
கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே.

*- மாதீர்த்தனார்*

## 323. 'உன்னைக் காட்டுப் பூனை தின்ன!'

*நீண்ட நாள் பிரிந்திருந்தாள் காதலனை. "எப்பொழுது வருவானோ?" என்று ஏங்கிக் கிடந்தாள்.*

*காதலன் வந்துவிட்டான். ஆனந்தம்! இரவு முழுதும் இன்பமாகக் கழித்தாள்; துயின்றாள்; பொழுது புலர்ந்தது. கோழி*

கூவிற்று. தூக்கம் கலைந்தாள். விழித்துக் கொண்டு விட்டாள். காதலனுடன் இருந்த படுக்கையை விட்டு வந்தாள்.

ஒரே கோபம் அவளுக்கு. அந்தக் கோழியின் மீது! ஏன்? அவளை எழுப்பிவிட்டது அல்லவா?

"கோழியே! நீ நாசமாய்ப் போக! உன்னைக் காட்டுப் பூனை தின்ன" என்று சபித்தாள்.

குவி இணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகு செந் நெற்றிக் கணம்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத்து இல் எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கு இரை ஆகி,
கடு நவைப் படீஇயரோ, நீயே - நெடு நீர்
யாணர் ஊரனொடு வதிந்த
ஏம இன் துயில் எடுப்பியோயே!

*- மதுரைக் கண்ணனார்*

## 324. உழுந்து அடிக்கும் தடி!

"எந்தப் பரத்தை வீட்டில் இவ்வளவு நாள் வாசமோ?" என்று சீறினாள் அவள்.

"சத்தியமாகச் சொல்கிறேன். எந்தப் பரத்தையையும் நான் பார்க்கவில்லை" என்றான் அவன்.

"உழுந்து அடிக்கும் தடிபோன்ற தோள் அழகிகளான அந்தப் பரத்தை மாரிடமும் இப்படித்தானே சத்தியம் செய்திருப்பாய்? உன் சத்தியத்துக்கு ஏதாவது மதிப்பு உண்டா?" என்று கேட்டாள்.

உழுந்துடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்,
நெடும் பல் கூந்தல், குறுந்தொடி, மகளிர்
நலன் உண்டு துறத்தி ஆயின்,
மிக நன்று அம்ம - மகிழ்ந! - நின் சூளே.

*- ஓரம்போகியார்*



## 325. வற்றாத இன்பம்

"திருமணம்" என்றாள் தோழி.

"யாருக்கு?" என்று கேட்டாள் அவள்.

"உனக்கு" என்றாள்.

"வற்றாத நீர் ஓடும் ஆற்றின் கரையிலே உள்ள மரம் போல் வாழ்வேன்; மனம் மகிழ்வேன்; இடைவிடாமல் இறுகத் தழுவுவேன். இதுவரை நான் பட்ட துன்பத்தை வாய் திறந்து சொல்ல முடியாமல் தவித்தேன். இனி எந்த நாளும் இன்பமே!" என்று கூறி மகிழ்ந்தாள்.

மெல்லியலோயே! மெல்லியலோயே!
நல் நாண் நீத்த பழி தீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது, செப்பின்,
சொல்ல கிற்றா மெல்லியலோயே!
சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே,
நாள் இடைப் படாஅ நளி நீர் நீத்தத்து
இடிகரைப் பெரு மரம் போல,
தீது இல் நிலைமை முயங்குகம் பலவே. - நக்கீரர்

## 326. மலை பார்! மனம் தேறு!

காதலனை நினைத்து வருந்துகிறாள் அவள். அப்போது சொல்கிறாள் தோழி:

"அதோ பார்! அந்த மலையைப் பார். உன் காதலனது மலை. அங்கே மழை பொழிந்தால் அருவியிலே நீர் பெருக்கெடுத்து வருகிறது. பெண்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். நீரிலே நீந்தி விளையாடுவதற்கு. அதை வந்து பார்! வா. உன் காதலர் வரா விட்டாலும் அவரது மலையைக் கண்டு இன்பமடைவாயாக!"

கொடியோர் நல்கார் ஆயினும், யாழ நின்
தொடிவிளங்கு இறைய தோள் கவின் பெறீஇயர்
உவக்காண் - தோழி! - அவ் வந்திசினே
தொய்யல் மா மழை தொடங்கலின், அவர் நாட்டுப்
பூசல் ஆயம் புகன்று இழி அருவி
மண்ணுறு மணியின் தோன்றும்
தண் நறுந் துறுகல் ஓங்கிய மலையே. *- மதுரை மருதன் இளநாகனார்*

## 327. தொட்டால் விலகும்; விட்டால் படரும்

"ஊருணியிலே பாசி படர்ந்திருக்கிறது. நீரிலே எவராவது இறங்கி அலைத்தால் பாசி ஒதுங்குகிறது. பின் படர்கிறது. அந்த மாதிரி எனக்குப் பசலை படர்ந்திருக்கிறது. அவர் வந்து அணைத்தால் அது நீங்குகிறது. அவர் வராவிட்டால் அது மீண்டும் படர்கிறது. நான் என்ன செய்வேன்!" என்றாள் அவள்.

ஊர் உண் கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை - காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி,
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே.

*- பரணர்*

## 328. இடித்தாள்; மகிழ்ந்தான்!

மலை நாட்டுப் பெண் ஒருத்தி. அவளைக் கண்டான் ஓர் இளைஞன். எங்கே? வெறியாட்டு நடைபெறும் இடத்திற்கு அருகே. நீர்த் துறையில் அவள் முன் கை பற்றினான்.

வெறியாட்டு நடைபெறும் இடம் எப்படியிருக்கிறது? மணலிலே புன்க மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. அது எத்தகைய தோற்றம் அளிக்கிறது? செந்நெல் வெண் பொரி தூவியது போல் இருக்கிறது.

அத்தகைய வெறியாட்டுக் களம் மலிந்த ஊர் அது. அந்த ஊரிலே நீர்த்துறையில் அவளைச் சந்தித்தான்.

"பெண்ணே! இனி உன்னைக் கை விடேன்" என்றான்.

"வரைந்து செல்" என்றாள்.

"வருவேன்" என்றான்.

"விரைந்து வா" என்றாள்.

"சத்தியம்" என்று கூறினான்.

பிறகு நாட்கள் பல சென்றன. அவன் வரவில்லை. அவள் வருந்தினாள்.



கண்டாள் தோழி. அவனிடம் சென்றாள். "சத்தியம் செய்தாய்; அதன்படி நட விரைவாக" என்றாள்.

எம் அனங்கினவே - மகிழ்ந! முன்றில்
நனை முதிர் புன்கின் பூத் தாழ் வெண் மணல்,
வேலன் புனைந்த வெறி அயர் களம்தொறும்
செந் நெல் வான் பொரி சிதறி அன்ன,
எக்கர் நண்ணிய எம் ஊர் வியன் துறை,
நேர் இறை முன்கை பற்றி,
சூரரமகளிரோடு உற்ற சூளே.

*- கோப்பெருஞ்சோழன்*

## 330. ஆசை வேசியின் அறைகூவல்!

ஆடல் மகள்! அவள் மீது மையல் கொண்டான் ஒருவன். அவனுக்கு மனைவி இருக்கிறாள். இருப்பினும் அவளை விட்டு ஆடல் மகளோடு வாழ்கிறான்.

அவனது மனைவி, "என் குடி கெடுத்த பாவி" என்று அவளைத் தூற்றுகிறாள்.

இந்தச் சேதி அவள் காதுக்கும் எட்டிற்று. எவள் காதுக்கு? ஆடல் மகள் காதுக்கு. அப்போது அவள் சொல்கிறாள்.

"ஆமாம். அவளது காதலனை நான் கவர்ந்துவிட்டேன். உண்மைதான். எழினியின் பசுக்களை எதிரிகள் கவர்ந்து சென்றது போல. இவளுக்குத் தைரியம் இருந்தால் இட்டுச் செல்லட்டுமே. எதிரிகளுடன் போர் செய்து பசுக்களை மீட்ட எழினி போல் இவளும் என்னுடன் போரிட்டு என் ஆசைக் கணவனை அழைத்துப் போகட்டுமே! நான் வேண்டுமானால் வருகிறேன். அல்லிப் பூவை முழுசாகக் கொண்டையில் செருகிக் கொண்டு வருகிறேன். ஆற்றிலே புதுப்புனல் ஆட வருகிறேன். அவனையும் அழைத்து வருகிறேன். அவளது சாமர்த்தியத்தைப் பார்க்கலாமே!"

கூந்தல் ஆம்பல் முழு நெறி அடைச்சி,
பெரும் புனல் வந்த இருந் துறை விரும்பி,
யாம் அஃது அயர்கம் சேறும்; தான் அஃது
அஞ்சுவது உடையள் ஆயின், வெம்போர்
நுகம் பயக் கடக்கும் பல் வேல் எழினி
முனை ஆன் பெரு நிரை போல,
கிளையொடு காக்க, தன் கொழுநன் மார்பே.

*- ஔவையார்.*

**மருதத் தொகை முற்றும்.**

● ● ●



# நெய்தல் தொகை

## நெய்தற் கண்ணாடி

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வம் | : | வருணன் |
| 2. | செல்வர் | : | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி |
| 3. | மற்றையோர் | : | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் |
| 4. | பறவை | : | கடல் காகம் |
| 5. | விலங்கு | : | சுறாமீன் |
| 6. | ஊர் | : | பாக்கம், பட்டினம் |
| 7. | நீர் | : | உவர் நீர்க் கேணி, கவர் நீர் |
| 8. | பூ | : | நெய்தற் பூ, தாழம் பூ, முண்டகப் பூ, அடம்பம் பூ |
| 9. | மரம் | : | கண்டல், புன்னை, ஞாழல் |
| 10. | உணவு | : | உப்பும், மீனும் விற்றுப் பெற்ற பொருள் |
| 11. | பறை | : | மீன் கோட் பறை, நாவாய்ப் பம்பை |
| 12. | யாழ் | : | விளரி யாழ் |
| 13. | பண் | : | செவ்வழி |
| 14. | தொழில் | : | மீன் பிடித்தல், உப்புக் காய்ச்சல், உப்பு விற்றல், மீன் விற்றல், மீனுணக்கல் |
| 15. | விளையாட்டும் பொழுது போக்கும் | : | கடல் ஆடல். |

## நெய்தல் என்பது என்ன?

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் நிலத்தின் தேவன் வருணன்.

இந் நிலத்தில் வாழ்ந்த மக்களின் தொழில் மீன் பிடித்தல், உப்புக் காய்ச்சுதல், மீனைப் பாடம் செய்தல் - இவை உப தொழில்கள்.

இந்த மக்களிலே செல்வர்க்கு என்ன பெயர்? சேர்ப்பன், என்றும் புலம்பன் என்றும் பெயர். இது ஆண்களை அழைக்கும் பெயர். பரத்தி, நுளைச்சி என்பன பெண்களுக்குரிய பெயர்.

மற்றையோருக்குப் பரதர் என்று பெயர்? சேர்ப்பன், என்றும் புலம்பன் என்றும் பெயர். இது ஆண்களை அழைக்கும் பெயர். பரத்தி, நுளைச்சி என்பன பெண்களுக்குரிய பெயர்.

மற்றையோருக்குப் பரதர் என்று பெயர்; அளவர் என்றும் அழைப்பதுண்டு. பெண்களுக்குப் பரத்தியர் என்றும் அளத்தியர் என்றும் பெயர்.

இங்கே காணப்பட்ட பறவை கடல் காகம் ஒன்றே. விலங்கு, சுறாமீன்.

ஊர்களுக்கு என்ன பெயர்? பாக்கம், பட்டினம். நெய்தல் பூ , தாழம் பூ, முண்டகப் பூ - இவை மலர்கள். கண்டல், புன்னை, ஞாழல் - இவை மரங்கள்.

உப்பு விற்றுவந்த பொருளைக் கொண்டும் மீன் விற்று வந்த பொருளைக் கொண்டும் மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.



நெய்தல் நில மக்களின் இசைக் கருவிகள் இரண்டு. ஒன்று பறை. மற்றொன்று யாழ். பறைக்கு என்ன பெயர்? மீன் கோட்பறை என்றும், நாவாய்ப் பம்பை என்றும் பெயர்.

அவர்கள் இசைத்த யாழுக்கு விளரி யாழ் என்று பெயர். பண் : செவ்வழி.

கடல் நீரில் நீந்தி விளையாடுவதே அவர் தம் பொழுது போக்கு; விளையாட்டு.

## 331. மணமும் மரக்காயரும்

*நெய்தல் நிலத்திலே மலர் உதிர்ந்து கிடக்கும். என்ன மலர்? வளைந்த முள்ளையுடைய கழி முள்ளி மலர். நூல் அறுந்த முத்துப் போல் கிடக்கும். அத்தகைய நெய்தல் நிலத்தின் இளம் செல்வன்; மரக்காயன். ஒருத்தியைக் காதலித்தான்.*

*"விரைவில் வருவேன்; வரைந்து கொள்வேன்" என்று சொல்லிப் போனான். அதற்கான முயற்சியில் ஈடுபட்டான். எனினும் அவளுக்கு அவசரம்.*

*"சீக்கிரம் வரவில்லையே" என்றாள்.*

*"இதோ பார்! நீ அவனைக் காதலிக்கிறாய். அவனும் உன்னைக் காதலிக்கிறான். எனக்கும் பிடித்திருக்கிறது. என் தாயும் உன்னை அவனுக்கே மணம் செய்விக்க விரும்புகிறாள். உன் தாயும் அப்படியே. உன் தந்தையும் 'சரி' என்றார். ஊராரும் உனக்கும் அவனுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக வம்பு அளக்கின்றனர். உன் திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. இன்னும் எதற்காக கவலை?" என்றாள் தோழி.*

கூன் முள் முண்டகக் கூர்ம் பனி மா மலர்
நூல் அறு முத்தின் காலொடு பாறித்
துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை
யானும் காதலென்; யாயும் நனி வெய்யள்;
எந்தையும் கொடீஇயர் வேண்டும்,
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே. — *குன்றியனார்*

## 332. காதலும் காவலும்

*கண்டாள்; காதல் கொண்டாள். அவனும் காதலித்தான், இருவரும் இன்பமாக இருந்தனர். பிறகு என்ன? இந்தக் காதல் ஜோடியின் இன்பத்துக்குத் தடைகள் பல. கட்டும் காவலும் மிகுந்தன. அவளைத் தனியே விடாமல் எப்போதும் பலர்*

சூழ்ந்திருந்தனர். இரவு நேரத்திலே செவிலித்தாய் அவள் அருகே படுக்கத் தொடங்கினாள். நீண்ட நேரம் வரையில் செவிலித்தாய் தூங்க மாட்டாள். சத்தம் கேட்டால் விழித்துக் கொள்வாள். நாய் குரைத்தால் விழித்துக் கொள்வாள். ஆந்தை கூவினால் விழித்துக் கொள்வாள். இது பெரிய உபத்திரவமாக இருந்தது அவளுக்கு. காதலனைச் சந்தித்து இன்பமாயிருக்க வாய்ப்பே கிடைக்க வில்லை. அப்படி ஏதாவது வாய்ப்பு ஏற்படுமானால் அவன் வரமுடியாது நின்றுவிடுவான். ஊர்க் காவலர் வருவர். நிலவு வரும். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் அவன் வரமுடியுமா?

என்ன செய்வாள்! பாவம்! வருந்தினாள். மகன்றில் என்பது ஒரு பறவை. நீரில் வாழும். அது எப்போதும் இணைபிரியாது இருக்கும். நீரிலே நீந்தும். அப்படி வரும்போது ஒரு மலர் இரண்டையும் பிரிக்கிறது. கொஞ்ச நேரம்தான். இருந்தாலும், பல வருஷங்கள் போல் தோன்றும் அப் பறவைக்கு. அந்த மாதிரி தோன்றியது அவளுக்கு. அவனைப் பார்க்காதது பொறுக்க முடியவில்லை.

"அடியே! இந்தத் தனிமை பொறுக்க முடியவில்லை. உயிர் போவதாயினும் சரி. நானும் என் காதலனும் இணைந்து இருந்தால், போதுமே" என்றாள்.

பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீர் உறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமொடு
உடன் உயிர் போகுகதில்ல - கடன் அறிந்து,
இருவேம் ஆகிய உலகத்து,
ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே.

*- சிறைக்குடி ஆந்தையார்*

## 333. உய்தலும் நெய்தலும்

அவன் வந்திருக்கிறான். வேலி ஓரமாக நிற்கிறான். அவனிடம் ஒரு சேதி சொல்ல வேண்டும். அது என்ன என்பது மற்றவருக்குத் தெரியக்கூடாது. இரகசியமாகப் பேசவும் முடியாது. என்ன சேதி அது? அவனுடைய காதலி பற்றியது. தோழி சொல்கிறாள்:



"மாலை நேரம். நீலமணி போன்ற நெய்தல் மலர்கள் குவிகின்றன. வாடைக் காற்று வீசுகிறது. எப்படி வீசுகிறது? கடல் அலை மோதுவதாலே எழுந்த நீர்த் தூவல் காற்றிலே கலந்துவர வீசுகிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்த ஊர் வாழ்க்கை இன்னும் சில நாளே!"

அதாவது என்ன பொருள்? மாலை நேரம் கண்டு அவனது காதலி வருந்துகிறாள். அந்த வருத்தத்தினாலே நெய்தல் போன்ற அவளது கண்கள் ஒளியிழந்தன. வாடைக் காற்று அவளது துன்பத்தை மேலும் வளர்க்கிறது. இப்படி யிருந்தால் அவள் இன்னும் சில நாட்களே உயிருடன் இருப்பாள் என்பதே.

எனவே, அவன் என்ன செய்ய வேண்டும்? விரைவில் வந்து இவளை மணந்து செல்ல வேண்டும்.

மாக் கழி மணிப் பூக் கூம்ப, தூத் திரைப்
பொங்கு பிதிர்த் துவலையொடு மங்குல் தைஇ,
கையற வந்த தைவரல் ஊதையொடு
இன்னா உறையுட்டு ஆடும்
சில் நாட்டு அம்ம - இச் சிறு நல் ஊரே. *- நெய்தற் கார்க்கியர்*

## 334. வெந்நீரும் கண்ணீரும்

காதலன் ஒருவன்; காதலியைப் பிரிந்து சென்றான். 'வருவேன்' என்றான்; வரவில்லை. அவனையே நினைத்து ஏங்குகிறாள் அவள். ஏங்கி ஏங்கித் துடிக்கிறாள்; வாடுகிறாள்; வருந்துகிறாள்; கண்ணீர் சொரிகிறாள்.

"அழாதே" என்றாள் தோழி.

"நான்! என்னடி செய்வேன் தோழி! என்னால் சகிக்க முடியவில்லை! என் நெஞ்சு துடிக்குதே! மனம் சுக்கு நூறாக வெடிக்குதே! வெந்நீர் போல் பொங்குதே கண்ணீர்! அதைத் துடைப்பதற்கு அவரில்லையே!" என்று கூறிப் புலம்புகிறாள்.

நோம் என் நெஞ்சே; நோம் என் நெஞ்சே!
இமை தீய்ப்பு அன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்த நம் காதலர்
அமைவு இலராகுதல் நோம் என் நெஞ்சே. *- காமஞ்சேர் குளத்தார்*

## 335. இதுதானோ காதல்

சின்னஞ் சிறு வயது. ஆனால் குழந்தை அல்லள். வயது வரப் பெற்றவளே. காதல் இன்பத்திற்குப் புதியவள். அவ்வளவே!

அவனும் காதலித்தான்; அவளும் காதலித்தாள். உள்ளம் இரண்டும் ஒன்று ஆயின. சிலநாள் இன்பம். பிறகுஅவன் சென்றான். அவனோ - செல்வச் சீமான் வீட்டுப் பிள்ளை; நெய்தல் நிலத்திலே உள்ள ஒரு பெரிய மரக்காயர் மகன். அவன் ஊரிலே ஏராளமான புன்னை மரங்கள் உண்டு.

அந்த மரங்களிலே குருகு வந்து தங்கும்; உறங்கும். ஓயாதுஅலை வீசும். அத்தகைய நெய்தல் நில இளைஞன். "விரைவில் வருவேன்" என்று சொல்லிப் போனான்.

அவள் அவனையே எதிர் நோக்கினாள்; வழிமேல் விழிவைத்து நின்றாள். ஆனால் அவன் வரவில்லை. ஒரு நாளல்ல; பல நாள்கள் இப்படியே சென்றன.

உணவு செல்லவில்லை அவளுக்கு. உறக்கம் கொள்ளவில்லை. துன்புற்று வாடினாள்.

"ஐயோ! என்னால் தாங்க முடியவில்லை! காம நோய் என்று சொல்கிறார்களே! அது இப்படித்தான் இருக்குமோ தோழீ!" என்று கேட்கிறாள் தோழியை நோக்கி.

அந்த இளம் உள்ளம்தான் எத்தகைய மாசு மருவற்றது! அந்த உள்ளத்தில் இருந்து எத்தகைய ஏக்கம் எதிரொலி செய்கிறது; சூது வாது இல்லாத பெண். காதலனைப் பிரிந்து அவள் படும் பாட்டைச் சில வரிகளிலே நம் முன் எழுதிக் காட்டுகிறார் கவி. அந்தச் சொற்கள்தான் எப்படி நம் உள்ளத்தைத் தொடுகின்றன!

அது கொல்! தோழி! காம நோயே!
வதி குருகு உறங்கும் இன்நிழல் புன்னை
உடை திரை திவலை அரும்பும் தீம் நீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல் இதழ் உண்கண் பாடு ஒல்லாவே!

*- நரி வெரூஉத்தலையார்*



## 336. இரவும் ஏக்கமும்

காதலன் ஒருவன்; காதலி ஒருத்தி. இருவரும் சிலநாள் இன்பமாக இருந்தனர். இது எவருக்கும் தெரியாது. களவு ஒழுக்கம். எத்தனை நாள் இப்படி இருத்தல் இயலும். மணம் செய்துகொள்ள வேண்டாமா? "பரிசம்போட பணம் கொண்டு வருகிறேன்" என்று கூறினான் அவன்.

"எப்போ?" என்றாள் அவள்.

"விரைவில்" என்றான் அவன்.

"சரி. போய் வா" என்றாள்.

நாள்கள் சென்றன. வாரங்கள் ஓடின. மாதங்கள் ஆயின. அவன் வரவில்லை. "இன்று வருவான்; இன்று வருவான்" என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தாள் அவள். அவன் வந்தால் தானே! வரவில்லை. என்ன செய்வாள்! பாவம்! ஏங்கினாள். தூக்கம் வரவில்லை. எந்த நொடியில் அவன் வருவானோ என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். உள்ளம் துடிக்கிறது. அவதிப்படுகிறாள்.

"ஏன் இப்படி அவதிப்படுகிறாய்?" என்று எவராவது கேட்டால்தானே! எவரும் கேட்கவில்லை.

அருகில் உள்ள தனது தோழியைப் பார்க்கிறாள். அவளோ கவலையின்றி நிம்மதியாகத் தூங்குகிறாள்.

வெளியே எட்டிப் பார்க்கிறாள். ஒரே இருள். நடு நிசி. அமைதி! அமைதி! எங்கும் அமைதி! ஆள் நடமாட்டமே இல்லை. பேச்சுக் குரல் கூடக் கேட்கவில்லை.

"எல்லோரும் தூங்குகிறார்களே! அந்தப் பாழும் தூக்கம் எனக்கு வரவில்லையே!" என்று ஏங்குகிறாள்.

"ஐயோ! எங்கும் அமைதி நிலவுகிறதே! என்மனம் மாத்திரம் அமைதி யில்லாதிருக்கிறதே! என்ன செய்வேன்!" என்று புலம்புகிறாள்.

'நள்' என்று அன்றே யாமம்! சொல் அவிந்து
இனிது அடங்கினரே மாக்கள்! முனிவு இன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்!
ஓர் யான் மன்ற துஞ்சா தானே!

- *பதுமனார்*

## 337. கரவும் கற்பும்

நேராகத் தன்னுடைய மனைவியின் வீட்டுக்குப் போகப் பயந்தான் அவன். காரணம் என்ன? நீண்ட காலம் பிரிந்து விட்டான். பிரிந்து எங்கே சென்றான்? ஆடல் மகளிர் வீடு சென்றான். அங்கேயே தங்கி விட்டான். பிறகு ஒரு நாள் திரும்பினான். மனைவி கோபிப்பாளோ என்ற பயம். எனவே, அவளது தோழியைக் கண்டான்.

"எங்கே சென்றாய்?" என்றாள் அவள்.

"அப்படி . . . சிறிது இன்பமாகப் பொழுது போக்கினேன்" என்றான்.

"நீ அங்கே இன்பமாக இருந்தாய். ஆனால் அவளோ, இங்கே துன்புற்றாள்."

"அப்படியா! என்மீது மிகுந்த கோபமாக இருக்கிறாளோ?"

"உம். அவள் போல் ஒரு பெண்ணை எங்குமே நீ காண முடியாது.

"என்ன அப்படிச் சொல்கிறாய்?"

"ஆம். அப்படித்தான். வாய் திறக்கவில்லை அவள். உன்னைப் பற்றி ஒரு வார்த்தை கூட வெளியே சொல்லவில்லை. உன் செயல் கண்டு வெட்கினாள். தனது துக்கத்தை மனத்திற்குள்ளேயே வைத்து வருந்தினாள்; இளைத்தாள்; மெலிந்தாள். மாந்தளிர் போன்ற அவளது மேனி பசுமை படர்ந்து மெலிந்தது. எனவே உன்னைக் கோபித்து விரட்ட மாட்டாள். தைரியமாகச் செல். அவளுடன் சேர்ந்து வாழ்" என்றாள்.



யாய் ஆகியளே! மாயோளே!
மடை மாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப்பூவின் மெய் சாயினளே!
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இன மீன் இரும் கழி ஓதம் மல்குதொறும்
கய மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம் முன் நாணி, கரப்பு ஆடும்.

- *கயமனார்.*

## 338. நீயே காதலன்! நானே காதலி

"அன்பே" என்றான்.

"ஆருயிரே!" என்றாள்.

"இன்பமே!" என்றான்.

"ஏன்?" என்றாள்.

"என் மேல் கோபமா?"

"எதற்கு?"

"உன்னை மறந்து அந்த ஆடல் மகளுடன் ஆனந்த மாயிருந்தேனே அதற்கு."

"என் மீது வற்றாத அன்பு கொண்டு வந்தாயே, அதுவே போதும் கண்ணா"

"நீயே என் நெஞ்சுக்குகந்த காதலி"

"இம்மை மறுமை இரு பிறவியிலும் இப்படியே ஆகுக!"

"அணிலின் பல் போன்ற முள்ளையுடைய கழி முள்ளிச் செடியும், நீலமணி போன்ற நீரையும் கொண்ட கடல்நாடனே, மறுபிறவியிலும் இப்படியே ஆகுக. என் காதலனாகுக. நானே உன் மனமுவந்த மனைவி யாகுக."

அணிற் பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து
மணிக் கேழ் அன்ன மா நீர்ச் சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை ஆயினும்,
நீ ஆகியர் எம் கணவனை;
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே.

*- அம்மூவனார்*

### 339. மனமும் மாலையும்

*கதிரவன் மறைந்தான். பறவைகள் தம் கூடு நோக்கிப் பறந்து செல்கின்றன. கூட்டிலே விட்டு வந்த குஞ்சுகளுக்காக இரையை வாயிலே கவ்விச் செல்கின்றன.*

*கண்டாள் அவள். காதலன் வரவில்லையே என்று ஏங்கினாள்; கண்ணீர் வடித்தாள்.*

*"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள் தோழி.*

*"அதோ பார்" எனறாள். ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினாள்.*

*"ஆமாம்! மாலை வந்துவிட்டது. பறவைகள் கூட்டில் அடைகின்றன"*

*"ஆனால் அவர் வரவில்லையே!" என்றாள். கண்ணீர் வடித்தாள்.*

ஞாயிறு பட்ட அகல் வாய் வானத்து
அளியதாமே - கொடுஞ் சிறைப் பறவை,
இறை உற ஓங்கிய நெறி அயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரை கொண்டமையின், விரையுமால் செலவே.

*- தாமோதரனார்*

### 340. அன்று மறைவிலே! இன்று மன்றத்திலே!

*"அடியே! நான் என்னடி செய்வேன்? இன்னும் அவர் வர வில்லையே! வரைந்து செல்லவில்லையே! நான் இங்கே யிருக்கிறேன். அவரோ அங்கே இருக்கிறார். எனது பெண்மையோ கடற்கரைச் சோலையிலே சூறை போயிற்று. மறைவிலே நடந்த விஷயம். இன்று மன்றத்துக்கு வந்து விட்டது. பெற்றோரும் பெண் கொடுக்கத் தயார். ஆனால் அவர் வந்தால்தானே! வரக் காணாமே!"*



யானே ஈண்டையேனே; என் நலனே
ஆனா நோயொடு கானலஃதே.
துறைவன் தம் ஊரானே;
மறை அலர் ஆகி மன்றத்தஃதே.

*- வெண்பூதியார்*

### 341. நினைத்தால் வேகுதே!

*"நான் என்ன செய்வேன்? 'வருவேன்' என்று சொன்னார். வரவில்லை! மாரனோ அம்பு மேல் அம்பு பொழிகிறான். காமமோ தாங்க முடியவில்லை. ஆகாயத்தை அளாவி பெருகி விட்டது. அவரை நினையாதிருப்போம் என்றாலோ அதுவும் முடியவில்லை. நினைத்தாலோ நெஞ்சு வேகுது; தாங்க முடிய வில்லை. அவருக்குக் கொஞ்சம் கூடத் தெரியவில்லையே! மிகக் கொடியவர்."*

உள்ளின், உள்ளம் வேமே; உள்ளாது
இருப்பின், எம் அளவைத்து அன்றே; வருத்தி
வான் தோய்வற்றே, காமம்;
சான்றோர் அல்லர், யாம் மரீ இயோரே.

*- ஔவையார்*

### 342. வாடை வாட்டுதே

*"வாடை வருங்காலத்தே வருவேன்" என்று சொல்லிப் போனான்அவன். வாடைக் காலமும் வந்தது. குளிர் தாங்க முடியவில்லை. நாரைகளும் மீன் தேடுவதை விட்டன. ஆனால் அவர் வரவில்லை!*

*"வரவில்லையே" என்று ஏங்கினாள் அவள்.*

*"என்ன செய்வேன் தோழி, அவர் வரவில்லையே! வாடையும் வந்துவிட்டது. நாரையும் மீன் தேடுவதை விட்டது. ஆனால்*

அவரோ பொருள் தேடுவதை விட்டு என்பால் வரவில்லையே. இவ்வளவு நாள் ஆற்றியிருந்தேன். இந்தக் குளிர் காலத்திலே அவர் இல்லாமல் எப்படிப் பொறுத்திருப்பேன்! முடியாது! முடியாது! இனி ஒரு கணமும் உயிர் தரியேன்! என் உயிர் போய்விடும் போலிருக்கே.''

கடும் புனல் தொடுத்த நடுங்கு அஞர் அள்ளல்,
கவிர் இதழ் அன்ன தூவிச் செவ் வாய்,
இரை தேர் நாரைக்கு எவ்வம் ஆகத்
தூஉம் துவலைத் துயர் கூர் வாடையும்
வாரார் போல்வர் நம் காதலர்;
வாழேன் போல்வல் - தோழி! - யானே.

*- வாயிலான் தேவனார்*

## 343. சேர்ப்பா! சேரப்பா!

கடல் நாட்டைச் சேர்ந்த பெரும் செல்வன் ஒருவன்; மீனவன்; இறால் மீன் வற்றாது வந்து குவியும் பெரும் திரை நாடன். ஒருத்தியைக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள். களவு ஒழுக்கம் நடக்கிறது. இருப்பினும் அவள் மேனி பசலை படர்ந்தது. அது கண்டாள் தோழி. கேட்கிறாள்:

''உன் மேனி பசலை படரக் காரணம் என்ன? அவர்தான் வந்து போயக் கொண்டிருக்கிறாரே'' என்றாள்.

''வருவதும் போவதுமாகத்தானே இருக்கிறார். பிரியாமல் இருக்கவில்லையே''

அதாவது என்ன? விரைவிலே மணம் செய்துகொள்ள வேண்டுமாம். அதை இப்படிச் சுற்றி வளைத்துச் சொல்கிறாள்.

முட்கால் இறவின் முடங்கு புறப் பெருங் கிளை
புணரி இகுதிரை தரூஉம் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்,
இன்னது மன்னோ, நல் நுகற் கவினே!

*- நம்பி குட்டுவனார்*



## 344. மீனவனும் மங்கையும்

நெய்தல் நிலத்திலே வாழும் வாலிபன் ஒருவன்; செல்வன். கட்டழகி ஒருத்தி மீது காதல் கொண்டான். மருவ மனம் துடித்தான். தோழியை அணுகினான். தனது உள்ளத்து எண்ணத்தை எடுத்துக் கூறினான். அவளும் 'சரி' என்றாள். மெதுவாக அந்தக் கட்டழகியை இணங்கச் செய்தாள். அழைத்து வந்தாள். நெய்தல் மலர்களை விரித்து அமர்த்தினாள்; வந்தாள் அவனிடத்திலே; காத்து நின்றான் அவன்.

''காயா? பழமா?'' என்றான்.

''பழம்'' என்றாள்.

''எங்கே?''

''நெய்தல் மலரைப் பரப்பி இருக்கச் செய்து வந்திருக்கிறேன். சீக்கிரம் போ. அவள் கண்ணை மீன் என்று எண்ணி நாரை கொத்திவிடப் போகிறது!'' என்றாள்.

''நீ'' என்றான்.

''நான் எதற்கு? போகிறேன். நீ அவளை விரைவாக அனுப்பிவிடு'' என்றாள்.''

நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி,
நின்குறி வந்தனென், இயல் தேர்க் கொண்க! -
செல்க; செல வியங்கொண்மோ - அல்கலும்,
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும், என் மகள் நுதலே.

*- பொன்னாகனார்*

## 345. வளையும் வருத்தமும்

அவன் அவளைக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள். களவு நடக்கிறது. கலியாணம் செய்யாமல் காலம் நடத்திக் கொண்டே போகிறான். அதை நினைத்தால் அவளுக்கு வருத்தம் தோன்றுகிறது; தோள் நெகிழ்கிறது; வளை கழன்று விடுகிறது. அப்போது தோழி சொல்கிறாள்:

“மாரிக் காலத்து ஆம்பல் போன்ற கொக்கு, எங்கே நம்மைப் பிடித்துக் கொள்ளுமோ என்று அஞ்சுகிறது நண்டு. அஞ்சி என்ன செய்கிறது? தாழை வேரின் அடியிலே புகுந்து கொள்கிறது. அத்தகைய கடல் நாடன் வராவிட்டாலும் பாதகமில்லை. வருத்தத்தை சகித்துக் கொள்ளாமல் வளை நெகிழ்கிறதே! ஊரார் அறிந்து கொள்வாரோ என்று அஞ்சாதே. கொஞ்சம் சிறிய வளைகளும் உண்டு. அணிந்து கொள்ளலாம்.”

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர் ஞெண்டு
கண்டல் வேர் அளைச் செலீஇயர், அண்டா
கயிறு அரி எருத்தின், கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக!
சிறியவும் உள ஈண்டு விலைஞர், கைவளையே — **குன்றியனார்**

## 346. மரைக்காயர் மகள்

கடற்கரையிலே உள்ள ஊர். அந்த ஊரிலே ஒரு பெரிய மரைக்காயர். பெரும் செல்வர். அரண்மனை போன்ற வீடு. ஆள்கட்டு. தினமும் நூறு பேருக்கு வீட்டிலே சாப்பாடு. இப்படி வாழ்கிறார். அந்த வீட்டிலே வந்து சாப்பிடுவான் ஓர் இளைஞன்.

மாலை வந்துவிட்டது. வாயில் காப்போர் வாயிற் கதவைச் சாத்துகின்றனர்.

“சாப்பிட வருகிறவர் எல்லாரும் வரலாம்” என்கின்றனர். பிறகு எவராவது தெருவில் நிற்கின்றனரோ என்று பார்க்கின்றனர்.

வாயிற் கதவு தாளிடப்படுகிறது.

“ஐயோ! என் காதலன் வரவில்லையேடி தோழி!” என்று துடித்தாள் மரைக்காயர் மகள்.

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார் இல் மாலை,
பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ? எனவும்
வாரார் - தோழி! - நம் காதலோரே. — **நன்னாகையார்**



## 347. ‘ஐயோ! மாலை வந்துவிட்டதே!’

“ஆம்பல் மலர்கள் குவிந்தன. மாலை வந்துவிட்டது. என்னடி செய்வேன். எப்படி ஆற்றுவேன்? அதற்குப் பிறகு இரவு முழுதும் இருக்கிறதே. ஐயோ அதை நினைத்தால் நெஞ்சு ‘பகீர்’ என்கிறதே!” என்றாள் காதலி.

பைங் காற் கொக்கின் புன் புறந்தன்ன
குண்டு நீர் ஆம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று, வாழியோ, மாலை!
ஒரு தான் அன்றே; கங்குலும் உடைத்தே!

— **ஓரம்போகியார்**

## 348. மீன் பிடிக்கிறான்; காதலனைப் பிடிக்கிறாள்

நெய்தல் நிலம். புன்னை மரங்கள் அடர்ந்ததொரு பூஞ்சோலை. வெள்ளிய மணல் பரப்பு. அதிலே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். யார்? அவளும், அவளது தோழியும்.

“இவர்கள் என்ன பேசுகிறார்கள்? கேட்போம்” என்று எண்ணி வந்து ஒளிந்திருக்கிறான் அவளது காதலன். அதை அவள் அறிந்தாள். எனவே அவன் காதில் படும்படி சொல்கிறாள் தோழி.

“காலையிலே மீன் பிடிக்கச் சென்ற உன் அண்ணன்மார் வரும் நேரம். இன்னும் தாமதித்தால் வந்தே விடுவார். அப்புறம் இங்கே இருக்க முடியாது. உன் காதலர் வந்தால் நல்லது. அதுவும் சீக்கிரம் வந்தால் நல்லது.”

இருள் திணிந்தன்ன ஈர்ந் தண் கொழு நிழல்,
நிலவிக் குவித்தன்ன வெண் மணல் ஒரு சிறை,
கருங் கோட்டுப் புன்னைப் பூம் பொழில் புலம்ப,
இன்னும் வாரார்; வரூஉம்,
பல் மீன் வேட்டத்து என்னையர் திமிலே.

— **ஐயூர் முடவனார்.**

## 349. காதல் கொக்கு!

*நாரை ஒன்று; கிழப் பருவம்; சிறகு உதிர்ந்து போயிற்று. பறக்க முடியாது. கிழக்குக் கடற்கரையிலே கிடைக்கும் மீனை உண்டு பசியாறி வந்தது.*

*முன்பு ஒரு சமயம் மேற்குக் கடற்கரைக்குப் பறந்து போய் அயிரை மீனை உண்ட நினைவு வந்தது அதற்கு. ஆசையும் வந்தது. மேற்குக் கடற்கரைக்குப் பறந்து செல்ல எண்ணியது. சிறகை அடித்தது. தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்தது. எங்கே? பறக்க முடிந்தால் தானே!*

*"அந்த மாதிரி ஆயிற்றே என் கதி" என்று ஏங்கினான் அவன். ஏன்? காதலியைக் காண முடியவில்லை.*

குண கடற் திரையது பறை தபு நாரை
திண் தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர் இரைக்கு அணவந்தா அங்குச்
சேயள் அரியோட் படர்தி;
நோயை - நெஞ்சே! - நோய்ப் பாலோயே.

*- பரணர்.*

## 350. நாரையும் நாரியும்

*"கடற்கரையிலே ஒரு மரம். அதன் கிளை ஒன்று. தாழ்ந் திருக்கிறது. அலை வந்து அதன்மீது மோதுகிறது. அந்தக் கிளை மீது அமர்ந்திருக்கிறது ஒரு நாரை. ஏன்? அலை கொண்டு வரும் மீனைக் கொத்தி உண்ண. காரணம். சிறகு வலிகுன்றியதே."*

*"இந்த நாரை போல் ஆகிவிட்டேன் நான். கண்டோர் வியக்கும் கட்டழகி என்ற புகழ் போயிற்று. என் அழகை யெல்லாம் காதலன் கொண்டுவிட்டான். வளை நெகிழ, உயிர் ஊசலாட இன்னும் இருக்கிறேன்" என்றாள் அவள்.*

இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே,
உளனே வாழி - தோழி! - சாரல்
தழை அணி அல்குல் மகளிருள்ளும்



விழவு மேம்பட்ட என் நலனே, பழவிறல்
பறை வலம் தப்பிய பைதல் நாரை
திரை தோய் வாங்கு சினை இருக்கும்
தண்ணம் துறைவனொடு, கண்மாறின்றே.

*- அம்மூவனார்*

## 351. ஒரு வாசகம் சொல்வாரில்லையே!

*கடற்கரையிலே உள்ள ஒரு சிறு குடி. அக்குடியிலே வாழ்கிறாள் அவள். அவளது காதலன் ஊரில் இல்லை. அதனால் கலங்கினாள். இரவு தூங்கவில்லை. ஆனால் ஊராருக்கு என்ன கவலை? அவர்கள் ஆனந்தமாகத் தூங்குகிறார்கள். அவளுக்குக் கோபம்.*

*"இதென்ன? ஊரா? நான் படும் அவதி காண்பாரில்லையே! எனக்கொரு வாசகம் .சொல்வாரில்லையா? ஆறுதல் அளிப் பாரில்லையே!" என்று புலம்பினாள்.*

உறை பதி அன்று, இத் துறை கெழு சிறுகுடி-
கானல்அம் சேர்ப்பன் கொடுமை எற்றி,
ஆனாத் துயரமொடு வருந்தி, பானாள்
துஞ்சாது உறைநரொடு உசாவாத்
துயில் கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே.

*- கொல்லன் அழிசியார்*

## 352. உள்ளமும் ஓசையும்

*காதலனைப் பிரிந்து வாடுகிறாள் அவள். இரவு முழுதும் தூக்கமில்லை. விழித்துக் கொண்டிருக்கிறாள். இரவு நேரம் எங்கும் நிசப்தம். ஆனால் அந்தக் கடல் மாத்திரம் அலை மோதிக் கொண்டிருக்கிறது. அந்த அலை ஓசை கேட்கிறது.*

*"நான்தான் துன்பமுற்றேன். இரவு தூங்காமல் புலம்புகிறேன். நீயும் இரவு முழுதும் ஒலிக்கிறாயே! கடலே! யாராலே துன்ப முற்றாய்? என்ன துன்பம் உனக்கு?" என்று கேட்கிறாள்.*

யார் அணங்குற்றனை - கடலே! பூழியர்
சிறு தலை வெள்ளத் தோடு பரந்தன்ன
மீன் ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை,
வெள் வீத் தாழை திரை அலை
நள்ளென் கங்குலம் கேட்கும், நின் குரலே?

*- அம்மூவனார்*

## 353. மாந்தை வாழ் மங்கை

*மாந்தை என்று ஓர் ஊர். கடற்கரையிலே உள்ளது. அங்கே ஒரு பெண். ஒருவன்மீது காதல் கொண்டாள். அவளோ பருவம் வந்த பெண். வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கிறாள். காதலனைக் காண்பது எப்படி? தோழி சொல்கிறாள்:*

*"அலைகள் என்ன செய்கின்றன? மீன்களை அப்பால் கொண்டு செல்கின்றன. சும்மா இருக்கிறதா நாரை? இல்லை. மீனைக் கொத்திச் செல்கிறது. அதுபோலக் காதலியைப் பெற்றோர் பிரித்து வைத்தாலும் காதலன் என்ன செய்யவேண்டும் கொத்திச் செல்லவேண்டும். அப்போது தான் இவ்வூர் நல்லதாகும் அவளுக்கு. இல்லையாயின் புலம்புவாள்" என்றாள்.*

தண் கடற் படு திரை பெயர்த்தலின், வெண் பறை
நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும்,
ஊரோ நன்றுமன், மாந்தை;
ஒரு தனி வைகின், புலம்பு ஆகின்றே.

*- கூடலூர் கிழார்*

## 354. குளிரும் கூற்றமும்

*"வருந்தாதே" என்றாள் தோழி.*

*"நான் என்னடி செய்வேன்?" என்றாள் அவள்.*

*"வந்து விடுவார்."*

*"கூதிர் வந்து விட்டதே. கூற்றுவன் போல் வந்து விட்டதே. ஊதைக் காற்று வீசுதே. என் உயிர் கொண்டு போகும் போல் இருக்கிறதே!"*



யாது செய்வாம்கொல் - தோழி! - நோதக
நீர் எதிர் கருவிய கார் எதிர் கிளை மழை
ஊதைஅம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற் குறித்து வருமே?

*- கச்சிப்பேட்டு நன்னாகையார்*

## 355 அம்மையும் வெம்மையும்

*"கதிரவன் மலை வாயில் விழுந்தான். வெம்மை தணிந்தது. துன்பந்தரும் மாலை வந்தது. காதலர் எங்கிருக்கிறாரோ? அழகாக இருந்த நான் அழகிழந்திருப்பதை அவர் அறிவாரோ என்னவோ? இந்தக் காற்று படுத்தும் பாட்டை அவர் அறிவாரோ மாட்டாரோ? அறிந்திருந்தால் வந்திருப்பாரே! 'துன்பம் தாங்காது துடிப்பாளே' என்று வந்திருப்பாரே!" என்று புலம்புகிறாள் அவள்.*

சுடர் சினம் தணிந்து குன்றம் சேரப்
படர் சுமந்து எழுதரு பையுள் மாலை,
யாண்டு உளர்கொல்லோ, வேண்டுவினை முடிநர்?
'இன்னாது, இரங்கும்' என்னார் அன்னோ -
தைவரல் அசைவளி மெய் பாய்ந்து ஊர்தரச்
செய்வுறு பாவை அன்ன என்
மெய் பிறி தாகுதல் அறியாதாரோ!

*- தேரதரன்*

## 356. கன்னியும் கண்வலையும்

*"ஏன் இப்படி யிருக்கிறாய் நண்பா?" என்று கேட்டான் தோழன்.*

*"எல்லாம் அவளால் வந்த வினை!"*

*"எவளால் வந்த வினை?"*

*"அந்த மீனவர் மகளால்."*

*"மீனவர் மகளா?"*

*"ஆம்."*

"அங்கு ஏன் போனாய்?"

"போனேன்."

"உனக்கு வேறு வேலையில்லையா?"

"வேறு வேலையாகத்தான் போனேன்!"

"இந்த வேலையை ஏன் மேற் கொண்டாய்?"

"நான் மேற்கொள்ளவில்லையே! அவள் வலை வீசினாள்!"

"என்ன வலை?"

"கண் வலை."

"அதில் சிக்கி விட்டாயாக்கும்"

"நான் மாத்திரமல்ல. வேறு எவர் சென்றாலும் சிக்குவர்!"

"மெய்யாகவா?"

"கண்ணால் கண்டதைக் கூறுகிறேன். பொய் கூறும் வழக்கமில்லை!"

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை;
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கு இது மாண்டது என்னாது. அதற்பட்டு,
ஆண்டு ஒழிந்தன்றே. மாண் தகை நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாண் முடிப் பாவை
நுண் வலைப் பரதவர் மட மகள்
கண் வலைப் படூஉம் கானலானே.

*- ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தனார்*

## 357. கடல் அவிந்தது காதலர் வருவார்

"பொழுது போயிற்று. கடற்கரையிலே இருந்த மீனவர் பலரும் வீடு திரும்பி விட்டனர். சோலையிலே இருள் படர்ந்து விட்டது. பனை மரத்திலே வந்து அடங்கிய அன்றிலும் தன் குரலை மெதுவாக எழுப்புகிறது. பிரிந்த உன் காதலர் வருவார்" என்கிறாள் தோழி.



கடல் பாடு அவிந்து, கானல் மயங்கி,
துறை நீர் இருங் கழி புல்லென் றன்றே;
மன்றலம் பெண்ணை மடல் சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்; இன்று அவர்
வருவர்கொல் வாழி - தோழி! - நாம் நகப்
புலப்பினும் பிரிவு ஆங்கு அஞ்சித்
தணப்பு அருங் காமம் தண்டியோரே?

*- உலோச்சனார்*

## 358. வம்பும் வாட்டமும்

"சும்மா ஏன் வருந்துகிறாய்? ஊரார் வம்பு பேசப்போகிறார்கள்" என்றாள் தோழி.

"நான் ஒன்றும் வருந்தவில்லை. என்னவோ என்னையறியாமல் உடம்பு வாடுகிறது. அதற்காக ஊரார் ஏதாவது சொன்னால் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அது என்னை என்ன செய்யும்?" என்றாள் அவள்.

பருவத் தேன் நசை இப் பல் பறைத் தொழுதி,
உறவுத் திரை பொருத திணிமணல் அடைகரை,
நனைந்த புன்னை மாச் சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மா நீர்ச் சேர்ப்பற்கு
இரங்கேன் - தோழி! - ஈங்கு என்கொல்? என்று
பிறர்பிறர் அறியக் கூறல்
அமைந்தாங்கு அமைக; அம்பல் அஃது எவனே?

*- உலோச்சன்*

## 359. நெஞ்சும் நினைப்பும்

இரும்புப் பட்டறை ஒன்று. ஏழூருக்கும் பொது. அங்கே அமைக்கப்பட்ட துருத்தி 'புஸ் புஸ்' என்று காற்றூதுகிறது. அதுபோல மூச்சு விட்டு வருந்தினாள் அவள்.

"ஏன் வருந்துகிறாய்?" என்று கேட்டாள் தோழி.

"அதோ பார்! வௌவால்கள் மரங்களை நோக்கிப் பறக்கின்றன. மாலை வந்து விட்டது" என்றாள்.

"வருந்தாதே"

"எனது தனிமைக்காக வருந்தவில்லை நான். ஆனால் வெளியூரிலே அவர் எப்படி வருந்துகிறாரோ என்பது குறித்தே வருந்துகிறேன்" என்றாள்.

தாஅவல் அஞ்சிறை நொப் பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை,
எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்
தமியர் ஆக இனியர் கொல்லோ?
ஏழ் ஊர்ப் பொது வினைக்கு ஓர் ஊர் யாத்த
உலை வாங்கு மிதி தோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும், என் நெஞ்சே.

*- கச்சிப்பேட்டு நன்னாகையார்*

## 360. காண வந்தான் - செய்தாய்!

நெய்தல் நாட்டு இளவல் ஒருவன். ஒருத்தி மீது காதல் கொண்டான். தேர் ஏறி வந்தான். வந்த காரியம் நடைபெறவில்லை; சென்றான். அப்போது தோழி சொல்கிறாள்:

"தேர் ஏறி வந்தான் உனைக் காண்பதற்கு. நீ இணங்கவில்லை. காமம் என்ன? சாமானியப்பட்டதா? பாவம். திரும்பி விட்டான்; வெட்கப்படுகிறேன்; வருந்துகிறேன்."

கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந் தேர்
தெண் கடல் அடைகரைத் தெளிர்மணி ஒலிப்ப,
காண வந்து, நாணப் பெயரும்;
அளிதோ தானே, காமம்;
விளிவதுமன்ற; நோகோ யானே.

*- நெய்தற் கார்க்கியனார்*

## 361. ஆசையும் பசலையும்

நெய்தல் நாட்டு இளம் செல்வன் ஒருவன். அவள் மீது காதல் கொண்டான். 'வருவேன்' என்று சொல்லிப் பிரிந்தான். கடல் ஓரமாகச் சென்றது அவனது வெண்தேர். அலைகள் எழுப்பிய துவலையால் நனைந்து சென்றது. அது எப்படியிருந்தது? அன்னம் சிறகு விரித்துப் பறப்பது போல் இருந்தது. அவளது மேனியிலே பசலை படர்ந்தது.



"இதோ பார்! பசலை படர்ந்து விட்டது. இது எப்படி அறிந்ததோ?" என்றாள் அவள்.

மின்னுச் செய் கருவிய பெயல் மழை தூங்க
விசும்பு ஆடு அன்னம் பறை நிவந்தாங்கு,
பொலம்படைப் பொலிந்த வெண் தேர் ஏறி,
கலங்கு கடற் துவலை ஆறி நனைப்ப,
இளிச் சென்றனனே, இடு மணற் சேர்ப்பன்;
யாங்கு அறிந்தன்று கொல் - தோழி! - என்
தேம் கமழ் திரு நுதல் ஊர்தரும் பசப்பே?

*- செல்வன் உலோச்சனார்*

## 362. மாரியும் மனக் கவலையும்

மாரிக் காலம் வந்தது. "கால மாரி" என்றாள் அவள்.

"இல்லை. வம்பு மாரி" என்றாள் தோழி.

"போடி போ! மலையிலே இடி இடிக்கிறது; முழங்குகிறது. கலங்கலாக நீர் வருகிறது; மலர்களைக் கொண்டு வருகிறது. இதைப் போய் வம்பு மாரி என்கிறாயே! இது கால மாரிதான். மாரிக்காலம் வருமுன் வருவேன் என்று சொன்னவர் வரவில்லை! மறந்தே போகார்? நான்தான் மறவாதிருக்கிறேன்" என்றாள் அவள்.

பெய்த குன்றத்துப் பூநாறு தண் கலுழ்
மீ மிசைத் தாஅய், வீசும் வளி கலந்து,
இழி தரும் புனலும்; வாரார் - தோழி!
மறந்தோர் மன்ற; மறவாம் நாமே -
கால மாரி மாலை மா மலை
இன் இசை உருமினம் முரலும்
முன் வரல் ஏமம் செய்து அகன்றோரே.

*- ஔவையார்*

## 363. கடல் செல்வரும் காதல் செல்வியும்

"பசலை வந்து படர்ந்து விட்டது என் மேனியிலே. காதலோ அவரைப் பின் பற்றிச் சென்றுவிட்டது. எனது அடக்கமோ தொலைவில் போய் விட்டது. 'அவர் உள்ள இடம் போவோம் வா' என்று அழைக்கிறது அறிவு. இதுவே சரியான சமயம். தாழை மலர் நிரம்பிய கடல் செல்வர் என்னைக் கடி மணம் புரிதற்கு" என்றாள் அவள், தோழியிடம்.

சிறிது தொலைவில் நின்ற அவளது காதலன் காதிலே விழுந்தது இது.

பயப்பு என் மேனியதுவே; நயப்பு அவர்
நார் இல் நெஞ்சத்து ஆர் இடையதுவே;
செறிவும் சேண் இகந்தன்றே; அறிவே,
'ஆங்கண் செல்கம் எழுக' என, ஈங்கே
வல்லா கூறியிருக்கும்; அள் இலைத்
தடவு நிலைத் தாழைச் சேர்ப்பற்கு
இடம்மன் - தோழி! - எந் நீரிரோ? எனினே.

*- வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்*

## 364. 'வருவாரானால் வரச்சொல்லு'

மீனவர் குல மங்கை; மீனவன் ஒருவன் மீது காதல் கொண்டாள். அவனும் அவளைக் காதலித்தான். களவு நடக்கிறது. இப்படிப் பல நாள். ஒரு சமயம் என்ன ஆயிற்று?

அவளது தகப்பனார் வீட்டிலே தங்கிவிட்டார். மீன் பிடிக்கப் போகவில்லை. காரணம் என்ன? சுறாமீன் எறிந்தது. மார்பிலே காயம். தகப்பனாருக்கு உதவி செய்வதற்காகத் தாயாரும் வீட்டிலே தங்கிவிட்டாள். அப்போது அவளது காதலன் வந்தான். சமயம் சரியில்லை. போய் விட்டான். மறுநாள் வந்தான். அப்போதும் அப்படியே. இப்படியாகத் தொடர்ந்து சில நாட்கள்.

தகப்பனாருக்கு உடம்பு சரியாய் விட்டது. வலையை எடுத்துக் கொண்டார். மீன் பிடிக்கப் போய்விட்டார். தாயும் உப்பை எடுத்துக் கொண்டாள். விற்றுவரப் போய்விட்டாள்.



இந்த நேரத்திலே வந்தான் காதலன். இவ்வளவு நாள் வந்து ஏமாந்தான் அல்லவா? இன்றும் எங்கே அந்த எண்ணத்தில் போய் விடுகிறானோ என்ற பயம் அவளுக்கு. "வா" என்று அழைத்தலும் கூடாது. ஆனால் அவனுக்கு விஷயம் தெரிய வேண்டும்.

"அப்பா மீன் பிடிக்கப் போய்விட்டார். அம்மா உப்பு விற்கப் போனாள். வீட்டிலே எவருமில்லை. இப்போது வந்தால் எளிது. இதை அவருக்குச் சொல்வார் இல்லையே!" என்றாள்.

சேயாறு சென்று, துனைபரி அசாவாது,
உசாவுநர் பெறினே நன்றுமன் தில்ல -
வயச் சுறா எறிந்த புண் தணிந்து , எந்தையும்
நீல் நிறப் பெருங் கடல் புக்கனன்; யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீ இய
உப்பு விளை கழனிற் சென்றனள்; அதனால்,
பனி இரும் பரப்பின் சேர்ப்பற்கு,
'இனி வரின் எளியள்' என்னும் தூதே.

*- கல்லாடனார்*

## 365. துறைவன் தந்த துன்பம்

"அடியே! அம்மாதான் முருகனுக்குப் பூசை செய்தாள். உனது துன்பத்தின் காரணத்தைக் கண்டு கொண்டாள். இனி மேல் விரைவிலே கலியாணம் நடக்கும். அப்படியிருக்க ஏன் இன்னமும் வருந்துகிறாய்?" என்றாள் தோழி.

"அம்மா என்ன கண்டாள்?"

"என்ன கண்டாளா? மேல் காற்றுக் கொண்டு வந்து மணலைக் கொட்டுகிறது; பனைமரத்தின் வேரை மூடுகிறது. அத்தகைய துறைவனே உனக்குத் துன்பம் தந்தவன் என்று கண்டு கொண்டாள்"

"கண்டு கொண்டாளா?"

"ஆம்!"

அது வரல் அன்மையோ அரிதே; அவன் மார்பு
உறுக என்ற நாளே குறுகி,
ஈங்கு ஆகின்றே - தோழி! - கானல்
ஆடு அரை புதையக் கோடை இட்ட
அடும்பு இவர் மணற் கோடு ஊர, நெடும் பனை
குறிய ஆகும் துறைவனைப்
பெரிய கூறி, யாய் அறிந்தினளே.

*- உலோச்சனார்*

## 366. தேர் ஏறி வந்தான்!

*நெய்தல் நிலம். இரவு நேரம். நள்ளிரவு. யானையின் காதுபோல இலைகள் படர்ந்திருக்கின்றன. கழியிலே நீரைத் துழாவித் துழாவி இரை தேடுகிறது கடல் காகம், அமைதியான அந்த நேரத்திலே ஒரு தேர் வருகிறது. யார் அவன்? ஓர் இளைஞன். தன் காதலியைத் தேடி வருகிறான். அவளும் வருகிறாள். ஆனந்தம். தேரில் வந்தவன் திரும்பிப் போகிறான். இப்படிச் சில நாட்கள் சென்றன. ஒருநாள் பகல் நேரம். அவன் அருகாமையில் நிற்கிறான். அப்போது தோழி சொல்கிறாள்:*

*"ஏதடி இரவு நேரத்திலே யாரோ தேரில் வருகிறானாமே! என்று கூறித் தாய் துளைக்கிறாள். என் போன்ற இளம் பெண்கள் இன்னும் எவ்வளவோ பேர் இந்த ஊரில் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்படியா கேட்கிறாள் அவர்களது தாய்?"*

பெருங் கடற் கரையது சிறு வெண் காக்கை
களிற்றுச் செவி அன்ன பாசடை மயக்கி,
பனிக் கழி துழவும் பானாள், தனித்து ஓர்
தேர் வந்து பெயர்ந்தது என்ப. அதற்கொண்டு,
ஓரும் அலைக்கும் அன்னை; பிறரும்
பின்னு விடு கதுப்பின் மின் இழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே;
அலையாத் தாயரொடு நற்பாலோரே.

*- கபிலர்*



## 367. வம்பு குறித்து வருந்தினாள்.

*கடற் கரையிலே தாழை அதிகம். பார்ப்பதற்கு வேலி யிட்டது போல் இருக்கும். அத்தகைய கடல் நாட்டு இளவல் ஒருவன். அவள் மீது காதல் கொண்டான். சிலநாள் இன்பமாக இருந்தான். பிறகு பிரிந்தான். வரவில்லை. வருந்துகிறாள்.*

*"எதற்காக வருந்துகிறாய்?" என்றாள் தோழி. "அவர் பிரிவையோ, எனது நலனை அழித்ததையோ எண்ணி வருந்த வில்லையே!" என்றாள் அவள்.*

*"பின் எதை எண்ணி வருந்துகிறாய்?"*

*"விஷயம் வெளிப்பட்டுப் போனால் ஊரார் வம்பு அளப்பார்களே. அதை எண்ணி வருந்துகிறேன்."*

கடல் அம் கானல் ஆயம் ஆய்ந்த என்
நலம் இழந்ததனினும், நனி இன்னாதே
வாள் போல் வாய கொழு மடற் தாழை
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்து வெளிப்படினே.

*- மாலைமாறனார்*

## 368. நினைவும் நித்திரையும்

*இரவு நேரம். தூக்கம் வரவில்லை அவளுக்கு. பெருமூச்சு விடுகிறாள்; கண்ணீர் வடிக்கிறாள்.*

*"சும்மா ஏன் அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறாய்? பேசாமல் தூங்கு" என்றாள் தோழி.*

*"ஆமாம்! ஆமாம்! மான் குளம்பு போன்ற இலையும், குதிரையின் கழுத்து மணி போன்ற மலரும் உடைய அடும்பு மலர் மிக்க கடல் நாடனை நான் நினைத்தேன். அதனால் தூக்கம் வரவில்லை. இனி நினையாதிருக்கிறேன். தூக்கம் வரட்டும்" என்றாள்.*

*நினையாதிருக்கவும் இயலாது; தூக்கமும் வராது என்பது குறிப்பு.*

மான் அடி அன்ன கவட்டிலை அடும்பின்
தார் மணி அன்ன ஒண் பூக் கொழுதி,
ஒண் தொடி மகளிர் வண்டல் அயரும்
புள் இமிழ் பெருங் கடற் சேர்ப்பனை
உள்ளேன் - தோழி! - படீஇயர், என் கண்ணே.

*- நம்பி குட்டுவனார்*

### 369. அழகைத் தா, அப்பால் போ!

"போய் வருகிறேன்" என்றான் அவன்.

"எங்கே?" என்றாள் தோழி.

"பொருள் தேட"

"பிரிவது நிச்சயமா?"

"ஆம்."

"அப்படியானால் இவளை நீ இழந்தவனே. இவளை இழப்பதற்கு விருப்பமா? விருப்பமானால், ஒன்று சொல்வேன். இவளிடமிருந்து நீ அனுபவித்தாயே. அந்த அழகைக் கொடுத்து விட்டுப் போ."

விட்டென விடுக்கும் நாள் வருக; அது நீ
நொந்தனை ஆயின், தந்தனை சென்மோ!
குன்றத்தன்ன குவவு மணல் அடைகரை
நின்ற புன்னை நிலம் தோய் படு சினை
வம்ப நாரை சேக்கும்
தண் கடற் சேர்ப்ப! - நீ உண்ட என் நலனே.

*- நரிவெரூஉத்தலையார்*

### 370. வராத காதலன்

"என்னவோ தெரியவில்லை. முன்பு அடிக்கடி வந்து கொண்டிருந்தான். இப்போது வருவதில்லை" என்றாள் தோழி.

"ஏன்?" என்று கேட்டாள் அவள்.

"ஒரு கால் என்மீது வருத்தமாக இருக்கலாம்"



"உன்மீது வருத்தம் ஏன்?"

"நான் சில வார்த்தைகள் சொன்னேன்."

"ஏன் சொன்னாய்?"

"என்னவோ அம்மா! முட்டாள் தனம்! உரிமையுடன் சொன்னேன்."

"சரிதான். அதான் வரவில்லை."

"அப்படி ஒன்றும் வராமல் இருக்க மாட்டானே!"

அவன்மீது அவளுக்கு இரக்கம் ஏற்படுவதற்காக இப்படிச் சொன்னாள் தோழி.

அம்ம வாழி, தோழி! கொண்கன்
தான் அது துணிகுவன் அல்லன்; யான் என்
பேதைமையால் பெருந் தகை கெழுமி,
நோதகச் செய்தது ஒன்று உடையேன் கொல்லோ?
வயச் சுறா வழங்கு நீர் அத்தம்
தவச் சில் நாளினன் வரவு அறியானே.

*- அறிவுடைநம்பி*

### 371. அங்கும் உண்டு - இங்கும் உண்டு

கடல் ஓரமாக உள்ளதொரு சிறுகுடி. தாழை மடல் விரியும் சோலைகள் நிரம்பிய இடம். அந்த ஊரிலே ஒரு பெண். கடற்கரையிலே உள்ள மற்றோர் ஊரினன் ஒருவன் மீது காதல் கொண்டாள். அவன் வசிக்குமிடம் சிறிது தூரம்.

"அவ்வளவு தூரத்தில் இருக்கிறானே உன் காதலன். நீ எப்படி ஆற்றியிருக்கிறாய்?" என்றாள் தோழி.

"அதுவா! அவரது ஊர் தூரம். ஆனால் எப்போதும் என் நெஞ்சில் இருக்கிறார். அவர் ஊரிலே மோதும் அலை நீர் எனது ஊரிலும் வந்து மோதுகிறது. அது கண்டு மனம் ஆறியிருந்தேன்; தேறியிருந்தேன்."

வீழ் தாழ் தாழை ஊழுறு கொழு முகை,
குருகு உளர் இறகின், விரிபு தோடு அவிழும்
கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்,
திரை வந்து பெயரும்என்ப - நத் துறந்து
நெடுஞ் சேண் நாட்டார் ஆயினும்,
நெஞ்சிற்கு அணியரோ, தண் கடல் நாட்டே.

*- செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனார்*

## 372. அவன் வந்த சுவடு

*இரவு முழுதும் விழித்திருந்தாள்; எழுந்து போய்ப் பார்த்து வந்தாள். காதலன் வந்திருக்கிறானோ என்று. ஆனால் இருவரும் ஏமாற நேர்ந்தது.*

*மறுநாள் வந்தான் அவன். அவள் சீறினாள். ஏன்? இரவு வரவில்லை என்பதற்காக.*

*"இதோ பார். தேர்ச் சக்கரம் பதிந்த சுவடு! நெய்தல் மலர்கள் நசுங்கியிருக்கின்றன. இரவு உன் காதலன் வந்தான்" என்றாள் தோழி.*

பூண் வளைந்தன்ன பொலஞ் சூட்டு நேமி
வாள் முகம் துமிப்ப வள் இதழ் குறைந்த
கூழை நெய்தலும் உடைத்து, இவண்
தேரோன் போகிய கானலானே.

*- ஓத ஞானியார்*

## 373. சேர்ப்பனுடன் சேர்வதன்முன்

*"தாமரைக் கண்கள்! வேய் போன்ற தோள்! பிறை நுதல்! என்று சொல்லும்படியாக அவ்வளவு அழகுடனிருந்தேன் நான். அது ஒரு காலம். அது எப்போ? நாரை போல் தாழை மலரும் சேர்ப்பனுடன் சேருவதன்முன். அந்நிலை இப்போது இல்லை. என் அழகு என்னிடமில்லை" என்றாள் அவள்.*



பூவொடு புரையும் கண்ணும், வேய் என
விறல் வனப்பு எய்திய தோளும், பிறை என
மதி மயக்குறூஉம் நுதலும், நன்றும்
நல்லமன்; வாழி - தோழி! - அல்கலும்
தயங்கு திரை பொருத தாழை வெண் பூக்
குருகு என மலரும் பெருந் துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகா அ ஊங்கே.

*- மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார்*

## 374. காவலும் காதலும்

*காதலன் ஒருவன். அவளைப் பிரியாமல் சுற்றிக் கொண்டேயிருந்தான்; கண்டு விட்டாள் தாய்; கண்டிக்கத் தொடங்கினாள் மகளை வீட்டிலே அடைத்து வைத்தாள். வீட்டுப் பக்கத்திலேயும் வந்து நின்றான் அவன். அப்போது சொல்கிறாள் அவள்:*

*"கடலுக்கு வந்து நீராடி விளையாடினார். சோலையிலே வந்து மகிழ்ந்தார். மகளிர்களுடன் குரவைக் கூத்தாடும் போது கலந்து கொண்டார். அயலார்போல வந்து போய்க் கொண்டிருந்தார். வம்புக்கு இடமுண்டாயிற்று. தாய் கண்டுவிட்டாள். வீட்டுக் குள்ளே அடைத்து விட்டாள். இது அவராகச் செய்த வினை தானே. சரி. இனியுள்ள பாக்கியையும் அவரே செய்து விடட்டுமே. இடைவிடாது இருக்கும் வகை தேடட்டும்!"*

கடல் உடன் ஆடியும், கானல் அல்கியும்,
தொடலை ஆயமொடு தழூஉ அணி அயர்ந்தும்,
நொதுமலர் போலக் கதுமென வந்து,
முயங்கினன் செலினே, அலர்ந்தன்று மன்னே;
துத்திப் பாந்தள் பைத்து அகல் அல்குல்
திருந்துஇழைத் துயல்வுக் கோட்டு அசைத்த பசுங் குழைத்
தழையினும், உழையின் போகான்;
தான் தந்தனன், யாய் காத்து ஓம்பல்லே.

*- அஞ்சில் ஆந்தையார்*

## 375. மோதும் நுரையும் போகும் உயிரும்

*"வருந்தாதே! பொறு" என்றாள் தோழி.*

*"வருந்தாதே! வருந்தாதே! பொறு! பொறு என்கின்றீர்களே. காதல் என்ன பொறுக்கக் கூடியதா? அதன் தன்மை அறியாது பேசுகிறீர்களே! நீரிலே தோன்றிய நுரை கல்லிலே மோதி மோதிச் சிறிது சிறிதாகத் தேய்ந்து அழிவது போல் என் உயிர் போகிறதே!" என்றாள் அவள்.*

காமம் தாங்குமதி என்போர்தாம் அஃது
அறியலர்கொல்லோ? அனை மதுகையர் கொல்?
யாம் எம் காதலர் காணேம் ஆயின்,
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்
கல் பொரு சிறு நுரை போல,
மெல்லமெல்ல இல்லாகுதுமே. ***- கல்பொருசிறுநுரையார்***

## 376. காதல் எச்சரிக்கை

*காதலன் வந்து நிற்கிறான் சிறிது தூரத்திலே. கண்டு விட்டாள் அவள். தனது மனத் துயரை வெளியே கொட்ட வேண்டும். அதை அவனும் அறியவேண்டும். இதுவே அவளது ஆசை. எனவே தோழியிடத்திலே சொல்கிறவள் போல் சொல்கிறாள். ஏன்? அவன் அறிய வேண்டும் என்பதற்காக. என்ன சொல்கிறாள்?*

*"அவரைக் கண்டுவிட்டால் ஏதாவது சொல்லிவிடப் போகிறாய். நான் வருந்தி மெலிகிறேன் என்று. 'இப்படி வருந்த விடலாமா' என்று இடித்துக் கேட்டுவிடாதே. எச்சரிக்கை!"*

அம்ம வாழி! தோழி! - புன்னை
அலங்குசினை இருந்த அம் சிறை நாரை
உறுகழிச் சிறு மீன் முனையின், செறுவில்
கள் நாறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணம் துறைவற் காணின் முன் நின்று,
கடிய கழறல் ஓம்புமதி - தொடியோள்
இன்னள் ஆகத் துறத்தல்
நும்மின் தகுமோ? என்றனை துணிந்தே. ***- பெரும் பாக்கனார்***



## 377. மீனவர் குலமங்கை

*கடல் நாடு. மீனவர் படகுகளில் ஏறிச் செல்கின்றனர் மீன் பிடிக்க; சுறா மீன் பிடிக்க. எறி உளி எடுத்துச் செல்கின்றனர்; கூர்மையான உளி அது. எறிந்த உடனே சுறா மீனைக் கொன்றுவிடும் உளி. அவர் தம் ஆரவாரம் கண்டு அன்னங்கள் பயந்து ஓடுகின்றன.*

*இந்த மீனவர் குலத் தோன்றல் ஒருவன்; இளைஞன். கட்டழகி ஒருத்தி மீது காதல் கொண்டான்; கயல் விழியாள் அவளும் காதலித்தாள். சோலையிலே இன்புற்றனர். அப்பால் பிரிவு! அவள் வருந்தினாள்.*

*"நட்பு என்று எண்ணினேன். அது பகை ஆயிற்றே! அன்பு என்று எண்ணினேன். அது துன்பமாயிற்றே" என்றாள்.*

கொல்வினைப் பொலிந்த கூர் வாய் எறி உளி
முகம் பட மடுத்த முளிவெதிர் நோன் காழ்
தாங்கு அரு நீர்ச் சுரத்து எறிந்து, வாங்கு விசைக்
கொடுந் திமிற் பரதவர் கோட்டு மீன் எறிய,
நெடுங் கரை இருந்த குறுங் கால் அன்னத்து
வெண் தோடு இரியும் வீ ததை கானல்,
கைதை அம் தண் புனற் சேர்ப்பனொடு
செய்தனெம்மன்ற, ஓர் பகை தரு நட்பே.

***- கணக்காயன் தத்தனார்***

## 378. வளையை மாற்றலாம் பசலையை மாற்றலாமோ?

*நெய்தல் நிலம். கழியிலே மீன் கொத்தி உண்ட நாரைகள் தாழை நிழலில் தூங்குகின்றன. அலை மோதுவது தாலாட்டுப் போலிருக்கிறது.*

*இத்தகைய நெய்தல் நிலத்திலே ஒரு சோலை. புன்னை மரச் சோலை. அச்சோலையிலே தோழியருடன் நண்டு பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறாள் அவள். மீனவர் மகள். கண்டான் ஒரு காளை. கட்டழகி மீது காதல் கொண்டான். இருவரும் இன்பம் துய்த்தனர். பிறகு அவன் சென்றான். அவனை எண்ணினாள் அவள்; ஏங்கினாள். தோள் நெகிழ்ந்தது. வளைகள் கழன்றன.*

வேறு சிறிய வளைகளை அணிந்தாள். நெகிழ்வை மறைத்தாள். பசலை படர்ந்தது மேனியிலே.

"இதை எப்படி மறைப்பது? முடியாது. தாய் கண்டு கொள்வாள். வீட்டிலே காவல் போட்டு விடுவாள்" என்கிறாள் தோழி. அதாவது என்ன? விரைவிலே வந்து மணம் புரிய வேண்டும் என்பது கருத்து.

கழி தேர்ந்து அசைஇய கருங் கால் வெண் குருகு
அடைகரைத் தாழைக் குழீஇ, பெருங் கடல்
உடைதிரை ஒலியின் துஞ்சும் துறைவ!
தொல் நிலை நெகிழ்ந்த வளையல், ஈங்குப்
பசந்தனன்மன் என் தோழி - என்னொடும்
இன் இணர்ப் புன்னை அம் புகர் நிழல்
பொன் வரி அலவன் ஆட்டிய ஞான்றே.

- அம்மூவனார்

## 379. தோள் நெகிழ்வது ஏன்? தோழி!

காதலன் வந்து நிற்கிறான் தொலைவிலே. அவனது காது கேட்கச் சொல்கிறாள்:

"அலைமோதும் கடற்கரையிலே உள்ள சோலையிலே முதன் முதலாக அவரைக் கண்டேன். காதல் கொண்டேன். அடைந்தேன்; அணைத்தேன்; இன்புற்றேன். இன் மொழி கேட்டேன். கேட்ட செவிகள் வாளாயிருக்கின்றன. கண்ட கண்கள் வாளாயிருக்கின்றன. ஆனால் அணைந்த தோள் மாத்திரம் இப்படிச் சோர்ந்து போகின்றதே! ஏன்?"

இது மற்று எவனோ - தோழி! - முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள் இமிழ் கானல்,
இணர் வீழ் புன்னை எக்கர் நீழல்,
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டனமன், எம் கண்ணே; அவன் சொல்
கேட்டனமன் எம் செவியே; மற்று - அவன்
மணப்பின் மாண்நலம் எய்தி,
தணப்பின் ஞெகிழ்ப, எம் தட மென் தோளே?

- வெண்மணிப் பூதியார்



## 380. மறந்த நெஞ்சு

"இன்று அவன் வரட்டும். சிரித்துப் பேசுகிறேனா பார். முகம் கொடுத்துப் பேசப் போவதில்லை. கடு கடுப்புடனிருக்கப் போகிறேன்" என்று உறுதி செய்து கொண்டாள் அவள். காரணம்? காதலன் மீது கோபம். கலியாணம் செய்யவில்லை. சும்மா வருகிறான்; போகிறான். எவ்வளவு நாள்? இதுதான் கோபம் அவளுக்கு.

மனதைத் திடமாக்கிக் கொண்டாள். முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டாள்.

அவன் வந்தான்.

"கண்ணே!" என்றான்; கட்டி அணைத்தான்.

"ஆருயிரே!" என்றாள். ஆனந்தம் கொண்டாள்; மகிழ்ச்சி.

சிறிது நேரம் முன்பு அவள் கொண்ட மன உறுதி எங்கே?

"பாழும் நெஞ்சே! உனக்கு எத்தனை முறை சொல்லுவேன்! அவனைக் கண்டதும் மறந்து போகிறாயே?" என்று கூறினாள் அவள்.

மெல்லிய, இனிய, மேவரு தகுந,
இவை மொழியாம் எனச் சொல்லினும், அவை நீ
மறத்தியோ வாழி - என் நெஞ்சே! - பல உடன்
காமர் மா அத்துத் தாது அமர் பூவின்,
வண்டு வீழ்பு அயரும் கானல்
தெண் கடல் சேர்ப்பனைக் கண்டபின்னே?

- அம்மூவனார்

## 381. சொன்னால் என்னவாம்?

"ஏன் இப்படி வருந்துகிறாய்?" என்றாள் தோழி.

"மாலை வந்து விட்டது. பொழுதும் மயங்கி விட்டது. பறவைகள் ஒலிக்கின்றன. மலர்கள் குவிந்தன. கடற்கரையிலே உள்ள சோலையும் தனிமை பெற்றது. நானும் தனிமை பெற்றேன். வருந்துகிறேன்."

"வருந்தாதே! வருந்தாதே! என்று என்னிடம் சொல் கிறார்களே தவிர, 'வருந்துகிறாள்' என்று அவரிடம் போய்ச் சொல்வார் எவருமில்லையே" என்றாள் அவள்.

புள்ளும் புலம்பின; பூவும் கூம்பின;
கானலும் புலம்பு நனி உடைத்தே; வானமும்,
நம்மே போலும் மம்மர்த்து ஆகி,
எல்லை கழியப் புல்லென் றன்றே;
இன்னும் உளனே - தோழி! - இந் நிலை
தண்ணிய கமழும் ஞாழல்
தண்ணம் துறைவற்கு உரைக்குநர்ப் பெறினே.

- *பெருங்கண்ணனார்*

## 382. வம்பு ஓயுமா?

"ஊரிலே தலைகாட்ட முடியவில்லை. ஒரே வம்பு! அவருடைய தேரை நான் பார்க்கிறேனோ இல்லையோ? ஆனால் சோலையிலே மலர் கொய்யும் தோழியர் எல்லாரும் பார்க்கின்றனர். பாகன் தடுத்து நிறுத்தவும் நில்லாது ஓடுகிறது. தேர். அப்புறம் எப்படி வம்பு பேசாதிருப்பார்கள்?" என்றாள் அவள். காதலன் காதிலே கேட்க, கருத்தென்ன? கலியாணம் செய்யவேண்டும் என்பதே.

அவர் யாங்கு ஒழிவ - தோழி! பெருங் கடல்
புலவு நாறு அகன் துறை வலவன் தாங்கவும்,
நில்லாது கழிந்த கல்லென் கடுந் தேர்
யான் கண்டன்றோ இலனே; பானாள்
ஓங்கல் வெண் மணல் தாழ்ந்த புன்னைத்
தாது சேர் நிகர்மலர் கொய்யும்
ஆயம் எல்லாம் உடன் கண்டன்றே?

- *சேந்தன் கீரனார்*

## 383. முடிச்சு அவிழ்க்க முடியாது!

களவு இன்பம். நடந்து கொண்டே யிருக்கிறது. எவ்வளவு நாள்? தோழிக்கு அலுப்பு!

"கொஞ்சம்கூட இரக்கமில்லையே அவருக்கு" என்றாள்.

கேட்டாள் அவள். கோபம் வந்துவிட்டது. காதலன் அல்லவா?



"இரக்கமுள்ளவர்தானடி. சும்மா சொல்லாதே. காகம் கழியிலே மீன் உண்டு, பொழிலிலே தங்குவதுபோல களவிலே இன்பங்கண்டு மனையிலே இல்லறம் செய்வார். அவருடன் போட்ட முடிச்சு முடிந்த முடிச்சு; நல்ல முடிச்சு; அவிழ்க்க முடியாதது." என்றாள்.

பெருங் கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்து நீர் இருங் கழி இரை தேர்ந்து உண்டு,
பூக் கமழ் பொதும்பர்ச் சேர்க்கும் துறைவனொடு
யாத்தேம்; யாத்தன்று நட்பே;
அவிழ்த்தற்கு அரிது; அது முடிந்து அமைந்தன்றே!

## 384. நண்டும் நங்கையும்!

"வளைகள் நெகிழ்கின்றன. உடம்பிலே சோர்வுகண்டது. எனது வருத்தத்தைத் தாய் அறிந்தால் என்னடி செய்வேன்? சொன்னபடி வரவில்லையே அவர். கடற்கரையில் பெண்கள் நண்டு பிடித்து விளையாடுகிறார்கள். ஓடுகிறது நண்டு. அப்போது அலை வந்து அதைக் கொண்டு செல்கிறது. மகளிரிடமிருந்து காக்கிறது. அந்த மாதிரி விரைவில் வந்து எனை மணந்து காக்க வேண்டாமா? துன்பம் போக்க வேண்டாமோ? வரவில்லையே!"

ஆய் வளை ஞெகிழவும், அயர்வு மெய்நிறுப்பவும்,
நோய் மலி வருத்தம் அன்னை அறியின்,
உளனோ வாழி - தோழி! - விளியாது,
உரவுக் கடல் பொருத விரவு மணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,
ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி
ஓங்கு வரல் விரிதிரை களையும்
துறைவன் சொல்லோ பிற ஆயினவே?

- *தும்பிசேர்கீரனார்*

## 385. இனி அவன் விருப்பம்

"நெய்தல் நிலம். சுறா மீன்கள் மிகுதியாக உள்ள பகுதி. புன்னையும் ஞாழலும் மலர் பரவி வெறியாடும் களம்போல் தோற்றமளிக்கச் செய்கின்றன. இத்தகைய இயற்கை வளம் நிரம்பிய இடத்தில் வாழும் செல்வன், ஒருத்தி மீது காதல்

கொண்டான். இன்பம் துய்த்தான். "பிரியேன்" என்று வாக்கு அளித்தான். நாட்கள் பல சென்றன. ஒரு நாள் அவள் கூறினாள்:

"நான் வருந்துகிறேன். மெலிந்து போகிறேன். இனி, மணப்பதும் மணவாதிருப்பதும் அவன் விருப்பம். 'பிரியேன்' என்றான். நம்பினேன். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பு அவனுடையது" என்றாள் அவள்.

எறி சுறாக் கலித்த இலங்கு நீர்ப் பரப்பின்,
நறு வீ ஞாழலொடு புன்னை தா அய்,
வெறி அயர்களத்தினின் தோன்றும் துறைவன்
குறியான் ஆயினும், குறிப்பினும், பிறிது ஒன்று
அறியாற்கு உரைப்பலோ யானே? எய்த்த இப்
பணை எழில் மென் தோள் அணைஇய அந் நாள்
பிழையா வஞ்சினம் செய்த
களவனும், கடவனும், புணைவனும், தானே.

*- அம்மூவனார்*

## 386. வலை வீச்சும் வம்புப் பேச்சும்

கடல் நாடு. கடலிலே சென்று பரதவர் கொண்டு வந்த மீனை உலர்த்தியிருக்கின்றனர் மணல் வெளியிலே. எங்கும் ஒரே மீன் நாற்றம். நாறினால் என்ன? செல்வம் அதுதானே. கடல் தந்த செல்வம். அத்தகைய செல்வன் ஒருத்தியின்பால் காதல் கொண்டான். இன்பமாகப் பொழுது போயிற்று. ஊரிலே பரவலாயிற்று. அப்போது அவள் கூறுகிறாள்:

"அவருடன் ஒருநாள் கூட இன்பமாக இருக்கவில்லை. அதற்குள்ளேயே இந்த ஊரார் வம்பு அளக்கின்றனர். அப்பா! கொடியவர். கடற்கரையிலே மீன் நாற்றம் பரவியதுபோல் வம்பு பரவுகிறதே" என்றாள்.

பெருங் கடற் பரதவர் கோள் மீன் உணங்கலின்
இருங் கழிக் கொண்ட இறவின் வாடலொடு,
நிலவு நிற வெண் மணல் புலவ, பலவுடன்,
எக்கர்தொறும் பரிக்கும் துறைவனொடு, ஒருநாள்,



நக்கதோர் பழியும் இலமே; போது அவிழ்
பொன் இணர் மரீ இய புள் இமிழ் பொங்கர்ப்
புன்னை அம் சேரி இவ் ஊர்
கொன் அலர் தூற்றும், தன் கொடுமையானே.

*- தும்பிசேர்கீரனார்*

## 387. காழியும் காதலும்

நெய்தல் நிலத்திலே பெரியதொரு உப்பங்கழி. கழியின் இருமருங்கும் சிறு குடிகள்.

அக்கரையில் இருக்கிறான் காதலன்; இக்கரையில் இருக்கிறாள் காதலி. இரவிலே கழியிலே இறங்கி நீந்தி வருகிறான் அவன்.

எதற்கு? காதலியிடம் இன்பம் துய்ப்பதற்கு. கழியோ சாதாரணமானது அன்று. பெரிய பெரிய முதலைகள் வசிப்பது. இந்நிலையில் சொல்கிறாள் தோழி:

"ஒருத்திக்கு இரட்டைப் பிள்ளைகள். இரண்டும் நஞ்சுண்டன. தாய் என்ன செய்வாள்? அந்த மாதிரி அவதிப்படுகிறேன்." என்றாள்.

"ஏன்?" என்று கேட்டான் அவன்.

"நீ வந்தாலும் கஷ்டம்; வராவிட்டாலும் கஷ்டம்"

"அப்படி என்ன?"

"ஆமாம். அந்தக் கழியிலே இறங்கி நீந்தி வருகிறாய். ஆளைக் கொல்லும் முதலை உள்ளது அக்கழியில். முதலையால் உனக்கு ஆபத்து வருமோ? என்ற பயம். வராதே என்று சொல்லி விடலாம். சொன்னால் இவள் உன்னைக் காணாது கலங்குகிறாள். ஆக உங்கள் இருவர் துன்பமும் தீர்க்கும் ஒரு மருந்து காண ஆசைப்படுகிறேன்"

"மருந்து எது?"

"கலியாணம் தான்!"

கொடுந் தாள் முதலைக் கோள் வல் ஏற்றை
வழி வழக்கு அறுக்கும் கானல் அம் பெருந் துறை,
இன மீன் இருங் கழி நீந்தி, நீ நின்
நயன் உடைமையின் வருதி; இவள் தன்
மடன் உடைமையின் உவக்கும்! யான் அது,
கவை மக நஞ்சு உண்டா அங்கு,
அஞ்சுவல் - பெரும! - என் நெஞ்சத்தானே.

- *கவைமகனார்*

## 388. ‘போ’ என்றாள்; போய்விட்டான்!

*“போகட்டுமா? போகட்டுமா?” என்று கேட்டுக் கொண்டே இருந்தான் காதலன். அடிக்கடி கேட்டான். அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.*

*“போ போ” என்றாள்.*

*“சரி” என்றான்; போய் விட்டான். ‘வருவான் வருவான்’ என்று பார்த்தாள். வரவில்லை; வருந்துகிறாள்.*

*“போகிறேன் போகிறேன் என்று சும்மா சொல்கிறான். இவன் எங்கே போகப் போகிறான் என்று நினைத்தேன். ‘போ’ என்றேன். போய்விட்டானே. எங்கிருக்கிறானோ தெரியவில்லையே!” என்று கண்ணீர் விட்டாள். கண்ணீர் ஆறாகப் பெருகியது. மார்பு குளமாயிற்று.*

‘சேறும் சேறும்’ என்றலின் , பண்டைத் தம்
மாயச் செலவாச் செத்து, ‘மருங்கு அற்று
மன்னிக் கழிக’ என்றேனே; அன்னோ!
ஆசு ஆகு எந்தை யாண்டு உளன்கொல்லோ?
கருங் கால் வெண் குருகு மேயும்
பெருங் குளம் ஆயிற்று, என் இடைமுலை நிறைந்தே.

- *நன்னாகையார்*



## 389. ஒருநாளும் சகியேன்!

*கடற்கரையிலே உள்ள சோலையிலே அவளைக் கண்டான். இன்புற்றான்; மகிழ்ந்தான். பின் பல நாள் அப்படி. சில நாள் வறிதே கழிவதும் உண்டு. அந்நாளில் வருந்துகிறாள் அவள்:*

*“ஒரு நாள் பார்க்காவிட்டாலும் தாங்க முடியவில்லையே. பல நாள் வாட்டுதே துன்பம்” என்கிறாள்.*

துணைத்த கோதைப் பணைப் பெருந் தோளினர்
கடல் ஆடு மகளிர் கானல் இழைத்த
சிறு மனைப் புணர்ந்த நட்பே - தோழி!
ஒரு நாள் துறைவன் துறப்பின்,
பல் நாள் வரூஉம் இன்னாமைத்தே.

## 390. குறும்பூர் ஆரவாரம்

*வில் போரில் வல்லவர் விச்சியர். அவர் தம் தலைவன் சண்டை செய்தான். அப்போது குறும்பூர் மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.*

*அந்த மாதிரி ஒரு சிற்றூர் மக்கள் வம்பு பேசினர். ஏன்? அவளுக்கும் அவனுக்கும் காதல்!*

*அப்போது தோழி சொல்கிறாள்:*

*“வம்பு கண்டு அஞ்சாதே! உன் காதலன் உன்னுடன் பழகிய நாட்கள் சிலவே. எனினும் வம்பு பெரியதாயிற்று” என்கிறாள்.*

சிறு வீ ஞாழல் வேர் அளைப் பள்ளி
அலவன் சிறு மனை சிதைய, புணரி
குணில் வாய் முரசின் இரங்கும் துறைவன்
நல்கிய நாள் தவச் சிலவே, அலரே,
வில் கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றை, பாணர்
புலி நோக்கு உறழ் நிலை கண்ட
கலி கெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே.

- *பரணர்*

## 391. அவன் போனால் அதுவும் போகும்!

"போகிறேன் போகிறேன் என்று சொல்கிறானே. போனால் நீ எப்படியடி பொறுத்திருப்பாய்?" என்று கேட்டாள் தோழி.

"என் பெண்மையை இழந்து விட்டேன். 'போகிறேன்' என்கிறான். போனால் நான் என்ன செய்வேன்? இனி என்ன இருக்கிறது பாக்கி என்னிடத்திலே, இழப்பதற்கு? உயிர் ஒன்றுதான் இருக்கிறது. அவன் போனால் அதுவும் போகும், அவ்வளவுதான்" என்றாள் அவள்.

சிறு வெண் காக்கைச் செவ் வாய்ப் பெருந்தோடு
எறி திரைத் திவலை ஈர்ம் புறம் நனைப்ப,
பனி புலந்து உறையும் பல் பூங் கானல்
இரு நீர்ச் சேர்ப்பன் நீப்பின், ஒரு நம்
இன் உயிர் அல்லது, பிறிது ஒன்று
எவனோ - தோழி! - நாம் இழப்பதுவே?

*- இளம்பூதனார்*

## 392. கழிவளர் தாழையும் கலங்கும் நெஞ்சும்!

"அடியே, நான் என்னடி செய்வேன்?"

"ஏன்?"

"என் நெஞ்சு ஒரு நிலையில் நிற்கமாட்டேன் என்கிறதே"

"என்ன செய்கிறது?"

"கழியிலே நீர் மிகுந்தால் உயர்ந்தும், நீர் குறைந்தால் தாழ்ந்தும் அலையும் தாழை போல் அலைகிறதே."

"காரணம் என்ன?"

"அவர் மீது காமம் அதிகமானதால் அவரது வரவை விரும்புகிறது, வழியிலே உள்ள துன்பங்களை நினைத்தால் வருந்துகிறது. இப்படிக் கலங்குகிறதே."



காமம் கடையின் காதலர்ப் படர்ந்து,
நாம் அவர்ப் புலம்பின் நம்மோடு ஆகி,
ஒரு பாற் படுதல் செல்லாது, ஆயிடை,
அழுவம் நின்ற அலர் வேர்க் கண்டல்
கழி பெயர் மருங்கின் ஒல்கி, ஓதம்
பெயர்தரப் பெயர் தந்தாங்கு,
வருந்தும் - தோழி! - அவர் இருந்த என் நெஞ்சே. *- அம்மூவனார்*

## 393. வலியிலா நெஞ்சமும் வலிவும்

குரா மரங்களும், புன்க மரங்களும் அரும்பின; மனத்திற்கு இனிமை பயத்தன.

காதலன் வருவான் என்று எண்ணினாள்; வரவில்லை.

"சரிதான்; சென்ற காரியம் முடியவில்லை போலிருக்கு. முடிந்ததும் வருவார்" என்று மனம் தேறினாள்.

தேறினாலும் பொறுத்திருக்க வேண்டுமே.

"எப்படிப் பொறுத்தாய்?" என்று கேட்டாள் தோழி.

"எனது வலியிலா நெஞ்சிலே வலிமை யுண்டாக்கினேன்; பொறுத்தேன்" என்றாள்.

பல் வீ படரிய பசு நனைக் குரவம்
பொரிப் பூம் புன்கொடு பொழில் அணிக் கொளா அச்
சினை இனிது ஆகிய காலையும், காதலர்
பேணார் ஆயினும், 'பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவது அன்று' என,
வலியா நெஞ்சம் வலிப்ப,
வாழ்வேன் - தோழி! - என் வன்கணானே.

*- மிளைகிழான் நல் வேட்டனார்*

## 394. கரும்பு தின்னக் கூலியா?

"அதோ! தெரிகிறதே! அதுதான் எங்கள் நல்லூர். ஒரு புறம் கடல். மறுபுறம் கழி. தாழையிலே வந்து அலை மோதும். அந்த மேட்டிலே உனது தேரை நிறுத்தி விட்டு இரவு இவள் ஆசை

*தீரத் தங்கிப் பின் போனால் என்ன? தவறா?" என்று கேட்டாள் தோழி. யாரைப் பார்த்து? கட்டழகன் ஒருவனைப் பார்த்து.*

*அவன் என்ன? முடியாது என்றா சொல்வான்?*

இழை அணிந்து இயல்வரும் கொடுஞ்சி நெடுந்தேர்
வரை மருள் நெடு மணல் தவிர்த்தனிர் அசை இத்
தங்கினிர் ஆயின், தவறோ - தகைய
தழை தாழ் அல்குல் இவள் புலம்பு அகல -
தாழைதை இய தயங்குதிரைக் கொடுங் கழி
இழுமென ஒலிக்கும் ஆங்கண்
பெருநீர் வேலி எம் சிறு நல் ஊரே?

***- அண்டர் மகன் குறுவழுவனார்***

## 395. 'அழகைத் தா என்று கேட்பேன்!'

*நெய்தல் நிலத்திலே நாரை என்ன செய்கிறது? அடம்ப மலரைத் தன் காலால் சிதைக்கிறது. சிதைத்து மீனை உண்ணுகிறது.*

*நெய்தல் நிலச் செல்வன் ஒருவனுக்கும் இதே குணம் தான். காதலியைக் கண்டான். இன்பம் துய்த்தான். பிறகு பரத்தையிடம் சென்றான். காதலி வருந்துகிறாள். அப்போது தோழி சொல்கிறாள்:*

*"அவர் வரட்டும் இங்கே. நான் என்ன கேட்கிறேன் பார்"*

*"என்ன கேட்பாய்?"*

*"அழித்த உனது அழகைத் தந்துபோ என்று கேட்பேன்!"*

*"சீ! அந்த மாதிரி கேளாதே. பாவம், அவர் வந்து நமது அழகிலே மயங்கி யாசித்தார். கொடுத்தோம். யாசித்த பொருளைத் திரும்பிக் கொடு என்று கேட்பதை விட உயிரை விடுவதே நன்று."*

'அடும்பு அவிழ் அணி மலர் சிதைஇய மீன் அருந்தி,
தடந் தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணம் துறைவற் தொடுத்து, நம் நலம்
கொள்வோம்' என்றி - தோழி! - கொள்வாம்;
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்து அவை தா எனக் கூறலின்
இன்னாதோ, நம் இன் உயிர் இழப்பே?

***- சாத்தன்***



## 396. மகிழ்ச்சி தரும் செய்தி

*"அடியே! மகிழ்ச்சியான செய்தி!"*

*"என்ன அது?"*

*"உன்னைப் பெண் கேட்க வந்தனர்"*

*"என்ன ஆயிற்று?"*

*"பெற்றோர் என்ன சொல்வாரோ என்று பயந்தேன்."*

*"உம்."*

*"சரி" என்றனர்; சம்மதித்தனர்.*

*"இனிமேல் இந்த ஊரார் முகத்தை எங்கே வைத்துக் கொள்வார்?"*

*"ஏன்?"*

*"வம்பு அளந்தார்களே!"*

வளையோய்! உவந்திசின் - விரைவுறு கொடுந் தாள்
அளை வாழ் அலவன் கூர் உகிர் வரித்த
ஈர் மணல் மலிர் நெறி சிதைய, இழுமென
உரும் இசைப் புணரி உடைதரும் துறைவற்கு
உரிமை செப்பினர் நமரே; விரிஅலர்ப்
புன்னை ஓங்கிய புலால் அம் சேரி
இன் நகை ஆயத்தாரோடு
இன்னும் அற்றோ, இவ் அழுங்கல் ஊரே?

***- அம்மூவனார்***

## 397. 'பொதியத்துச் சந்தனமே! பெண்ணே!'

*"இவளோ, பொதியத்துச் சந்தனம் போன்றவள்; வெயில் காலத்திலே இனியள். பனிக்காலத்திலே தாமரை போன்றவள்; வெம்மையுடையவள். எனவே, வாடையிலும், கோடையிலும் இணைபிரியாதிருக்கத் தக்கவள். எப்படிப் பிரிவேன் இவளை?"*

மன் உயிர் அறியாத் துன்அரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப,
வேனிலானே தண்ணியள்; பனியே,
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி, ஐயென.
அலங்கு வெயிற் பொதிந்த தாமரை
உள்ளகத்தன்ன சிறு வெம்மையளே.

*- படுமரத்து மோசிக் கொற்றனார்*

## 398. கடல் நாடன் காதலுக்குக் கைம்மாறு

*"கடல் நாடனுடன் காதல் செய்ததன் பயன் இதுதானா? இவள் அழகு அழிந்தாள்; தோள் நெகிழ்ந்தாள்; பசலை படர்ந்தாள்; துன்புற்றாள்; துயில் இன்றி மெலிவுற்றாள்; அழிவதுதான் காதலின் பலனா?"*

காதலியின் துன்பங் கண்ட தோழி கூறியது இது.

தொல் கவின் தொலைந்து, தோள் நலம் சாஅய்,
அல்லல் நெஞ்சமோடு அல்கலும் துஞ்சாது,
பசலை ஆகி, விளிவதுகொல்லோ
வெண் குருகு நரலும் தண் கமழ் கானல்,
பூ மலி பொதும்பர் நாள் மலர் மயக்கி,
விலங்கு திரை உடைதரும் துறைவனொடு
இலங்கு எயிறு தோன்ற நக்கதன் பயனே?
.....................................

## 399. அம் மாலையும் இம் மாலையும்

*"மாலையைக் கண்டு ஏன் வருந்துகிறாய்? முன்பு நீ இம்மாதிரி வருந்தியதில்லையே!"*

*"ஆமாம். முன்பு நான் கண்ட மாலை வேறு. இப்போது நான் காணும் மாலை வேறு!"*

*"முன்பு கண்ட மாலை எப்படி?"*

*"மகளிரோடு மலரணிந்து விழாக் கொண்டாடிய மாலை!"*

*"இப்பொழுது?"*



*"தனிமையிலே தவிக்கும் மாலை!"*

காதலனைப் பிரிந்த காதலி தோழிக்குக் கூறியது இது.

வெண் மணல் விரிந்த வீ ததை கானல்
தண்ணந் துறைவன் தணவா ஊங்கே,
வால் இழை மகளிர் விழவு அணிக் கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே; மாலை
நிலம் பரந்தன்ன புன்கணொடு
புலம்பு உடைத்து ஆகுதல் அறியேன் யானே.

*- வெள்ளி வீதியார்*

## 400. காதலியைக் கைப்பற்றியபோது

*"அப்பனே! இவளைக் கைவிடாதே. அன்னை அடித்தாலும் அம்மா என்று சொல்லும் குழவி போன்றவள். நீ ஒறுத்தாலும் வெறுத்தாலும் உன்பின்னே வருவாள். வேறு துணையிலள். ஆதரவும் நீயே. ஆறுதலும் நீயே!"*

காதலனிடத்திலே காதலியை ஒப்பிக்கும்போது தலைவி கூறியது:

நனை முதிர் ஞாழற் தினை மருள் திரள் வீ
நெய்தல் மா மலர்ப் பெய்த போல
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
தாய் உடன்று அலைக்கும் காலையும், வாய்விட்டு,
அன்னாய்! என்னும் குழவி போல,
இன்னா செயினும் இனிது தலையளிப்பினும்,
நின் வரைப்பினள், என் தோழி;
தன் உறு விழுமம் களைஞரோ இலளே.

*- அம்மூவனார்*

## 401. நண்டு விளையாட்டு

*"கடலிலே நீராடி, நீர்வார் கூந்தலில் நெய்தல் மலர்களைச் சூடி நண்டை விரட்டி விளையாடுதலும் போச்சே!" என்று புலம்பினாள்.*

*ஏன்? அப்போதுதான் காதலனைக் கண்டாள். அதனால் ஏற்பட்ட மாறுதல்களை அன்னை கண்டாள். 'வீட்டை விட்டு வெளியேறாதே' என்று உத்தரவு போட்டாள்.*

அடும்பின் ஆய் மலர் விரைஇ, நெய்தல்
நெடுந் தொடை வேய்ந்த நீர் வார் கூந்தல்
ஓரை மகளிர் அஞ்சி, ஈர் ஞெண்டு
கடலில் பரிக்கும் துறைவனொடு, ஒரு நாள்,
நக்கு விளையாடலும் கடிந்தன்று,
ஐதே கம்ம, மெய் தோய் நட்பே!

*- அம்மூவனார்*

**நெய்தல் தொகை முற்றும்**

**குறுந்தொகைக் காட்சிகள் முற்றும்**

● ● ●



**விளக்கக் குறிப்புகள்**

குறுந்தொகைப் பாடல்கள் 401. இவற்றைப் பாடிய புலவர் பலர்; பாடப் பெற்றோரும் பலர். இவர்களைப் பற்றிய சிறு குறிப்புகளை இப்பகுதியிலே காணலாம்.

பலவிதமான செடிகள், கொடிகள், மலர்கள், மரங்கள், ஊர்வன, நடப்பன, பறப்பன, பற்றிய குறிப்புகள் பாடல்களிலே வருகின்றன. அவை பற்றிய விளக்கங்களையும் இப் பகுதியிலே காணலாம்.

## பாடிய புலவர்கள்

***அஞ்சில் ஆந்தையார் :*** *ஆதன் தந்தையார் என்பது ஆந்தையார் என்றாயிற்று. அஞ்சில் என்பது ஓர் ஊர். அஞ்சில் என்ற ஊரைச் சேர்ந்த ஆதன் என்பவரது தந்தையார் இவர்.*

***அண்டர் மகன் குறுவழுதியார் :*** *வழுதி என்பது பாண்டியர்களின் பெயர். இக்கவிஞர் பாண்டிய மரபில் வந்தவர்.*

***அணிலாடு முன்றிலார் :*** *அணில் விளையாடும் முன்றில் பற்றிப் பாடினதால் இவருக்கு இப் பெயர் வந்தது.*

***அரிசில் கிழார் :*** *அரிசில் என்பது அரியில் என்று மருவியது. அரியில் என்பது அரியலூரின் பெயர். அரியலூர் திருச்சி ஜில்லாவில் உள்ளது. கிழார் என்பது வேளாளருக்கு உரிய பட்டப் பெயர்.*

***அள்ளூர் நன்முல்லையார் :*** *அள்ளூர் என்பது பாண்டிய நாட்டிலே சிவகங்கைக்குப் பக்கத்திலே உள்ளதோர் ஊர். இந்த ஊரைச் சேர்ந்த புலவர் இவர்.*

***ஆதிமந்தியார் :*** *வஞ்சிக்கோனாகிய ஆட்டன் அத்தியின் மனைவி யார் இவர். தமிழ் நாட்டின் முதல் பெண் புலவர்.*

***ஆலங்குடி வங்கனார் :*** *ஆலங்குடி என்ற ஊரைச் சேர்ந்த புலவர் இவர். எந்த ஆலங்குடி என்பது தெரியவில்லை.*

***ஆலத்தூர் கிழார் :*** *கிழார் என்பது வேளாளர் தம் பட்டப் பெயர். ஆலத்தூரைச் சேர்ந்த வேளாளர் இவர் என்பது தெரிகிறது. ஆலத்தூர் எது என்பதுதான் தெரியவில்லை.*

***இளங் கீரந்தையார் :*** *கீரன் தந்தையார் என்பது கீரந்தையார் என்றாயிற்று. வயதில் இளையவராயிருந்ததால் இளம் கீரந்தையார் என்று பெயர் பெற்றார். அப்படி யாயின் வயதானவர் ஒருவரும் இருந்தார் போலும்!*



***இருந்தையூர்க் கொற்றன் புலவனார் :*** *தென்னாற்காடு ஜில்லாவிலே திருக்கோவலூர் தாலுக்காவிலே இருந்தை என்று ஒரு கிராமம் இருக்கிறது. இந்த ஊரைச் சேர்ந்தவர் இப் புலவர்.*

***இடைக்காடனார் :*** *இடைக்காடு என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவ்வூர் தஞ்சைஜில்லா பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் உள்ளது.*

***ஐயூர் முடவனார் :*** *ஐயூர் என்பது சோழ நாட்டிலே உள்ளதோர் ஊர். நடந்து செல்ல இயலாதவர் இவர்; முடவர். தாமான் தோன்றிக் கோனிடம் சென்று பாடினார்; வண்டியும் மாடுகளும் பரிசாகப் பெற்றார்.*

***ஒக்கூர் மாசாத்தியார் :*** *இவர் பெண்பாற் புலவர். ஒக்கூர் என்பது இவரது ஊர். இது பாண்டி நாட்டிலேதிருக்கோஷ்டியூருக்கு அருகே உள்ளது.*

***ஓதலாந்தையார் :*** *ஓதுவதையே தொழிலாகக் கொண்டான் ஒருவன். அவன் பெயர் ஆதன். அவனது தந்தையார் ஒரு புலவர். ஓதல் ஆதன் தந்தையார் என்பது ஓதலாந்தையார் என்று ஆயிற்று.*

***கணக்காயன் தத்தனார் :*** *கணக்கு என்றால் நெடுங் கணக்கு. அதாவது தமிழ் அரிச்சுவடி. ஆயம் என்றால் கூட்டம். பிள்ளை களைக் கூட்டமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு தமிழ் அரிச் சுவடியைச் சொல்லிக் கொடுத்து வந்தார் இவர். எனவே, கணக்காயன் என்ற பெயர் ஏற்பட்டது. தத்தனார் என்பது இவரது இயற் பெயர்.*

***கல்பொரு சிறு நுரையார் :*** *"நீரிலே தோன்றுகிற குமிழியானது கல்லிலே மோதி மோதிச் சிறிதாகி அழியும். அம்மாதிரி எனது உயிரும் சிறிது சிறிதாகத் தேய்கிறதே" என்று புலம்புகிறாள் ஒருத்தி. இந்தக் கருத்தைத் தமது பாட்டிலே தெரிவித்ததால் "கல் பொரு சிறு நுரையார்" என்பது இவருக்குப் பெயராயிற்று.*

***கழார்க்கீரன் எயிற்றியார் :*** *கழார் என்பது மாயூரத்துக்கு அருகில் உள்ள ஓர் ஊர். இந்த ஊரினர். இப் புலவர்; பெண் பாலார். கீரன் என்பவருக்கு உறவினர். இவர் பனிக் காலத்தையே பெரிதும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.*

**காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் :** நச்செள்ளையார் என்பது இவரது இயற் பெயர். காகம் கரைந்தது. அதைச் சிறப்பித்துப் பாடினார். எனவே, காக்கைப் பாடினி என்ற அடைமொழி ஏற்பட்டது. இவர் பெண் பாலார்.

**கால் எறி கடிகையார் :** "கரும்பின் அடிக்கட்டை மிக ருசியானது. அது போன்றது காதலியின் இதழ் இன்பம்" என்று பாடினார் இவர். எனவே, கால் எறி கடிகையார் என்ற பெயர் ஏற்பட்டது இவருக்கு.

**காவன் முல்லைப் பூதனார் :** பூதனார் என்பது இவரது பெயர். "காவன் முல்லை" என்பது புறத்திணைத் துறைகளுள் ஒன்று. இத் துறையைப் பாடுவதில் சிறப்புப் பெற்றவர் இவர். எனவே, காவன் முல்லைப் பூதனார் என்ற பெயர் ஏற்பட்டது.

**காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் :** காரிக்கண்ணனார் என்பது இவரது பெயர். இவர் காவிரிப் பூம்பட்டினத்தைச் சேர்ந்தவர். காரி என்றால் கரிக்குருவி. இவரது கண் கரிக்குருவியின் கண்போல் இருக்குமாம். எனவே, காரிக் கண்ணன் எனப் பெயர் பெற்றார்.

**குட்டுவன் கண்ணனார் :** கண்ணன் என்பது இவரது இயற் பெயர். குட்டுவன் என்பது சேரர் தம் மரபுப் பெயர். எனவே, இவர் சேரர் மரபினர் என்று சொல்வாரும் உளர்.

**குடவாயில் கீரத்தனார் :** குடவாயில் என்பது ஓர் ஊர்; சோழ நாட்டில் உள்ளது. சோழர் தம் தலைநகராக இருந்தது. பாடல் பெற்ற ஊர். இவ்வூரினர் இப் புலவர்.

**குப்பைக் கோழியார் :** கோழிச் சண்டை பற்றிப் பாடியிருக்கிறார் இவர். குப்பைக் கோழிகளின் சண்டையையும், சண்டைக் கோழிகளின் சண்டையையும் ஒப்பிடுகிறார். எனவே குப்பைக் கோழியார் எனும் பெயர் பெற்றார் இவர்.

**குறுங்கீரனார் :** கீரனார் என்பது இவரது இயற் பெயர். பார்வைக்கு மிகவும் குள்ளமாக இருந்ததால் குறுங்கீரன் என்று பெயர் பெற்றார். குறுங்கீரனார் என்றால் குள்ளக்கீரன் என்று பொருள்.



**குறுங்குடி மருதனார் :** குறுங்குடி என்பது பாண்டி நாட்டிலே உள்ளதோர் ஊர். இந்த ஊரைச் சேர்ந்தவர் இவர். எனவே, குறுங்குடி மருதன் என்று அழைக்கப் பெற்றார்.

**கூடலூர் கிழார் :** கூடலூரைச் சேர்ந்தவர்; வேளாள வகுப்பினர். கணிதத்திலே மிக வல்லவர். சேரல் இரும் பொறை எனும் சேர அரசனுக்கு ஜோசியம் கூறினார். அதாவது அவன் எப்போது இறப்பான் என்று. புலவர் குறித்த நாளில் அரசன் இறந்தான்.

**கொல்லன் அழிசி :** அழிசி என்பது இயற் பெயர். கொல்லன் என்பது தொழிற் பெயர். கொல்லர் வகுப்பினர் இப் புலவர்.

**கொல்லிக் கண்ணனார் :** கொல்லி மலையைச் சேர்ந்தவர். கண்ணன் என்னும் பெயர் கொண்டவர். கொல்லிக் கண்ணன் என்று அழைக்கப் பெற்றார்.

**கோக்குள முற்றனார் :** கொக்குள முற்றம் என்பது ஓர் ஊர். அவ்வூரினர் ஆதலால் இவருக்கு இப் பெயர் வழங்கலாயிற்று.

**கோப்பெருஞ் சோழர் :** இவர் சோழ அரச மரபினர். நல்ல புலவர்; புலவர்களிடத்திலே அன்பு மிக்கவர். பிசிராந்தையார் என்ற முது பெரும்புலவரின் உற்ற நண்பர்.

**கோவூர் கிழார் :** கோவூரைச் சேர்ந்தவர். வேளாளர் மரபினர். இசை நூல், உளநூல் முதலியவற்றிலே வல்லவர், அஞ்சா நெஞ்சினர். அரசர்களுக்கு அறிவு புகட்டியவர்; இடித்துக் கூறியவர்.

**கோழிக் கொற்றனார் :** கோழியூர் என்பது உறையூர்; திருச்சி ஜில்லாவில் உள்ளது; சோழர்களின் தலைநகர். இவ்வூரினர் இப் புலவர். கொற்றன் எனும் பெயரினர்.

**சிறைக்குடி ஆந்தையார் :** சிறைக்குடி என்றோர் ஊர். அந்த ஊரிலே ஆதன் என்பார் ஒருவர். அவர் தம் தந்தையார் ஆந்தையார். ஆதன் தந்தையார் ஆந்தையார்.

**செம்புலப் பெய் நீரார் :** "செம்புலப் பெய் நீர் போல" என்று குறிப்பிடுகிறார் இவர் தமது பாடல் ஒன்றிலே. எதை? காதலர் தம் உள்ளக் கலப்பினை. எனவே இவரும் செம்புலப் பெய் நீரார் என வழங்கப் பெற்றார்.

***செய்தி வள்ளுவன் பெரும் சாத்தனார் :*** வள்ளுவர் எவர்? அரசாங்கத்துக்குச் செய்தி அறிவிப்போர். சாத்தனார் என்பது இவரது இயற் பெயர். அரசாங்கத்துக்குச் செய்தி அறிவிப்பவராக இருந்தார். எனவே, செய்தி வள்ளுவன் சாத்தனார் என அழைக்கப் பெற்றார்.

***சேந்தம் பூதனார் :*** சேந்தன் என்பவரது மகனார் சேந்தம் பூதனார்.

***தங்கால் முடக் கொல்லனார் :*** தங்கால் என்பது பாண்டிய நாட்டில் உள்ளதோர் ஊர். திருத்தண்கால் என வழங்கப்படுவது. இவ்வூரைச் சேர்ந்தவர் இவர். முடவர்; கொல்லர்.

***தீன்மதி நாகனார் :*** தீமிதி நாகனார் என்றும் சொல்வார் உளர். தீ மிதிப்பதிலே புகழ் பெற்றிருக்கக் கூடும் அல்லவா?

***நாகம் போத்தனார் :*** போத்தன், போத்தி என்பன குடிப்பெயர். போத்தனூர் என்ற பெயர் காண்க.

***நெடும் பல்லியத்தனார் :*** பல்லியம் என்றால் பல்வேறு இசைக்கருவிகள் என்று பொருள். அதாவது 'ஆர்க்செஸ்ட்ரா' என்று சொல்கிறார்களே அந்தமாதிரி. இவ்விதம் பல்வேறு இசைக்கருவிகளையும் முழக்கியோ. முழுக்குவித்தோ புகழ் பெற்றவர் இவர் என்று தெரிகிறது.

***நெய்தல் கார்க்கியர் :*** கார்க்கியர் கோத்திரத்திலே பிறந்தவர். நெய்தல் திணையை - அதாவது இரங்கலை - மிகத் திறமையுடன் பாடியிருக்கிறார். எனவே, நெய்தல் கார்க்கியர் என அழைக்கப் பெற்றார்.

***பதடி வைகலார் :*** "பதடி வைகல்" என்று குறிப்பிட்டார் இவர். எதை? காதலியுடன் இன்பமாக வாழ்ந்திடாத நாளை. எனவே, இவருக்குப் பதடி வைகலார் என்ற பெயர் ஏற்பட்டு விட்டது.

***பரூஉ மோவாய்ப் பதுமர் :*** பதுமர் என்பது இவரது பெயர். ஆனால் இவரது முகவாய்க் கட்டை மிகப் பருமனாக இருந்ததாம். எனவே, பரூஉ மோவாய்ப்பதுமர் என்று அழைத்தார்கள் போலும்!



***பாரதம் பாடிய பெருந்தேவனார் :*** இவர் தொண்டை நாட்டினர். பாரதக் கதையைத் தமிழ் மொழியிலே முதன் முதல் தந்தவர்.

***பாலை பாடிய பெருங்கடுங்கோ :*** சேர அரச பரம்பரையினர். பாலைத் திணை அதாவது பிரிவுப் பற்றி பாடுவதில் சிறப்புப் பெற்றார்.

***பேரெயின் முறுவலார் :*** சோழ நாட்டிலே காவிரியின் தென் கரையிலே தேவாரம் பெற்ற தலம் ஒன்றிருக்கிறது. அவ்வூருக்குப் பேரெயில் என்று பெயர். இவர் அவ்வூரினர் போலும்.

***பொதுக் கயத்துக் கீரந்தையார் :*** பொதுக்கயம் என்பது ஓர் ஊர். அவ்வூரினர் இப்புலவர். கீரந்தையார் என்பது இயற் பெயர்.

***மடல் பாடிய மாதங்கீரனார் :*** மடல் ஏறுவது பற்றிப் பாடியதாலே இவர் இப்பெயர் பெற்றார்.

***மதுரைக் கதக் கண்ணனார் :*** கதக் கண்ணன் என்றால் சினம் மிகும் கண்களை உடையவர் என்று பொருள். இவர் மதுரையினர். எனவே, மதுரைக் கதக் கண்ணனார் எனப் பெயர் பெற்றார்.

***மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் :*** மள்ளர் என்றால் வீரர் என்று பொருள். அளக்கர் ஞாழல் என்பது ஓர் ஊர்.

***மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் :*** அறுவை வாணிகன் என்றால் ஆடை வியாபாரி என்று பொருள். மதுரையிலே ஆடை வியாபாரம் செய்து வந்தார் இவர்.

***மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் :*** ஈழத்திலிருந்து வந்தவர்; மதுரையிலே வாழ்ந்தார். பூதன் என்பது இவரது தந்தையின் பெயர்.

***மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் :*** சேந்தன் என்பவர் இவரது தந்தையார். அரசர் இடும் கட்டளைகளை எழுதுபவர்.

***மீன் எறி தூண்டிலார் :*** இவர் பாடல் ஒன்றிலே "தூண்டில் போட்டு மீன் பிடிப்பது போல என் உள்ளத்தைக் கவர்ந்தான்" என்று சொல்கிறாள் காதலி ஒருத்தி. உள்ளம் கவர்ந்ததைத் தூண்டிலுக்கு ஒப்பிட்டதால் இவருக்கு மீன் எறி தூண்டிலார் என்ற பெயர் ஏற்பட்டது.

**மோசி கீரனார் :** மோசி என்பது ஓர் ஊர். அவ்வூரினர் இப்புலவர். சேரனது முரசு கட்டிலில் அமர்ந்து தூங்கி விட்டார். அப்போது வந்தான் சேர அரசன். கண்டான். புலவரைக் கோபித் தானா? இல்லை. மயில் தோகையால் செய்த விசிறி கொண்டு வீசினான்.

**வடம வண்ணக்கன் தாமோதரனார் :** வண்ணக்கன் என்றால் நாணயங்களை ஆராய்ந்து பரிசோதித்து நோட்டம் பார்ப்பவன் என்று பொருள். இவர் வடக்கேயிருந்து வந்தவர் ஆதலின் வடம வண்ணக்கன் என்று அழைக்கப் பெற்றார். தாமோதரன் என்பது இவரது இயற் பெயர்.

***விட்ட குதிரையார் :*** வண்டியிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட குதிரைக்கு உவமை கூறிப் பாடினார் இவர். எனவே, விட்ட குதிரையார் என்று அழைக்கப் பெற்றார்.

● ● ●



## பாடப் பெற்றவர்கள்

***அதிகன் -*** பசும்பூட் பாண்டியனது படைக்குத் தலைவன். நடு நிலைமையுடன் போர் செய்தவன்.

***அகுதை -*** வீரபானம் செய்து வீரர்களுடன் மகிழ்ந்து வாழ்ந்தவன். தன்பால் வரும் அகவல் மகளிருக்கு யானைகளைப் பரிசாக வழங்கியவன்.

***அழிசி -*** சேந்தன் என்பவனுடைய தந்தை. வீரபானம் செய்து விலங்குகளை வேட்டையாடியவன். வாள் வீரர் பலர்க்குத் தலைவன். ஆர்க்காடு எனும் ஊரினன்.

***ஆய் -*** பொதியில் மலைத் தலைவன்.

***எவ்வி -*** இசை வல்லவர்களைப் பாதுகாத்தவன். பாணர் களுக்குப் பொன் மலர் பரிசு வழங்கியவன்.

***எழினி -*** கடை எழு வள்ளல்களில் ஒருவன். இவனது ஆனிரை கவர்ந்து சென்றனர் எதிரிகள். அவர்களுடன் போர் செய்து பசுக்களை மீட்டு வந்தான்.

***ஓரி -*** வல்வில் ஓரி என்று புகழ் பெற்றவன். அதாவது ஒரே சமயத்தில் பல பொருள்களைத் துளைக்கும் ஆற்றல் மிக்க வில் வீரன்.

***கட்டி -*** இவன் ஒரு குறுநில மன்னன். வல்வேல் கட்டி என்று புகழப் பெற்றவன். எதிரிகளின் மீது வேல் எறிந்து தாக்குவதில் தீரன்.

**குட்டுவன் -** மேற்குக் கடற் கரையிலே மாந்தை என்று ஓர் ஊர் இருந்தது. அவ்வூரின் அரசன்.

**கோசர் -** நாலூர்க்கோசர் என்று அழைக்கப் பெற்றவர். ஆலமரத்தடியிலே கூடுவர். அரசியல் காரியங்களை ஆராய்வர்.

***நன்னன் -*** பெரிய மாந்தோப்புகளை உடைய குறுநில மன்னன். அந்த மாந்தோப்பிலே பழுத்த மாங்கனி ஒன்றைத் தின்றதற்காக கொலைத் தண்டனை விதித்தான் ஒரு பெண்ணுக்கு.

***பூழியார் -*** பூழி நாட்டினர். வெள்ளாட்டுத் தொகுதியை உடையவர்.

***பொறையன் -*** மேற்குக் கடற்கரையிலே உள்ள தொண்டி எனும் பட்டினத்துக்கு உரியவன். கொல்லி மலையும் சிலகாலம் இவனதாக இருந்தது. பரணரால் பாராட்டப் பெற்றவன் இவன்.

***மலையன் -*** முள்ளூர்க் கானத்தின் தலைவன். கபிலரால் பாராட்டப் பெற்றவன்.

***விச்சிக்கோ -*** விச்சியர் குலத் தலைவன்.

● ● ●



## பாடப் பெற்ற மலைகள்

***அரலைக் குன்றம் -*** இது ஒரு மலை. எது என்று இப்போது சொல்வதற்கில்லை.

***ஏழில் -*** கொல்லன் அழிசி எனும் புலவர் இக் குன்று பற்றிக் குறிப்பிடுகிறார்.

***கொல்லி -*** இம்மலை பொறையனுக்குரியது என்று பரணர் குறிப்பிடுகிறார். வல்வில் ஓரிக்கு உரியது என்று கபிலர் குறிப்பிடு கிறார். இம் மலையிலே உள்ள கொல்லிப் பாவை பற்றியும் கூறுகின்றனர்.

***பறம்பு -*** பாரி எனும் வள்ளலுக்குச் சொந்தமான மலை. இங்கே உள்ள சுனை நீர் தை மாதத்திலே மிகக் குளிர்ச்சியுடனிருக்குமாம்.

***பொதியில் -*** ஆய் என்பவனுக்குச் சொந்தமான மலை. காந்தளும் வேங்கையும், சந்தனமும் மலிந்தது.

● ● ●

## ஊர்வன, பறப்பன, நடப்பன

***ஆமான்*** *- காட்டுப் பசு. இதன் கன்றைக் கொண்டுவந்து வேடர் வளர்ப்பர்.*

***ஆமை*** *- ஆமையின் பிள்ளைக்குப் பார்ப்பு என்று பெயர்.*

***எலி*** *- வீட்டு எலிக்கு இல்லெலி என்று பெயர்.*

***ஓந்தி*** *- பாலை நிலத்தில் வாழ்வது. கருக்கருவாள் போன்ற முதுகு. ஆண் ஓந்திக்குப் போத்து என்று பெயர்.*

***செந்நாய்*** *- இது பெரும்பாலும் பாலை நிலத்திலே காணப்படுவது.*

***நீர் நாய்*** *- நீரில் வாழ்வது. வாளை மீனை உண்ணும். இதன் முதுகிலே கோடுகள் இருக்குமாம். அவை பிரப்பம் பழத்தின் மேலுள்ள கோடுகள் போலவே தோன்றுமாம்.*

***வருடை*** *- வருடை மான் என்று கூறுவர். இதன் குட்டியை மறி என்பர். இது செங்குத்தான மலைகளிலே வாழும்.*

***அன்றில்*** *- ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்தே வாழும் இயல்புடைய பறவை.*

***எழால்*** *- புல்லூறு எனும் பறவைக்கு எழால் என்று பெயர். வங்கா என்னும் பறவையை அடித்துக் கொல்லும்.*

***கணந்துள்*** *- பாலை நிலத்திலே வாழும் பறவைகளுள் ஒன்று. நீண்ட கால்கள் உடையது. கூட்டம் கூட்டமாக வாழும் இயல்பினது.*

***நுளம்பு*** *- மாட்டு ஈயின் பெயர் நுளம்பு.*

● ● ●



## மலர்கள், செடிகள், கொடிகள், மரங்கள்

***அடும்பு*** *- நெய்தல் நிலத்திலே கடற்கரையிலே படரும் கொடி இது. மணல் மேட்டிலே படரும். இதன் இலை இரு பிரிவாக இருக்கும். எனவே இதை மான் குளம்புக்கு ஒப்பிடுவர். இதன் மலர் குதிரையின் கழுத்தில் கட்டும் சதங்கைபோல் இருக்கும்.*

***அரலை*** *- இதற்கு அரளி என்றும் பெயர்; அலரி என்றும் கூறுவர். குறிஞ்சி நில மக்கள் இம்மலரைத் தொடுத்து முருகனுக்குச் சூட்டி வழிபடுவர்.*

***ஆவிரை*** *- மடல் ஏறி வருபவன் தனது குதிரைக்கு ஆவிரை மலர் சூடி வருவான்.*

***இற்றி*** *- இச்சி என்பர்; இத்தி எனவும் கூறுவர். இத்தியின் வேர் கல்லின் மேல் படர்ந்திருக்கும். தொலைவிலிருந்து காண்பவருக்கு நீர் அருவிபோல் காட்சி தரும்.*

***இருப்பை*** *- பாலை நில மரங்களுள் ஒன்று. வேனிற் காலத்திலே மலர்வது.*

***உகாய்*** *- பாலை நிலத்திலே உள்ள மரங்களில் ஒன்று. இதன் அடிமரம் சாம்பல் நிறத்துடனிருக்கும். எனவே, புறாவின் முதுகுக்கு உவமை கூறப்படுகிறது. இந்த உகாய் மரத்தின் காய்கள் உருண்டையாயிருக்கும்; மஞ்சள் நிறத்துடனிருக்கும். பொன் காசுக்கு உவமை கூறுவது வழக்கம்.*

***ஈங்கை*** *- ஒருவகைச் செடி. கூதிர் காலத்திலே மலர்வது. நுண்ணிய முட்களை உடையது. இதன் அரும்பு செந்நிறமானது.*

***ஐயவி*** *- ஐயவி என்பது வெண் சிறுகடுகு. ஞாழல் மலருக்கு உவமை கூறப்படுவது.*

**ஐவனம் -** மலையிலே விளையும் நெல் வகைகளில் ஒன்று. அருவி அருகே பயிர் செய்யப்படுவது. குறிஞ்சி நில மக்களின் உணவுப் பொருள்.

**ஓமை -** பாலை நில மரம். இதன் பட்டையை உரித்துத் தின்னும் யானை. இதன் கிளையிலே பருந்து இருந்து ஒலிக்கும்.

**காஞ்சி -** வயல்களின் அருகே வளரும் மரம். இதன் மலர் மணம் உள்ளது. இதன் மலர் கொத்துக்கு உவமை எது? பயறு.

**காந்தள் -** குறிஞ்சி நிலத்திலே வளர்வது. காந்தளிலே இருவகை. வெண்காந்தள், செங்காந்தள் என்று. செங்காந்தளைத் தோன்றிப் பூ என்றும் கூறுவர். குருதிப் பூ என்றும் கூறுவர். கோழியின் கொண்டை போலிருக்குமாம் இம்மலர்.

**காயா மரம் -** முல்லை நிலத்துக்குரிய மரம்; கார் காலத்தில் மலர்வது. இதன் மலர் நீல நிறத்தினதாயிருக்கும்.

**குருந்த மரம் -** முல்லை நிலத்திற்குரியது. கார்காலத்திலே மலர்வது.

**குளவி -** குளவி என்பது காட்டு மல்லிகை; மலை மல்லிகைக்கும் இப்பெயரே.

**குறிஞ்சி -** குறிஞ்சி நிலத்திற்குரியது. பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் மலருமாம். எனவே, இம்மலரில் தேன் மிகுதியாக இருப்பது இயற்கைதானே.

**பகன்றை -** கிலு கிலுப்பை என்றும் கூறுவர். சிவதை என்றும் கூறுவர். இது மாலையிலே மலர்வது. வெண்ணிற மானது. பெரிய இலைகளை யுடையது.

**பஞ்சாய் -** இது ஒரு வகைக் கோரை. நீர் தங்கிய பள்ளங் களிலே வளரும்.

**பித்திகம் -** பிச்சி எனப்படுவது. இது கார் காலத்தில் மலரும்; சிவந்திருக்கும்.

**மரல் -** மருள் என்றும் கூறுவர். மலைச்சாரலில் வளரும்.

● ● ●



## அக வாழ்வும், ஆனந்தமும்

சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை எத்தகையது? காதல் வாழ்க்கை. காதல் வாழ்வு வாழ்ந்தார்கள். இந்த வாழ்க்கையை எங்கே காண்கிறோம்? சங்க இலக்கியங்களிலே. பெரும்பாலும் செல்வர் குடும்பத்தின் வாழ்வுதான் காண்கிறோம்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண் ஒருத்தியும், செல்வக் குடும்பத்தில் பிறந்த இளைஞன் ஒருவனும் சந்திக்கின்றனர். எங்கே? மலை நாட்டிலே. தினைப் புனத்திலே.

தினைப்புனத்திலே காவல் புரிந்துகொண்டு இருப்பாள் பருவம் வந்த பெண். துணையாகத் தோழிமார் பலரும் இருப்பர்; கிளிகளும் குருவிகளும் தினைப் பயிரை நாசம் செய்ய வரும். அவற்றை ஓட்டுவார்கள். கவண் வீசி விரட்டுவார்கள். பொழுது போகவேண்டுமே. அதற்காகச் சுனை நீரிலே நீந்தி விளையாடு வார்கள்; ஆடுவார்கள்; பாடுவார்கள்.

இநத மாதிரியான சமயங்களிலேதான் வருவான் இளைஞன். வேட்டைமேல் வருவான். பெண்ணைக் கண்டதும் நின்று விடுவான்.

அவர்களது விளையாட்டு கண்டு மகிழ்வான். ஆடலையும் பாடலையும் இரசிப்பான். மெய்ம்மறந்து நிற்பான். அப்படி நிற்கும்போது அவளும் அவனையே கண்டு மகிழ்ந்து நிற்பாள். அவள் எவள்? அவள்தான் செல்வர் வீட்டு இளம் பெண். இருவர் உள்ளத்திலும் காதல் தளிர்க்கும்; கொழுந்து விடும்.

இருவரும் தனியிடத்திலே சந்திக்க எண்ணுவர். ஆனால் சமயம் சரிப்படாது. அவனும் அவளையே எண்ணுவான். அவளும் அவனையே எண்ணுவாள்.

செல்வக் குடியிலே பிறந்த இளம் மங்கைக்குச் செவிலித் தாய் இருப்பாள். அவள் யார்? தாயின் தோழி. இளம் வயது முதல்

அவளுடன் நட்புக் கொண்டவள்; பிரியாது வாழ்பவள். இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்பவள். செவிலித் தாய்க்கு ஒரு மகளும் இருப்பாள். இந்த இளம் பெண்கள் இருவரும் இணைபிரியாது வாழ்வார்கள். இவர்களுக்குத் தோழி என்றும் தலைவி என்று பெயர் வழங்குவார்கள்.

தலைவி என்பவள்தான் செல்வக் குடி மங்கை. செவிலித் தாயின் மகள் அவளது தோழி. தலைவியைப் பார்த்துக் காதல் கொண்டானே, அவனைத் தலைவன் என்று அழைப்பது வழக்கம்.

தலைவனும் தலைவியும் தனியிடத்திலே சந்திக்கத்துடிப்பார்கள். சந்திப்பு இயற்கையாகவே நேர்வதும் உண்டு; நேராதிருப்பதும் உண்டு.

நேருங்கால் என்னாகும்? இளம் உள்ளங்கள் இரண்டும் ஒன்றாகும்; இன்பம் துய்க்கும். பின்னே இருவரும் பிரிவர், இவ்விதம் தனிமையில் சந்தித்த செய்தியை எவரும் வெளியிடார். இதற்குத்தான் களவு என்று பெயர். திருட்டுத் தனமாக சந்தித்தது அல்லவா? எவர்க்கும் தெரியாத செய்தி அல்லவா? ஒளித்த செய்தி என்றும் சொல்வதுண்டு.

உருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? இராது. உறியை, உறியைத் தாவும். அந்த மாதிரிதான் இந்த இருவர் நிலையும்.

ஒருமுறை சந்தித்த பிறகு அவ்வளவில் நின்றுவிடு வார்களா? மீண்டும் மீண்டும் சந்திக்க முயல்வர். அடிக்கடி தனிமையில் காண முடியுமா? முடியாது.

எனவே, உதவியை நாடுவது வழக்கம். எவரது உதவியை? தோழியின் உதவியை. ஏன்? அவள்தானே எப்போதும் தலைவியுடன் இருக்கிறாள். நீங்காது நிழல் போல் இருக்கிறாள். அவளுக்குத் தெரியாமல் என்ன நடக்கும்? எனவே, தலைவன் என்ன செய்வான்; மெதுவாகத் தோழியிடம் சொல்லுவான். தனது கருத்தை வெளியிடுவான்.

முன்பு நடந்தது அவளுக்குத் தெரியாமலா இருக்கும்? தெரிந்திருக்கும். இருந்தாலும் அவள் என்ன செய்வாள்? ஒன்றும் அறியாதவள் போலவே நடந்து கொள்வாள்.



தலைவன் என்ன செய்வான்? கையுறை கொடுப்பான். கையுறை கொடுப்பது என்றால் என்ன?

மலர்களையும் தழைகளையும் பறித்துக் கொடுப்பது யாருக்கு? தலைவிக்கு. தலைவியிடம் நேராகக் கொடுக்கமாட்டான். தோழியிடம் கொடுப்பான். தலைவியிடம் கொடுக்கச் சொல்வான்.

அதன் பொருள் என்ன? தலைவியைத் தலைவன் விரும்பு கிறான் என்பதுதான். தலைவனின் கருத்து அறிந்த தோழி என்ன செய்வாள்? இருவரையும் சந்திக்கச் செய்வாள். தனி இடத்திலே சந்திப்பார்கள்; மகிழ்வார்கள்; பேசுவார்கள்; விளையாடுவார்கள்.

இப்படிச் சில நாள் நடக்கும். தினை முற்றிவிடும். அறுவடை செய்ய எல்லாரும் வந்துவிடுவார்கள். அப்போது அங்கே தலைவிக்கு என்ன வேலை? ஒன்றுமில்லை யல்லவா? .

"வீட்டுக்கு வா" என்று உத்தரவிடுவாள் தாய். "சரி" என்று வீட்டுக்கு வந்துவிடுவாள்.

காதலன் கதி என்ன? அவனை எப்படிச் சந்திப்பது? எங்கே சந்திப்பது? பகல் நேரத்திலே வீட்டுக்கு வரமுடியுமா? முடியவே முடியாது.

காதலனைப் பார்க்காமல் அவள் எப்படி இருப்பாள்! இருக்க மாட்டாள். எனவே, யாருக்கும் தெரியாமல் இரவு நேரத்திலே சந்திப்பது என்று ஏற்பாடு செய்து கொள்வார்கள். அவரவர் வீட்டுக்குப் போய்விடுவார்கள்.

இரவு நேரத்திலே சந்திப்பது என்றால் சுலபமா? இந்தக் காலத்தில் சுலபம். அதுவும் நகர்ப் புறங்களிலே வெகு சுலபம். எந்த நேரத்திலே வேண்டுமானாலும் சந்திக்கலாம். எங்கு வேண்டுமானாலும் சந்திக்கலாம். எவரும் தட்டிக் கேட்க மாட்டார்.

ஆனால் அந்தக் காலத்திலே அப்படி முடியாது. மலை நாட்டிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் சிறு சிறு ஊர்கள். ஓர் ஊரிலே வாழ்பவன் மற்றோர் ஊருக்குள் செல்வது கடினம். அதுவும் இரவு நேரத்திலே எல்லாரும் தூங்கிய பிறகு

செல்வது என்றால் எப்படி? வழி என்ன? இந்தக் காலம் போலவா இருக்கும்? மின்சார விளக்கா போட்டிருக்கும்? தார் ரோடா போட்டிருக்கும்?

இருட்டு! மலைப்பாதை! கொடிய விலங்குகள் நடமாடும். இந்த வழியாக வரவேண்டும். சுலபமா?

வருவான் அவன்? எவன்? தலைவன்; காதலன். எதற்காக? காதலியைக் காண்பதற்காக.

வருகிற வழியிலே துன்பம் ஏற்படுவது ஒரு பொருட்டல்ல. கொடிய விலங்குகள் வரும். கொன்று விடலாம். ஆனால் ஊருக்குள் புகும்போதுதான் சங்கடம்.

ஊர் காவலர் இருப்பர்; விழித்து இருப்பர். வேற்றுஆள் கண்டால் “யார்?” என்று கேட்பர். “எங்கே போகிறாய்?” என்று கேட்பர். இவற்றிற்குச் சரியான பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் பிடித்து வைத்துக் கொள்வார்கள். மறு நாள் காலையில் ஊரார்களிடம் ஒப்பித்து விடுவார்கள்,. ஊர்ப் பொதுவில் விசாரித்து உண்மை வெளியானால் வெட்கம்.

எனவே காவலர் கண்களில் படாமல் ஊருக்குள் புகல் வேண்டும். இது சுலபமா? வந்து வந்து திரும்பிப் போய்விடுவான் பல நாள். ஏன்? காவலர் விழித்திருப்பர். ஒரு நாள் காவலர் கண்ணில் படாமல் ஊருக்குள் புக இயலும். புகுந்து வருவான்.

தலைவியின் வீடு தேடி வருவான். வரும்போது நாய் குரைக்கும். வேற்று ஆள் கண்டால் நாய் குரைக்காதா? உடனே அவனுக்குப் பயம் வந்துவிடும். என்ன பயம்? தெருவிலே உள்ளவர்கள் விழித்துக் கொண்டு விடுவார்களோ என்ற பயம். எனவே, அங்கு நில்லாது ஓடிவிடுவான். வந்த வழியே திரும்பி விடுவான்.

இப்போது இவனுக்கு **எதிரிகள் இருவர்** தோன்றி விட்டனர். ஊர் **காவலரும், நாயும்.**

“சரி. இனிமேல் ஜாக்கிரதையாக வரவேண்டும். ஊர் காவலர் கண்ணில் பட்டுவிடக் கூடாது. பட்டுவிட்டால் பிடித்துக் கொண்டு விடுவார்கள். நாய் கண்டு விட்டால் குரைக்கும். ஊரார் விழித்துக் கொண்டு விடுவார்கள். எனவே, காவலரும் நாயும் காணா வகையில் போகவேண்டும்” என்று முடிவு செய்து கொள்வான்.



மறுநாள் வருவான். ஊர் காவலர் கண்ணில் படாமல் வருவான்; நாய் காணா வகையில் வருவான். வந்து காதலியின் வீட்டுப் பக்கமாக இருப்பான். “வருவாளோ வருவாளோ” என்று எண்ணி.

நிலவு வந்துவிடும். நிலவு வந்துவிட்டால் அவள் வெளியே வருவாளா? வரமாட்டாள். ஏன்? களவு வெளிப்பட்டுவிடும். களவுக்கு நிலவு துணை செய்யுமா? எனவே, நிலவை நிந்தித்துக் கொண்டு போய் விடுவான் அவன்.

இப்போது **எதிரிகள் மூன்று பேர். ஊர்காவலர், நாய், நிலவு.**

“இந்த மூன்று எதிரிகளையும் வெற்றி கண்டு புறமுதுகிடச் செய்தே காதலியைக் காணவேண்டும். எனவே, இப்போது மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்” என்று உறுதி கொள்வான் அவன்.

மறுநாள். வருவான். முதல் மூன்று எதிரிகளையும் வெற்றி கண்டு வருவான். வந்து என்ன செய்வான்?

“வந்து விட்டேன்; காத்திருக்கிறேன்” என்று தந்தி கொடுப்பான். யாருக்கு? காதலிக்கு. தந்தி கொடுப்பது எப்படி? கொல்லையிலே தென்னைமரம் இருக்கும். அதன்மீது ஏறுவான். ஒரு தேங்காயைப் பறித்துத் தள்ளுவான். அது கிணற்றிலே விழும். ‘டொம்!’என்று சப்தம் செய்யும். இதுதான் தந்தி.

தந்தி கொடுக்கிற விஷயம் இருக்கிறதே. இது முன்னேற் பாட்டின்படியே நடக்கும். அதாவது எப்படி?

“இரவு நேரத்திலே நீ வந்து காத்திருக்கிறாய் என்பது எனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டாள் அவள்.

“கவலைப் படாதே; தென்னை மரத்திலே உள்ள தேங்காயைப் பறித்துக் கிணற்றிலே போடுவேன். நான் வந்திருப்பதற்கு அடையாளம் அதுவே” என்பான் அவன்.

“ஆமாம்! அதுதான் நல்ல யோசனை. ஆனால் சப்தம் கேட்டு எல்லோரும் விழித்துக் கொண்டால்?....”

“அசடே! விழித்துக் கொள்வார்களா? காற்றிலே தேங்காய் நெற்று விழுந்திருக்கிறதாக்கும் என்று நினைத்துக் கொள்வார்கள்”

“பேஷ்! பேஷ்!” என்பாள்.

இவ்விதமாகப் பேசி முடிவு பண்ணியதுதான். எனவே அவன் தேங்காயைத் தள்ளியதும் அவள் வருவாள் என்று எதிர் பார்த்தான்.

அவளோ வரமாட்டாள். காரணம் என்ன? சிறிது நேரம் முன்புதான் அந்தமாதிரி ஒரு சப்தம் கேட்டிருக்கும். “காதலன் வந்துவிட்டான்” என்று எண்ணி ஆசையோடு வந்து எதிர்பார்த்தாள். காதலனைக் கண்டிருக்கமாட்டாள். காற்றிலே உதிர்ந்த தென்னை நெற்று ஒன்று கிணற்றிலே விழுந்து கிடக்கும். பார்த்து ஏமாந்து அவள் படுத்திருப்பாள்.

மீண்டும் அம்மாதிரி ஓசை கேட்டால் என்ன எண்ணம் தோன்றும்? “சரிதான். மீண்டும் காற்றிலே உதிர்ந்து விழுகிறது. முன் போலத்தான்” என்ற எண்ணம் தோன்றும் அல்லவா? அவ்விதம் எண்ணி பேசாதிருப்பாள்.

‘வருவாள் வருவாள்’ என்று எதிர்பார்த்து ஏமாறுவான் அவன். அவள் வரமாட்டாள்.

“சீ! மூன்று எதிரிகளையும் வென்று விட்டோம். காவலரைக் கடந்து வந்தோம் நாயைக் கடந்து வந்தோம்; நிலவை வென்றோம். இப்போது நாலாவது எதிரி ஏற்பட்டு விட்டதே” என்று மனம் உடைந்து போவான்.

**நான்காம் எதிரி எது?** தென்னை நெற்று. காற்றிலே உதிர்ந்த நெற்று கிணற்றிலே விழுந்தது. அவளை ஏமாற்றி விட்டது. குறி தவறியது. இதைத்தான் அல்ல குறிப்படுதல் என்று சொல்வார்கள்.

அன்று திரும்பி விடுவான். மறுநாள் மிக ஜாக்கிரதையாக வருவான். காவலரை வென்று விடுவான்; நாயை வென்று விடுவான்; நிலவை வென்று விடுவான்; தென்னை நெற்றையும் வென்று விடுவான்.



ஆனால் **ஐந்தாவது எதிரியாக ஏற்படுவாள் செவிலித்தாய்.** அவள் தூங்கமாட்டாள். விழித்துக் கொண்டிருப்பாள். எனவே, அன்றும் தலைவி வெளியே வரமுடியாது. எப்படி வரமுடியும்? தாய் விழித்துக் கொண்டிருக்கிறாளே. வரலாமா? ‘எங்கே போகிறாய்?’ என்று கேட்பாளே! என்ன பதில் சொல்ல முடியும்?

அன்றும் ஏமாறுவான் அவன். திரும்பிப் போவான்.

“இன்று செவிலித்தாய் ஏற்பட்டாள் எதிரியாக” என்று நொந்துகொள்வான்.

மறுநாள் வருவான். காவலரைக் கடந்து விடுவான்; நாயைக் கடந்து விடுவான்; நிலவு வெளிப்படுமுன் வந்து விடுவான். செவிலித்தாயும் தூங்கி விடுவாள். தந்தி அடிப்பான். மெதுவாகக் கதவு திறந்து கொள்ளும். வெளியே வருவாள். கட்டி அணைப்பான். இன்புறுவான். நேரம் ஆகிவிடும். அவளும் **செல்வாள். அவனும் செல்வான்.** இதுவே களவொழுக்கம் எனப்படும்

இப்படிச் சில காலம் நடக்கும். எவ்வளவு நாள் இப்படி நடக்கும்? நீண்ட நாள் நடவாது.

களவு ஒழுக்கத்திலே ஈடுபட்டிருப்பதால் அவளது தோற்றத்திலே சில மாறுதல்கள் ஏற்படும். எவளது தோற்றத்தில்? காதலியின் தோற்றத்திலே. என்ன மாறுதல்?

பார்வையிலே மாறுதல். காதலனுடன் இன்பம் காண்பதற்கு முன்பு அவளது பார்வை கள்ளமற்றதாக இருக்கும். குழந்தைப் பார்வையாக இருக்கும். காதலன் நட்புக்குப் பிறகோ பார்வை கள்ளத்தனமாக இருக்கும்.

முன்பெல்லாம் அவள் குதித்து விளையாடுவாள்; கலகல என்று சிரிப்பாள், ஓடுவாள்; ஆடுவாள்; பாடுவாள்; காதலன் நட்புக்குப் பிறகோ? குதித்து விளையாடமாட்டாள்; கலகல என்று சிரிக்க மாட்டாள். ஓடமாட்டாள்; ஆடமாட்டாள்.

முன்பு, எங்கே போனாலும் சரி. எல்லோருடனும் சேர்ந்தே இருப்பாள்; செல்வாள். ஆனால் காதலனைக் கண்ட நாள் முதல்

மாறிவிடுவாள்; எப்போதும் தனியாகவே இருக்க விரும்புவாள். எதையோ எண்ணிக் கொண்டே இருப்பாள்.

இப்படியாகத் தலைவியிடத்தே மாறுதல் தோன்றும். மாறுதல் கண்ட செவிலித்தாய் என்ன செய்வாள்? அவளது தாயிடம் சொல்லுவாள். இரண்டுபேரும் யோசிப்பார்கள். பெண்ணுக்குப் பேய் பிடித்துவிட்டது என்று நினைப்பார்கள். சாமிக்குப் பூசை போடுவார்கள். பூசாரியை அழைத்து உடுக்கையடித்துக் கேட்பார்கள்.

இந்த மாதிரியான நேரத்திலே தோழி என்ன செய்வாள்? அறத்தோடு நிற்பாள். அறத்தொடு நிற்பது என்றால் என்ன? ஒளித்த செய்தியைக் கூறுவது. ஒளித்த செய்தி எது? தலைவி ஒருவன்பால் நட்புக் கொண்டிருப்பது. தோழி, தன் தாயாகிய செவிலிக்குக் கூறுவாள். செவிலி தன் தோழியும் தலைவியின் தாயுமாகிய நற்றாயிடம் சொல்வாள். அந்த நற்றாய் மற்றவரிடம் சொல்வாள்.

ஊரிலே உள்ளவர்கள் இது பற்றி வம்பு அளப்பார்கள். அப்போது தலைவியின் பெற்றோர்கள் என்னே செய்வார்கள்? பெண்ணைச் சிறையில் வைப்பார்கள். இதற்கு **இற்செறித்தல்** என்று பெயர்.

அதாவது என்ன? வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று கட்டுப்பாடு செய்வார்கள். காவலில் வைப்பார்கள். அப்போது காதலனை எண்ணி எண்ணி ஏங்குவாள் அவள்.

இந்த விஷயத்தைத் தோழி தலைவனுக்கு அறிவிப்பாள். தலைவன் என்ன செய்வான்? காதலியைச் **சிறை மீட்க** எண்ணுவான்.

சிறை மீட்டல் எப்படி? இரவோடு இரவாக எவருக்கும் தெரியாமல் அவளைக் கடத்திச் செல்வதுதான். இதற்கு உறுதுணை நிற்பாள் தோழி.

காதலியும் காதலனுடன் ஓடிப்போவதையே பெரிதாக மதிப்பாள். இரவு நேரத்திலே அவளை அழைத்துச் செல்வான் காதலன். எவருக்கும் தெரியாமல். இதற்கு **உடன்போக்கு** எனறு பெயர்.



பட்சி பறந்து போனபிறகு எல்லாரும் தேடுவார்கள். காதலனுடன் போய் விட்டாள் என்பதை அறிந்த பிறகு பேசாமல் இருந்து விடுவார்கள்.

ஓடிப்போன ஜோடியைக் கண்டு பிடித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். என்ன செய்வார்கள்? அவளைத் **தண்டிக்க மாட்டார்கள்.** அவ்விருவருக்கும் **மணம் செய்து வைப்பார்கள்.**

இதுதான் களவு ஒழுக்கத்தின் உச்ச நிலை.

களவு ஒழுக்கம் எல்லாமே இப்படி ஓடிப்போகிற முடிவை அடைவதில்லை. வேறு விதமாகவும் இருப்பதுண்டு. அதாவது எப்படி? களவு ஒழுக்கம் நடந்து கொண்டிருக்கும்போதே காதலனை வற்புறுத்துவாள் தோழி. எதற்கு? வரைந்து கொள்வதற்கு. அதாவது மணம் செய்து கொள்வதற்கு.

அவனும் ‘சரி’ என்பான். பரிசம் போடுவதற்கு வேண்டிய பொருள் தேடிப் போவான். இதற்குத் தான் **பொருள் வயிற் பிரிதல்** என்று சொல்வார்கள். **வரைபொருட் பிரிவு** என்றும் சொல்வார்கள். அப்படித் தலைவன் பிரிந்த காலத்திலே மிகவும் வருந்துவாள் தலைவி.

பொருள் தேடச் சென்ற தலைவன் வெற்றியோடு வருவான். அவனது ஊர்ப் பெரியவர்கள் வந்து பெண் கேட்பார்கள். பெண்ணைப் பெற்றோரும் சம்மதிப்பர். களவு வெளிப்படாமலே கலியாணம் நடந்து விடும். இதைத்தான் மிகச் சிறப்பாகச் சொல்வார்கள்.

இவையெல்லாம் எப்படிஎன்றால் காதலனும் காதலியும் மனம் ஒன்றி ஈடுபட்ட காரியங்கள்.

வற்புறுத்தும் காதலும் உண்டு. அதாவது என்ன? தானாக கனியாத பழத்தைத் தடி கொண்டு அடிப்பது என்று சொல்வார்களே அந்த மாதிரியானது அது எப்படி ஒருவன் ஒருத்தி மீது காதல் கொள்வான். களவு ஒழுக்கத்துக்கு அழைப்பான். அவள் இணங்க மாட்டாள். அப்போது அவன் என்ன செய்வான்? **மடல் ஏறுவான்.**

மடல் ஏறலாவது என்ன? பனங் கருக்கினாலே குதிரை ஒன்று செய்வான். அதற்கு எருக்கம்பூ மாலையைச் சூடுவான். அதன்மீது ஏறிக்கொள்வான். குதிரையை இழுத்துக் கொண்டு வந்து ஊர்ப் பொதுவிலே முச்சந்தியில் விடச் சொல்வான்.

முச்சந்தியிலே அந்தக் குதிரைமீது அமர்ந்து இருப்பான். அவன் கையிலே படம் ஒன்றிருக்கும். என்ன படம்? அவனது காதலியின் படம். அதையே பார்த்துக்கொண்டு பட்டினி கிடப்பான்.

இந்த மாதிரி ஒருவன் சண்டித்தனம் செய்தால் ஊரிலே உள்ளவர்கள் சும்மா இருப்பார்களா? மாட்டார்கள்.

“ஐயோ பாவம்! போனால் போகிறான். அவன் விரும்பும் பெண்ணை அடையட்டுமே” என்று சொல்லிப் பெண்ணை அவனிடம் அனுப்பி விடுவார்கள்.

இது சாதாரணமாக நடக்கிற காரியமல்ல. ரொம்பப் பிடிவாத குணம் படைத்தவர்கள் செய்கிற ராட்சத வேலை. பலர் பார்த்து நகைப்பதும் உண்டு. எல்லாருமே இதில் ஈடுபட மாட்டார்.

செல்வர் ஒருவர் வீட்டிலே ஒரு பெண் பிறக்கிறாள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவர்கள் என்ன செய்வார்கள்? தொழுவத்திலே உள்ள காளைக் கன்றுகளில் ஒன்றையும் தனியாக வளர்ப்பார்கள்?; செல்வமாக வளர்ப்பார்கள்.

பெண்ணுக்குப் பருவம் வரும்போது கன்றும் முரட்டுக் காளையாக நிற்கும். அந்த முரட்டுக் காளையைத் தழுவிப் பிடித்து எவன் அடக்குகிறானோ அவன் அந்தப் பெண்ணை மணம் புரிவான்.

இது மருதநில மக்களிடையே நிலவிய பழக்கம். **ஏறு தழுவுதல்** என்று பெயர்.

செல்வர் வீட்டுக் காதலியைக் காதலித்தால் மாத்திரம் போதாது. அவளைக் காதலிப்பதற்கான தகுதியையும் நிரூபிக்க வேண்டும். தகுதியை நிரூபிப்பது எப்படி? வீரச் செயல் புரிவதன் மூலம் நிரூபிக்க வேண்டும். வீரச் செயல் எது? **ஏறு தழுவுதல்.**



வீரமும் காதலும் இணைந்து நின்றன தமிழ்நாட்டிலே.

இவ்விதமாக மணம் செய்து கொண்ட பிறகு காதலனும் காதலியும் இல்லறத்தில் ஈடுபடுவார்கள். அப்படி வாழ்க்கை நடத்தி வரும்போது காதலன் என்ன செய்வான்? வெளியூர் செல்வான். எதற்காக? பொருள் தேடுவதற்காக. சில சமயங்களில் நாடு காவலுக்காகவும் வெளியூர் செல்வதுண்டு. போர் செய்வதற்காகவும் போவதுண்டு.

இவ்விதம் வெளியூர் செல்லும் தலைவன் விரைவில் திரும்பி விடுவான். கார் காலத்திலும், இளவேனில் காலத்திலும் காதலர் காதலியைப் பிரியமாட்டார்.

காதலன் பிரிந்து சென்ற காலத்திலே காதலி என்ன செய்வாள்? வருந்துவாள். மாலைநேரம் வந்துவிட்டால் வருந்துவாள். தென்றல் வீசினால் வருந்துவாள். முல்லை மலர்ந்தால் வருந்துவாள்.

காதலன் வந்த உடனே என்னாகும்?முன்னைவிடப் பன்மடங்கு அன்புண்டாகும்.

இப்படி அன்பு வாழ்க்கை நடத்துகிறபோது பாணன் வருவான்.

பாணன் என்பவன் யார்? இசையிலே வல்லவன். ஆடல் மகளிர்களுக்கு ஆடலும் பாடலும் கற்றுக் கொடுப்பவன்.

இல்லறத்திலே மனைவியுடன் வாழும் தலைவனை மெதுவாக அந்தப் பக்கம் அழைத்துச் செல்வான் பாணன். எந்தப் பக்கம்? ஆடல் மகளிர் பக்கம்.

அவர்தம் ஆடலிலும் பாடலிலும் மகிழ்ந்திருப்பான் தலைவன். மனைவியை மறந்திருப்பான். பலநாள் வரையில் வீட்டுக்கே திரும்பாமல் இருப்பான்.

ஆடல் மகளிருடனே சுற்றுவான்; எங்கும் திரிவான். நீராடி மகிழ்வான். இப்படிச் சிலநாள் சென்றதும் மனைவி வீட்டுக்குத் திரும்புவான்.

அப்போது அவள் ஊடல் கொள்வாள். அதாவது கணவன் மீது கோபமாக இருப்பாள். ஏன்? பரத்தை வீடே கதி என்று கிடந்தான் அல்லவா? மனைவியை மறந்திருந்தான்.அல்லவா?

அப்படி அவள் ஊடல் கொண்டிருக்கும்போது அவள் தோழி வருவாள். ஊடல் தணிப்பாள். அல்லது அவளது செல்வக் குழந்தை வரும். அது கண்டு ஊடல் தணிவாள்.

தலைவனும் தலைவியும் பழைமைபோல் அன்புடன் வாழ்வார்கள்.

இதுதான் சங்ககாலத் தமிழரின் அகவாழ்க்கை; ஆனந்த வாழ்க்கை.

● ● ●



## பாடல் முதல் குறிப்பு அகர வரிசை

***( இ.ப.எண்: இப்பதிப்பின் பாடல் எண்***
***ம.ப.எண் : மரபுப்பதிப்பின் பாடல் எண்)***


| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| அகவல் மகளே | 39 | 23 |
| அஞ்சுவது அறியாதமர் | 198 | 237 |
| அடும்பு அவிழ் | 395 | 349 |
| அடும்பின் ஆய் மலர் | 401 | 401 |
| அணிற் பல் அன்ன | 338 | 49 |
| அத்த வாகை அமலை | 227 | 369 |
| அது கொல் தோழி | 335 | 5 |
| அது வரல் அன்மை | 365 | 248 |
| அம்சில் ஓதி ஆய்வளை | 193 | 211 |
| அம்ம வாழி தோழி அன்னைக்கு | 115 | 361 |
| அம்மவாழி ................நூல் | 151 | 104 |
| அம்மவாழி ................... இன்னே | 253 | 287 |
| அம்மவாழி தோழி நம்ஊர் | 60 | 146 |
| அம்ம வாழி தோழி நம்மொடு | 54 | 134 |
| அம்மவாழி தோழி முன்னின்று | 223 | 350 |
| அம்மவாழி தோழி இன்று | 107 | 375 |
| அம்ம வாழி தோழி புன் | 376 | 296 |
| அம்ம வாழி தோழி கொண்கன் | 370 | 230 |
| அம்ம வாழி தோழி யாவதும் | 162 | 77 |
| அம்ம வாழியோ | 102 | 392 |
| அமர்க் கண் ஆமான் | 129 | 322 |
| அமிழ் தத்து அன்ன | 82 | 206 |
| அமிழ்தம் உண்க | 80 | 201 |
| அமிழ்து பொதி | 4 | 14 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| அயிரை பரந்த | 316 | 178 |
| அரிற்பவர் பிரம்பின் வரிப்புற விளை | 293 | 91 |
| அரிற்பவர் பிரம்பின் வரிப்புற நீர் நாய் | 299 | 364 |
| அரும்பு அற மலர்ந்த | 38 | 26 |
| அரும்பெறல் அமிழ்தம் | 26 | 83 |
| அருவிப் பரப்பின் ஐவனம் | 40 | 100 |
| அருவி அன்ன பரு உறை | 307 | 271 |
| அருவி வேங்கை | 33 | 96 |
| அருளும் அன்பும் நீங்கி | 156 | 20 |
| அல்குறு பொழுதில் | 209 | 273 |
| அலர் யாங்கு அழிவ | 382 | 311 |
| அவ்விளம்புரீஇய | 139 | 297 |
| அவரே கேடில் விழுப்பொருள் | 190 | 276 |
| அவரோ வாரார் | 261 | 221 |
| அழியல்ஆயிழை | 59 | 143 |
| அளிதோ தானே நாணே | 181 | 149 |
| அறிகரி பொய்த்தல் | 356 | 184 |
| அன்னாய் இவன் | 285 | 33 |
| ஆசு இல் தெருவில் | 210 | 277 |
| ஆடு அமை புரையும் | 187 | 131 |
| ஆம்பல் பூவின் சாம்பல் | 289 | 46 |
| ஆய் வளை நெகிழவும் | 384 | 316 |
| ஆர் கலி ஏற்றொடு | 269 | 186 |
| ஆர் கலி வெற்பன | 119 | 353 |
| ஆர் களிறு மிதித்த | 16 | 52 |
| இடிக்குங் கேளிர் | 14 | 58 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| இது மற்று ....... துனியிடை | 315 | 181 |
| இது மற்று .......... முதுநீர் | 379 | 299 |
| இரண்டு அறி கள்வி | 133 | 312 |
| இருங் கண் ஞாலத்து | 208 | 267 |
| இருள் திணிந்தன்ன | 348 | 123 |
| இல்லோன் இன்பம் | 49 | 120 |
| இலங்கு வளை நெகிழ | 350 | 125 |
| இலையிலஞ்சினை | 201 | 254 |
| இவளே, நின் சொல் | 25 | 81 |
| இவன் இவள் ஐம்பால் | 197 | 229 |
| இழை யணிந்து | 394 | 345 |
| இளமை பாரார் | 275 | 126 |
| இன்று யாண்டையனோ | 105 | 379 |
| இன்றே சென்று | 175 | 189 |
| இன்னள் ஆயினள் | 242 | 98 |
| இன மயில் அகவும் | 93 | 249 |
| ஈங்கே வருவார் | 174 | 192 |
| ஈதலும் துய்த்தலும் | 165 | 63 |
| உடுத்தும் தொடுத்தும் | 305 | 295 |
| உதுக்காண் அதுவே | 266 | 191 |
| உமணர் சேர்ந்து | 189 | 124 |
| உரைத்திசின் தோழி | 135 | 302 |
| உவரி ஒறுத்தல் | 278 | 391 |
| உழுந்துடைக் கழுந்தின் | 324 | 384 |
| உள்ளது சிதைப்போர் | 215 | 283 |
| உள்ளார் ......... உள்ளியும் | 157 | 232 |
| உள்ளார் ......... கள்வர் | 236 | 16 |
| உள்ளார் ......... கிள்ளை | 159 | 67 |
| உள்ளிக் காண்பென் | 143 | 286 |
| உள்ளின் உள்ளம் | 341 | 102 |
| உள்ளினென் அல்லனோ | 243 | 99 |
| உவரி ஒருத்தல் | 278 | 391 |
| உறு வளி உளரிய | 212 | 278 |
| உறைபதி அன்றி | 351 | 145 |
| ஊர் அலர் எழ | 206 | 262 |
| ஊர்க்கும் அணித்தே பொய்கை | 322 | 113 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| ஊர் உண் கேணி | 327 | 399 |
| எந்தையும் யாயும் | 108 | 374 |
| எம் அணங்கினவே | 328 | 53 |
| எல்லாம் எவனோ | 249 | 323 |
| எல்லும் எல்லின்று | 233 | 390 |
| எல்லை கழிய | 281 | 387 |
| எலுவ சிறாஅர் | 51 | 129 |
| எவ்வி இழந்த | 298 | 19 |
| எழில் மிக உடைய | 92 | 247 |
| எழுதரு மதியம் | 132 | 315 |
| எற்றோ வாழி | 31 | 90 |
| எறி சுறாக் கலித்த | 385 | 318 |
| எறும்பி அளையின் | 161 | 12 |
| என் எனப் படுங்கொல் | 264 | 394 |
| ஐயவி அன்ன | 290 | 50 |
| ஒடுங்கீர் ஓதி | 10 | 70 |
| ஒருநாள் வாரலன் | 73 | 176 |
| ஒலி வெள்ளருவி | 30 | 88 |
| ஒறுப்ப, ஓவலர் மறுப்ப | 287 | 34 |
| ஒன்றேன் அல்லேன் | 83 | 208 |
| ஓம்பு மதி வாழியோ | 199 | 235 |
| ஓரூர் வாழினும் | 310 | 231 |
| கடல் பாடு அவிந்து | 357 | 177 |
| கடல் அம் கானல் | 367 | 245 |
| கடல் உடன் ஆடியும் | 374 | 294 |
| கடும் புனல் தொகுத்த | 342 | 103 |
| கண் தர வந்த | 304 | 305 |
| கண்டிசின் பாண | 300 | 359 |
| கண்ணி மருப்பின் | 228 | 363 |
| கணைக் கோட்டு வாளை | 318 | 164 |
| கருங்கண் தாக்கலை | 6 | 69 |
| கருங்கால் வேங்கை | 24 | 47 |
| கருங் கால் வேம்பின் | 238 | 24 |
| கல் என் கானத்து | 75 | 179 |
| கலை கை தொட்ட | 121 | 342 |
| கவலை கெண்டிய | 260 | 233 |
| கவலை யாத்த | 196 | 224 |





| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| கலி மழை கெழீஇய | 98 | 264 |
| கவவுங் கடுங் குரையன் | 52 | 132 |
| கழனி மாத்து | 295 | 8 |
| கழி தேர்ந்து அசைஇய | 378 | 305 |
| கழிய காவிகுற்றுங் | 183 | 144 |
| கள்ளின் கேளிர் | 306 | 293 |
| கறி வளர் அடுக்கத்து | 142 | 268 |
| கன்று தன் பயமுலை | 88 | 275 |
| கன்றும் உண்ணாது | 152 | 27 |
| காண் இனி வாழி | 71 | 171 |
| காதலர் உழையராக | 170 | 45 |
| காந்தள் வேலி | 7 | 76 |
| காந்தளங் கொழு முகை | 99 | 265 |
| காமங் கடையில் | 392 | 340 |
| காமம் காமம் . . . . தோளோயே | 81 | 204 |
| காமம் காம . . . . பெறினே | 55 | 136 |
| காமம் தாங்குமதி | 375 | 290 |
| காமம் ஒழிவது ஆயினும் | 23 | 42 |
| கார் புறந் தந்த | 272 | 165 |
| காலே பரிதப்பினவே | 158 | 44 |
| காலையும் பகலும் | 19 | 32 |
| காலை எழுந்து கடுந்தேர் | 288 | 45 |
| கானம் கோழி | 258 | 242 |
| கான மஞ்ஞை | 21 | 38 |
| கான யானை | 163 | 79 |
| கான இருப்பை | 237 | 329 |
| குக்கூ என்றது | 314 | 157 |
| குண கடல் திரையது | 349 | 128 |
| குருகு கொளக் குளித்த | 320 | 127 |
| குருகும் இரு விசும்பு | 205 | 260 |
| குவளை நாறும் | 137 | 300 |
| குவி இணர்த் தோன்றி | 323 | 107 |
| குறும் படைப் பகழி | 126 | 333 |
| குன்றக் கூகை | 63 | 163 |
| கூந்தல் ஆம்பல் | 330 | 80 |
| கூன்முள் முண்டகம் | 331 | 51 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|
| குறுந்தாட் கூதளி | 13 | 60 |
| கேட்டிசின் வாழி | 150 | 30 |
| கேளா ராகுவர் | 202 | 253 |
| கேளிர் வாழியோ | 145 | 280 |
| கை வளை நெகிழ்தலும் | 111 | 371 |
| கை வினை மாக்கள் | 303 | 309 |
| கொங்கு தேர் வாழ்க்கை | 1 | 2 |
| கொடியோர் நல்காராயினும் | 326 | 367 |
| கொடுந்தாள் முதலை | 387 | 324 |
| கொண்கனூர்ந்த | 360 | 212 |
| கொல்வினைப் பொலிந்த | 377 | 304 |
| கொன்னூர் துஞ்சினும் | 56 | 138 |
| கோடல் எதிர் முகை | 12 | 62 |
| கோடீர் .............கலிழ்ந்து | 113 | 365 |
| கோடீர் .............கலிழும் | 160 | 11 |
| கௌவை அஞ்சின் | 45 | 112 |
| சிறு வீ ஞாழல் | 390 | 328 |
| சிறு வெண் காக்கை | 391 | 333 |
| சிறு வெள் அரவின் | 48 | 119 |
| சிறைபனிஉடைந்த | 28 | 86 |
| சுடர் சினம் தணிந்து | 355 | 195 |
| சுடர் செல் வானம் | 259 | 234 |
| சுடு புன மருங்கில் | 141 | 291 |
| சுரம் செல் யானை | 317 | 169 |
| சுரம் தலைப்பட்ட | 194 | 209 |
| சுனைப் பூக்குற்று | 58 | 142 |
| செங்களம் பட | 2 | 1 |
| செப்பினம் செலினே | 173 | 207 |
| செவ்வச் சிறாஅர் | 274 | 148 |
| செல்வாரல்லர் | 171 | 43 |
| செவ்வரைச் சேக்கை | 76 | 187 |
| செவ்வி கொள் வரகின் | 214 | 282 |
| செறுவர்க்கு உவகை ஆக | 124 | 336 |
| சென்ற நாட்ட கொன்றை | 270 | 183 |
| சேணோன் மாட்டிய | 61 | 150 |
| சேயாறு செல்வாம் ஆயின் | 279 | 400 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் | | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|---|---|---|
| சேயாறு சென்று | 364 | 269 | நனை முதிர் ஞாழல் | 400 | 397 |
| சேயுயர் விசும்பின் | 251 | 314 | நாகு பிடி நயந்த | 120 | 346 |
| சேரி சேர மெல்ல | 138 | 298 | நாண் இல மன்ற | 286 | 35 |
| சேறிரோ என | 100 | 268 | நிரை வளை முன்கை | 125 | 335 |
| சேறும் சேறு | 388 | 325 | நிலத்தினும் பெரிதே | 17 | 3 |
| சோலை வாழை | 134 | 308 | நிலந்தொட்டுப் | 188 | 130 |
| ஞாயிறு காணாத | 226 | 378 | நிலம் புடை பெயரினும் | 109 | 373 |
| ஞாயிறு பட்ட | 339 | 92 | நிழல் ஆன்றவிந்த | 225 | 356 |
| தச்சன் செய்த | 296 | 61 | நினையாய் வாழி | 220 | 343 |
| தண் கடல் படு திரை | 353 | 166 | நீ கண்டனையோ | 297 | 75 |
| தண்டுளிக் கேற்ற | 245 | 382 | நீ உடம்படுதலின் | 230 | 383 |
| தலைப்புணைக் கொளினே | 86 | 222 | நீர் கால் யாத்த | 234 | 388 |
| தழை அணி அல்குல் | 66 | 159 | நீர் நீடு ஆடின | 301 | 354 |
| தாஅவலஞ் சிறை | 359 | 172 | நீர் வார் கண்ணை | 155 | 22 |
| தாதில் செய்த | 172 | 48 | நுதல் பசப்பு இவர்ந்து | 77 | 185 |
| தாமரை புரையும்(கடவுள் வாழ்த்து) | | | நெஞ்சே நிறை | 232 | 395 |
| தாமே செல்ப வாயிற் | 222 | 348 | நெடுங்கழை திரங்கிய | 219 | 331 |
| தாழிருள் துமிய மின்னி | 256 | 270 | நெடு நீராம்பல் | 224 | 352 |
| திண்தேர் நள்ளி | 263 | 210 | நெடு வரை மருங்கில் | 65 | 158 |
| திரி மருப்பு இரலை | 218 | 338 | நெய் கனி குறும்பூழ் | 103 | 389 |
| திரிமருப்பு எருமை | 254 | 279 | நெய்தல் பரப்பில் | 344 | 114 |
| தினை கிளிகடிதலின் | 85 | 217 | நெருப்பின் அன்ன | 67 | 160 |
| தீண்டலும் இயைவது | 147 | 272 | நெறி இருங் கதுப்பொடு | 267 | 190 |
| துணைத்த கோதை | 389 | 376 | நோம் என் | | |
| துறுகல் அயலது | 20 | 36 | நெஞ்சே இமை | 334 | 14 |
| தேற்றாம் அன்றே | 235 | 398 | நோம் என் நெஞ்சே புன் | 312 | 202 |
| தொடி நெகிழ்ந்தனவே | 89 | 239 | நோற்றோர் மன்ற | 248 | 344 |
| தொல்கவின் தொலைந்து | 398 | 381 | படரும் பை பய | 191 | 215 |
| நசை நன்கு உடையர் | 192 | 213 | பணைத் தோள் குறுமகள் | 146 | 276 |
| நசை பெரிது | 168 | 37 | பதலைப் பாணி | 166 | 59 |
| நமக்கு ஒன்று உரையார் | 207 | 266 | பயப்பு என் மேனி | 363 | 19 |
| நல்கின் வாழும் | 128 | 327 | பரல்அவற்படு நீர் | 200 | 250 |
| நல்லுரை இகழ்ந்து | 18 | 29 | பருவத் தேனசைஇ | 358 | 175 |
| நலத்தகைப் புலைத்தி | 302 | 330 | பல்லா நெடு நெறி | 244 | 64 |
| நள் என்றன்றே | 336 | 6 | பல்லோர் துஞ்சும் | 90 | 244 |
| நறை அகில் வயங்கிய | 122 | 339 | பல் வீ படரிய | 393 | 349 |
| நன்னலந் தொலைய | 294 | 93 | பலரும் கூறுக | 70 | 170 |



| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் | | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|---|---|---|
| பல வில் சேர்ந்த | 104 | 385 | பைங்கால் கொக்கின் | 347 | 122 |
| பழ மழைக் கலித்த | 262 | 220 | பொத்தில் காழவத்த | 203 | 252 |
| பழ மழை பொழிந்தென | 96 | 261 | பொய்கை ஆம்பல் அணி | 246 | 370 |
| பழூஉப்பல் அன்ன | 176 | 180 | பொருத யானை | 144 | 280 |
| பறைபடப் பணிலம் | 154 | 15 | பொழுதும் எல்லின்று | 68 | 161 |
| பனிப் புதல் இவர்ந்த | 282 | 240 | பொன்னே ராவிரை | 72 | 173 |
| பனைத் தலைக் | | | மகிழ்ந்ததன் தலையும் | 69 | 165 |
| கருக்குடை | 110 | 372 | மகிழ் நன் மார்பே | 5 | 73 |
| பாசவல் இடித்த | 309 | 238 | மட்டம் பெய்த | 265 | 193 |
| பார்ப்பன மகனே | 64 | 156 | மடவ மன்ற | 240 | 66 |
| பால் வரைந்தமைத்த | 112 | 366 | மடவ வாழி | 257 | 251 |
| பாலும் உண்ணாள் | 231 | 396 | மண்ணிய சென்ற | 140 | 292 |
| பா அடி உரல | 292 | 89 | மணி வார்ந்தன்ன | 204 | 256 |
| புரி மட மரை ஆன் | 131 | 317 | மயங்கு மலர்க் | 321 | 393 |
| புல் வீழ் இற்றிக் கல் | 43 | 106 | மரங்கொல் கானவன் | 84 | 214 |
| புள்ளும் ஆவும் | 346 | 118 | மருந்தெனின் மருந்தே | 164 | 71 |
| புள்ளும் புலம்பின | 381 | 310 | மல்குசுனை உலர்ந்த | 221 | 347 |
| புறவுப் புறத்தன்ன | 211 | 274 | மலர் ஏர் உண் கண் | 106 | 377 |
| புனவன் துடவை – கடி | 53 | 105 | மலைச் செம் சாந்தின் | 130 | 321 |
| புனவன் துடவை – கிளி | 42 | 133 | மலை இடை யிட்ட | 311 | 203 |
| பூண் வனைந்தன்ன | 372 | 227 | மழை சேர்ந்து எழுதரு | 95 | 259 |
| பூ இடைப் படினும் | 332 | 57 | மழை விளையாடும்குன்று | 277 | 108 |
| பூவொடு புரையும் | 373 | 226 | மள்ளர் குழீஇ | 284 | 31 |
| பூ ஒத்த லமரும் | 9 | 72 | மறிக்குரலறுத்து | 97 | 263 |
| பூழ்க்கால் அன்ன | 11 | 68 | மன்ற மராஅத்த | 29 | 87 |
| பெய்த குன்றத்து | 362 | 200 | மன்னுயிர் அறியா | 397 | 376 |
| பெயர்த்தனென் முயங்க | 148 | 84 | மனையுறை கோழி | 319 | 139 |
| பெயல் கால் மறைத்தலின் | 118 | 355 | மாக் கழி மணிப் பூ | 333 | 55 |
| பெயன் மழை துறந்த | 177 | 174 | மாசு அறக் கழீஇய | 34 | 13 |
| பெருங் கடல்.....களிற்று | 366 | 246 | மாரிப் பித்திகத்து | 178 | 168 |
| பெருங் கடல் நீத்து | 383 | 313 | மாரி ஆம்பல் அன்ன | 345 | 117 |
| பெருங் கடல் பரதவர் | 386 | 320 | மால் வரை இழிதரு | 32 | 95 |
| பெருந்தண் மாரி | 280 | 94 | மா என மடலும் | 35 | 17 |
| பெரு நன்று ஆற்றின் | 46 | 115 | மான் அடி அன்ன | 368 | 243 |
| பெரு வரை மிசையது | 3 | 78 | மானேறும் மடப்பிணை | 250 | 319 |
| பெறுவது இயையா | 78 | 199 | மின்னுச் செய் கருவி | 361 | 205 |
| பேரூர் கொண்ட ஆர்கலி | 87 | 223 | முகை முற்றினவே | 268 | 188 |

| | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் | | பா. இ.ப.எண் | பா ம.ப.எண் |
|---|---|---|---|---|---|
| முட்டுவேன் கொல் | 153 | 28 | வந்த வாடை | 127 | 332 |
| முட்க் கால் இறவின் | 343 | 109 | வளர் பிறை போல | 252 | 289 |
| முதைப் புனங் கொன்ற | 273 | 155 | வளையுடைத் தனைய | 217 | 307 |
| முருக யர்ந்து வந்த | 114 | 362 | வளையோ யுவந்தி சின் | 396 | 351 |
| முல்லை யூர்ந்த | 255 | 275 | வளை வாய்ச் சிறுகிளி | 57 | 141 |
| முலையே முகிழ் | 123 | 337 | வன் பரல் தெள்அறல் | 241 | 65 |
| முழந்தாள் இரும்பிடி | 101 | 394 | வாரல் எம் சேரி | 208 | 258 |
| முழவு முதல் அரைய | 136 | 301 | வார் உறு வணர் | 27 | 82 |
| முளி தயிர் பிசைந்த | 271 | 167 | வாரார் ஆயினும் | 276 | 110 |
| முனி பட ருழந்த | 117 | 357 | விசும்பு கண் புதைய | 229 | 380 |
| மெய்யோ வாழி | 50 | 121 | விட்ட குதிரை | 8 | 84 |
| மெல்லியல் அரிவை | 185 | 137 | விட்டென | 369 | 236 |
| மெல்லிய லோயே | 325 | 368 | விடர் முகை அடுக்கத்து | 195 | 218 |
| மெல்லிய இனிய | 380 | 306 | விரிதிரைப் பெரும் | 41 | 101 |
| மென் தோள் நெகிழ்த்த | 44 | 111 | வில்லோன் காலன | 149 | 7 |
| யாம் கொன்ற மரம் | 79 | 198 | விழுத்தலை | 74 | 182 |
| யாங் கறிந்தனர் | 179 | 154 | வினையே ஆடவர்க்கு | 186 | 135 |
| யாது செய்வாம் | 354 | 197 | வீங்கு இழை நெகிழ | 247 | 358 |
| யாம் எம் காமம் | 91 | 241 | வீழ் தாழ் | 371 | 228 |
| யாயாகி யளே மாயோளே | 337 | 9 | வெண் மணல் விரிந்த | 399 | 386 |
| யாயாகியளே விழவு | 283 | 10 | வெண் மணல் பொதுளிய | 213 | 381 |
| யாயும் ஞாயும் | 22 | 40 | வெந்நிறல் கடுவளி | 169 | 39 |
| யார் அணங்குற்றனை | 352 | 163 | வெறி என உணர்ந்த வேலன் | 116 | 360 |
| யாரினும் இனியன் | 291 | 85 | வேட்டச் செந்நாய் | 167 | 56 |
| யாருமில்லை தானே கள்வன் | 37 | 25 | வேதின வெரி நின் | 184 | 140 |
| யாவதும் அறிகிலர் | 62 | 152 | வேம்பின் பைங்கா | 313 | 196 |
| யான்நயந்து உறைவோ | 47 | 114 | வேரல் வேலி | 36 | 18 |
| யான் நயந்து யானே – ஆனா | 340 | 97 | வேரும் முதலும் | 94 | 257 |
| யானே ................ஏனல் | 15 | 54 | வேனில் பாதிரி | 182 | 147 |
| வங்காக் கடந்த | 180 | 151 | வைகா வைகல் | 216 | 285 |
| வண்டு படத் ததைந்த | 239 | 21 | | | |


• • •



# அருஞ் சொல் அகராதி

**(அ)**

அகவன் மகள் - கட்டுவிச்சி, குறி சொல்பவள்

அகவல் - அழைத்தல்

அகழ்தல் - தோண்டுதல்

அகன் - மனம்

அகன்றலை - விரிந்த இடம்

அச்சிரம் - முன்பனி

அசாவாது - வருந்தாது

அசைவளி - தென்றல்

அஞ்சி - அதியமான் நெடுமான் அஞ்சி. கடை எழு வள்ளல்களில் ஒருவன்.

அடுதல் - அழித்தல், கொல்லுதல்

அண்டர் - இடையர்

அணை - படுக்கை

அத்தம் - அருவழி

அதவம் - அத்தி

அமலை - ஒலி

அரவம் - ஒலி

அரில் - பிணக்கம்

அல்கல் - இரவு

அலமரல் - சுழலுதல்

அலவனாட்டுதல் - நண்டுகளை அலைத்தல்

அவலம் - கவலை

அவிதல் - அடங்குதல்

அவிழ் - சோறு

அவிழ்தல் - மலர்தல்

அழல் - அழுதல்

அழிதல் - இரங்குதல்

அழுங்கல் - ஆரவாரம்

அளி - இரக்கம்

அளை - எறும்புப் புற்று

அறல் - கருமணல்

அறுகை - அருகம்புல்

அறை - பாத்தி, பாறை

**(ஆ)**

ஆகம் - மார்பு

ஆசு - குற்றம்

ஆட்டி - பெண்

ஆட்டுதல் - அலைத்தல்

ஆடுதல் - சொல்லுதல், நீராடுதல், விளையாடுதல்

ஆய்தல் - ஆராய்தல்

ஆர் - காம்பு

ஆர்தல் - உண்ணுதல்

ஆரம் - சந்தனம், முத்து

ஆராமை - தெவிட்டாமை

**(இ)**

இகுத்தல் - அடித்தல்

இகுதல் - தாழ்தல்

இணர் - பூங்கொத்து

இணை - இரண்டு

இமிழ்தல் - ஒலித்தல்

இயங்குதல் - செல்லுதல்

இயம்புதல் - ஒலித்தல்

இணல் - சாயல்

இயலுதல் - நடத்தல்

இரலை - ஆண்மான்

இறத்தல் - கடத்தல்

இறந்தோர் - கடந்தோர்

**(உ)**

உகுதல் - உதிர்தல்

உம்பர் - அப்பால்

உமணர் - உப்பு விற்போர்
உருத்தல் - தோன்றுதல்
உலைதல் - வருந்துதல்
உவலை - தழை
உழத்தல் - வருந்துதல்
உழை - பக்கம்
உள்ளுதல் - நினைத்தல்

(ஊ)

ஊகம் - கருங்குரங்கு
ஊதை - வாடை
ஊரன் - மருதநிலத் தலைவன்

(எ)

எருவை - கொறுக்காந் தட்டை
எல் - ஒளி, சூரியன், பகல், மாலை
எல்லி - இரவு
எல்லை - சூரியன், பகல், வரம்பு, முடிவு

(ஏ)

ஏய்த்தல் - ஒத்தல்
ஏறு - இடியேறு, சிங்கம், காளை

(க)

கட்டி - கங்க நாட்டுத் தலைவன்
கட்டில் - அரசு கட்டில்
கடிதல் - விரைதல்
கடுஞ்சூல் - முதற்சூல்
கணை - அம்பு
கதிர் - சூரியன்
கலை - ஆண்குரங்கு
கலித்தல் - அழைத்தல்
கலுழ் - கலங்கல்

(கா)

கால் - அடி, காம்பு
கானல் - கடற்கரைச் சோலை

(கி)

கிளை - சுற்றம்

(கு)

குடை - உட்குழிந்த பாத்திரம்
குண்டு - ஆழம்
குல்லை - கஞ்சங்குல்லை
குவை - கூட்டம்
குழைதல் - வருந்துதல்

(கூ)

கூர்தல் - மிகுதல்

(கோ)

கோடு - கொம்பு

(கௌ)

கௌவை - வருத்தம்

(சா)

சாய் - மென்மை
சாய்தல் - மெலிதல்

(சி)

சினை - அரும்பு

(த)

ததரல் - மரப்பட்டை
தணப்பு - நீங்குதல்
தணத்தல் - பிரிதல்

(தா)

தாள் - அடி, காம்பு

(தி)

திணிதல் - செறிதல்

(து)

துணர் - காய்க் கொத்து

(தொ)

தொடை - தொடுத்தல், மாலை

(நீ)

நீவுதல் - தடவுதல்

(நு)

நுங்குதல் - உண்ணுதல்



(நே)

நேர்தல் - உடம்படுதல்

(ப)

பகழி - அம்பு
பகழி மாய்த்தல் - அம்பு தீட்டுதல்
பசப்பு - பசலை
படர் - துன்பம்
பணை - மூங்கில்
பயிர்தல் - அழைத்தல்
பழனம் - பொய்கை
பழுமரம் - ஆலமரம்

(பு)

புகரி - மான்
புகவு - உணவு
புணரி - அலை
புணை - தெப்பம்
புலத்தல் - வெறுத்தல்
புலம்பு - கடற்கரை
புலம் - திசை
புறவு - புறா
புன்புலம் - புன்செய், முல்லை நிலம்
புனம் - தினைக்கொல்லை

(ம)

மகிழ்நன் - மருத நிலத் தலைவன்
மட்டம் - கள்
மடை - மூட்டுவாய்
மண்டிலம் - கண்ணாடிக் குப்பி
மண்டிலம் - வட்டம்
மம்மர் - மயக்கம்
மருங்கு - இடம்
மருந்து - அமிழ்தம்
மருப்பு - கொம்பு
மறி - ஆடு
மனவு - சங்குமணி

(மா)

மாசு - புழுதி
மாய்த்தல் - தீட்டுதல்

(மி)

மிடறு - கழுத்து

(வ)

வளி - காற்று

(வா)

வாய் - உண்மை
வாயாகின்று - உண்மையா யிற்று

(வே)

வேட்டல் - விரும்புதல்

● ● ●

## பாடினோரும் பாடல்களும்

*எண் : மரபுப்பதிப்பின் பாடல் எண்*


**அ**

அஞ்சில் ஆந்தை ..... 294
அண்டர் மகன் குறுவழுதி ..... 345
அணிலாடு முன்றிலார் ..... 41
அம்மூவன், அம்மூவனார் ..... 49, 125, 163, 303, ..... 306, 318, 327, 340, 351, 397, 401
அரிசில் கிழார் ..... 193
அழிசி நச்சாத்தனார் ..... 271
அள்ளூர் நன்முல்லை, அள்ளூர் நன்முல்லையார் ..... 32, 67, 68, 93, ..... 96, 140, 157, 202, 237
அறிவுடை நம்பி ..... 230

**ஆ**

ஆசிரியன் பெருங்கண்ணன் ..... 239
ஆதிமந்தி ..... 31
ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் ..... 184
ஆலங்குடி வங்கனார் ..... 8, 45
ஆலத்தூர் கிழார் ..... 112, 350

**இ**

இடைக்காடன் ..... 251
இருந்தையூர்க் கொற்றன் புலவன் ..... 335
இளங் கீரந்தையார் ..... 148
இளங் கீரன் ..... 116
இளம் பூதனார் ..... 334
இறையனார் ..... 2

**ஈ**

ஈழத்துப் பூதன் தேவன் ..... 343

**உ**

உகாய்க்குடி கிழார் ..... 63
உருத்திரன் ..... 274
உரோடகத்துக் கந்தரத்தன் ..... 155
உலோச்சன் ..... 175, 177, 205, 248
உழுந்தினைம் புலவன் ..... 333
உறையன் ..... 207
உறையூர்ச் சல்லியன் குமாரன் ..... 309
உறையூர்ச் சிறு கந்தன ..... 257
உறையூர்ப் பல்காயனார் ..... 374
உறையூர் முதுகண்ணன் சாத்தன் ..... 133
உறையூர் முதுகூத்தன் (முதுகூற்றன்) .. 353, 371
உறையூர் முதுகொற்றன் ..... 221, 390

**ஊ**

ஊண்பித்தை ..... 232

**எ**

எயிற்றியனார் ..... 286

**ஐ**

ஐயூர் முடவன் ..... 123, 206, 322

**ஒ**

ஒக்கூர் மாசாத்தி, ஒக்கூர் மாசாத்தியார் .. 126, 139, 186, 220, 275
ஒரு சிறைப் பெரியன் ..... 272

**ஓ**

ஓதஞானி ..... 227
ஓதலாந்தையார் ..... 12, 21, 329
ஓரம் போகியார் ..... 10, 70, 122, 127, 384
ஓரிற்பிச்சையார் ..... 297
ஓரேருழவனார் ..... 131

**ஔ**

ஔவையார் ..... 15, 23, 28, 29, 39, 43, 80, 91, ..... 99, 102, 158, 183, 200, 364, 388

**க**

கங்குல் வெள்ளத்தார் ..... 387
கச்சிப்பேட்டுக காஞ்சிக் கொற்றன் ..... 213, 216
கச்சிப்பேட்டுப் நன்னாகையார் ..... 30, 172, ..... 180, 192, 197, 287
கடம்பனூர்ச் சாண்டிலியன் ..... 307
கடியலூர் உருத்திரங்க கண்ணனார் ..... 352





கடுகு பெருந்தேவன் ..... 255
கடுந்தோட் கரவீரன் ..... 69
கடுவன் மள்ளன் ..... 82
கண்ணன் ..... 244
கணக்காயன் தத்தன் ..... 304
கதக் கண்ணன் ..... 94
கபிலர் . 13, 18, 25, 38, 42, 87, 95, 100, 106, 115, 121, 142, 153, 187, 198, 208, 225, 241, 246, 249, 264, 288, 291, 312, 355, 357, 361, 385
கயத்தூர் கிழான் ..... 354
கயமன், கயமனார் ..... 9, 356, 378, 396
கருவூர் ஓதஞானி ..... 71
கருவூர்க் கதப்பிள்ளை ..... 64, 265, 380
கருவூர் கிழார் ..... 170
கருவூர்ச் சேரமான் சாத்தன் ..... 268
கருவூர்ப் பவுத்திரன் ..... 162
கல்பொரு சிறுநுரையார் ..... 290
கல்லாடனார் ..... 260, 269
கவைமகன் ..... 324
கழார்க் கீரன் எயிற்றி, கழார்க் கீரன் எயிற்றியன் ..... 35, 261, 330
கள்ளில் ஆத்திரையன் ..... 293

**கா**

காக்கைபாடினியார் நச்செள்ளையார் ..... 210
காமஞ்சேர் குளத்தார் ..... 4
காலெறி கடிகையார் ..... 267
காவன் முல்லைப் பூதனார் ..... 104, 211
காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனார் ..... 342
காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணன் 297
காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ணன் ..... 347

**கி**

கிடங்கில் குலபதி நக்கண்ணன் ..... 252
கிள்ளிமங்கலங் கிழார் ..... 76, 110, 152, 181

**கு**

குட்டுவன் கண்ணன் ..... 179
குடவாயிற் கீரத்தன், குடவாயிற் கீரத்தனார் ..... 281, 369
குடவாயிற் கீரனக்கன் ..... 79
குப்பைக் கோழியார் ..... 305
குழற்றத்தன் ..... 242
குறியிறையார் ..... 394
குறுங்கீரன் ..... 382
குறுங்குடி மருதன் ..... 344
குன்றியன், குன்றியனார் ..... 50, 51, ..... 117, 238, 301, 336

**கூ**

கூடலூர் கிழார் ..... 166, 167, 214
கூவன் மைந்தன் ..... 224

**கொ**

கொல்லன் அழிசி ..... 26, 138, 145, 240
கொல்லிக் கண்ணன் ..... 34
கொற்றன் ..... 218, 358

**கோ**

கோக் குளமுற்றன் ..... 98
கோப் பெருஞ்சோழன் ..... 20, 53, 129, 147
கோவத்தனார் (கோவதத்தர்) ..... 66, 194
கோவூர் கிழார் ..... 65
கோவேங்கைப் பெருங்கதவன் (கோவேங்கைப் பெருங்கதழ்வர்) ..... 134
கோழிக் கொற்றன் ..... 276

**ச**

சத்திநாதனார் ..... 119

**சா**

சாத்தன் ..... 349

**சி**

சிறைக்குடி ஆந்தையார் ..... 56, 57, ..... 62, 132, 168, 222, 273, 300

**செ**

செம்புலப் பெயனீரார் ..... 40
செய்தி வள்ளுவன் பெருஞ் சாத்தன் ..... 228
செல்லூர்க் கொற்றன் ..... 363

**சே**

சேந்தம் பூதன் ..... 247
சேந்தன் கீரன் ..... 311
சேரமான் எந்தை ..... 22

**த**

தங்கால் முடக்கொல்லனார் ..... 217

**தா**

தாமோதரன் ..... 92

தாயங்கண்ணன் ... 319

**தி**

திப்புத் தோளார் ... 1

**தீ**

தீன்மதிநாகன் ... 111

**து**

தும்பிசேர் கீரன், தும்பிசேர் கீரனார் ... 61, 316, ... 320, 392

**தூ**

தூங்கலோரி ... 151, 295

**தே**

தேரதரன் ... 195

தேவ குலத்தார் ... 3

**தொ**

தொல் கபிலர் ... 14

**ந**

நக்கீரர், நக்கீரனார், மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன் . 78, 105, 143, 161, ... 266, 280, 368

நம்பி குட்டுவன் ... 109, 243

நரிவெரூஉத்தலையார் ... 5, 236

நன்னாகையார் ... 118, 325

**நா**

நாகம் போத்தன் ... 282

நாமலார் மகன் இளங்கண்ணன் ... 250

**நெ**

நெடும் பல்லியத்தன் ... 203

நெடும் பல்லியத்தை ... 178

நெடு வெண்ணிலவினார் ... 47

நெய்தற் கார்க்கியர், நெய்தற் கார்க்கியன் ... 55, 212

**ப**

படுமரத்து மோசிகீரன், படுமரத்து மோசி கீரனார் ... 33, 75, 383

படுமரத்து மோசிகொற்றன் ... 376

பதடி வைகலார் ... 323

பதுமனார் ... 6

பரணர் ...... 19, 24, 36, 60, 73, 89, 120, 128, 165, 199, 258, 259, 292, 298, 328, 393, 399

பரூஉ மோவாய்ப் பதுமன் ... 101

பனம் பாரனார் ... 52

**பா**

பாண்டியன் ஏனாதி நெடுங் கண்ணன் ... 156

பாண்டியன் பன்னாடு தந்தான் ... 270

பார்காப்பான் (பாரகாபரன்) ... 254

பாரதம் பாடிய பெருந்தேவனார் ... (கடவுள் வாழ்த்துப் பாடல்)

பாலை பாடிய பெருங் கடுங்கோ16, 37, 124, 135, 137, 209, 231, 262, 283, 398

**பூ**

பூங்கண்ணன் ... 253

பூங்கணுத்திரையார் ... 48, 171

பூதத் தேவன் ... 285

பூதம் புல்லன் ... 190

**பெ**

பெருங்கண்ணன் ... 289, 310

பெருங்குன்றூர் கிழார் ... 338

பெருஞ்சாத்தன் ... 263

பெருந்தோட் குறுஞ்சாத்தன் ... 308

பெரும் பதுமனார் ... 7

பெரும்பாக்கன் ... 296

**பே**

பேயன், பேயனார் ... 233, 359, 400

பேயார் ... 339

பேரிசாத்தன் ... 278, 314, 366

பேரெயின் முறுவலார் ... 17

**பொ**

பொதுக் கயத்துக் கீரந்தை ... 337

பொன்மணியார் ... 391

பொன்னாகன் ... 114

**ம**

மடல் பாடிய மாதங்கீரன் ... 182

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் ... 188, 215

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்185

மதுரை ஆசிரியன் கோடங் கொற்றன் ... 144

மதுரை ஈழத்துப் பூதன் தேவன் ... 189, 360

மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன் .... 90, 226

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன் ... 223



மதுரைக் கண்டரதத்தன் ... 317

மதுரைக் கண்ணனார் ... 107

மதுரைக் கதக்கண்ணன் ... 88

மதுரைக் காஞ்சிப் புலவன், மாங்குடி மருதன் ... 164, 173

மதுரைக் கொல்லன் புல்லன் ... 373

மதுரைச் சீத்தலைச் சாத்தன் ... 154

மதுரை நல்வெள்ளியார் ... 365

மதுரைப் பெருங்கொல்லன் ... 141

மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்332

மதுரை மருதன் இளநாகன், மதுரை மருதன் இளநாகனார் ... 77, 160, 279, 367

மதுரை வேளாதத்தன் ... 315

மள்ளனார் ... 72

**மா**

மாங்குடி கிழார் ... 302

மாடலூர் கிழார் ... 150

மாதீர்த்தன் ... 113

மாமிலாடன் ... 46

மாமூலனார் ... 11

மாயேண்டன் ... 235

மாலைமாறன் ... 245

மாவளத்தன் ... 348

**மி**

மிளைக் கந்தன் ... 196

மிளைகிழான் நல்வேட்டன் ... 341

மிளைப்பெருங் கந்தன் ... 136, 204, 234

மிளை வேள் தித்தன் ... 284

**மீ**

மீனெறி தூண்டிலார் ... 54

**மோ**

மோசி கீரன், மோசி கீரனார் ... 59, 84

மோசி கொற்றன் ... 377

மோதாசனார் ... 229

**வ**

வடம் வண்ணக்கன் தாமோதரன் ... 85

வடம வண்ணக்கன் பேரிசாத்தன் ... 81, 159

வருமுலையாரித்தி ... 176

**வா**

வாடாப் பிரமந்தன் ... 331

வாயிலான் தேவன் ... 103, 108

வாயிலிளங்கண்ணன் ... 346

**வி**

விட்ட குதிரையார் ... 74

வில்லக விரலினார் ... 370

விற்றூற்றுமூதெயினனார் ... 372

**வெ**

வெண்கொற்றன் ... 86

வெண்பூதன் ... 83

வெண்பூதி, வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் ... 97, 174, 219

வெண்மணிப் பூதி ... 299

வெள்ளிவீதியார் ... 27, 44, 58, 130, ... 146, 149, 169, 386

**வே**

வேட்டகண்ணன் ... 389

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன் ... 362

ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் ..... 191, 201, ... 256, 313, 321, 326, 375, 379, 381, 395

## பாடப்பட்டோர்

அகுதை ........ 298
அஞ்சி ........ 91
அதிகன் ........ 393
அருமன் ........ 293
அழிசி ........ 258
ஆஅய் ........ 84
எவ்வி ........ 19
எழினி ........ 80
ஓரி ........ 100, 199
கட்டி ........ 11
குட்டுவன் ........ 34
கொங்கர் ........ 393
கோசர் ........ 15, 73
சேந்தன் ........ 258
தொண்டையர் ........ 260
நள்ளி ........ 210
நன்னன் ........ 73, 292
பசும்பூட் பாண்டியன் ........ 393
பாரி ........ 196
பூழியர் ........ 163
பொறையன் ........ 89, 128
மலையன் ........ 198, 312
வடுகர் ........ 11
விச்சியர் பெருமகன் (விச்சிக்கோ) ........ 328
வேளிர் ........ 164

● ● ●



## சிறப்புப் பெயர் முதலியவை

*( எண் : மரப்பதிப்பின்பாடல் எண்)*

### அ

அகவன்மகள் ........ 23
அகவன் மகளிர் ........ 298
அகில் ........ 286, 339
அடும்பு (கொடி) ........ 243, 248, 349, 401
அடைகரை ........ 175
அண்டர் ........ 117, 210
அணங்கும் பிணியும் ........ 136, 204
அணிற்பல் ........ 49
அதலைக் குன்றம் ........ 59
அதவம் ........ 24
அமளி ........ 30
அமிழ்தம் ........ 83, 201, 286
அமை ........ 115
அயிரை ........ 128, 166, 178
அரலை மாலை ........ 214
அரவின்குருளை ........ 119
அரவு ........ 119, 190, 395
அரா ........ 43
அரியல்அம்புகவு ........ 258
அரிவை ........ 14
அருவி ........ 42, 78, 106, 353, 365, 367
அருளும் அன்பும் ........ 20
அலவன் ........ 303, 316, 328, 351
அவரை ........ 82, 240
அவல் ........ 238
அவையம் ........ 276
அழிசி ஆர்க்காடு ........ 258
அற்சிரம் ........ 68, 76, 82, 338
அறுகை ........ 256
அன்றில் ........ 160, 177, 301
அன்னம் ........ 205, 300, 304

### ஆ

ஆ(பசு) ........ 64, 104, 210, 260
ஆடிப்பாவை ........ 8
ஆடு ........ 221
ஆடுபறை ........ 7
ஆடுமகள் ........ 105
ஆம்பல் ........ 80, 122, 178, 300, 352, 370
ஆம்பற் பூ ........ 46
ஆமான் குழவி ........ 322
ஆய் வளை ........ 211
ஆர்க்காடு ........ 258
ஆரம் (சந்தனம்) ........ 161, 198, 286, 376
ஆரம் (முத்து) ........ 321
ஆரல் ........ 114
ஆரியர் (ஆரியக் கூத்தர்) ........ 7
ஆரியர் கயிறு ஆடுதல் ........ 7
ஆவிரை ........ 173
ஆன் ........ 358
ஆன் தீம் பால் ........ 27
ஆன் பூண் மணி ........ 275
ஆனேறு ........ 74

### இ

இகுளை ........ 251
இடிக்கும் கேளிர் ........ 58
இடுமணற் சேர்ப்பன் ........ 205
இடைமகன் ........ 221
இமயம் ........ 158
இரந்தூண் ........ 33
இரலை ........ 65, 232, 250, 338
இரலை மான் ........ 183
இருப்பை ........ 329
இலஞ்சி ........ 91

இளம் பிறை ... 189
இளம்புல் ... 204
இள மாணாக்கன் ... 33
இளையர் ... 258, 275
இற்றி ... 106
இறடி ... 214
இறவின் வாடல் ... 320

**ஈ**

ஈங்கை ... 110, 380
ஈனில் ... 85

**உ**

உகாஅய் ... 363
உப்பு ... 269
உமணர் ... 124
உலக்கை ... 238
உலை ... 172
உலைக்கல் ... 12
உழவர் ... 10
உழிஞ்சில் ... 39
உழுந்து ... 68
உழுந்துடைக் கழுந்து ... 384
உழையினம் ... 68
உறந்தை ... 116

**ஊ**

ஊகம் ... 249, 373
ஊதை ... 86, 197, 397
ஊமன் ... 58, 224
ஊர் உண் கேணி ... 399

**எ**

எண்(எள்) ... 261
எயினர் ... 12
எருக்கங் கண்ணி ... 17
எருமணம் ... 113
எருமை ... 279
எருவை (கொறுக்காந் தட்டை) ... 170
எலி ... 107
எழாஅல் ... 151
எழுதாக் கற்பு ... 156
எறிஉளி ... 304
எறும்பி அளை ... 12

**ஏ**

ஏ(அம்பு) ... 72
ஏதிலாளர் ... 191
ஏறு ... 275, 363
ஏனல் ... 54, 72, 291, 360
ஏனல் காவலர் ... 54

**ஐ**

ஐவனம் ... 100, 371

**ஒ**

ஒருத்தல் ... 391, 396

**ஓ**

ஓதி (ஓந்தி) ... 140
ஓமை ... 79. 124, 207, 260. 396
ஓரி கானம் ... 199
ஓரை ஆயம் ... 48
ஓரை மகளிர் ... 316, 401

**க**

கட்டில் ... 359
கடப்பாட்டாளன் ... 143
கடமா ... 179
கடல் ஆடு மகளிர் ... 326
கடவை ... 392
கடி உண் கடவுள் ... 105
கடுவளி ... 39, 372
கடுவன் ... 26, 278
கண்டல் ... 117, 340
கனந்துள் ... 350
கமண்டலம் ... 156
கயந்தலைக் குழவி ... 394
கயம் நாடு யானை ... 170
கருங் கண் தாக் கலை ... 69
கரும்பு ... 35, 85, 149, 267, 384
கரும்பு நடு பாத்தி ... 262
கருவிளை ... 110
கலம் ... 240
கலிங்கம் ... 167
கலிமா ... 173
கலை (மான்) ... 213
கலை (குரங்கு) ... 90, 153, 342, 385



கவண் ஒலி ... 54
கவலை ... 233
கவிர் இதழ் ... 103
கழனி அம் படப்பை ... 127
கழி ... 9, 55, 324
கழுது ... 161
கழை ... 253, 331
கள்ளி ... 16, 154, 174
கள்ளிஅம் காடு ... 67
களிறு ... 36, 52, 112, 208, 307, 329, 346
கறவை ... 108
கறி ... 90, 288
கன்று இல் ஓர் ஆ ... 260

**கா**

காஞ்சி ... 10, 127
காந்தள் ... 1, 76, 100, 239, 259, 265, 361, 373
காமத்துப் பகை ... 257
காயாப்பூ ... 183
கார் ... 21, 65, 126, 188
காரான் ... 181, 261
கால மாரி ... 200
காவிரி ... 258
கானங்கோழி ... 242
கானவர் ... 322, 335
கானவன் ... 342, 379, 385

**கி**

கிண் கிணி ... 148
கிள்ளை ... 67, 333
கிளி ... 133, 291
கிளி கடியும் கொடிச்சி ... 260

**கு**

குட்டுவன் மரந்தை ... 34
குண கடல் ... 128
குதிரை ... 74, 385
குய்ப் புகை ... 167
குயில் ... 192
குரங்கு ... 288
குரவம் ... 341
குரால் ஆன் ... 224
குரீஇ ... 46, 72, 85
குரீஇ ஓப்புவாள் ... 72
குரீஇச் சேவல் ... 85
குருகு ... 5, 25, 113, 163, 260, 325, 381
குருந்து ... 148
குல்லை ... 11
குவளை ... 59, 270, 291, 300, 339, 346, 388
குவளைத் தொடலை ... 346
குழவி ... 59
குழை ... 398
குளவி ... 100
குளிர் (கிளி ஓட்டும் கருவி) ... 291, 360
குளிறு ... 24
குறவர் ... 208, 339, 346
குறவர் பாக்கம் ... 339
குறவர் மகளிர் ... 208
குறவன் ... 82
குறிஞ்சி ... 3
குறும்பூர் ... 328
குறும்பூழ் ... 389
குறும்பொறை ... 333
குன்றி ... (கடவுள் வாழ்த்து)
குன்றூர் ... 164

**கூ**

கூகை ... 153, 393
கூகைக்கோழி ... 393
கூதளி ... 60
கூதாளம் ... 282
கூதிர் ... 86,197
கூதிர் யாமம் ... 86
கூவல் ... 224
கூழ் ... 221

**கெ**

கெண்டை ... 91, 127

**கை**

கையுடை நல்மா ... 319
கைவினை மாக்கள் ... 309

**கொ**

கொக்கு (மாமரம்) ... 26, 164, 201
கொக்கு (பறவை) ... 117
கொண்கன் ... 230

கொல்லி ... 89, 100
கொன்றை ... 21, 66, 148, 183, 233

**கோ**

கோங்கு ... 254
கோடல் ... 62
கோடியர் முழவு ... 78
கோதை ... 62
கோவலர் ... 358
கோழி ... 157, 234, 305

**ச**

சகடம் ... 165

**சா**

சாத்து ... 390
சாந்து ... 321
சாறுகொள் ஊர் ... 41

**சி**

சிலம்பு ... 360, 369
சிறுகுடிக் குறவன் ... 95
சிறுதலை வெள்ளைத் தோடு ... 163
சிறு வெண்காக்கை ... 246, 313, 334

**சு**

சுடலை ... 231
சுறா ... 230, 269
சுனை ... 12, 347

**சூ**

சூர் ... 52
சூரரமகளிர் ... 53
சூல் மகளிர் ... 287
சூலி ... 218

**செ**

செங்காந்தள் ... 185, 284
செந்நாய் ... 56, 141
செந்நெல்வான் பொரி ... 53
செப்பு ... 9, 277
செய்வுறு பாவை ... 195
செயலை ... 214

**சே**

சேஎய் குன்றம் ... 1
சேம்பு ... 76
சேமச் செப்பு ... 277
சேவல் ... 107
சேவல்அம் கொடியோன் ... (கடவுள் வாழ்த்து)

**சோ**

சோணை ... 75
சோழர் ... 116

**ஞ**

ஞமலி ... 179

**ஞா**

ஞாயிறு ... 315
ஞாழல் ... 50, 81, 310, 318, 328, 397

**ஞெ**

ஞெண்டு ... 117
ஞெமை ... 285

**த**

தச்சன் ... 61
தட்டைப்பறை ... 193
தட (தடாமரம்) ... 160
தண்ணுமை ... 390
தளவம் ... 382

**தா**

தாமரை ... (கடவுள் வாழ்த்து)
... 127, 300, 376
தாழை ... 163, 219, 226, 228, 245, 303, 345
தாழை வெண்பூ ... 226
தாளி ... 104

**தி**

திதலை ... 27
திமில் ... 123. 304
தினை ... 217, 335, 392
தினை கிளி கடிதல் ... 217
தினைப் புனம் ... 346

**தீ**

தீம்புளிப் பாகர் ... 167

**து**

துணங்கை ... 31, 364
தும்பி ... 2.211,239,392
துளர் ... 392
துறுகல் ... 13





**தூ**

தூங்கணங்குரீஇ ... 374

**தே**

தேக்கொக்கு ... 26, 164, 201
தேம் பூங் கட்டி ... 196
தேர் ... 205, 275, 301, 311, 336, 345
தேர்மணி ... 275
தேரை ... 193

**தை**

தைஇத் திங்கள் ... 196

**தொ**

தொடி ... 1
தொண்டகச் சிறு பறை ... 375
தொண்டி ... 128, 210, 238
தொய்யில் ... 276
தொழுவம் ... 190

**தோ**

தோகை ... 26, 347
தோன்றி ... 107

**ந**

நடுநாள் ... 268
நரந்தம் ... 52
நல் அரா ... 43
நவ்விமறி ... 282
நள்ளென் கங்குல் ... 163
நள்ளென் யாமம் ... 160, 244, 261
நறவு ... 165, 394
நறவு மலிபாக்கம் ... 394

**நா**

நாரை ... 103, 114, 125, 166, 236, 296, 349

**நி**

நிரையம் ... 292

**நீ**

நீலப் பைம் போது ... 110
நீலம் ... 366
நீர் நாய் ... 364

**நு**

நுங்கு ... 293
நுளம்பு ... 86

**நெ**

நெடுவெண்ணிலவு ... 47
நெய்தல் ... 9, 309, 336, 397, 401
நெய் பெய் தீ ... 106
நெருஞ்சி ... 202, 315
நெல்லி ... 201, 209, 235, 262, 317
நெல்அம் பசுங் காய் ... 209
நெல்லிஅம் புளி ... 201

**நொ**

நொச்சி ... 138

**ப**

பகன்றை ... 330
பசலை ... 13, 339. 381, 399
பசிப்பிணி ... 213
பசுங்கலம் ... 29
பசுமீன் ... 169
பஞ்சாய் ... 276
படப்பை வேங்கை ... 266
படிவ உண்டி ... 156
படுமலை (பண்) ... 323
பணிலம் ... 15
பதலை ... 59
பதவு ... 363
பயறு ... 338
பரதவர் ... 184, 304, 320
பரீஇ ... 72
பருந்து ... 207, 283, 285
பல்லி ... 16
பலர் புகு வாயில் ... 118
பலவு ... 18, 83, 90, 153,
... 257, 352, 365, 373, 385
பலவுக்கனி ... 90, 373
பவழம் ... (கடவுள் வாழ்த்து)
பழுமரம் ... 172
பழூஉப்பல் ... 180
பறம்பு ... 196
பறை ... 15
பறை தபு நாரை ... 128
பனம் பசுங் குடை ... 168
பனிக்கடுந் திங்கள் ... 344

பனி நாள் ..... 380
பனிபடு நாள் ..... 104
பனை ..... 372

### பா

பாசவல் ..... 238
பாசி ..... 399
பாடலி ..... 75
பாடு அமை சேக்கை ..... 216
பாணர் ..... 19, 169, 323, 328
பாணன் ..... 127
பாதிரி ..... 147
பாம்பின் உரி ..... 154
பாம்பு ..... 35, 185, 268, 354, 391
பார்ப்பனமகன் ..... 156
பாரி பறம்பு ..... 196
பாவை (விளையாட்டுப் பாவை) ..... 48, 114, 276, ..... 278

### பி

பிடவு ..... 251
பிடி ..... 111, 225
பிணை ..... 183
பித்திகத்து அரும்பு ..... 94
பித்திகம் ..... 94, 168, 222
பிரம்பின் விளைகனி ..... 91
பிரம்பு ..... 364
பின் பனி ..... 338

### பீ

பீரத்து அலர் ..... 98

### பு

புகரி ..... 391
புணை ..... 168, 222
புத்தேள் நாடு ..... 288
புதுக்கோள் யானை ..... 129
புல் வேய் குரம்பை ..... 235
புலி ..... 47,209,237,253,321,343,
புலிக்குருளை ..... 47, 209
புலைத்தி (வண்ணாத்தி) ..... 330
புள்ளும் மாவும் ..... 118
புறப் பெடை ..... 285
புறவு ..... 79, 174, 285
புறவுப் பெடை ..... 79
புன்கு ..... 53, 341
புன்னை ..... 5, 175, 236, 296, ..... 299, 303, 311, 318, 320, 351

### பூ

பூக்கொய் மகளிர் ..... 26
பூழ் ..... 68

### பெ

பெண்ணை ..... 81, 177, 182, 293, 301, 374
பெயல் ..... 161
பெருங்களிறு ..... 88
பெரு முது செல்வர் ..... 337

### பே

பேஎய் ..... 263

### பொ

பொதியில் ..... 15, 84, 376
பொய்க்கனா ..... 30
பொய்கை ..... 113, 354, 370
பொய்வலாளன் ..... 30
பொரி ..... 356
பொலங்கல ஒரு காசு ..... 67
பொழுது ..... 161
பொறையன் தொண்டி ..... 128
பொன் பெய் பேழை ..... 233
பொன்னின் உரை திகழ் கட்டளை ..... 192

### போ

போந்தை ..... 281

### ம

மஞ்ஞை ..... 38, 105, 194, 251, 391
மட்டம் பெய்த மணிக்கலம் ..... 193
மடல் ..... 182
மண்டை ..... 169
மணி ..... 49
மணிப்பூ ..... 55
மதியம் ..... 315
மந்தி ..... 29, 69, 278, 335
மயில் ..... 183, 244, 249, 264
மயிற் கலாவம் ..... 225
மரந்தை ..... 34, 166
மரம் பயில் இறும்பு ..... 155



மரல் ..... 100, 232
மராஅம் ..... 22, 87, 92, 211
மருது ..... 50
மருந்து ..... 71
மரையா ..... 115, 321, 363
மரையான் ..... 317
மரையினம் ..... 235
மலையன் கானத்து ஆரம் ..... 198
மள்ளர் ..... 31, 34, 364
மறவர் ..... 297, 331
மறி ..... 263
மன்றம் ..... 33, 346
மனவுக் கோப்பு ..... 23
மனையோள் ..... 164

### மா

மா (மாமரம்) ..... 73, 278, 306, 331
மாணை ..... 36
மாமை ..... 147, 368
மாரி மா மழை ..... 319
மாலை ..... 122, 162, 234, 314
மான் ..... 256, 272, 319
மான் ஏறு ..... 256, 319

### மி

மிளை ..... 390

### மீ

மீன் உணங்கல் ..... 320
மீன் எறி தூண்டில் ..... 54
மீன் வலை ..... 171
மீன் வேட்டம் ..... 123

### மு

முசுக்கலை ..... 121
முசுவின் குருளை ..... 38
முடவன் ..... 60
முண்டகம் ..... 49, 51
முத்து ..... 104
முதலை ..... 324
முரசு ..... 270, 328
முருக்கு ..... 156
முல்லை ..... 62, 108, 126, 162, ..... 186, 188, 220, 221, 240, 275, 323, 348
முள்ளூர்க்கானம் ..... 312
முளி தயிர் ..... 167
முன்றில் ..... 41, 46, 153
முன்றில் உணங்கல் ..... 46

### மூ

மூங்கில் ..... 179, 201
மூதா ..... 204

### மொ

மொழி பெயர் தேஎத்தர் ..... 11

### மௌ

மௌவல் ..... 19

### யா

யாஅ ..... 232, 255
யாஅம் ..... 37, 198, 307
யாமம் ..... 6, 42, 302
யாமம் காவலர் ..... 375
யாமைப் பார்ப்பு ..... 152
யாறு ..... 271
யானை ..... 1, 75, 136, 169, 179, ..... 215, 247, 255, 260, 279, 284, 331, ..... 332,333,343,348,388
யானையங் குருகு ..... 34

### வ

வங்கா ..... 151
வஞ்சினம் ..... 36
வட்டி ..... 155
வண்டு ..... 30, 291, 306, 370
வம்ப மாரி ..... 66
வம்பலர் ..... 77, 297, 331, 350
வரகு ..... 220, 282
வருடை மான் மறி ..... 187
வல்வில் ஓரி ..... 100
வலவன் ..... 311
வழுங்குநர் ..... 283
வள்ளை ..... 89
வளர்பிறை ..... 289
வளை ..... 11, 31, 50, 316, 365

### வா

வாகை ..... 7, 347, 369
வாகைப் பறந்தலை ..... 393

வாடை ... 35, 103, 110, 160, 235, 240, 317, 332
வால் இழை மகளிர் .......... 45
வாவல் .......... 172
வாழை .......... 308, 327
வாளை .......... 8, 164, 364
வான் (மேகம்) .......... 194
வானம் .......... 287
வான மீன் .......... 150

**வி**

விசும்பு .......... 44, 189
விசும்பு வீழ் கொள்ளி .......... 189
விருந்து (விருந்தினர்) .......... 210
விருந்து அயர்தல் .......... 155, 398
விலைஞர் கைவளை .......... 117
விழவு .......... 299

**வீ**

வீளையர் .......... 272

**வெ**

வெட்சி .......... 209
வெண்ணெய் உணங்கல் .......... 58
வெண்ணெல் வெஞ்சோறு .......... 210
வெதிர் .......... 304
வெருக்குப் பல் .......... 240
வெருகினம் .......... 139
வெருகு .......... 107, 220
வெறி .......... 360
வெறி அயர் களம் .......... 53
வெறி உறு வனப்பு .......... 105

**வே**

வேங்கை .......... 26, 96, 134, 208, 241, 247, 355
வேந்து விடு தொழில் .......... 242
வேப்ப ஒண் பழம் .......... 67
வேம்பின் பைங்காய் .......... 196
வேம்பு .......... 24, 281
வேய் .......... 7
வேலன் .......... 53, 111, 360
வேழம் .......... 37, 308

**வை**

வைகல் .......... 285
வைகறை .......... 157
வைப்பு .......... 71
வையம் .......... 61

• • •



## பிறமொழிச் - சொற் பொருள் அகராதி

**(அ)**

அசடு - திறமைஇன்மை
அஷ்டமி - எட்டாம் நாள்
அதிர்ஷ்டம் - நற்பேறு, ஆகூழ்
அபாயம் - பெருங்கேடு
அவசரம் - விரைவு
அவதி - தொல்லை
அல்லோலம் - அல்லல் ஒலி

**(ஆ)**

ஆகாயம் - வான்
ஆனந்தம் - மகிழ்ச்சி

**(இ)**

இரகசியம் - கமுக்கம்
இராத்திரி - இரவு
இலட்சியம் - குறிக்கோள்

**(உ)**

உபத்திரவம் - இடையூறு
உற்சாகம் - இறும்பூது

**(க)**

கஜானா - கருவூலம்
கஷ்டம் - துன்பம்
கதி - நிலை
கலியாணம் - திருமணம்

**(கா)**

காரியம் - செயல்

**(கி)**

கிரகணம் - (கதிர்) மறைவு

**(கே)**

கேவலம் - இழிவு
கேலி - இகழ்தல்

**(ச)**

சகஜம் - இயல்பு
கசிப்பேன் - பொறுப்பேன்
சகியேன் - பொறேன்
சகுணம் - நற்குறி
சங்கதி - செய்தி
சங்கிலி - தொடரி
சட்டை - பொறுப்படுத்தல்
சண்டித்தனம் - எருமைத்தன்மை
சத்தம் - வண்டிக் கூலி
சத்தியம் - வாய்மை
சதா - எப்போதும்
சதி - அழிப்புவேலை
சந்தர்ப்பம் - சூழ்நிலை
சந்தேகம் - ஐயம்
சந்தோஷம் - மகிழ்ச்சி
சப்தம் - ஒலி
சபதம் - சூளுரை
சபாஷ் - அருமை, நன்று
சபித்தான் - சாவித்தான்

சம்பந்தம்
சம்மந்தம் - தொடர்பு, இணைவு

சம்மதம் - ஒப்புகை

சம்மதித்தல் - ஏற்றுக் கொள்ளல்

சமாதானம் - அமைதிபடுத்தல்

சர்வவல்லமை - எல்லாம் வல்ல

**(சா)**

சாக்கிட்டு - காரணமாக

சாகசம் - அருஞ்செயல்

சாட்சி - சான்று

சாதாரணம் - இயல்பு

சாமார்த்தியம் - திறமை

**(சி)**

சிபாரிசு - பரிந்துரை

சிரமம் - தொல்லை

**(சீ)**

சீக்கிரம் - விரைவு

**(சு)**

சுகம் - இன்பம்

சுலபம் - எளிது

**(சோ)**

சோகம் - பெருந்துன்பம்

**(ஜ)**

ஜனம் - மக்கள்

ஜாக்கிரதை - விழிப்பு

**(ஜெ)**

ஜென்மம் - பிறவி

**(ஜே)**

ஜோடி - இணை

ஜோர் - சிறப்பு

**(த)**

தந்தம் - யானைக்கோடு

தந்தி - தொலைவரி

**(தா)**

தாகம் - வேட்கை

தாசி - கணிகை

**(தி)**

திரவியம் - பொருள்

தினம் - நாள்

**(து)**

துர்கை - கொற்றவை, காளி

**(தே)**

தேவாமிர்தம் - அமிழ்தம்

**(ந)**

நட்சத்திரம் - விண்மீன்

**(நா)**

நாகம் - நல்ல பாம்பு

நாயகி - தலைவி

**(நி)**

நிச்சயம் - உறுதி

நிஜம் - உண்மை

நிதி - குவை

**(ப)**

பகீர் - திடீர்

பசு - ஆ

பட்சி - பறவை

பந்தம் - கட்டு

**(பா)**

பாக்கி - நிலுவை

பாக்கியம் - பேறு

பாணம் - அம்பு



**(பி)**

பிரம்மச்சாரி - மாணி, மாணவன்

பிரமாதம் - பெரிது

பிரியம் - அன்பு

**(பு)**

புண்ணியங்கள் - நற்பேறு

புத்தி - அறிவு

புத்திசாலி - அறிவாளி

புருஷன் - ஆடவன், கணவன்

பூசாரி - பூசகன்

**(பே)**

பேஷ் - நன்று

**(போ)**

போதனை - அறிவுரை

**(ம)**

மகிமை - அருளிச்செயல்

மன்மதன் - காமக்கடவுள்

மாத்திரம் - மட்டும

**(மோ)**

மோகம் - காமம்

**(யூ)**

யூகம் - ஊழ்கம்

**(யோ)**

யோக்கியன் - தக்கான்

யோசித்து - எண்ணி

யோசியாமல் - எண்ணாமல்

யோசனை - எண்ணம்

**(ரீ)**

ரீங்காரம் - இன்னிசை

**(ரு)**

ருசி - சுவை,

**(ரொ)**

ரொம்ப - நிரம்ப, நிறைய

**(ரோ)**

ரோஷம் - சினம்

**(வ)**

வசிக்கிறாள் - வாழ்கிறாள்

வசதி - வாய்ப்பு

வசம் - கையில்

வயித்தியம் - மருத்துவம்

**(வா)**

வாசனாதி திரவியங்கள் - மணப் பொருட்கள்

வாசணை - நறுமணம்

**(வி)**

விசாரித்தல் - உசாவுதல்

விஷயம் - செய்தி

வியாதி - நோய்

**(வே)**

வேசி - விலைமகள்

வேதம் - மறை

● ● ●

# செவ்விலக்கியக் கருவூலம்

1. பத்துப்பாட்டு – ந.சி.கந்தையா
2. நற்றிணை (1–100) –1 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
3. நற்றிணை (101–200) –2 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
4. நற்றிணை (201–300) –3 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
5. நற்றிணை (301–400) –4 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
6. குறுந்தொகை – சக்திதாசன் சுப்பிரமணியன்
7. ஐங்குறுநூறு – 1 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
8. ஐங்குறுநூறு –2 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
9. பதிற்றுப்பத்து – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
10. பரிபாடல் – ந.சி. கந்தையா
11. கலித்தொகை – சக்திதாசன் சுப்பிரமணியன்
12. அகநானூறு – ந.சி.கந்தையா
13. புறநானூறு 1 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
14. புறநானூறு 2 – ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
15. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் – பேராசிரியர் ந.சஞ்சீவி

• • •



**குறிப்புகள்**

## குறிப்புகள்